கலைஞரின்
கடிதங்கள்



30

27.09.2000 - முதல்
15.12.2000 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 30

27.09.2000 - 15.12.2000

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
திண்ணை அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00**


CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

42237
தி 894.8116
கலை-கா-30

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2521. புள்ளி விபரமுடன் துள்ளிக் குதித்துப் பணி புரிய வாராய்!	27-09-2000	23
2522. நிதான புருஷர்களின் நேர்மையான பதில் என்ன?	28-09-2000	31
2523. இருங்காட்டுக்கோட்டையில் இன்பப் பெருமூச்சு!	29-09-2000	40
2524. ''யாகம்'' என்பதற்கு விளக்கம் எதற்காக?	30-09-2000	45
2525. அன்று உதிர்த்த முத்துக்கள் ஆரமாக்கித் தருகிறேன்!	1-10-2000	50
2526. அட்டை மாளிகை-அநாகரிக போக்கு!	6-10-2000	55
2527. என்ன செய்ய முடியும்? எப்படிக் காப்பாற்ற முடியும்?	8-10-2000	60
2528. பழி வாங்கிட அல்ல! பழி ஏற்படாமலிருக்க!	16-10-2000	67

2529. தடைபோட்டுத் தடுத்து நிறுத்தத் தேவை என்ன?	18-10-2000	74
2530. இந்தக் குறளோவியம் இப்போது எதற்காக?	20-10-2000	78
2531. அவருக்கு அவரே போதிக்கும் அறிவுரை!	21-10-2000	83
2532. அரசியல் ஆக்கக் கூடாது என்றோர் அரசியல் ஆக்குவதா?	22-10-2000	89
2533. வெள்ளை மாளிகையை விலை பேசினால் என் செய்வது?	28-10-2000	94
2534. பண்பாடு காத்திட பண்போடு எழுவோம்!	29-10-2000	98
2535. சரித்திரச் சாதனைகள் எனச் சான்றோர் புகழ்வர்!	02-11-2000	102
2536. கவலையளிப்பது மட்டுமல்ல! கண்ணீர் சிந்திட வைப்பது!	03-11-2000	106
2537. கையில் இருந்தது கிரிக்கெட் 'மட்டை' அல்ல; 'அட்டை!'	4-11-2000	109
2538. பாசு, புகழொளி பரப்பிப் பல்லாண்டு வாழ்க!	5-11-2000	113
2539. பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்!	6-11-2000	120

2540. கைதிகள் எழுதிய கண்ணீர்க் கடிதம்!	19-11-2000	126
2541. மறு சிந்தனைக்கு வழி வகுத்துள்ள தேர்தல்!	21-11-2000	131
2542. கல்வி நீரோடையில் சாதனை மலர்கள்!	25-11-2000	141
2543. நினைத்து மகிழ்கிறேன்; நீ படித்து மகிழலாம்!	26-11-2000	148
2544. நாடிச்சென்று வழங்குகிறோம் நல்வாழ்வு!	27-11-2000	157
2545. நாட்டின் உயிர்மூச்சும்; நாடி நரம்புகளும்!	28-11-2000	166
2546. தொடரும் தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்று!	29-11-2000	178
2547. தலைநகரில் தடைபடாத் தண்ணீர் விநியோகம்!	30-11-2000	186
2548. சாலைகள், பாலங்கள் என சாதனைகள் பாரீர்!	01-12-2000	195
2549. பொதுப்பணித்துறையில் குவியும் புதுப்பணிகள்!	03-12-2000	207
2550. மகளிர் உயர்வே மனித சமுதாயத்தின் உயர்வு!	04-12-2000	224
2551. வரிக்கொள்கை மாற்றம் வணிக சமுதாய முன்னேற்றம்!	5-12-2000	237

2552. தமிழ்த்துறை வளர்த்திட தனித்துறை கண்டோம்!	6-12-2000	252
2553. ஆத்திகர் அகம் மகிழ அறநிலையப் பணிகள்!	7-12-2000	269
2554. தேவை நிறைவுபெற சேவை தொடர்கிறது!	8-12-2000	283
2555. திரையுலக மேம்பாடும் நினைவுபோற்றும் பண்பாடும்!	9-12-2000	293
2556. அரசு அலுவலர் ஆசிரியர்களின் பொற்காலம் இது!	10-12-2000	308
2557. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன்!	11-12-2000	323
2558. சாதனைகளுக்கிடையே நான் ஏற்கும் சபதம்!	12-12-2000	338
2559. கடமை ஆற்றிட ஊக்கம்; கழக அரசு தரும் ஆக்கம்!	13-12-2000	354
2560. வளமார் எனது தமிழகம்; வளரும் பல தொழிலகம்!	14-12-2000	368
2561. தகவல் தொழில்நுட்பமும்; மரபணு உயிரியலும்!	15-12-2000	386

2521. புள்ளி விபரமுடன் துள்ளிக் குதித்துப் பணி புரிய வாராய்!

உடன்பிறப்பே,

மறியல் போராட்டம் என்று ஒரு கட்சி அறிவித்திடுமேயானால் முன்பெல்லாம், முதலிலேயே ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதாவது எந்த அலுவலக முகப்பு வாசலில், எத்தனை மணி அளவில், யாருடைய தலைமையில் மறியல் அறப்போர் நடைபெறும் என்று தெரிவிக்கப்படும். அதன்படி அந்த நேரத்தில், அந்த அலுவலக வாசலுக்கு முன் வந்து நின்று மறியலில் ஈடுபடுவார்கள். அமைதியாக நடைபெறும் அந்தப் போராட்டத்தில் காவல்துறையினரும் அமைதியாகத் தங்கள் கடமையினைச் செய்து மறியல் போராட்டக்காரர்களைக் கைது செய்வார்கள். இதுதான் மறியல் போராட்டத்தில் நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும்.

ஆனால் கடந்த 25-ஆம் தேதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆதரவுடன் விவசாயத் தொழிற் சங்கங்கள் ஒன்றுகூடி விவசாயிகளுக்காகப் போராட்டம் நடத்துவதாகச் சொல்லிக் கொண்டு - சென்னை போன்ற சில இடங்களில் சாலை மறியல் போராட்டம் நடத்தி வன்முறைக்கு வழிகாட்டியுள்ளது மிக மிக வருந்தத்தக்கதாகும்.

மறியல் போராட்டம் என்றால் ஒரு குறிப்பிட்ட அலுவலகத்தின் வாசலில் நின்று கொண்டு, அலுவலகத்திற்குப் போகிறவர்களை அறவழியில் தடுத்து, அலுவலகத்திற்குச் செல்லாதீர்கள் என்று கேட்டுக் கொள்வது - அமைதியாகக் குறுக்கே நிற்பது - உடனடியாகக் காவல்துறையினர் தலையிட்டு, அப்படி தடுத்தவர்களையும், குறுக்கிட்டவர்களையும் கைது செய்வது என்பதுதான் இதுவரையில் எல்லாக் கட்சிகளும் கடைப்பிடித்து வரும் முறையாகும்.

ஆனால் 25-ந்தேதி மறியல் செய்த மார்க்சிஸ்டுகள், சாலைகளின் குறுக்கே வழிமறித்துப் படுத்துக் கொண்டு - அப்படிப் படுத்துக் கொண்டு அட்டகாசம் செய்தவர்களை அங்கிருந்து அகற்றிட முயன்ற காவல்துறையினர் மீது கற்களை வீசி - வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டு, கடைசியாகக் காவல்துறையினர் தடியடிப் பிரயோகம் செய்கிற அளவுக்கு, நிலைமையைக் கடுமையான வன்முறை வெடிக்கிற அளவுக்கு வளர்த்திட முனைந்து விட்டனர் என்பதுதான் வேதனையான செய்தியாகும்.

எந்தக் கோரிக்கைகளை வைத்து அவர்கள் மறியல் போராட்டம் நடத்தினார்கள்? அந்தக் கோரிக்கைகளை தி.மு.கழக அரசு, எவ்விதப் பரிவுணர்வுடன் அணுகி நிறைவேற்றி வருகிறது என்பதையும் எண்ணிப் பார்ப்போம்.

விவசாயிகளுக்காகப் பல கோணங்களில் கோரிக்கைகளை எழுப்பிப் போராடுகிறவர்கள், அந்தக் கோரிக்கைகளை இந்த அரசு எத்துணைப் பரிவுடன் அணுகியுள்ளது என்பதை, வேண்டுமென்றே திட்டமிட்டு மறந்து விடுவதா?

கடனையும், வட்டியையும் தள்ளுபடி செய்க எனத் தொடங்கி கோரிக்கைகளை அடுக்குகிறவர்களைக் கேட்கிறேன், எந்த மாநிலத்தில் கடனும், வட்டியும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று அவர்களால் சுட்டிக் காட்ட முடியுமா? இதோ! விவசாயிகளுக்காக கழக அரசு, பரிவுடன் செய்துள்ள நன்மைகளைப் பட்டிலிட்டுக் காட்டுகிறேன்.

இந்தப் பட்டியலைக் கண்ணுற்றாலே, அவர்களது கோரிக்கைகள் எந்த அளவுக்குக் கழக அரசினால் நிறைவேற்றப் பட்டுள்ளது - நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். உண்மையான விவசாயிகளும், விவசாய சங்கங்களும் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால் அவர்களது பெயரால் கிளர்ச்சியில் ஈடுபட்டு, அதனை வன்முறைக் கிளர்ச்சியாக மாற்றிட முனைகிற மார்க்சிஸ்ட் தொழிற் சங்கங்கள் இதனை உணர்ந்தாலும், அரசியலுக்காக இதனை உணராதது போல நடிக்கவே செய்கின்றன.

இந்த ஆட்சியில் குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு ஒரு சதவீத வட்டி, அதாவது 13 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

1996-97இல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்கள் நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றியதால் விவசாயிகளுக்கு, அபராத வட்டி ஐம்பது கோடி ரூபாய் ரத்து செய்யப்பட்டது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை, 1-7-1998 முதல் 30-9-1999 வரையான தவணைத் தேதிக்குள் வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 6.25 விழுக்காடு வட்டி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் தொகை 6.58 கோடி ரூபாய். இதனால் பயன்பெற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை 1,47,654 பேர்.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையை 24-3-2000 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் வைத்து உரையாற்றியபோது, 30-6-1999க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30-6-2000க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் சிறிய, பெரிய, அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தேன்.

மேலும், திருப்பிச் செலுத்தப்படும் நடப்பு கடன் தொகை வட்டியில் கடந்த ஆண்டு 6.25 சதவிகிதம் ஊக்குவிப்புத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதற்கு மாறாக, இந்த ஆண்டு ஏழு சதவிகிதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பு ஆண்டில் ஏற்கனவே முழு கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும் எனவும் அறிவித்தேன்.

அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த 30-6-2000 என்னும் காலக்கெடுவினை 31-7-2000 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டித்து ஆணையிடப்பட்டது.

இந்தச் சலுகைகளினால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

வட்டி ஊக்குவிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி, இரண்டு இலட்சத்து 20 ஆயிரத்து 38 விவசாயிகள், 17 கோடியே 76 இலட்ச ரூபாய் அளவுக்கு பயன் அடைந்துள்ளனர்.

அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தின் கீழ், இரண்டு இலட்சத்து 66 ஆயிரத்து 322 விவசாயிகள் 10 கோடியே 17 இலட்ச ரூபாய் அளவுக்குப் பயன் அடைந்துள்ளனர்.

விவசாயிகளுக்குக் கழக அரசு தொடர்ந்து வழங்கிவரும் சலுகைகள், வேறு எந்த மாநிலத்தையும் விட மிகையானவை என்பதற்கு இதோ மேலும் ஆதாரங்கள்:-

1990இல் இந்தியாவிலேயே முதன் முதலாக கழக அரசு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது.

தமிழக விவசாயிகளின் நலத்தினை முன்னிட்டு கறுப்பு மற்றும் கிரே பகுதிகளிலுங்கூட ஏற்கனவே, கிணறுகள் வெட்டி மின் இணைப்பு கோரி விண்ணப்பம் செய்து, பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1996க்குப் பின் விவசாயிகளுக்கு எட்டு இலட்சம் உர அடையாள அட்டைகள் 11.41 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1-9-2000 முதல் திறக்கப்பட்டுள்ளன.

1995-96இல் நெல் கொள்முதல் விலை மோட்டா ரகம் ரூ.360, சன்ன ரகம் ரூ.375.

இது 1996க்குப்பின் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2000-2001இல் நெல் கொள்முதல் விலை மோட்டா ரகத்திற்கு ரூ.510, சன்ன ரகத்திற்கு ரூ.540 என உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இத்துடன், குவிண்டால் ஒன்றுக்கு இடை நிகழ் செலவாக அளிக்கப்படும் 35 ரூபாயையும் சேர்த்தால் மோட்டா ரக நெல் கொள்முதல் விலை ரூ.545, சன்ன ரக நெல் கொள்முதல் விலை ரூ.575 ஆகும்.

குறுவை நெல் கொள்முதல் செய்யும் போது இரண்டாம் தர நெல்லுக்கு தரவெட்டுத் தொகை 15 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக 26-8-2000 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறைக்கப்பட்டது.

இன்று (26-9-2000) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், மூன்றாம் தர நெல்லுக்கு தரவெட்டுத் தொகை 20 ரூபாயிலிருந்து, 10 ரூபாயாகக் குறைக்க முடிவு எடுக்கப்பட்டது.

மைய அரசின் நிர்ணய விலையை விட, முந்தைய அரசினால் 8.5 சதவீதம் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பு டன் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய், அறுபது ரூபாய் என்ற அளவிலேயே அதிகரித்து விலை பரிந்துரைக்கப்பட்டு வந்தது.

ஆனால், கழக அரசுதான் மைய அரசின் நிர்ணய விலையைவிட, டன் ஒன்றுக்கு 175 ரூபாய் கூடுதலாக பரிந்துரை விலையை நிர்ணயித்தது.

அதன்படி, 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1995-96இல் முந்தைய அரசு நிர்ணயம் செய்த பரிந்துரை விலை ரூ.560/-. இது 1996க்குப் பின் கழக அரசினால் படிப்படியாக உயர்த்தப்பட்டு 1999-2000த்தில் ரூ.740/- என பரிந்துரைக்கப்பட்டது.

தற்போது, பத்து விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என கழக அரசு அறிவித்துள்ளது.

கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997-98இல் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கழக அரசு வழங்கிய முன் பணம் ரூ.76.41 கோடி.

1998-99இல் இத்தொகை ரூ.210 கோடி.

கரும்பு பயிர்க் கடன் ரூ.45,000 என்பது ரூ.55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ.25,000 என்பது ரூ.35,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

டிசம்பர் 1996 வெள்ளச்சேதம் - விளைபொருள் இழப்புக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.55.15 கோடி.

நவம்பர் 1997 வெள்ளச்சேதம் - விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர்கள் இழப்பீட்டுத் தொகை உட்பட வெள்ள நிவாரணம் 59 கோடி ரூபாய்.

1997இல் பெருமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரத்து செய்யப்பட்ட நிலவரி மதிப்பு 44 கோடி ரூபாய்.

1999 - மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 33.28 கோடி ரூபாய்.

தென் மாவட்டங்களில் 1998இல் நீல நாக்கு நோயினால் கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு, ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால் 1000 ரூபாய், மாடு இறந்தால் 5000 ரூபாய், கன்று இறந்தால் 3000 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது.

யூரியா உரத்திற்கு விற்பனை வரி நான்கு விழுக்காடு என்பது இரண்டு விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியம், 100 ரூபாய் என்பது 1996இல் 150 ரூபாயாக உயர்வு. 2001இல் இது 200 ரூபாயாக மேலும் உயர்வு.

உடன்பிறப்பே,

நிபந்தனையின்றி அனைவருக்கும் குடிமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பதும், மார்க்சிஸ்ட் போராட்டத்தின் மற்றொரு கோரிக்கையாகும்.

விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெற குடியிருப்பு அனுபோகதாரர்கள் உரிமைச் சட்டம் கொண்டு வந்தது கழக அரசுதான் என்பதை எப்படித்தான் மறந்து விட்டனரோ மார்க்சிஸ்டுகள்!

தஞ்சை மாவட்டத்தில் பண்ணையார்களின் விவசாய நிலங்களிலே பல ஆண்டு காலம் குடிசைகள் போட்டு வாழ்ந்து வந்த விவசாயத் தொழிலாளர்கள், பண்ணையார்களின் ஆதிக்கத்தின் காரணமாக, அவர்கள் எந்த நேரத்தில் கூறினாலும் குடிசையை விட்டு வெளியேற வேண்டிய நிலையிலே வாழ்ந்து வந்தார்கள்.

விவசாயத் தொழிலாளர்களின் இந்த அவல நிலையைப் போக்கிட 1971-ஆம் ஆண்டில், குடியிருப்பு அனுபோகதாரர்கள் உரிமைச் சட்டம் என்னும் புதிய சட்டத்தை இந்தியாவிலேயே முதன்

முறையாக நடைமுறைப்படுத்தி, குடியிருக்கும் வீட்டுமனையை விவசாயத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கியது கழக அரசு.

புரட்சிகரமான இத்திட்டத்தின் மூலம், இலவச வீட்டுமனை பெற்ற விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 75 ஆயிரம். இவர்களில் ஆதி திராவிடர்கள் மட்டும் ஒரு இலட்சத்து 2000 பேர். பிற்படுத்தப்பட்டோர் 40 ஆயிரத்து 550 பேர். பிற வகுப்பினர் 32 ஆயிரத்துக்கு மேற்பட்டோர்.

1973-74-ஆம் ஆண்டில் மலைப் பகுதிகள் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் பயன் பெற வழி வகுத்தது இச்சட்டம்.

இச்சட்டம் அறிமுகம் செய்யப்பட்டதை அந்நாளைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மணலி கந்தசாமி அவர்கள், ரத்தப் புரட்சியால் சாதிக்க முடியாததை ஒரு துளி மையினால் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சாதித்து விட்டார் என்று பாராட்டினார்.

அரசுக்குத் தேவையில்லை என்ற நிலையில், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாகக் குடியிருப்போருக்கு பட்டா வழங்க வேண்டுமென்று முடிவெடுத்து, முதலில் இருபதாண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு என்றும், பிறகு நிதிநிலை அறிக்கையில் அதை பத்தாண்டுகள் என்றும் குறைத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் 2000-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி இதுவரை ஒரு இலட்சத்து ஓராயிரத்து 881 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது மேலும் தொடர்கிறது.

இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில், தமிழகத்தில் வழங்கப்பட்ட இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் எண்ணிக்கை 63,770.

1967-75 என்ற இந்த எட்டாண்டு கால கழக அரசில் வழங்கப்பட்ட இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் எண்ணிக்கை 5 இலட்சத்து 6,697. இதில் ஆதி திராவிடப் பயனாளிகள் எண்ணிக்கை 2 இலட்சத்து 36 ஆயிரம்.

1989-90இல் கழக அரசில் இலவச வீட்டு மனைப் பட்டா பெற்றவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 34 ஆயிரத்து 95.

அவர்களில் ஆதிதிராவிடர்கள் 1 இலட்சத்து 56 ஆயிரத்து 147 பேர்.

1995இல் கழக அரசு அமைந்த பிறகு, ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமல்லாமல், மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முன்னேறிய சமுதாயத்தினரில் நலிவடைந்தவர்கள் ஆகிய அனைத்து பிரிவினருக்கும் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பயனாக 96க்குப்பின் இதுவரை 11 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் கழக அரசால் வழங்கப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே,

இந்தியாவிலேயே உள்ள எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு விவசாயிகளுக்காக சாதனைகளைச் செய்ததில்லை என்ற அளவிற்கு கழக அரசு சாதனைகளைச் செய்ததோடு, தமிழக வரலாற்றிலேயே இல்லாத வகையில், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பு தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து, அவர்களின் கருத்துக்களை அறிந்து பல்வேறு சலுகைகளை வழங்கியது என்பதையும், அந்தக் கூட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான வீரையன் கலந்து கொண்டார் என்பதையும் யாரும் மறந்திருக்க முடியாது. விவசாயம், விவசாயிகள் என்று மட்டுமின்றி, எல்லாத் துறைகளிலும் இந்தியாவில் உள்ள சில மாநிலங்களுடன் போட்டியிட்டு உயர்ந்து நின்றும் - சில மாநிலங்களை வென்று காட்டியும் - மாநில மக்களின் நல்வாழ்வுக்கானத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செயல்படும் இந்த அரசை வேண்டுமென்றே குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காகச் சில அரசியல் கட்சிகள், போராட்டங்கள் என்ற பெயரால், பொது அமைதியைக் கெடுக்க முனைவது எவ்வளவு பெரிய மக்கள் விரோதச் செயல் என்பதை புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்ட நீயும், மற்ற உடன்பிறப்புகளும் துள்ளிக் குதித்துச் செயல்பட வருக என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(27-09-2000)

2522. நிதான புருஷர்களின் நேர்மையான பதில் என்ன?

உடன்பிறப்பே,

மேடையில் ஏதாவது பேச வேண்டுமேயென்பதற்காக நான் பேசாததையெல்லாம் பேசியதாகச் சொல்லிக் கொண்டு அதற்குச் சிலர் பதில் கூறிக் கொண்டிருக்கிறார்கள். கருணாநிதி கீழ்த்தரமாகத் தாக்கிப் பேசுகிறார், நிதானம் தவறிவிட்டார் என்றும் அர்ச்சிக்கிறார்கள். பல ஆண்டுக் காலம் என்னைப் பற்றி அறிந்துள்ள உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் பொது மக்களுக்கும் எழுத்திலோ, பேச்சிலோ என்றைக்கும் நான் நிதானமிழந்திட மாட்டேன் என்பது நன்றாகத் தெரியும். ஆனால் இவர்கள்தான், நம்மை மக்கள் விரோதிகள் என்றும் - பொய்ப் பிரச்சாரம் செய்கிற கோயபல்ஸ்கள் என்றும் அறிக்கை எழுதியே வெளியிட்டவர்கள். இவர்கள் நம்மைப் பார்த்து நிதானமிழந்து விட்டதாகக் கூறுவதுதான் விந்தை! விந்தையினும் விந்தை!

என் செய்வது? நம்மையும் நமது ஆட்சியையும் - உண்மையிருக்கிறதோ இல்லையோ உக்கிரமாகத் தாக்குவது - அக்கிரமமாக விமர்சிப்பது - என்று சில கட்சிகளின் தலைவர்கள் கச்சை கட்டி நிற்கிறார்கள். நச்சுப்புகை கக்குகிறார்கள்.

ஜெயலலிதா அம்மையாரை எதிர்த்துப் பேசுவதா? அவரை ஊழல்வாதி என உரைப்பதா? அவர் மீது வழக்குப் போடுவதா? என வரிந்து கட்டிக் கொண்டு நம்மிடம் வம்புக்கு வருகிறவர்கள் வட்டமிடும் இந்த அரசியல் வட்டாரத்துக் கருமுகிலைக் கிழித்துக் கொண்டு ஓர் ஒளி வட்டம்போல, ஒரு பெரியவரின் குரல் கேட்கிறது. தொல்லைகள் தொடரும்போது, துக்கம் துளைத்தெடுக்கும்போது ஒரு துளி தேன் நாவிலே விழுந்தது போலவும் - உணருகிறோம், அந்தப் பெரியவரின் கருத்தை எழுத்திலே காணும்போது! அயர்வு அகன்று விடுகிறது, அவரது அறிக்கையைப் படிக்கும்போது!

ஆம் உடன்பிறப்பே,

இந்தியாவின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரும், தமிழகத்தின் முதுபெருந் தலைவர்களில் ஒருவரும், மகாராஷ்டிர மாநில ஆளுநராகவும், மத்திய - மாநில அரசுகளில் நீண்டகாலம் அமைச்சராகவும் பணியாற்றியவரும், அனைவராலும்சி.எஸ். என்று அன்பொழுக அழைக்கப்படுபவருமான பெரியவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

> "தன் மீது பொய் வழக்குகளை போடுவதே தி.மு.க. அரசின் ஒரே திட்டம் என்று சமீபத்தில் ஜெயலலிதா கூறியிருப்பது மிகவும் விந்தையானதும், ஆதரவு அளிக்க முடியாததாகவும் இருக்கிறது. அவர் இவ்வாறு கூறியிருப்பது புலனாய்வு செய்யும் அமைப்புகள் மீதும், நீதித்துறை மீதும் கடுமையான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். இது நீதிமன்ற அவமதிப்பாகும்."

என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்தக் கருத்துகளை படித்திடும் போது, ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சர்கள் மீதும் இதுவரை ஊழல் வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்த கருத்துகளை எண்ணிப் பார்ப்பதும் தேவையன்றோ!

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி ஜெயலலிதா வாங்கியது, மீனா விளம்பர நிறுவனத்திற்குச் சலுகை அளித்தது, கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு விதிகளை மீறி அனுமதி வழங்கியது, தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கியதில் ஊழல் போன்ற ஏழு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், ஜெயலலிதா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டபோது, அதிலே தன்னைக் கைது செய்யாமலிருக்க சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜெயலலிதா ஒட்டுமொத்த முன் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதி சிவப்பா அவர்கள், இந்த ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து 11-10-1996 அன்று அளித்த தீர்ப்பில்,

> "கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம் ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ள பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கிலும், மீனா அட்வர்டைசிங் வழக்கிலும், வழக்குத் தொடர்வதற்கான அடிப்படை இருப்பது

தெளிவாகப் புலனாகிறது. ஜெயலலிதா கூறுவது போல, பொய்யான குற்றச்சாட்டுகள் மீது வழக்கு தொடரப்படவில்லை என்பது தெளிவாகிறது."

என்று கூறினார்.

மீண்டும் ஜெயலலிதா இதே காரணத்திற்காக, ஒரு ஜாமீன் மனுவைத் தாக்கல் செய்த போது அந்த மனுவின் மீது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சிவப்பா அவர்கள் 6-12-1996 அன்று அளித்த தீர்ப்பு வருமாறு:-

"வேண்டுமென்றே அரசியலில் காழ்ப்புணர்ச்சியோடு தன் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருப்பதாக ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்ட வாதத்தை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன. இந்த வழக்குகள் உள்நோக்கத்துடன் போடப்படவில்லை என்று தோன்றுகிறது. ஒருவருக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்பது தேவையான ஒன்றுதான். ஆனால் உயர் மட்டத்தில் ஊழல் புரிந்தவர்கள், விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியது அதைவிட முக்கியமானது. அரசுத் தரப்பில் இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது, அரசியல் ரீதியாக வழி வாங்குவதற்காக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு வர முடியாது."

அடுத்து, மைலாப்பூர் கனரா வங்கியிலும், ஸ்ரீராம் நிதி நிறுவனத்திலும் ஜெயலலிதா பெயரில், மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் இருந்தது. முடக்கி வைக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்திலே ஜெயலலிதா ஒரு வழக்கு தொடுத்தார். அந்த வழக்கின் மீது நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் அளித்த தீர்ப்பு வருமாறு:-

"ஜெயலலிதா சொத்து சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணை முக்கிய கட்டத்தில் உள்ளது. ஜெயலலிதா தனது பெயரில் வங்கியில் உள்ள பணம் முறைகேடாக சம்பாதிக்கப்பட்டது அல்ல என்று கூறுவதை இப்போது ஏற்க முடியாது. ஜெயலலிதா முதலமைச்சராவதற்கு முன் இந்தப் பணத்தைச் சம்பாதித்தார் என்பதற்கு ஆதாரம்

எதையும் நீதிமன்றத்தில் ஜெயலலிதா தரவில்லை. வங்கிக் கணக்கை முடக்கி வைத்திருக்கும் உத்தரவை நீதிமன்றம் ரத்து செய்ய முடியாது."

ஸ்பிக் நிறுவன, பங்குகளை விற்றது குறித்து ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சாமி, உயர்நீதிமன்றத்திலே தாக்கல் செய்த வழக்கிலே 15-12-1997 அன்று, உயர்நீதிமன்ற நீதிபதி வெங்கடாசலம் அவர்கள், 229 பக்கங்கள் அடங்கிய ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறார். அந்தத் தீர்ப்பின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

"எத்தனையோ அரசு நிதி நிறுவனங்கள், ஸ்பிக் பங்குகளை வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கும்போது தனியார் ஒருவருக்கு மட்டும் அப்போதைய அரசு பங்குகளை விட்டுக் கொடுத்தது ஏன் என்ற கேள்விக்கு விடை இல்லை.

விளையாட்டு அரங்கம் கட்ட 38 கோடி ரூபாயைச் செலவிட்ட அப்போதைய அரசு, லாபம் தரக்கூடிய ஒரு கம்பெனியின் (ஸ்பிக்) பங்குகளை, நிதிப் பற்றாக்குறை என்று காரணம் கூறி குறைந்த விலைக்கு விட்டுக் கொடுத்துள்ளது.

பங்குகளை வாங்கிக் கொள்வதற்கான உரிமையை ஸ்பிக் நிறுவனத்துக்கு விட்டுக் கொடுக்க நியாயமான காரணமோ, கட்டாயமோ ஏதும் இல்லை.

நூறு ரூபாய் மதிப்புள்ள சாதாரணப் பொருட்களை வாங்கும் போதும், விற்கும்போதும்கூட இரு தரப்பினரும் பேரம் பேசுவர். ஆனால் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள டிட்கோ பங்கு விற்பனையில் பேரம் பேசுவதற்கான முயற்சிகூட எடுக்கப்படவில்லை.

இவ்வளவு பெரிய தொகை சம்மபந்தப்பட்ட விஷயத்தை அமைச்சரவையைக் கூட்டி முடிவு செய்திருக்க வேண்டும். அப்போதைய அரசு அதுபோல செய்யவில்லை.

ஜெயலலிதாவைப்போல ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதற்குத் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டால் வளர்ந்து வரும்

ஜனநாயக அமைப்பின் மீது அழிக்க முடியாத கறையை அது படிய வைத்து விடும்.

தனக்கிருந்த அரசு அதிகாரத்தை ஜெயலலிதா தவறாகப் பயன்படுத்தி சட்டவிரோதமாக நடந்து கொண்டுள்ளார். அவரது நடவடிக்கை நீதித்துறைக்கு வேதனை அளிக்கிறது. அரசுக்கு ஏற்பட்ட 28.29 கோடி ரூபாய் நஷ்டத்தை எம்.ஏ. சிதம்பரம், ஏ.சி. முத்தையா, ஜெயலலிதா ஆகியோர் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ 6 மாதத்திற்குள் ஈடு செய்ய வேண்டும் என்று உத்தரவிட வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, உயர்நீதிமன்றங்கள் மட்டுமல்ல! உச்சநீதிமன்றமே என்ன சொன்னது?"

டான்சி வழக்கிலே 12-9-1995 அன்று, ஜெயலலிதா, முதலமைச்சர் பொறுப்பில் இருக்கும்போதே தொடுத்த மேல் முறையீட்டையொட்டி, உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ்.பி. பரூச்சா, பைஜானுதீன், எஸ்.பி. மஜ்மிதார் ஆகியோர் தெரிவித்த கருத்து:-

"இந்த மேல்முறையீட்டு மனு கால தாமதத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்த உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டாளர் (ஜெயலலிதா) பதவியிலே தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும் நிலையிலே, இந்த வழக்கில் எந்தவிதமான காலதாமதத்தையும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளது. சம்மந்தப்பட்ட சட்டப் பிரிவுகளின்படி, மேல்முறையீட்டாளர் (ஜெயலலிதா) மீது நடவடிக்கை எடுக்க இந்த வழக்கிலே பூர்வாங்க ஆதாரங்கள் இருப்பதாகவே தெரிகிறது."

உச்சநீதிமன்றமும் பூர்வாங்க ஆதாரம் இருப்பதாகத்தான் கூறியது.

ஜெயலலிதா மீது தனி நீதிமன்றங்கள் அமைத்து விசாரணை நடத்துவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும், அரசியல் ரீதியாக பழிவாங்கும் நடவடிக்கை என்றும், பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன என்றும் கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா வழக்கு தொடுத்தார். அதை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி லிபரான் மற்றும் நீதிபதி பத்மநாபன் ஆகியோர் அனித்த தீர்ப்பில்,

> "ஜெயலலிதாவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் நிறுவப்பட்டிருப்பது சட்ட ரீதியாக முறையானதே. இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை. தனி நீதிமன்றங்களை அமைத்து கடந்த 30-4-97இல் வெளியிடப்பட்ட அரசின் உத்தரவு சட்டத்துக்கு முரணானது அல்ல. ஊழல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் விசாரணையை நாள்தோறும் நடத்தி முடிப்பதற்காகவே இந்த ஏற்பாடு. அதைவிட இவ்வழக்குகளில் பூர்வாங்க ஆதாரங்கள் காணப்படுவதால் விசாரணையை எதிர்கொள்ளத்தான் வேண்டும்."

என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

கடந்த கால ஆட்சியில், கிரானைட் உரிமம் வழங்குவதில் மலிந்திருந்த ஊழல் தொடர்பான வழக்கில், முதல் தகவல் அறிக்கையைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஜெயலலிதா ஆட்சியில் தொழில் அமைச்சராக இருந்த சின்னசாமி உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார். அந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ராமமூர்த்தி,

> "ஏராளமான தொகைகளை வசூல் செய்துகொண்டு குத்தகை உரிமங்கள் வழங்குவதற்காக சுயலாபம் கருதி விதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குத்தகைதார்களுக்கும், குற்றஞ்சாட்டப் பட்டவர்களுக்குமிடையே உருவாக்கப்பட்ட சதித் திட்டத்தின் காரணமாக, குத்தகைத் தொகை எதுவும் நிர்ணயம் செய்யாமல் குற்றம் சாட்டப்பட்டவர் தனிநபர்களுக்கு குத்தகை உரிமையை வழங்கியுள்ளார். குத்தகை உரிமம் பெற்றவர்கள் பெரும் தொகைகளை லஞ்சமாகக் கொடுத்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட துண்டுச் சீட்டுகளில் எவ்வகையான கரன்சி நோட்டுகள் கொடுக்கப்பட்டன என்று குறித்து வைத்துள்ளதிலிருந்தும், சாட்சிகளின் வாக்கு மூலங்களிலிருந்தும் இது தெளிவாகிறது. இந்த முழு பித்தலாட்டமும் குற்றம் சாட்டப்பட்டுள்ளவரின் முழு ஈடுபாட்டோடும், அங்கீகாரத்தோடும்தான்

நடைபெற்றிருக்கிறது என்று ஆவணங்களும், சூழ்நிலைகளும் சுட்டிக்காட்டுகின்றன."

என்றுதான் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

கொடைக்கானல் ப்ளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு அனுமதி வழங்கப்பட்டதில் நடை பெற்ற ஊழல் குறித்த வழக்கில், உயர்நீதி மன்ற நீதிபதி திரு. சீனிவாசன் அவர்கள், ஜெயலலிதா, முதலமைச்சராக ஆட்சியிலே இருந்த போதே 10-4-1995 அன்று வழங்கிய தீர்ப்பு வருமாறு:-

"சட்டத்தின் நடைமுறையிலிருந்து சட்டத்தை உடைப்பதற்கு அரசு விதி விலக்கு அளித்துள்ளது. இது கட்டிலின் அளவுக்குத் தக்கபடி, மனிதனின் அளவை வெட்டுவது போன்றதாகும். இந்த வழக்கின் தீர்ப்பை முற்றாக்குவதற்கு முன்பாக, வள்ளுவர் சொன்ன அறிவு செறிந்துள்ள கருத்தை அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்."

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்."

இந்த வழக்குத் தொடர்பாக, 2-2-2000 அன்று, தனி நீதிமன்றத்திலே நீதிபதி திரு. ராதாகிருஷ்ணன் வழங்கிய தீர்ப்பில்,

போலீசாரால் தொடுக்கப்பட்ட இந்த வழக்கில் குற்றவாளிகள் புரிந்துள்ள குற்றம் எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளது. முதல் இரண்டு குற்றவாளிகள் (ஜெயலலிதா மற்றும் செல்வகணபதி) தங்கள் வசதிற்கேற்ப உயர்நீதிமன்றத்தின் கருத்துகளை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளது தெளிவாகிறது. இது சாத்தான் வேதம் ஓதுவதைப் போல் உள்ளது.

என்று தெரிவித்து ஜெயலலிதாவிற்கும், செல்வகணபதிக்கும் ஓராண்டு காலம் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், சாதாரண ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திருமதி மல்லிகா என்பவர் வருமானத்திற்கு மீறி 2 கோடியே 35 இலட்சத்து 34 ஆயிரத்து 338 ரூபாய் அளவிற்கு

சொத்து சேர்த்தார் என்ற வழக்கில் நீதிபதி சம்மந்தம் அவர்கள், 12-1-2000 அன்று, அளித்த தீர்ப்பில்,

> "இந்த வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு நாளும் நீதிமன்றம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை கேலிக்கூத்தாக மாற்றுவதற்கு முயற்சிக்கப்பட்டு அதற்கு இந்த எதிரியும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டார். ஆகையால் முதல் எதிரிக்கு நான் கருணை காட்டுவதற்கு விரும்பவில்லை. முதல் எதிரிக்கு மிக அதிகபட்ச தண்டனையாக ஏழு வருடக் கடுங்காவல் தண்டனையும், ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையும் அளிக்கிறேன்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கடந்த கால ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. செங்கோட்டையன் மீது உதிரி பாகங்கள் வாங்கியதில் ஊழல் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் மீது சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஆறுமுகப் பெருமான் 4-8-2000 அன்று அளித்த இறுதித் தீர்ப்பில்,

> "இந்த வழக்கில் மக்களுக்குப் பணியாற்ற வேண்டிய பொறுப்புக்குரியவரான முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அனைத்து விதிமுறைகளையும், நிர்வாக நடைமுறைகளையும் தூக்கி எறிந்துவிட்டு, ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு உதிரி பாகங்கள் வாங்கியதில், இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு சுருட்டியிருக்கிறார். பிரெஞ்ச் மொழியில் ஒரு பழமொழி உண்டு. அதாவது மீன் தலையிலிருந்து அழுகும் என்பதுதான் அந்தப் பழமொழி. அதைப் போல மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய ஒரு அமைச்சர், மற்றவர்கள் பின்பற்றக் கூடாத நடைமுறையைப் பின்பற்றியிருக்கிறார்."

என்று மனம் நொந்து தெரிவித்திருக்கிறார்.

1991-ஆம் ஆண்டு முதல் 1996-ஆம் ஆண்டு வரை, ஆட்சியிலே இருந்த ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சரவை சகாக்கள் மீதும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீது

உச்சநீதிமன்ற நீதிபதிகளும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும் வழங்கிய தீர்ப்புகளையும், கருத்துகளையும் சிலவற்றை மட்டும் இங்கே தொகுத்து அளித்துள்ளேன்.

இந்தக் கருத்தைத்தான் திரு. சி.எஸ். அவர்களும் தனது அறிக்கையிலே தெரிவித்து, பொய் வழக்குப் போடுவதாக ஜெயலலிதா கூறுவது நீதிமன்ற அவமதிப்பாகும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்ததோடு, ஜெயலலிதா கலந்துகொண்ட அந்தப் பொதுக்கூட்டத்தில் இருந்த தலைவர்கள், ஜெயலலிதாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அந்தக் கருத்தை ஆமோதித்தது மிகவும் துரதிருஷ்ட வசமானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

என் செய்வது, இதைப்பற்றியெல்லாம் எடுத்துரைத்து, இவர்களுடன் இந்தக் கண்யவான்கள் கூட்டு சேருவதா என்று வருத்தப்பட்டால், நான் நிதானம் தவறிப் பேசுவதாக அந்தக் கனவான்கள் என்மீது கனல் அள்ளிக் கொட்டுகிறார்கள்.

இதோ, நீண்ட கால அரசியல் அனுபவப் பழம் - நம்மைவிடப் பெரும் பொறுப்புகளை வகித்து, முதிர்ந்து தேர்ந்து பக்குவமும் பெற்றுள்ள பண்பாளர், பெரியவர், சி.எஸ். அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு இந்த நிதான புருஷர்களின் நேர்மையான பதில்தான் என்ன?

அன்புள்ள,

மு. க.

(28-09-2000)

குறிப்பு :- உடன்பிறப்பே, கழக அரசு விவசாயிகளுக்காக செய்த சாதனைகளைக் குறிப்பிட்டு 27-9-2000 நான் எழுதிய கடிதத்தையும், இன்றைய தினம் எழுதியுள்ள கடிதத்தையும் ஆங்காங்கு உள்ள கழக அமைப்புகள் துண்டறிக்கைகளாக அச்சிட்டு வெளியிடலாம்.

2523. இருங்காட்டுக்கோட்டையில் இன்பப் பெருமூச்சு!

உடன்பிறப்பே,

நேற்றைக்கு முன்தினம் (27-9-2000) சென்னை திருப்பெரும்புதூருக்கு அடுத்துள்ள இருங்காட்டுக்கோட்டையில் 525 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தேன். அந்த விழாவில் பேசும்போது அந்தக் கண்ணாடித் தொழிற்சாலையின் பூர்வீக வரலாற்றை ஓரிரு வரிகளில் குறிப்பிட்டேன். இக்கடிதத்தில் அதனைச் சற்று விரிவாகக் குறிப்பிடுவதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. படிக்கும் உனக்கும் ஒரு மகிழ்ச்சி.

செயின்ட் கோபைன் விட்ரேஜ் (Saint-Gobain Vitrage) எனும் இத் தொழிற்சாலை 1665-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டில் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. விட்ரேஜ் என்றால் பிரெஞ்சு மொழியில் கண்ணாடி என்பது பொருளாகும்.

இந்தத் தொழிற்சாலை அந்தக் காலகட்டத்தில் ஏன் உருவாக்கப்பட்டது என்பதற்கு ஒரு சரித்திரக் குறிப்பே உண்டு. அதனை நான் நேரிலேயே சென்று அறிந்து கொள்ளும் வாய்ப்பை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 8-7-1970 அன்று பெற்றேன்.

நமது தலைவர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, 1969ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான் அடுத்த ஆண்டு 1970ல் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் இருபது நாட்கள் மேற்கொண்டேன்.

பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி, ஆலந்து, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளின் அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும்,

விஞ்ஞானிகளையும் - ரோம் நகரையொட்டிய வாடிகன் நகரில் போப்பாண்டவர் அவர்களையும் சந்தித்து அளவளாவிவிட்டு, வரலாறுகளை அசை போட்டுக் கொண்டிருக்கும் அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், நினைவு இல்லங்கள் அனைத்தையும் நேரம் ஒதுக்கிக்கொண்டு கண்டு வந்தேன்.

அந்தப் பட்டியலில் முக்கிய இடம் பெற்றவைகளுள் ஒன்று பிரான்சு நாட்டு வெர்சேல்ஸ் அரண்மனையாகும். 1661-ஆம் ஆண்டு பதினான்காம் லூயி மன்னன் கட்டத் தொடங்கிய அந்த அற்புத மாளிகை பளபளப்பானது மட்டுமல்ல! பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அளவுக்கு எழிலார்ந்தது - பரப்பளவு சொல்லி மாளாது. அதன் பல்வேறு அறைகளில் புகுந்து வருவதற்குச் சில மணி நேரம் ஆகுமெனில், அதன் அழகை முற்றிலும் உற்று நோக்கி மகிழ்ந்திடத் தொடங்கினால் மாளிகையை விட்டு வெளியே வரச் சில நாட்களாவது ஆகும். கொடுங்கோன்மையின் கோலாகலத்துக்கும் - கும்மாளத்திற்கும் இடமாக விளங்கிய மாட மாளிகை அது எனினும், போர் முனைகளில் பிரான்சு குவித்த பீடுமிகு வெற்றிகளையும், அந்நாட்டு வீரர்கள் ஆற்றிய தீரச் செயல்களையும் அங்கே வண்ண ஓவியங்களாக வடித்துக் காட்டியிருக்கிற காட்சி அற்புதம்!

அரியணை அறை என ஒன்றுண்டு. அந்த அறையைத்தான் பிரான்சு நாட்டின் பிரசித்திபெற்ற கண்ணாடி அறை என அழைக்கின்றனர். அங்கேதான் பதினான்காம் லூயி மன்னனின் படுக்கை அறை நடுநாயகமாக விளங்குகிறது. அந்தக் கட்டிலின் நீளத்தைக் கொண்டே மன்னன் எவ்வளவு குள்ளமானவன் என்பதை யூகித்துக் கொள்ளலாம். வெளிப்புறமெங்கும் எண்ணத்தை இனிக்க வைக்கும் வண்ண ஊற்றுகள் நிறைந்த கண்ணாடி மாளிகையை, எவராயினும் கண்கொட்டாமல் பார்த்தே தீருவர்.

பன்னீர்க் குவியல் - பழரச பானம் - கன்னியர் சூழ் கட்டிலறை என வாழ்ந்த மன்னாதி மன்னர்கள், மண்ணோடு மண்ணாகி விட்ட கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் அக்கண்ணாடி மாளிகையைக் கொண்டுள்ள மாடி முற்றத்தின் பரப்பளவு மட்டும் இருபத்தியேழு ஏக்கர். அந்த வெர்சேல்ஸ் அரண்மனையை எழுப்பிட எவ்வளவு செலவாயிற்று என்பதை அறிந்தால் மக்களின் புரட்சி இன்னும் முன்கூட்டியே உருவாகியிருக்கக் கூடும் எனப்

பயந்து அதுபற்றிய கணக்கு விபரங்களையெல்லாம் லூயி மன்னன் எரித்து விட்டானாம்.

1871-ஆம் ஆண்டு பிரான்சைத் தோற்கடித்த வில்லியம் என்ற பிரஷ்ய அரசன் இந்த அரண்மனையில்தான் தன்னை ஜெர்மானிய ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தியாக அறிவித்துக் கொண்டான். முதல் உலகப் போரில் ஜெர்மனி ஆதிக்கத்தை முறியடித்த இருபத்தேழு நாடுகளின் அரசியல் விற்பன்னர்களும், ஜெர்மன் அதிகாரிகளும் இங்கே கூடித்தான் வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். 1783-ஆம் ஆண்டு அமெரிக்க உரிமைப் போர் முடிவுக்கு வந்தபோது உடன்படிக்கை கையெழுத்தானதும், இந்த வெர்சேல்ஸ் அரண்மனையில்தான்!

1661-ஆம் ஆண்டு கட்டிடப் பணி தொடங்கப்பட்ட இந்த மகத்தான மாளிகைக்கு கண்ணாடிப் பொருள்களைக் கொண்டு எழில் கூட்டுவதற்காக எண்ணமிட்டபோதுதான் அதற்காகவே ஒரு கண்ணாடித் தொழிற்சாலை 1665-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அத்தொழிற்சாலையின் பெயர்தான் செயின்ட் கோபைன் தொழிற்சாலை. ஆம்! வெர்சேல்ஸ் அரண்மனைக்குள் கண்ணாடி மாளிகை உருவாக்குவதற்கென்றே உருவான தொழிற்சாலை.

உடன்பிறப்பே, அந்த மாளிகையைப் பார்த்து ரசித்த போது, அந்தக் கண்ணாடி மாளிகையைப் படைத்திட்ட அந்த செயின்ட் கோபைன் தொழிற்சாலையை நாம் முப்பதாண்டுகளுக்குப் பிறகு சென்னைக்கே கொண்டு வருவோம் என்று நான் எண்ணியதில்லை. அந்த எண்ணத்திற்கான விதை கூட என் நெஞ்சில் விழுந்ததில்லை.

1665-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டிலும் - 1857-ஆம் ஆண்டு ஜெர்மனியிலும் - 1889-ஆம் ஆண்டு இத்தாலியிலும் - 1900-ஆம் ஆண்டு பெல்ஜியத்திலும் - 1917-ஆம் ஆண்டு ஜப்பானிலும் - 1937-ஆம் ஆண்டு பிரேசில் நாட்டிலும் - 1938-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிலும் - 1959-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் - எனப் பல்வேறு நாடுகளில் ஏறத்தாழ நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் 600க்கு மேற்பட்ட கண்ணாடித் தொழிற்சாலைகள் இந்த நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

உலக முழுதும் அமைந்துள்ள இந்த நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் ஒரு இலட்சத்து அறுபத்தி ஐயாயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். 1600 கோடி அமெரிக்க டாலர் மதிப்புடைய கண்ணாடிகள் தயாரிக்கப்பட்டு உலக முழுதும் விற்பனையாகின்றன.

இந்த நிறுவனத்தின் தொழில் நடவடிக்கைகள் 1990-ஆம் ஆண்டுதான் இந்தியாவில் தொடங்கியது எனலாம். எனினும் இந்தியாவில் எங்கும் அந்த நிறுவனம், தனது சொந்தத் தொழிற்சாலையை அமைக்கவில்லை. புனா, பெங்களூர், ஐதராபாத், டெல்லி, குஜராத் ஆகிய இடங்களில் வெவ்வேறு கண்ணாடித் தொழிற்சாலைகளை இந்த நிறுவனம் விலைக்கு வாங்கி நடத்தியதே தவிர, சொந்தமாகத் தொழிற்சாலை தொடங்கவில்லை.

முதன் முதலாக அந்த நிறுவனத்தின் சார்பில், அந்த நிறுவனத்தின் பெயராலேயே கண்ணாடித் தொழிற்சாலை தொடங்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். நமது கழக ஆட்சியிலேதான்! 22-1-1998ல் அடிக்கல் நாட்டப்பெற்று அந்த விழாவில் நானும், தம்பி முரசொலி மாறனும் கலந்து கொண்டு, இப்போது தொடங்கி விழாவும் நடைபெற்றுள்ளது.

இத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் கண்ணாடிகளில் ஆண்டுக்கு 30 சதவிகிதம் அளவுள்ள கண்ணாடிகள் ஏறத்தாழ 3000 முதல் 4000 கண்டெய்னர்களில் அடைத்து ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் அளவுக்கு நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும்.

உடன்பிறப்பே,

1992-93-ஆம் ஆண்டுகளில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வேறு பொருள்களின் மதிப்பு 6,808 கோடி ரூபாய்.

தமிழகத்தின் தற்போதைய ஏற்றுமதி மதிப்பு 22,976 கோடி ரூபாய். அதாவது ஏறத்தாழ பதினாறு ஆயிரம் கோடி ரூபாய் அதிகம்.

முயற்சியால் கிடைத்த வளர்ச்சியல்லவா இது! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வெர்சேல்ஸ் அரண்மனையை வட்டமிட்டு

கண்ணாடி மாளிகை கண்ட நிகழ்ச்சியையும் - இன்று அந்தக் கண்ணாடி மாளிகை உருவாக்கிய நிறுவனத்தாரைக் கொண்டே இருங்காட்டுக்கோட்டையில் கண்ணாடித் தொழிற்சாலை அமைந்துள்ளதையும் எண்ணிப் பார்க்கிறேன். இன்பப் பெருமூச்சு! ஆம்! இருங்காட்டுக்கோட்டையில் இன்பப் பெருமூச்சு!

அன்புள்ள,

மு. க.

(29-09-2000)

2524. "யாகம்" என்பதற்கு விளக்கம் எதற்காக?

உடன்பிறப்பே,

வைக்கம் போராட்டம் என்பது தென்னாட்டுச் சரித்திரத்தில் ஒரு புரட்சிகரமான அத்தியாயமாகும். அந்தப் போராட்டத்தைப் பற்றி எத்தனையோ கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. அரசியல் மேதைகளும் - பொதுவாழ்வில் நீண்டகால அனுபவம் பெற்றவர்களும் கூட, வைக்கம் போராட்டம் குறித்தும், அதிலே பெரியார் அவர்கள் பங்கு கொண்டது குறித்தும் விரிவாக எழுதியுள்ளனர்.

சாமி சிதம்பரனார் எழுதி வெளியிட்ட தமிழர் தலைவர் என்ற புத்தகத்தில் வைக்கம் போராட்ட வரலாற்றுக் குறிப்புகள் ஓரளவு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

அவற்றில் சில பகுதிகள் வருமாறு:-

மலையாளத்தில் வைக்கம் என்ற ஊரில் உள்ள தெருவில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்பது வெகுநாளைய கட்டுப்பாடாக இருந்தது. அங்கிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சுயமரியாதை உணர்ச்சி கொண்டனர். தெருவில் நடக்கும் உரிமை பெற விரும்பினர். அதற்காக ஒரு சத்தியாக்கிரகத்தை துவக்க வேண்டும் என்று, கேரளத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். அதன்படியே சத்தியாக்கிரகத்தைத் துவக்கினர்.

காலஞ்சென்ற ஜார்ஜ் ஜோசப் உட்பட 19 பேர் வரிசையாகத் திருவிதாங்கூர் அரசாங்கத்தினரால் கைது செய்யப்பட்டு விட்டனர்.

தலைவர் இல்லாத திண்டாட்டத்தில் சத்தியாக்கிரகமே நின்று விடும் போலாகி விட்டது.

சிறையிலிருந்தபடியே இதுபற்றி யோசித்த சத்தியாக்கிரகிகள், பெரியார் அவர்களுக்கு (அப்போது

ஈ.வெ.ரா.) ஒரு கடிதம் எழுதினார்கள். பெரிய காரியத்தைத் தொடங்கிவிட்டோம். அடக்குமுறை பலப்பட்டு விட்டது. இவ்வளவு சீக்கிரம் நாங்கள் எல்லாம் கைது செய்யப்படுவோமென்று எதிர்பார்க்கவில்லை. தாங்கள் உடனடியாக வைக்கம் வந்து, சத்தியாக்கிரகத்தை ஏற்று நடத்தினால்தான் கேரளத்தின் மானமும், எங்கள் மானமும் மிஞ்சும். காலதாமதம் செய்யவோ, யோசித்துப் பார்க்கவோ நேரமில்லை. உடனே வரவும்.

என்ற கடிதத்தை சிறையில் இருந்தபடியே இரகசியமாக ஆள்வசம் கொடுத்தனுப்பியிருந்தார்கள்.

பெரியார் குளித்தலையில் நடைபெற்ற (காங்கிரஸ்) அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு, மதுரை ஜில்லா சுற்றுப்பயணத்தைத் தொடங்கினார்.

அங்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டு, திடீரென்று புறப்பட்டு ஈரோடு வந்து நோய் வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தார். அச்சமயத்தில்தான் வைக்கத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் அவருக்குக் கிடைத்தது.

அன்று வருஷப் பிறப்பு - கடிதத்தைப் பார்த்தவுடன் நாகம்மையாரிடம், தம் நோய் குணமாகிவிட்டதென்று பொய் சொல்லிவிட்டு படுக்கை, துணிமூட்டை முதலியவைகளைச் சற்றுப் பெரிதாகவே கட்டிக் கொண்டு அன்றிரவே வைக்கத்திற்குப் புறப்பட்டு விட்டார்.

பெரியார் வைக்கம் வந்து சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட சங்கதி, திருவிதாங்கூர் அரசருக்கு எட்டியது. அவர் திவானை அழைத்து, பெரியார் திருவாங்கூரில் இருக்கும்வரையில் அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து, அரசாங்க விருந்தாளிபோலக் கவனித்துக் கொள்ளும்படி கூறியனுப்பினார்.

அதிகாரிகள் பெரியாரிடம் சென்றார்கள். அரசரின் ஆணையைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அவரோ,

நான் சத்தியாக்கிரகத்துக்காகவே வந்திருக்கிறேன். விருந்தாளியாகவோ, அரச மரியாதையைப் பெறவோ வரவில்லை. அதனால் என்னைச் சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யுங்கள்.

என்று பதில் அளித்தார். திருவாங்கூர் அதிகாரிகள் அவருக்குச் செய்யும் மரியாதையைப் பார்த்து, அவர் ஒருவேளை சத்தியாக்கிரகத்தை நிறுத்தி விடுவாரோ என்று ஊரார் சந்தேகப்பட ஆரம்பித்து விட்டார்கள்.

திருவாங்கூர் சமஸ்தானம் இத்துணை உபசாரம் செய்வதற்குக் காரணம் என்னவென்பது பெரியாரின் நினைவுக்கு வந்துவிட்டது.

திருவாங்கூர் அரசர், டெல்லிக்குப் போகும் சந்தர்ப்பங்களில் எல்லாம், நடுவில் ரயிலை விட்டு இறங்கி குளித்து, சாப்பிட்டுவிட்டுப் போவது ஈரோடு நகரில் பெரியாரின் பங்களாவில்தான். அதற்குக் கைமாறாக, அன்பைக் காட்டவே மன்னர், சத்தியாக்கிரகத்துக்கு வந்த பெரியாருக்கு அழைப்பு விடுத்தார்.

கடமையாற்ற வந்த இடத்தில் இத்தகைய உபசாரத்தை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு பெரியார் அவர்கள், திருவிதாங்கூர் அரசுக்கெதிரான அந்த அறப்போரில் ஈடுபட்டு, சிறை புகுந்தார்.

உடன்பிறப்பே,

இந்த நிகழ்ச்சியை திருச்சி கலைக்காவேரி நுண்கலைக் கல்லூரி மாணவர்கள், அண்மையில் நடைபெற்ற சென்னை முப்பெரும் விழாவில், வள்ளுவர் கோட்டத்தில் காட்சியாக்கிக் காட்டியபோது, 1924-ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் வைக்கம் போராட்டம் நடைபெற்ற சமயம் நாமும் அங்கிருந்தது போலவே உணர முடிந்தது.

வைக்கம் போராட்டம் குறித்துப் பலரும் எழுதியுள்ளனர். ஒருசிலர் உண்மைகளை அறியாமல் எழுதியுள்ளனர். குறிப்பாக மார்க்சிஸ்ட் தலைவர் மறைந்த பி.ராமமூர்த்தி அவர்கள் அந்தப் போராட்டம் 1921-ல் நடைபெற்றது என்றும் - அரிஜனங்களைக் கோயிலில் நுழையச் செய்வதற்காக நடைபெற்றது என்றும் அவரது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அது தவறு. அது தாழ்த்தப்பட்டோர் ஆலயப் பிரவேசத்துக்காக நடத்தப்பட்ட போராட்டம் அல்ல. மாறாக வைக்கம் தெருவிலே தாழ்த்தப்பட்டோர் நடப்பதற்காக உரிமை கோரி, 1924-ஆம் ஆண்டு வீறுகொண்டெழுந்த போராட்டமாகும்.

இந்தப் போராட்டம் குறித்து மற்றொரு சுவையானதும், சோகமானதுமான நிகழ்ச்சியையும் பெரியார் அவர்கள், அவரது வாயாலேயே சொன்னதை நினைவூட்ட விரும்புகிறேன்.

வைக்கம் வீரர் பெரியார், வைக்கம் போராட்டத்தில் வெற்றிபெற்ற விபரங்களைத் தனது சொற்பொழிவில் தொகுத்துக் காட்டிவிட்டு, பின்வரும் நிகழ்ச்சியையும் சுட்டிக் காட்டுகிறார். திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு எதிராகப் பெரியார் போர்க்கொடி உயர்த்தியது கண்டு வெகுண்டெழுந்த ஆதிக்க வெறியர்கள் என்ன செய்தார்களாம்?

இதோ பெரியாரே பேசுகிறார். கேட்போம்!

“வைக்கம் சத்தியாக்கிரகத்தில் நான் சிறையிலிருந்தபோது நடந்த நிகழ்ச்சி எங்கள் போராட்டத்துக்கு பெரிய மரியாதையையும், செல்வாக்கையும் தேடிக் கொடுத்துவிட்டது. எனக்கு ஆறுமாதக் கடினகாவல் தண்டனை விதித்து திருவிதாங்கூர் ஜெயிலில் போட்டு விட்டார்கள். பிறகு சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற்காகவும் என்று நம்பூதிரிகளும், சில வைதீகர்களும் சேர்ந்துகொண்டு சத்ரு சம்கார யாகம் என்ற ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் நடத்தினார்கள். ஒருநாள் நடுச்சாமத்தில் வேட்டுச் சத்தம் தொடர்ந்து கேட்டது. நான் ஜெயிலில் விழித்துக் கொண்டிருந்தேன். ரோந்து வந்தவனைப் பார்த்துக் கேட்டேன், என்ன சேதி? இப்படி வெடிச்சத்தம் கேட்கிறது? இந்தப் பக்கம் ஏதாவது பெரிய திருவிழா நடக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்னான், மகாராஜாவுக்கு உடம்பு சௌக்யமில்லாமல் இருந்து மகாராஜா ராத்திரி திருநாடு எழுந்து விட்டார் என்றான். அதாவது, ராஜா செத்துப் போனார் என்று சொன்னான். அவ்வளவுதான் மகாராஜர் செத்தார் என்றதுமே, எங்களுக்கு ஜெயிலுக்குள்ளாகவே ரொம்பப் பெருமை வந்துவிட்டது. அவர்கள் பண்ணிய யாகம் அங்கேயே திருப்பி மகாராஜனைக் கொன்றுவிட்டது என்றும், அந்த யாகம் சத்தியாக்கிரகக்காரர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை என்று மக்களிடம் எங்களுக்கு

ஒரு தனிமதிப்பை ஏற்படுத்தி விட்டது. எதிரிகள் குரலும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிட ஆரம்பித்தது."

உடன்பிறப்பே,

காங்கிரஸ்காரராக இருந்து தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் ஒரு சமுதாயப் புரட்சிப் போராட்டம் மாத்திரமல்ல! சத்துரு சம்கார யாகத்தைப் பற்றிப் பெரியார் சொல்லியுள்ள செய்தியையும், அந்த யாகத்தை அவர் நையாண்டி செய்துள்ள பாங்கினையும் காணும்போது அது ஒரு பழைய நம்பிக்கையை எதிர்த்திடும் பகுத்தறிவுப் போராட்டம் என்பதையும் அறிய முடிகிறதல்லவா?

இன்றைய பகுத்தறிவுப் பரிணாம வளர்ச்சிகளுக்கு இந்தப் பழைய வரலாறுகளும் - அந்த வரலாறுகள் விளக்கும் உண்மைகளும் - பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் தன்மைகளும் எங்கே தெரியப் போகிறது! சத்ரு சம்கார யாகம் என்றால்,

சத்ரு = பகைவரை,

சம்காரம் = அழித்தொழிப்பது!

யாகம் என்றால்தான் உனக்குத் தெரியும். விளக்கம் எதற்காக?

அன்புள்ள,

மு. க.

(30-09-2000)

2525. அன்று உதிர்த்த முத்துக்கள் ஆரமாக்கித் தருகிறேன்!

உடன்பிறப்பே,

இன்று நான் எதுவும் எழுதுவதாக இல்லை. இருப்பினும் என் கடிதம் பார்க்கக் காத்திருக்கும் உன்னை ஏமாறச் செய்யாமல், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவரும் - என்றைக்கும் என் அருமை நண்பருமான திரு.மூப்பனார் அவர்கள், 1996-ஆம் ஆண்டு தி.மு.க.வுடன் கூட்டணி சேர்வதற்கு முன்பும், அதன் பின்னரும் 1998-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வரையில் அ.தி.மு.க. ஆட்சியைப் பற்றி உதிர்த்த முத்துக்களைக் கோத்தெடுத்துக் தருகிறேன்.

"அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்வது தற்கொலைக்குச் சமம். உயர்ந்த அறிவுத் திறன் உடையவர்கள் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர வேண்டும் என்றார்கள். போராடிப் பார்த்தேன், முடியவில்லை. எனவே தமிழர்களின் தன்மானம் காக்க, தமிழ் மாநிலக் காங்கிரசைத் தொடங்கினேன்."

(17-4-96 அன்று காரைக்குடியில் மூப்பனார்)

"அ.தி.மு.க.வினால் தமிழ்நாடே அழிவின் விளிம்பில் நிற்கிறது. அவர்களுடைய ஆட்சிமுறை முழுக்க முழுக்க தவறாக இருந்தது. தேனை எடுத்தவன் புறங்கையை நக்காமல் இருக்கமாட்டான் என்று கிராமப்புறத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். ஆனால், ஜெயலலிதாவும், அவரது கட்சியினரும் வெறும் புறங்கையை மட்டுமா நக்கினார்கள். சொட்டுத் தேனைக் கூட மக்களுக்கென்று மிச்சம் வைக்காமல் தேன் பாட்டிலையே மொத்தமாகக் குடித்தார்கள். கடந்த ஐந்தாண்டு ஆட்சியில் ஊழலின் மொத்த உருவமாகவே ஜெயலலிதா திகழ்ந்தார்.

ஜனநாயகப் போக்குக்கு விரோதமான இந்த அராஜக ஆட்சியை ஓட ஓட விரட்ட வேண்டும் என்கிற நினைப்பு மானமுள்ள எந்த மனிதனுக்கும் இருக்கத்தானே செய்யும். அதனால்தான், அந்த அநியாய கட்சியோடு கூட்டணி வேண்டாம் என்று வலியுறுத்தி வந்தோம். தொண்டர்களின் ஆழம் என்னை அசர வைத்தது. மக்களுடைய மூடும் அப்படியே இருந்தது. எனக்கோ, கட்சிக்கோ சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் எனக்கு போன் செய்தார்கள். சந்தித்தார்கள். சொல்லி வைத்தாற்போல் அனைவரும் இதற்கு ஏதாவது செய்தாகணும் என்றார்கள். மூன்று நாட்களாக என் ஒருவனின் வார்த்தைக்காக சத்தியமூர்த்தி பவனில் தொண்டர்கள் காத்துக் கிடந்தார்கள். அதன் பிறகுதான் தொண்டர்களின், தமிழக மக்களின் ஏகோபித்த உணர்வுகளை நான் பிரதிபலித்தேன். தனிக்கட்சி தொடங்கினேன். அப்புறம்தான் நீதி, நேர்மை, நியாயம் அடிப்படையில் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தேன்."

(1996 ஏப்ரலில் ஒரு வார இதழுக்கு
மூப்பனார் அளித்த பேட்டி)

"என் நாற்பதாண்டு கால அரசியல் வரலாற்றில் அ.தி.மு.க. ஆட்சி போன்ற அராஜக ஆட்சியை நான் கண்டதே இல்லை. தமிழகத்தில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. இதற்கு இடம் கொடுக்கக் கூடாது. பெண் ஆட்சி என்றால் மரியாதை கொடுக்க வேண்டியதுதான். ஆனால், இது பெண் ஆட்சியாக இல்லை. பேய் ஆட்சி என்பதால்தான் வேண்டாம் என்கிறோம்."

(18-4-96 அன்று மதுரையில் மூப்பனார்)

"மதியாதார் தலைவாசல் மிதியாதே என்று பழமொழி உண்டு. நாங்கள் மதிக்கத் தெரிந்தவர்களுடன் கூட்டணி சேர்ந்து வெற்றி நடை போடுகிறோம். எங்கும் இந்த அ.தி.மு.க. ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது. இதுதான் இந்த அ.தி.மு.க. ஆட்சிக்கு அடிக்கப்படும் சாவுமணியாகும்."

(19-4-96 அன்று தென்காசியில் மூப்பனார்)

"அ.தி.மு.க. அளவுக்கு இனி யாரும் கெட்ட ஆட்சி செய்ய முடியாது. நமக்கு நல்வாழ்வு தரும் ஆட்சியாக இருக்க வேண்டும். நிச்சயம் கலைஞர் தலைமையில் நல்லாட்சி அமையும்."

(24-4-96 அன்று திருச்சியில் மூப்பனார்)

"எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியை அரைக் காசுக்கும் செல்லாத கட்சியாக இந்த அம்மா உருவாக்கி விட்டார். இப்போது இருப்பது அண்ணா தி.மு.க. அல்ல. அம்மா தி.மு.க.தான்."

(28-4-96 அன்று திருவண்ணாமலையில் மூப்பனார்)

"இப்போது மானத்துக்கும், வருமானத்துக்கும்தான் போட்டி. இதில் தமிழகத்தின் மானத்தை, கவுரவத்தை காக்கப் போராடுவேன். நிச்சயம் ஜெயிப்பேன். கடந்த ஐந்தாண்டு காலம் தமிழகத்தில் ஆட்சியை முடித்த ஜெயலலிதா கட்சியையும் முடிப்பார்."

(29-4-96 அன்று சேலத்தில் மூப்பனார்)

சோனியாவை வெளிநாட்டுக்காரர், அவர் இந்தியாவின் பிரதமராகக் கூடாது என்று கூறினார் ஜெயலலிதா. அதற்குப் பதிலளித்து 3-2-1998 அன்று திரு. மூப்பனார் அளித்த பேட்டியில்,

சோனியாவை வெளிநாட்டுக்காரர் என்பது பைத்தியக்காரத்தனம்.

என்று கூறினார். அது மாத்திரமல்ல,

தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் உள்ளார். தி.மு.க. ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சியில் தவறு ஏதாவது நடந்துள்ளதா? கருணாநிதி ஏன் தவறு செய்யவில்லை? ஏன் இலஞ்சம் வாங்கவில்லை? ஏன் ஊழல் செய்யவில்லை? - என்று வேண்டுமானால் அவரிடம் கோபித்துக் கொள்ளலாம். யார் வரக்கூடாதோ

அதை நாம் தவிர்க்க வேண்டும். அவர்களுக்கு அந்த சந்தர்ப்பத்தைத் தந்துவிட்டால் நிச்சயம் நாடு கெட்டுவிடும் என்னும் உணர்வு நமக்கு வரவேண்டும். இதில் தவறு வந்து விடக்கூடாது. நம்முடைய எதிர்காலம் கெட்டால் அடுத்து வரும் நம்முடைய வருங்கால சந்ததியும் கெட்டுப் போய்விடும்.

(காஞ்சிபுரத்தில் 4-2-98 அன்று மூப்பனார்)

மத்தியில் 20 மாதங்களாக ஆட்சி புரிந்த ஐக்கிய முன்னணி அரசும், மாநிலத்தில் ஆட்சி செய்யும் தி.மு.க. அரசும் எவ்வித தவறும் செய்யவில்லை. தவறு செய்யவில்லையே என்றுதான் அவர்கள் மீது நாம் கோபம் கொள்ள முடியும். ஜெயலலிதாவுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் போதுமானதாக இல்லை. அவரை இன்னும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

(5-2-98 அன்று காஞ்சிபுரத்தில் மூப்பனார்)

அ.தி.மு.க. அணிக்கு வாக்கு அளித்தால், தவறு இழைத்தவர்களுக்கு ஆதரவு அளிப்பதைப் போல் ஆகிவிடும். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். கடந்த தேர்தலில் என்ன காரணங்களைச் சொல்லி, எந்த அடிப்படையைச் சொல்லி வாக்கு கேட்டோமோ, அதே காரணங்கள் தற்போதும் அப்படியே உள்ளன. கடந்த தேர்தலைப் போல அல்லாமல், இத்தேர்தலில் நீங்கள் மாற்றி வாக்கு அளித்தால் அதன் அர்த்தம் என்ன தெரியுமா? தப்பு செய்தவர்களுக்கு ஆதரவு, தப்பு செய்யாதவர்களுக்கு ஆதரவு இல்லை என்பதாகிவிடும்.

(5-2-98 அன்று போரூர் கூட்டத்தில் மூப்பனார்)

அ.தி.மு.க. கூட்டணியில் இருப்பவர்கள் பதவி அரிப்பு காரணமாக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் தேர்தலில் பெரிய தோல்வியைக் கொடுக்க வேண்டும்.

(14-2-98 அன்று சென்னையில் மூப்பனார்)

உடன்பிறப்பே,

ஊழலையும், மதவாதத்தையும் ஒருசேர எதிர்ப்பதாகச் சொன்னவர்கள், ஊழல் ஒரு பிரச்சினையல்ல என்று இப்போது ஓர் முடிவுக்கு வந்து விட்டார்களே! இந்த விநோதத்தை என்னவென்று சொல்வது?

ஊழல் செய்திருந்தால் அது ஒரு பிரச்சினையல்ல என்று எந்த நீதிமன்றமாவது இதுவரை கூறியிருக்கிறதா?

ஊழல் செய்தவர்கள் மீது விசாரணையும் - அதன் மீதான தீர்ப்பும் பிரதமர்களாக இருந்தவர்களைக்கூட விட்டு வைக்கவில்லையே! பிறகெப்படி அது ஒரு பிரச்சினையல்ல என்று அ.தி.மு.க. கூட்டணி சகாக்களால் கூற முடிகிறது?

அன்புள்ள,

மு. க.

(1-10-2000)

2526. அட்டை மாளிகை-அநாகரிக போக்கு!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் பல்லாண்டுகளாக நடைபெற்று வருகின்ற மூத்த வார இதழ் ஒன்று (ஆனந்த விகடன்) எழுதியுள்ள தலையங்கத்தைப் படித்துப் பார்த்தேன். அண்மையில் த.மா.கா. நடத்திய சிறை நிரப்புப் போராட்டம் பற்றிய தலையங்கம்! அதன் கடைசி பகுதி வருமாறு:-

> "தி.மு.க. ஆட்சிக்கு வந்து நான்கரை வருடங்கள் சும்மா இருந்துவிட்டு, இப்போது தேர்தலுக்கு ஆறே மாதங்கள் இருக்கும் நிலையில் ஒரேயடியாக பதினைந்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து அரசுக்கு, த.மா.கா. நெருக்கடி கொடுப்பதைப் பார்த்தால் இந்தப் போராட்டம் மக்கள் நலனுக்காக நடத்தப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, புதிய கூட்டணியின் தலைவிதியைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாகத்தான் தெரிகிறது."

இந்தக் கருத்துடன் எழுதப்பட்டுள்ள அந்த தலையங்கத்தின் மற்றொரு பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம்தான் எனக்கு அதிர்ச்சியும் வியப்பும், அளித்த ஒன்றாகும்.

ஆம்! சொல்லாத ஒன்றை நான் சொன்னதாகக் குறிப்பிட்டு எழுதியதால் எனக்கு அதிர்ச்சி! அரசியலை நடுநிலையுடன் நோக்குகின்ற இந்த ஏட்டிலுமா இப்படியொரு அவதூறான தகவல் என்பதால் எனக்கு வியப்பு!

> "மூப்பனார் இன்று அரசின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்று தி.மு.க. அஞ்சியிருக்கலாம். அதற்காக போராட்டக் களத்துக்கு வந்து கைதானால், ஆறு மாதம்கூட சிறையில் வைப்போம் என்று மிரட்டல் தொனியில் முதல்வர் பேசியிருக்க வேண்டாம்".

உடன்பிறப்பே, அந்த வார இதழ் குறிப்பிடுவது போல, எந்தவொரு முதல்வர் பேசியிருந்தாலும், அது ஆணவத்தின் வெளிப்பாடுதான் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமேயில்லை. ஆறு மாதம் போராட்டக்காரர்களைச் சிறையில் வைப்பேன் என்று நான் சொல்லியிருந்தால், அது அதிகார மமதையில் பேசியது என்று யார் வேண்டுமானாலும் கூறிவிடலாம். நான் அவ்வாறு ஆறு மாதம் சிறையில் வைப்பேன் என்று சர்வாதிகாரக் குரல் எழுப்பியிருந்தால் அது, அந்த இதழ் என்னை மென்மையாகக் கண்டித்திருப்பது போலக்கூட அல்லாமல் இன்னும் வேகமாகக்கூட, அதாவது முதலமைச்சரின் குரலில் பாசிசம் - நாசிசம் - பதுங்கியிருப்பது தெரிகிறது. மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஒருவருக்கு இத்துணைத் துடுக்கு கூடாது. நாவடக்கம் தேவை. யாகாவாராயினும் நாகாக்க எனும் குறளை இந்த முதல்வர் அறியவில்லை போலும்! என்றெல்லாம் கடுமையான கணைகளை என் மீது தொடுத்திருக்கலாம். அது தவறில்லையென்றே நான் கருதுவேன்.

ஆனால் நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கற்பனை செய்து கொண்டு, ஆறு மாதம் சிறையில் வைப்போம் என்று முதல்வர் மிரட்டல் தொனியில் பேசினார் என்று ஒரு பொய்க் குதிரையை அவிழ்த்து விடுவது, எந்த வகையில் நியாயமாகும் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

த.மா.கா. போராட்டத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, 25-9-2000 அன்று, சென்னைத் தலைமைச் செயலகத்தில் என்னைச் செய்தியாளர்கள் சந்தித்தனர். அவர்கள் எழுப்பிய வினாவுக்கு நான் அளித்த விளக்கத்தை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

“நாளை மறுநாள் த.மா.கா. சார்பில் சிறை நிரப்பும் போராட்டம் நடத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். அதையொட்டி அரசாங்கத்தின் சார்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்று செய்தியாளர்கள் கேட்ட போது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இது ஆர்ப்பாட்டம் அல்ல என்றும், மறியல் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மறியல் செய்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போது, மறியலில்

ஈடுபட்ட போராட்டங்களில் ரிமாண்ட் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று மூன்று மாதம், ஆறு மாதம் என்று தண்டனையெல்லாம் பெற்றிருக்கிறோம். ஆர்ப்பாட்டமானாலும், மறியல் ஆனாலும் அமைதியாக நடைபெற வேண்டும். அமைதியாக நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்றுதான் பதிலளித்திருக்கிறேன். இது அனைத்து ஏடுகளிலும் தெளிவாக வந்துள்ளது. இதிலே எந்த இடத்திலும், போராட்டக் களத்துக்கு வந்து கைதானால் ஆறு மாதம்கூட சிறையில் வைப்போம் என்று நான் பதில் கூறவே இல்லை."

தலைமைச் செயலகத்தில் நான் இவ்வாறு பதில் சொல்லியதற்கு மறுநாள் கோவையில் செய்தியாளர்களைச் சந்தித்த திரு. மூப்பனார் அவர்கள், போராட்டம் நடத்தும் த.மா. காவினரை தமிழக அரசு ஆறு மாதமல்ல, ஆறு வருடங்கள்கூட சிறையில் போடட்டும் என்று அவராகத்தான் தெரிவித்தார்.

அதே நாளில் சென்னையிலிருந்து த.மா.கா. சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், ஏழைகளுக்காகப் போராடும் அறப்போராட்டத் தொண்டர்களைக் கைது செய்து ஆறு மாதம் சிறையில் வைப்பேன் என்று தி.மு.க. அரசு சொல்வது சர்வாதிகாரத்தின் உச்சக்கட்டம் ஆகும். அரசியல்வாதிகளுக்கும், கிரிமினல் குற்றவாளிகளுக்கும் இடையே முதல்வருக்கு வேறுபாடு தெரியவில்லைபோலும். நடப்பது சட்டத்தின் ஆட்சி. எனவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சட்டத்தின் வழியிலேயே த.மா.கா. தீர்வு காணும் என்று தெரிவித்திருந்தார்கள். ஆனால் ஒன்றை அவர்கள் வசதியாக மறந்து விட்டார்கள். பல்வேறு போராட்டங்களை நடத்தி சிறைவாசம் அனுபவித்த தி.மு.க., எதிர்க்கட்சியாக இருந்தபோது விலைவாசி உயர்வைக் கண்டித்து மறியல் போராட்டம் நடத்தியதற்காக அண்ணா அவர்களுக்கும், ஆயிரக்கணக்கான தி.மு.க.வினருக்கும் மூன்று மாதம் சிறைத் தண்டனை தந்து காங்கிரஸ் ஆட்சியினர் பல சிறைகளில் பூட்டி வைத்ததை மறந்து விட்டுத்தான் அந்த அறிக்கை விடுத்தனர்.

அதே செப்டம்பர் 26ந்தேதியன்று திருப்பூரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட அரசியல் மாநாட்டில் பேசிய திரு. மூப்பனார் அவர்கள், முதல்வர் கருணாநிதி ரொம்ப ஜாஸ்தி பேசுகிறார். தொண்டர்களுக்கு என்னைப் பற்றி அவர்

சொல்லியிருப்பதைப் பார்த்தால் நிதானம் தவறி விட்டார் என்று சொல்லலாம். இந்த அளவுக்குக் கீழ்த்தரமாகப் போனது ஏன்? மனிதனுக்குக் கோபம் வரலாம். ஆனால் நிதானம் இழக்கக் கூடாது. கருணாநிதி அப்படி நிதானம் தவறக் கூடியவர் அல்ல. தி.மு.க.வால்தான் த.மா.கா. வெற்றி பெற்றது என்று கருணாநிதி கூறுகிறார். நாங்கள் அவர் வெற்றிக்கு உதவவில்லை என்கிறார் என்றெல்லாம் கூறி, நடுநிலை நாளேடுகளிலேயே அந்தப் பேச்சு வெளிவந்துள்ளது.

இதற்கான விளக்கமான பதிலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்கள், அறிக்கை வாயிலாகத் தெரிவித்து, நான் எந்த இடத்திலும் பேசாத கருத்துகளையெல்லாம் பேசியதாகக் கூறிக்கொண்டு, அதற்கு பதிலளிக்கும் வேலையில் த.மா.கா. ஈடுபட்டதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அதற்குப் பிறகும், வீராசாமி அவர்களின் அறிக்கை எல்லா ஏடுகளிலும் வெளி வந்ததை பார்த்த பிறகும், ஆறு மாதம் சிறையில் வைப்பேன் என்று த.மா.கா.வை மிரட்டினேன் என்று வலியக் கிளம்பி வம்புக்கு இழுப்பது முறையா? தகுமா? என்பதை அந்த இதழாளர்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொரு ஏடு, ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளி வருகிற (இந்தியா டுடே) ஏடு - அது,

> “கருணாநிதி செப்டம்பர் 17 அன்று, சென்னையில் நடந்த முப்பெரும் விழாவில் நம்மைத் தரக் குறைவாகத் தாக்கும் த.மா.கா.வுடன் இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று அறிவித்தார். இரண்டு நாட்கள் கழித்து மூப்பனாருடன் தனிப்பட்ட நட்பும் முறிந்ததா? என்று நிருபர்கள் கேட்டபோது, ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்றால் என்ன அர்த்தம்? என்று கருணாநிதி திருப்பிக் கேட்டார்”.

என்று எழுதி எங்களுக்குள் தனிப்பட்ட நட்புணர்வும் இல்லை என்று கருத்தறிவித்து, எங்களின் இனிய நட்புக்கு மங்களம் பாடியிருக்கிறது.

ஆனால் உடன்பிறப்பே, அந்த இதழ் எப்படி என் பேட்டியை திரித்தும், மறைத்தும் வெளியிட்டு, தன்னுடைய வெறுப்பைக்

கக்கியிருக்கிறது என்பதை உனக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமை.

மூப்பனாருக்கும் உங்களுக்குமிடையில் தனிப்பட்ட நட்பு முறையிலும் ஒட்டுறவு இல்லையா?

என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு நான் அளித்த பதில்!

த.மா.கா.வோடு உறவில்லை என்றால் என்ன அர்த்தம்?

என்பதாகும்.

இதைச் சாதாரண அறிவு படைத்தவர்களும் புரிந்து கொள்ள முடியும். அதாவது நிருபர் கேள்விக்கு நானும் கேள்வி வடிவத்திலேயே பதில் அளித்திருக்கிறேன்.

"த.மா.கா.வோடு உறவில்லை என்பதற்கு அந்தக் கட்சியோடு உறவில்லை என்று பொருளே தவிர, அது தனிப்பட்ட நட்புக்கல்ல என்பதுதான் வெளிப்படையாகத் தெரிகிற உண்மை."

ஆனால் இதையும் திரித்துக் கூறி, ஆதாயம் தேட முனைவோர் கருணாநிதிக்கும், மூப்பனாருக்குமிடையே தனிப்பட்ட நட்பும் அறுந்து போய் விட்டது என்று கற்பனைச் சித்திரம் தீட்டுகிறார்கள். பாவம்! அவர்கள் காணுகின்ற கடைசித் தரமான கனவு அது! ஆனால் பலிக்காது! நானும், மூப்பனாரும் அந்தக் கனவைப் பலிக்க விட மாட்டோம்.

உடன்பிறப்பே, ஒன்று மட்டும் சொல்லி வைக்கிறேன். ஏதாவது விமர்சனம் செய்ய வேண்டுமென்பதற்காக விமர்சனத்திற்கு தோதாக எதுவும் கிடைக்காவிட்டால், நாம் எழுதாததையும், சொல்லாததையும் எழுதியதாக, சொல்லியதாகக் கற்பித்துக்கொண்டு அதை வெகு உயரத்திற்கு அடுக்கிக் கொண்டே போகிற ஒரு அநாகரிகப் போக்கு சிலரிடையே வளர்ந்திருக்கிறது. ஆனால் அது வெறும் அட்டை மாளிகையாக சடசடவெனச் சரிந்து விடும் என்பது மட்டும் நூற்றுக்கு நூறு உண்மை!

அன்புள்ள,

மு. க.

(6-10-2000)

2527. என்ன செய்ய முடியும்? எப்படிக் காப்பாற்ற முடியும்?

உடன்பிறப்பே,

மதச்சார்பின்மை என்ற சொல் ஒரு சிலரிடம் சிக்கிப் படாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைய இந்திய அரசியலில், குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசியலில், இந்த மதச்சார்பின்மை என்பதுதான் எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் சர்வரோக நிவாரணி என்று பிரமாதமாக விளம்பரப்படுத்தப்படுகிறது.

அதிலும் வேடிக்கை என்னவென்றால், எதிர்பார்க்கப்படும் தேர்தலுக்காகச் சந்தர்ப்பவாதக் கூட்டணியொன்றை அமைத்திடுவதற்கு ஆர்வம் கொண்டு அலைபவர்கள் தான் இந்த மதச்சார்பின்மை எனும் கேடயத்தை நெஞ்சுக்கு நேராகப் பிடித்துக்கொண்டு வலம் வருகிறார்கள்.

மதச்சார்பின்மையோ, மதமின்மையோ - சில கட்சிகளுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே குத்தப்பட்ட முத்திரை!

ஆனால் ஒரு சில கட்சிகள் அந்த முத்திரையை, பட்டதும் படாததுமாகத் தமது நெற்றியிலே குத்திக் கொண்டு திரிவது, அடல்பிகாரி வாஜ்பாய் அரசு ஒரு வாக்கு வித்தியாசத்திலே தோற்கடிக்கப்பட்ட பிறகுதான்!

அதுவரையில், மதச்சார்பின்மையாவது! மண்ணாங்கட்டியாவது! - அதைப் பற்றியெல்லாம் அந்தக் கட்சிகளுக்கு அக்கறையுமில்லை. அக்கறை காட்ட வேண்டிய அவசியமும் இல்லை. ஆம்! இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவர்களே அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, அங்கிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் இராணுவத்தை நிறுத்தி வேடிக்கை பார்த்து மதச்சார்பின்மையின் மகத்துவத்தை இந்த மேதினிக்கே உணர்த்திய மாமேதையல்லவா! அவரது தலைமையில்தானே கடைசி வரையில் இருந்துவிட்டு 1996

தேர்தல் நேரத்திலே அவர் ஊழலுக்குத் துணை போகிறார் என்று குற்றம் சுமத்திவிட்டு அவரது கட்அவுட்களை உடைத்து நொறுக்கி, அவற்றின் கழுத்தில் காலணி மாலை அணிவித்து, அவரது கொடும்பாவியையும் கொளுத்தினார்கள்! குமுறினார்கள் எரிமலை போல! கொந்தளித்தார்கள் கடல் போல! அப்போதெல்லாம் அவர்களது மூல முழக்கம் - பிரதான கோஷம், ஊழல் சாம்ராஜ்யத்தை உக்கிரமாக எதிர்ப்போம் என்பதுதானே!

எதிர்த்தார்களா? எரிதழல் கண்களால் எரித்துப் பொசுக்கினார்களா? இல்லை! இல்லவே இல்லை! ஊழல் என்பதை மிக லாவகமாக ஊடல் என்று வார்த்தை ஜாலம் செய்து, ஊடல்! ஊடல்! ஊடல் போயிற் கூடல்! கூடல்! கூடல்! என்ற பாடலை பாரதி இவர்களுக்காகவே எழுதியதுபோல அல்லவா மாற்றிக் கொண்டார்கள்.

ஊழல் ராணியின் மீது தொடரப்பட்ட வழக்குகள் ஏன் தாமதமாகின்றன? தீர்ப்பு எப்போது? தண்டனை எப்போது? என்று எல்லோரையும் முந்திக்கொண்டு அவசரப்பட்டு, ஆத்திரமுற்றுக் குதித்தவர்கள், அதையெல்லாம் அப்படியே மறந்துவிட்டு ஊழல் ஒரு பிரச்சினையில்லை, மதச்சார்பின்மைதான் இப்போது முக்கியம் என்று புதிய வேதாந்தசாகரர்களாகப் புறப்பட்ட மர்மம்தான் என்ன?

இவர்களும் சரி, இவர்களது தோழமைக் கட்சியினரும் சரி, ஒரு காலத்தில் ஊழலின் வேரில் வெந்நீர் ஊற்றி அழிக்க வேண்டும் என்று உறுமினவர்கள்தானே!

லல்லுபிரசாத் யாதவ் மீது குற்றப்பத்திரிகை கூடத் தாக்கல் செய்யாத நிலையில், அவர் மீது புகார் எழும்பியவுடனேயே, அவர் ஐக்கிய முன்னணியில் இருக்கக்கூடாது என்று போர்க்கொடி உயர்த்திய கட்சியல்லவா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி! லல்லு புகார் வந்தபோதே அவருக்கு அணியில் இடமில்லை என்று ஆணையிட்டவர்கள், நீதி மன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டாலும் பரவாயில்லை! நாங்கள் இந்த ஊழல் ராணியின் அணியிலேதான் இருப்போம் என்று சத்தியம் செய்துகொண்டு ஊழலுக்குத் துணையென்று உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறார்களே! காரல்மார்க்ஸ் கற்பித்த தத்துவம் இதுதானோ என்று கேட்கத் தோன்றுகிறது!

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இவர்கள் தயாராக வைத்திருக்கிற ஒரே பதில், நாங்கள் யார் தெரியுமா? நாங்கள்தான்

மதச்சார்பற்ற அணியினர்! என்பதாகும். இவர்கள் பேசுகிற மதச் சார்பின்மை - மத நல்லிணக்கம் இவற்றுக்கெல்லாம் இவர்கள் வழங்கும் வியாக்கியானங்கள் என்ன தெரியுமா?

சமூகங்களுக்கிடையேயும், மதங்களுக்கிடையேயும் நல்லிணக்கம் ஏற்படுத்துகிறோம் என்று கூறிக் கொண்டு ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு சேலம் நகரத்தில் இந்த அணியினர் ஒரு மாநாடு கூட்டினார்கள். மாநாட்டு விளம்பரத்துடன் ஊரெல்லாம் ஒரு பிரச்சார சுவரொட்டியை ஒட்டினார்கள். சமூகங்களிடையிலும் மதங்களிடையிலும் நல்லிணக்கத்தை இவர்கள் எப்படி உருவாக்கினார்கள் என்பதற்கு அந்தச் சுவரொட்டிகளே சான்று!

இந்துக்கள் என்றால் திருடர்கள்!

இது இந்துக்களின் நல்லெண்ணத்தைப் பெற ஒட்டப்பட்ட சுவரொட்டியாம்!

786 என்பது அல்லாவின் டெலிபோன் நம்பரா?

இந்தக் கிண்டல் முஸ்லிம்களுடன் நல்லிணக்கம் ஏற்படுத்த ஒட்டப்பட்டது என்கிறார்கள்!

பரிசுத்த ஆவியில் இட்லி வேகுமா?

இயேசு பிறப்பை டாக்டர்கள் ஏற்பாரோ?

இது கிறிஸ்தவர்களிடம் நல்லிணக்கத்தை உருவாக்கிட ஒட்டப்பட்ட சுவரொட்டி போலும்!

உடன்பிறப்பே, இவர்கள்தான் மதச்சார்பின்மையை நிலை நாட்டுவதற்குப் புறப்பட்டுள்ளவர்கள்!

அதாவது, தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிரான அணியாம்! அதனால் அது மதச்சார்பற்ற அணியாம்! தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சியும் இருப்பதால் இது தீண்டத்தகாத அணியாம்! வெறுக்கத்தக்க அணியாம்! விரும்பத் தகாத அணியாம்!

முதலில் அவர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி தொடங்கியபோது வெளியிடப்பட்ட செயல் திட்டம் என்னவென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதோ அவற்றில் முக்கியமானவை சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

"தேசிய ஜனநாயகக் கூட்டணிதான் நாட்டின் எதிர்காலம்.

அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும்.

சாதி மத அடிப்படையில் யாரும் நடத்தப்பட மாட்டார்கள். நீதியும், நியாயமும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வழங்கப்படும். யாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ நாங்கள் செயல்பட மாட்டோம் என்று உறுதி அளிக்கிறோம்.

சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளே, நவீனமானதும், சீரமைக்கப்பட்டதுமான நல் இந்தியாவை உருவாக்கிட நாம் கரம் கோத்து இணைந்து நடைபோடுவோம்.

பழைய தப்பபிப்பிராயங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, மன வேற்றுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்.

மதச்சார்பின்மை, சமூக நீதி அடிப்படையில் அனைவரது உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பளித்து, நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உரிய உரிமைகள் வழங்க உறுதி மேற்கொள்ளப்படுகிறது.

உடன்பிறப்பே, நாமும் இடம் பெற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட செயல் திட்ட அறிக்கை இதுதான் - இதிலே எங்கே மதவாதம் பேசப்படுகிறது? மதச் சார்பின்மைக்கு எதிரான கருத்து தலை நீட்டுகிறது?

மதச் சார்பின்மையெனும் ஆயுதத்தைத் தோளில் வைத்துக்கொண்டு, நம்மீது கடுங்கண்டனங்களைப் பொழிகின்றவர்களின் கடந்த கால வரலாறு என்ன?

அண்மையில் நான் மேற்கொண்ட தென் மாவட்டங்களின் சுற்றுப்பயணத்தின் போது, தூத்துக்குடி மாவட்டக் கழகப் பணிமனை திறப்பு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசியதில் நான் காட்டிய குறிப்புகளை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

இதோ அந்தப் பேச்சின் சுருக்கம் :-

மதச் சார்பற்ற அணி என்றால் என்ன அர்த்தத்திலே சொல்கிறார்கள்? இவர்களுக்கு ஜனசங்கத்தோடு தொடர்பு இல்லையாம், இவர்களுக்கு பா.ஜ.க.வோடு தொடர்பு இல்லையாம். அவர்கள் இருக்கிற பக்கம் கூட போகமாட்டார்களாம். அவர்கள் நிழல் கூட படாதாம். அந்த அளவிற்கு புனிதர்களாம், புத்தர்களாம். ஆனால் வரலாறு மறந்துவிடக் கூடிய ஒன்றா? சரித்திரத்தை மறந்துவிட முடியுமா?

1967-ஆம் ஆண்டு இவர்கள் எங்கே இருந்தார்கள்? 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பஞ்சாப், உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய இந்த மூன்று மாநிலங்களிலும் அகாலிதளம், பாரதீய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி ஆட்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சராக அங்கம் வகித்தது. உடனே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான் அங்கம் வகித்தது. நாங்கள் அங்கம் வகிக்கவில்லை என்று சொல்வார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அணியிலே பங்கு பெற மறுத்துவிட்ட போதிலும், அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவளிக்க ஒப்புக் கொண்டது. இது நடைபெற்றது 1967-ஆம் ஆண்டு.

பிறகு 1977-ஆம் ஆண்டு தேர்தலில், மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா அரசு அமைந்தது. அதில் ஜனசங்கம் இடம் பெற்றிருந்தது. அந்த அரசில் வாஜ்பாய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோரெல்லாம் இடம் பெற்றிருந்தார்கள். அமைச்சர்களாக இருந்தார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த ஆட்சியை வெளியே இருந்து ஆதரித்தது. இந்த வரலாற்றை மக்கள் மறந்து விடுவார்கள் என்று எண்ணிக்கொண்டு நாங்கள் மதச்சார்பற்ற அணி என்று சொல்கிறீர்களே, அன்றைக்கு நீங்கள் மதச்சார்பற்ற அணியா? வெளியே இருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஜனசங்கத்தை அமைச்சர்களாகக் கொண்டிருந்த ஜனதா அரசை, மொரார்ஜி அரசை ஆதரிக்கவில்லையா?

அவ்வளவு ஏன், 1989-90இல் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் தலைமையிலே மத்தியிலே ஆட்சி. அந்த ஆட்சியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பி.ஜே.பி. ஆகிய இரண்டு கட்சிகளுமே வெளியே இருந்து ஆதரித்தன. அது மாத்திரமல்ல! அத்தோடு பல மாநிலங்களில் மைனாரிட்டி பலத்தோடு அமைந்த ஜனதா ஆட்சியை பி.ஜே.பி. ஆதரித்தது. அப்போதெல்லாம் மதச்சார்பற்ற தன்மை எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டது. இப்போது திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்காக, தமிழ்நாட்டிலே உள்ள மார்க்சிஸ்ட்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டாக இருந்திருப்போம். அவர்கள்தான் பி.ஜே.பி.யோடு சேர்ந்து எங்களை உதறித் தள்ளி விட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

ஏதோ இளமைக் காலம் முதல் தங்களுக்கு மதமே பிடிக்காததைப் போலவும், தந்தை பெரியாருடைய இயக்கத்திலே தன்னை ஒப்படைத்துக்கொண்டு பழுத்த நாஸ்திகராக மதம் மக்களுக்கு ஒரு அபின் என்று மார்க்சிஸ்ட் பாஷையிலே சொல்லிக் கொண்டிருந்தவராக தன்னைக் கருதிக் கொண்டிருக்கின்ற என்னுடைய அருமை நண்பர் திரு. மூப்பனார் அவர்களும்கூட - ஆகா, நாங்கள் மதச்சார்பற்ற அணியிலே இருக்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தீண்டமாட்டோம், தீண்டினால் திருநீலகண்டம் என்று இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே அவரையும் கேட்கிறேன். இவைகளுக்கெல்லாம் என்ன பெயர்? இந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி - இவர்கள் எல்லாம் எங்கே இருந்தார்கள்? யாரை ஆதரித்தார்கள்? வெளியே இருந்தும் ஆதரித்தார்கள். அமைச்சரவையிலே இடம் பெற்றும் ஆதரித்தார்கள். அதற்குப் பெயர் என்ன? இப்பொழுது திடீரென்று என்ன வந்து விட்டது?

இப்படி வாதங்களை அடுக்கிக் காட்டினால் கருணாநிதி கோபமாகப் பேசுகிறார் என்று கேலியும், கிண்டலும் செய்துவிட்டால் போதுமா?

சில டாக்டர்கள் எல்லாவிதமான நோய்களுக்கும் ஒரேவிதமான மிக்சர் கலக்கிக் கொடுப்பது போல், அனைத்துப் பிரச்சினைகளுக்கு (ஊழல் பிரச்சினை உட்பட) மதச் சார்பின்மை லேகியம்தான் கை கண்டது - காரம் மணம் கொண்டது - என்று மந்திரம் ஜெபித்துக் கொண்டே ஊழல் பெருநதியில் தங்களையுமறியாமல் மயங்கி விழுபவர்களை என்ன செய்ய முடியும்? எப்படிக் காப்பாற்ற முடியும்?

அன்புள்ள,

மு. க.

(8-10-2000)

2528. பழி வாங்கிட அல்ல!
பழி ஏற்படாமலிருக்க!

உடன்பிறப்பே,

1996 சட்டமன்றத் தேர்தலையொட்டி நடைபெற்ற தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரத்தில் 1991 முதல் ஐந்தாண்டுகளாக நடைபெற்ற ஊழல் ஆட்சிக்கு முடிவு கட்டவும் - ஆயிரங்கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் புரிந்து சுடுகாடு, இடுகாடு வரையில் கொள்ளையடித்தவர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டனை வாங்கித் தரவும் சூளுரைத்துத்தான் வாக்காளர்களை அணுகினோம். ஊழலை ஒழித்து - ஊழல் செய்தோரை நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என்று சபதம் எடுத்துக் கொண்டு அணி வகுத்த அந்தத் தேர்தல் கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரசும் தடந்தோள் தட்டி நின்றது. கம்யூனிஸ்டு கட்சியும் களம் புகுந்து கர்ச்சனை செய்தது.

தேர்தலில் வெற்றிபெற்று தி.மு.க. ஆட்சி அமைந்த பின்னரும் பொது மேடைகளில், சட்ட மன்றத்தில் ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஊழல் ஆட்சியாளர்கள் மீது இன்னும் ஏன் வழக்கு தொடரவில்லை? தொடரப்பட்ட வழக்குகளும் விரைந்து நடைபெறவில்லையே ஏன்? என்று முழக்கமிடக் கம்யூனிஸ்டுகளும், த.மா.கா.வினரும் தவறவில்லை.

விசாரணைக்கு வந்த ஊழல் வழக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக முடிவுக்கு வந்தன. இன்னும் சில வழக்குகள் முடிவைத் தொடும் நிலையில் உள்ளன.

இதுவரை நடைபெற்ற வழக்குகள் - தீர்ப்பு கூறப்பட்டவை - தண்டிக்கப்பட்டவர்கள் - விடுவிக்கப்பட்டவர்கள் என்பதற்கு ஒரு பட்டியலே உண்டு.

* சிறப்பு நீதிமன்றத்திலே விசாரிக்கப்பட்ட தீயணைப்புத் துறை வழக்கு - 26-11-99ல் தீர்ப்பு கூறப்பட்டு - நீதிபதி

ராதாகிருஷ்ணன் அவர்களின் சிறப்பு நீதிமன்றத்தில் அரிகரன், ஐ.பி.எஸ். விடுதலை செய்யப்பட்டார்.

* முன்னாள் அமைச்சர் நாகூர் மீரான் சொத்துக் குவிப்பு வழக்கு, 2-12-99 அன்று, நீதிபதி சம்பந்தம் அவர்களால் தீர்ப்பு கூறப்பட்டு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

* சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிபதி சம்பந்தம், 12-1-2000 அன்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி மல்லிகாவிற்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

* கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில், நீதிபதி ராதாகிருஷ்ணன், 2-2-2000 அன்று, ஓர் ஆண்டு தண்டனை ஜெயலலிதாவுக்கும், இரண்டாண்டு தண்டனை முன்னாள் அமைச்சர் செல்வ கணபதிக்கும் அளித்து தீர்ப்பு கூறினார்.

* சொத்துக் குவிப்பு வழக்கில் அதிகாரி இன்பசாகரனுக்கு, 16-2-2000 அன்று நீதிபதி சம்பந்தம், ஓராண்டு தண்டனை அளித்து தீர்ப்பு கூறினார்.

* சொத்துக் குவிப்பு வழக்கில், சேடப்பட்டி முத்தையாவிற்கு, நீதிபதி சம்பந்தம் 8-3-2000 அன்று, 25 மாதங்கள் தண்டனை அளித்து தீர்ப்பு கூறினார்.

* இலவச வேட்டி சேலை வழக்கில், நீதிபதி சம்பந்தம் 16-3-2000 அன்று, முன்னாள் அமைச்சர் மதுசூதனனுக்கு 2 ஆண்டுகள் தண்டனை வழங்கினார்.

* இலவச வேட்டி சேலை வழக்கில், நீதிபதி ஆறுமுகப் பெருமான் ஆதித்தன் 20-4-2000 அன்று, ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு ஆறு மாதம் தண்டனை வழங்கினார்.

* சொத்துக் குவிப்பு வழக்கில், ஆறுமுகப் பெருமான் ஆதித்தன் அவர்கள், மலர்விழி என்பவருக்கு 28-4-2000 அன்று ஓராண்டு தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

* கலர் டி.வி. வழக்கில், ராதாகிருஷ்ணன் 30-5-2000 அன்று, ஜெயலலிதாவையும், சசியையும் விடுதலை

செய்து தீர்ப்பளித்தார். இதே வழக்கில் செல்வ கணபதிக்கும் மற்றும் சிலருக்கு மட்டும் 5 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது.

* ஜீவா போக்குவரத்துக் கழக ஊழலில், நீதிபதி ஆறுமுகப் பெருமான் ஆதித்தன், முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கு 4-8-2000 அன்று 4 ஆண்டுகால தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

* சொத்துக் குவிப்பு வழக்கில், நீதிபதி ராதாகிருஷ்ணன் 11-8-2000 அன்று, முன்னாள் அமைச்சர் பொன்னுசாமிக்கு 3 ஆண்டுகள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

* சொத்துக் குவிப்பு வழக்கில், நீதிபதி ராதாகிருஷ்ணன், முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தியை 18-8-2000 அன்று விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

* டான்சி ஊழல் ஜெயா பப்ளிகேஷன்ஸ் வழக்கில், நீதிபதி அன்பழகன், 9-10-2000 அன்று, ஜெயலலிதா, சசிகலா, முன்னாள் அமைச்சர் முகமது ஆசிப், அதிகாரிகள் கற்பூரசுந்தரபாண்டியன், டி.ஆர்.சீனிவாசன், நாகராஜன் ஆகியோருக்கு 3 ஆண்டுகள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

* டான்சி ஊழல் சசி எண்டர்பிரைசஸ் வழக்கிலே, நீதிபதி அன்பழகன், ஜெயலலிதா, சசிகலா ஆகியோருக்கு இரண்டு ஆண்டுகள் தண்டனை வழங்கி 9-10-2000 அன்று தீர்ப்பு அளித்தார்.

உடன்பிறப்பே, இந்தப் பட்டியலின்படி, இதுவரை வெளிவந்துள்ள தீர்ப்புகளில் சிலர் தண்டிக்கப்பட்டுள்ளனர். சிலர் விடுதலை பெற்றிருக்கின்றனர்.

ஒரு தீர்ப்பு தனக்குச் சாதகமாக கிடைத்த போது ஜெயலலிதா அவர்கள், செய்தியாளர்களிடம் மிகுந்த உற்சாகத்துடன் (God is Great) கடவுள் நிகரற்றவர் - தர்மம் வெல்லும் என்று கூறியதையும் - அந்தச் செய்தியாளர்கள் தங்கள் ஏடுகளில் பதிவு செய்துள்ளார்கள்.

எந்தத் தீர்ப்புக்குமே மேல் முறையீடு உண்டு. உச்ச நீதிமன்றம் வரையில் செல்லும் உரிமையும் பாதிக்கப்பட்டோருக்கு நிச்சயம் உண்டு.

இதற்கிடையே இப்போது கிடைத்துள்ள தீர்ப்புகளுக்கு உள்நோக்கம் கற்பித்து, சிறப்பு நீதி மன்றத்தின் மீது சீறிப் பாய்வது என்பது எரிச்சலின் வெளிப்பாடே தவிர, ஏற்கத்தக்க செயல் அல்ல!

சட்டம் என்பது சகலருக்கும் பொதுவானதாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் இருக்க முடியும். விருப்பம் போல் அதை வளைத்துக் கொள்ள முடியாது! வளைக்கவும் கூடாது! வளைக்க முற்பட்டால் சட்டத்தின் ஆட்சி என்பதற்கும், ஜனநாயகத்தின் மாட்சி என்பதற்கும் பொருள் இல்லாமலே போய்விடும்.

மாநிலம், நாள்தோறும் சுரண்டப்பட்டதை, சுருட்டப்பட்டதை, மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்தோம்.

எங்களை வெற்றி பெற வைத்தால், கொள்ளைக்காரர்களைக் கூண்டில் ஏற்றுவோம் என்று வாக்களித்தோம்.

அரசு அமைத்திட மக்கள் ஆணையிட்டார்கள். ஆணையேற்று, மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வருவதுடன், உறுதி அளித்தவாறு ஊழல் பேர்வழிகளை சிறப்பு நீதிமன்றம் அமைத்து அந்த நீதிமன்றத்தில் நிறுத்தினோம்.

இவ்வாறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்ததை, அன்றைய தினம் ஜெயலலிதாவின் ஆதரவோடு மத்தியிலே ஆட்சியில் இருந்த பா.ஜ.க. கட்சியினர் சிலர் விமர்சித்து தனி நீதிமன்றங்கள் அமைத்து ஊழல் வழக்குகளை விசாரிக்கக்கூடாது என்று கருத்து தெரிவித்தபோது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் செயலாளர் திரு. நல்லகண்ணு அவர்கள் வெளியிட்ட அறிக்கை எனக்கு பசுமையாக நினைவில் இருக்கிறது. அவருடைய அறிக்கையின் சில பகுதிகள் வருமாறு :-

* ஜெயலலிதாவை ஊழலிலிருந்து பி.ஜே.பி. அரசு காப்பாற்ற விரும்புகிறது என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

* முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதற்கு அடிப்படை

ஆதாரங்கள் இருக்கின்றன என்பதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

* இந்தியாவைப் போன்ற கூட்டாட்சியைக் கொண்ட நாட்டில் ஒருவரை ஊழலிலிருந்து காப்பாற்ற, மாநில அரசாங்கத்தின் உரிமையை மத்திய அரசு, பறிக்க நினைப்பது மிகவும் தவறானது.

அதுமட்டுமல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடு (தீக்கதிர்) அப்போது என்ன தலையங்கம் எழுதியது தெரியுமா?

"அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுண்டல் துவங்கி சுடுகாடு வரை எங்கெங்கு நோக்கினும் ஊழல் வெள்ளம் நுங்கும் நுரையுமாக கரை புரண்டு ஓடியது. கமிஷன், லஞ்சம் என்ற வார்த்தைகள் சர்வ சாதாரணமாக புழங்கின. முதல்வராக இருந்த ஜெயலலிதா துவங்கி அமைச்சர்கள், அதிகாரிகள் என கோடி கோடியாய் சுருட்டினர். அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் ஊழல் சாம்ராஜ்யத்திற்கு எதிராக நல்லதொரு தீர்ப்பை மக்கள் வழங்கினார்கள். மக்கள் தந்த தீர்ப்பிற்கிணங்க ஜெயலலிதா மற்றும் அவரது பரிவாரங்களின் ஊழல்களை விசாரித்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுத்திட அரசு முனைப்புக் காட்டியது.

வழக்குகளின் எண்ணிக்கை நீண்டு கொண்டே சென்றதால், இந்த வழக்குகளை விசாரிக்க மூன்று தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. தனி நீதிமன்றம் அமைத்ததில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றும், இதில் அரசின் தலையீடு இல்லையென்றும், இதில் அரசியல் சாசனத்திற்கு முரணான விஷயம் எதுவும் இல்லை என்றும் உயர்நீதிமன்றம் தெளிவு படுத்தியுள்ளது. ஜெயலலிதாவும், அவரது திருக்கூட்டமும் நிரபராதிகளாக இருந்திருந்தால் நீதிமன்றத்தில் வழக்குகளை நேர்மையாக எதிர்கொண்டிருக்கலாம். ஆனால் மடியிலே கனம் இருப்பதால், வழியிலே பயம் இருக்கிறது. வழக்குகளைத் துரிதமாக நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டியது தமிழக அரசின் பொறுப்பாகும்.

இதுமட்டுமல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் வெளியிட்ட ஒரு அறிக்கையிலேகூட பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார் :-

"தனி நீதிமன்றங்களில் விசாரணை நடந்தால் வழக்குகளின் தீர்ப்பு விரைவில் வெளியாகிவிடும் என்ற காரணத்தினால், மற்ற வழக்குகளையும் விசாரித்து வரும் இதர செஷன்ஸ் நீதிமன்றங்களுக்கு வழக்குகளை மாற்றி, காலதாமதப்படுத்தி ஊழல் வழக்குகளிலிருந்து ஜெயலலிதாவையும், முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களையும் காப்பாற்ற மத்திய அரசு செய்து வரும் அப்பட்டமான ஊழல் ஆதரவு நடவடிக்கைகளை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது."

உடன்பிறப்பே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் வெளியிட்ட அதே கருத்துக்களை வலியுறுத்தி திரு. மூப்பனார் அவர்கள் கூட, குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், ஊழல் தடுப்பில் எங்கள் கட்சி மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்று குறிப்பிட்டு விட்டு, தனி நீதிமன்றங்களில் நடந்து வரும் வழக்குகளை ஒழித்துக்கட்ட மத்திய அரசு முயற்சி செய்கிறது என்பதையும் சுட்டிக்காட்டிவிட்டு, அரசியல் சட்டத்தின் பாதுகாவலர் என்ற அடிப்படையில், சட்டவிரோதமான முறையில் நீதித்துறையில் தலையிட வேண்டாமென்று நீங்கள் மத்திய அரசுக்கு அறிவுரை கூறவேண்டும் என்றும் விளக்கமாக தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கருத்துகளுக்கெல்லாம் மதிப்பளித்துத்தான் சட்டப்பூர்வமான நடவடிக்கையை இந்த அரசு எடுத்தது. ஊழலை ஒழிக்கவும், ஊழல்வாதிகளைத் தண்டிக்கவும் எடுத்த நடவடிக்கைகளைத்தான் சிலர் இப்போது பழிவாங்கும் போக்கு என்கிறார்கள் - ஆம்! புதிதாகப் போய்ச் சேர்ந்துள்ள நண்பர்கள்!

இந்த நீதிமன்ற நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்திருந்தால், இந்த ஆட்சியின் மீது எவ்வளவு பெரும்

பழி சுமத்தப்பட்டிருக்கும் என்பதையும் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

மக்கள் பணம் கோடானு கோடி ரூபாய், நகை நட்டுக்களாக, தோட்டம் துரவுகளாக, வெளிநாட்டில் பெரிய ஓட்டல்களாக போய்ச் சேர்ந்ததற்கு இந்த ஆட்சியும் துணை போகிறதா என்ற மாப்பழி வந்து சேர்ந்திருக்குமே! அப்பழியிலிருந்து மீள்வதற்காகவாவது இந்த அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்திட வேண்டாமா?

எனவே இந்த நடவடிக்கை எதுவும் பழி வாங்குவதற்காக அல்ல!

பாதகத்தை அனுமதித்தோம் என்ற பழி ஏற்படாமல் இருப்பதற்காக!

அன்புள்ள,

மு. க.

(16-10-2000)

2529. தடைபோட்டுத் தடுத்து நிறுத்தத் தேவை என்ன?

உடன்பிறப்பே,

ஒரு வழக்கில் தண்டனை பெற்றவுடன் என் மீது சேறு வாரி வீசுகிறவர், ஏற்கனவே ஒரு வழக்கில் விடுதலை பெற்றபோது, தர்மம் வெல்லும் என்று மகிழ்ச்சி பொங்கிடக் கூறி அதற்கென ஆண்டவனுக்குத்தான் நன்றி தெரிவித்துக் கொண்டார். விடுதலைக்குக் காரணம் ஆண்டவன்! தண்டனைக்கு மட்டும் காரணம் கருணாநிதியா? இந்தக் கேள்வி சின்னக் குழந்தைகளின் சிந்தையில்கூட எழும்!

நீதிமன்றமென ஒன்று இருக்கிறது - அங்கே கூறப்பட்ட குற்றச்சாட்டின் மீது விசாரணை விரிவாக நடைபெறுகிறது - இருபுறமும் சட்டம் படித்த உயர்ந்த வழக்கறிஞர்கள் வாதம் புரிகிறார்கள் - இறுதியாக அந்த நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை அளிக்கிறார். அந்தத் தீர்ப்பு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமாகவும் அமையக் கூடும். பாதகமாகவும் அமையக் கூடும்.

அதனால்தான் நான் நேற்றைய கடிதத்தில் எந்தத் தீர்ப்புக்குமே மேல் முறையீடு உண்டு. உச்ச நீதிமன்றம் வரையில் செல்லும் உரிமையும் பாதிக்கப்பட்டோருக்கு நிச்சயம் உண்டு என்று மிகத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறேன்.

இதுபோன்ற வழக்குகளில் குறிப்பிட்ட கால அளவு தண்டனை பெற்றவர்கள், தேர்தலில் நிற்கும் தகுதியை இழக்கிறார்களா? இல்லையா? என்பது குறித்து செய்தியாளர்கள் என்னிடம் கேட்ட போது அதைப்பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை. சட்ட வல்லுநர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்றுதான் பதில் அளித்திருக்கிறேன்.

ஆனால் ஊழல் வழக்கில் தண்டனை அடைந்தவர் என்ன சொல்லுகிறார்?

நான் தேர்தலில் நிற்பதற்கு தடை விதிக்க வேண்டும் என்ற சதி, இன்று நேற்று முளைத்ததல்ல! அ.இ.அ.தி.மு.க.வை அழிக்க கருணாநிதி போட்ட நீண்டகாலத் திட்டம் அது!

அம்மையார் ஜெயலலிதா அவர்களின் ஆத்திர மிகுந்த அறிக்கையின் மூலப் பகுதி இது - இதில் நான் சதி செய்வதற்கு என்ன இருக்கிறது?

அவர் மீதுள்ள ஆறு ஏழு வழக்குகளில் டான்சி நில வழக்கும் ஒன்று - நீண்ட காலம் அவகாசம் எடுத்துக் கொண்டு இடையிடையே குற்றம் சாட்டப்பட்டோர் சார்பில், சுமார் இருநூறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்ற அந்த வழக்கின் சாராம்சங்கள் அத்தனையும், அனைவருக்கும் அத்துபடி என்பதால், நான் இதில் விரிவாக எதையும் சொல்ல விரும்பவில்லை. தேவையுமில்லை.

தானும், தன் தோழியும் டான்சி நிலத்தை முறைகேடாக உடைமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று நினைக்காமலேயே இருந்திருந்தால், வழக்குமில்லை, விசாரணையுமில்லை, தீர்ப்புமில்லை, தண்டனையுமில்லை - தேர்தலில் நிற்கும் தகுதி பற்றிய கேள்வியும் எழப் போவதில்லை. தேர்தலில் நிற்க தடை விதிக்கக் கருணாநிதி சதி என்ற அபாண்டமான பழிச் சொல்லுக்கு இடமுமில்லை. தோட்டமா - துரவா - காடா - மேடா - எஸ்டேட்டா - நட்சத்திர ஓட்டலா எதுவாயினும் - காண்பதையெல்லாம் தன் ஆதிக்க வரம்புக்குள் கொண்டுவர வேண்டும் என்ற அடங்காத ஆசையின் விளைவுதான் இதற்கெல்லாம் காரணமே தவிர, தேர்தலில் நிற்கத் தடை ஏற்படுத்திவிட்டுத்தான் தேர்தல் களத்தில் இறங்க வேண்டுமென்ற கெடுநினைப்பும் - சதி மனப்பான்மையும் எழுவதற்குக் கிஞ்சிற்றும் எனக்கோ, என் தலைமையில் உள்ள இந்தக் கழகத்திற்கோ இருப்பதற்கு நியாயமில்லை.

உடன்பிறப்பே,

பாரதப் போர்க்களத்தில் ஒரு நிகழ்ச்சி - கர்ணனும், அர்ச்சுனனும் களத்தில் மோதிக்கொள்ளப் போகும் நாள் நெருங்குகிறது. அற்புத சக்திவாய்ந்த நாகாஸ்திரம் எனும் கணை கர்ணனிடம் இருக்கிறது. அதை ஏவினால் அர்ச்சுனன் தலை தப்புவது கஷ்டம். இது கிருஷ்ணனுக்கு நன்கு தெரியும். அதை எப்படியாவது தடுத்து, அர்ச்சுனனைக் காப்பாற்ற வேண்டும்

என்று கிருஷ்ணன் திட்டமிடுகிறான். பாண்டவர்களின் தாயார் குந்திதேவியை அழைத்து அவள் கர்ணனுக்குத் தாய் என்ற உண்மையை உணர்த்துகிறான். அந்தக் குந்திதேவியையே கர்ணனிடம், அனுப்பி வைக்கிறான். அந்தச் சந்திப்பின்போது, குந்திதேவி கர்ணனிடம், ஒரு சத்தியம் வாங்கிக் கொள்கிறாள். அதாவது கர்ணன் வைத்துள்ள நாகாஸ்திரத்தை, களத்தில் அர்ச்சுனன் மீது ஒரு தடவைக்கு மேல் வீசக்கூடாது என்பதுதான் அந்த சத்தியம். அதன்படி போர்க்களத்தில் நாகாஸ்திரத்தை கர்ணன், அர்ச்சுனன் தலைக்குக் குறி வைத்து ஒருமுறை வீசுகிறான். அப்போது தேர்ச் சாரதியாக வீற்றிருந்த கிருஷ்ணன் தேர்க்காலை பூமியில் அழுத்திவிடவே, அந்த அஸ்திரம், அர்ச்சுனன் கழுத்தைத் தாண்டி தலைக்கு மேலே அவனது கிரீடத்தை மட்டும் பறித்துக் கொண்டு போகிறது. அடுத்து ஒருமுறை அந்த நாகாஸ்திரத்தை ஏவிட முடியாமல் கர்ணனுக்குத்தான் தடையிருக்கிறதே? ஆம், அவன் தாய்க்கு செய்து கொடுத்த சத்தியம் அப்படி - எனவே அவனது நாகாஸ்திரம் பயனற்றுப் போகிறது!

அதுபோல கர்ணனின் நாகாஸ்திரத்துக்கு இணையான வலிமை படைத்தவரா இந்த அம்மையார்? தடை போட்டுத் தடுத்து நிறுத்துவதற்கு?

பிறகு எதற்காக இவரைத் தேர்தல்களமே வர முடியாமல் நாம் தடுக்க வேண்டும்?

அந்த நிலைக்கு சட்டப்படியான காரணங்கள் இருந்தால், அக்காரணங்கள் நம்மால் உருவாக்கப்பட்டவை அல்லவே!

ஒலிம்பிக் போட்டியில் எவ்வளவு பெரிய வீரனாக - வீராங்கனையாக இருந்தாலும், போதை மருந்து அருந்திவிட்டு களத்தில் நுழையக்கூடாது என்பது போன்ற சில கட்டுப்பாடுகள், சட்ட திட்டங்கள், அவர்களைப் போட்டியில் கலந்து கொள்ள முடியாமல் செய்து விடவில்லையா? அதற்குப் பெயர் சதி என்றா சாதிப்பது? பல்லாண்டுத் திட்டம் என்றா வசைபாடிப் புலம்புவது?

அண்ணா அவர்கள் உருவாக்கிய இந்தக் கழகத்தின் வரலாற்றில், அறப் போர்க் களங்களையும் கண்டிருக்கிறோம் - ஜனநாயகத் தேர்தல் களங்களையும் சந்தித்திருக்கிறோம்!

தேர்தல் களங்களை மட்டுமே சந்திக்கும் சரித்திரம் படைத்தவர்களல்ல நாம்!

தேர்தல் யுத்தங்களில் நாம் சந்திக்காத ஜாம்பவான்களா? அவர்களிடம் வெற்றி வாய்ப்பையும் இழந்திருக்கிறோம்! வெற்றிக் கொடியையும் நாட்டியிருக்கிறோம்!

இந்த அம்மணியாரை தேர்தல் களத்திற்கே வராமல் தடுக்க, அப்படியென்ன வெல்லவே முடியாத வெற்றித் திருமகளா? வீராங்கனையா?

கடந்த தேர்தலில் தனது சொந்தத் தொகுதியான பருகூரில், கழக இளைஞன் சுகவனத்திடம், எட்டாயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியவர்தானே!

அப்பொழுது, ஊழல் குற்றச்சாட்டுகள் வெறும் புகார் அளவில் இருந்தபோதே அந்த நிலை!

இப்போதோ அவை விசாரிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ள காலகட்டம்!

இதில், எதற்காக - யாருக்கு - எப்போது பயம்? - ஏன் சதி செய்ய வேண்டும்? ஏன் திட்டம் தீட்ட வேண்டும்?

சதி செய்து ஒரு சாம்ராஜ்யத்துக்குத் தேவையான சொத்துக்களைச் சுருட்டிக் கொண்டவர்கள், மைலாப்பூர் எல்லை தொடங்கி மாமல்லபுரம் வரையில் மாளிகைகளைக் கட்டிக் கொண்டவர்கள்,

யாரைப் பார்த்து சதி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவது?

வேடிக்கைதான்! வேதனையான வேடிக்கை!

தொகை தொகையான குற்றச்சாட்டுகள் - தொடரும் தண்டனைகளால் துவண்டு போகாமல் தொண்டர்களைத் தூக்கி நிறுத்த அம்மையாருக்கு சூரணம் தேவைப்படுகிறது. அதைப் பொய்யிலே குழைத்துப் புழுதி மண்ணிலே கலந்து, வீண் தைரியம் என்ற லேபிள் ஒட்டி விற்பனை செய்யப் பார்க்கிறார். விஷத்துக்கும், மருந்துக்கும் வித்தியாசம் தெரிகிற அளவுக்கு தொண்டர்கள் விழிப்போடு தானிருக்கிறார்கள். தொடர்ந்து அம்மையார் அந்தத் தொண்டர்களை ஏமாற்ற முடியாது.

அன்புள்ள,

மு. க.

(18-10-2000)

2530. இந்தக் குறளோவியம் இப்போது எதற்காக?

உடன்பிறப்பே,

354 குறட்பாக்களைப் பயன்படுத்தி 300 குறளோவியங்கள் தீட்டி, அவற்றைத் தொகுத்து 1985-ஆம் ஆண்டு குறளோவியம் முதல் பதிப்பு வெளிவந்தது. பின்னர் பல பதிப்புகள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. திரும்ப அதனை ஒரு முறை படிக்கலாமென்று விரும்பிப் புத்தகத்தைப் புரட்டினேன். கவரும் குறளோவியங்கள் பல இருப்பினும், இன்றைய காலத்திற்கேற்ப இந்த சமயத்திற்குத் தேவையான குறளோவியம் ஒன்று கண்ணில் பட்டது. அதனை நீயும் படிக்க வேண்டுமென்று கருதி, அதையே இன்றைய கடிதமாக ஆக்கியுள்ளேன். படித்த பிறகு இதனை ஏதாவது ஒரு செய்தியுடன் இணைத்துப் பார்க்கும் எண்ணம் உனக்கு ஏற்பட்டால் அது உன் கற்பனை வளத்தைப் பொறுத்தது:-

இதோ அந்த குறளோவியம்:-

மலையொன்றைத் தலையில் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் பவனி வருவேன்! இது என்னுடைய முதல் திட்டம்! வானத்தை வில்லாக வளைத்து அந்த வில்லுக்கேற்ற நாணாக மணலைக் கயிறாகத் திரித்துக் கட்டுவேன்! இது என்னுடைய இரண்டாவது திட்டம்! அடுத்தடுத்து இன்னும் பல அற்புதத் திட்டங்களை வைத்திருக்கிறேன். அவற்றைப் பின்னர் இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் நிறைவேற்றிக் காட்டுவேன்.

இவ்வாறு, பொதுமக்களின் மன்றத்தின் நடுவே தோள் தட்டி அறைகூவல் விடுத்தான் ஒரு வாலிபன். மக்கள் அவன் வார்த்தைகளை வாய் பிளந்தவாறு கேட்டு மயங்கிப் போயினர். இப்படி ஒரு வாலிபன் வீரம் பேசிக்கொண்டு திரிவது மன்னரின் காதுக்கும் எட்டியது. அவனைக் கொலு மண்டபத்திற்கு அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தார். பீடுநடை

போட்டுக் கொலு மண்டபத்தில் நுழைந்த வாலிபனை மன்னர் அலட்சியப்படுத்தாமல், அவன் மக்களிடம் அறிவித்த திட்டங்கள் சாத்தியமானவைதானா? என்று வினவினார்!

இயலாதது என்று இவ்வுலகில் எதுவுமில்லை அரசே! நான் அறிவித்த திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்று, நிமிர்ந்து நின்று முழங்கினான் அந்த வாலிபன்.

அப்படியானால், வீரமிக்க வாலிபனே! உன் முதல் திட்டத்தை என் எதிரில் செய்து காட்டுக! தயார்தானா?

மன்னரின் இந்த ஆவல் ததும்பிய கேள்விக்கு அவன் மிக்க அமைதியாகப் பதில் அளித்தான்.

மன்னர் மன்னவா! எதற்கும் சில வசதி வாய்ப்புகள் வேண்டுமன்றோ? நான் நாட்டு மக்களிடமும், தங்களின் திருமுன்னும் கூறிய செயல்களை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் ஒன்று! நான் நெடுநாட்கள் பயணம் செய்து களைத்துப் போயிருக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் அரண்மனை விருந்தினனாக ஓரிரு மாதங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். உடலில் வலிவு மிகுந்ததும், என்னுடைய முதல் திட்டமான மலையைத் தலையில் தூக்கும் காரியத்தைச் செய்து காட்டுகிறேன்.

மன்னர் மகிழ்ச்சியுடன் அவன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். ஓரிரு மாதங்கள் என்ன, மூன்று மாதங்கள் முழுமையான காலம் எடுத்துக் கொள்க! அந்த மூன்று மாத காலமும் அரண்மனையில் உனக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்படும் எனக் கூறி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

வாலிபனின் வீரச் செயல்களைக் காண, பொதுமக்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவனுக்கு அரண்மனையில் உல்லாசமான வாழ்க்கை! உடலுக்கு வலிவு தரும் உணவு வகைகள்! உள்ளத்திற்குக் களிப்பூட்டும் பானங்கள்! கேட்டதெல்லாம் கிடைத்தது அவனுக்கு!

அவன் வெளியிட்ட திட்டங்களை நிறைவேற்றி விடுவானேயானால், அவனையே தனது படையின் தலைமைத் தளபதியாக நியமித்துக் கொள்ளப் போவதாக மன்னர், அமைச்சர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்கள் முடிவுற்றன. முதல் திட்டம், மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கும் திட்டம். நிறைவேற்றப்படுவதற்கான நாள் அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் மலை அடிவாரத்தில் கூடியது. மன்னரும், அமைச்சர் பெருமக்களும், அரண்மனை அலுவலாளரும் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்திருந்தனர். வாலிபன் வண்ண ரதமொன்றில் வந்து இறங்கினான். அவன் மேனி புதுப்பொலிவுடனும் வலிவுடனும் விளங்கியது. மூன்று மாத கால அரண்மனை வாசத்தின் விளைவு அவன் உடற்கட்டில் நன்கு தெரிந்தது.

அவனைக் கண்ட மன்னரும், மக்களும் கையொலி செய்து வரவேற்றனர். முரசுகள் அதிர்ந்தன. இசைக் கருவிகள் ஒலித்தன. வாலிபன், தன் இருகைகளையும் உயர்த்தினான். அனைத்து ஒலிகளும் நின்று அமைதி நிலவிற்று. அவன், மலையின் அடிவாரம் நோக்கிச் சென்றான். அனைவரது விழிகளும் இமைக்காமல் நடக்கப் போகும் நிகழ்ச்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்! என்று கூவினான் அவன்! ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்!

ஆனால் நடந்தது என்ன? அவன் மலையைத் தூக்கவில்லை. திரும்பத் திரும்ப - நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார் என்பதையே சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சொற்களையே கேட்டுக் கேட்டு அலுத்துவிட்ட அனைவரும் அவனை நெருங்கிச் சென்றனர்.

ஏன், அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்? செய்து காட்டு! என்று மன்னர் உரத்த குரலில் கூறினார்.

மன்னா, மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடப்பதாகத்தான் சொன்னேன். அதை மறந்து விடாதீர்கள். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்போதே இந்த மலையை என் தலையில் தூக்கி வையுங்கள். அதைத் தூக்கிக்கொண்டு நாடு முழுவதும் நடக்கிறேனா இல்லையா என்பதைப் பிறகு பாருங்கள்!

என்று, மிக்க அடக்கமாக வாலிபன் விளக்கம் கூறினான்.

இவனைக் கைது செய்யுங்கள் என்று மன்னர் உறுமினார் சிறுத்தை போல!

என்னை இனிமேல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் ஒன்று! நான் என் நண்பர்களிடமும், மனைவியிடமும் செய்த சபதத்தை நிறைவேற்றிவிட்டேன். அதாவது, அரண்மனையில் முக்கியமான விருந்தினராக ஒரு மாதமாவது இருந்துவிட்டு வருகிறேன் என்று சபதம் செய்தேன். அது நிறைவேறிவிட்டது.

புன்முறுவல் முகத்தில் பூத்திட அந்த வாலிபன் அச்சமின்றிப் பதில் அளித்தான்.

அடே! அப்படியொரு ஆசையிருந்தால் உன்னால் செய்ய முடிந்ததைச் சொல்லி அதற்குப் பரிசாக அரண்மனையில் தின்று தொலைத்திருக்கலாமே? என்று மன்னர் கடிந்து கொண்டார்.

செய்யக் கூடியதைச் சொன்னால் அப்படிச் சொல்கிறவனை யார் மதிக்கிறார்கள் அரசே! அற்புதங்களைச் செய்து முடிப்பேன் என்று கூறினால்தான் ஆராதனைகள்! அன்பான வரவேற்புகள்! அத்தனையும் கிடைக்கின்றன!

வாலிபனின் பதிலைக் கேட்ட மன்னர் வெகுண்டெழுந்து,

ஓகோ! அதற்காகத்தான் எங்களை ஏமாற்றினாயா? என்று கர்ச்சித்தார்.

அரசர்க்கரசே! நான் இந்த நாட்டுக்குள் நுழையும்போதே இங்கு திருக்குறள் புழக்கத்தில் உள்ளதா? என்று விசாரித்தேன்! அரசரே அறியார் திருக்குறளை எனக் கேள்வியுற்றதும், என் முயற்சியில் துணிவுடன் இறங்கினேன். திருக்குறளைப் படித்திருந்தால், தாங்களும் சரி, தங்கள் நாட்டு மக்களும் சரி, என் கூற்றினை ஒப்புக் கொண்டிருக்க மாட்டீர்கள்!

இப்படி வாலிபன் பதில் அளித்தான்.

அப்படி என்ன இருக்கிறது அந்த குறளில்? இது மன்னரின் கேள்வி.

வாலிபன் கூறிய குறள் இதுதான் :

“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.”

அதிகாரம் 67 வினைத் திட்பம் பாடல் 664

ஒரு செயலைச் செய்து முடிப்பேன் என்று வாயளவில் கூறிடுவது யார்க்கும் மிக எளிது! ஆனால், சொல்லியவாறு அச்செயலை முடிப்பது எளிதானதல்ல! அரிதானதாகும் - என்பதே இந்தக் குறளுக்குப் பொருள்.

உடன்பிறப்பே,

இந்த வாலிபன், ஏற்கனவே இது போல இன்னொரு நாட்டில் இப்படித்தான் அறைகூவல் விட்டு அந்நாட்டு மன்னரும் மக்களும் ஏமாற்றமடைந்து, பின்னர் ஆத்திரமுற்ற அவர்களால் விரட்டப்பட்டவன் என்ற கடந்த கால நிகழ்ச்சியையும் இணைத்துப் பார்த்து சிந்தித்தால், இந்த குறளோவியத்தை இப்போது நான் குறிப்பிட்டு நினைவூட்டியதற்கு என்ன காரணம் என்பது உனக்கு எளிதாகப் புரியும். அந்த விசித்திரமான கதாபாத்திரம் யார்என்பதும் விளங்கும். எங்கே பார்க்கலாம்! நீ புரிந்து கொண்டதை ஓர் அஞ்சலட்டையில் எனக்கு எழுதி அனுப்பினால் மகிழ்ச்சி அடைவேன்.

அன்புள்ள,

மு. க.

(20-10-2000)

2531. அவருக்கு அவரே போதிக்கும் அறிவுரை!

உடன்பிறப்பே,

நடிகர் ராஜ்குமார் அவர்களை வீரப்பன் கடத்தியுள்ளதைத் தொடர்ந்து, எத்துணைக் கடுமையான கண்டனக் கணைகளையும் - இட்டுக்கட்டிய அவதூறுகளையும் - வெறுக்கத்தக்க கற்பனையான குற்றச்சாட்டுகளையும், ஏதோ ஒரு கோபத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அம்மையார் ஜெயலலிதா அவர்கள் நம்மீதும் நமது அரசின் மீதும் - ராஜ்குமாரை மீட்கும் நல்லெண்ணத்துடன் காட்டுக்குச் சென்று வரும் தூதர்கள் மீதும் குழாயடிச்சண்டை மொழியில் பொழிந்து வருகிறார் என்பதை அவரது அறிக்கைகளின் வடிவத்தில் ஏடுகளில் கண்டு வருகிறாய்.

அவரது முழுமையான அறிக்கைகளை அப்படியே வெளியிடுவது நாகரிகமல்ல, பண்பாடல்ல என்று கருதி, சில ஏடுகள் அந்த அறிக்கைகளைப் பாதிக்கு மேல் மறைத்தும் குறைத்தும் வெளியிட்டுள்ளன. சில ஏடுகள் தனிச் சுவையுடன் முழுவதும் வெளியிட்டு மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டுள்ளன.

வீரப்பன் குழுவினர் மீது படை கொண்டு ஏன் மோத வில்லை?

காவல் துறை ஏன் கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கிறது?

அவனுடன் பேச்சு வார்த்தை நடத்துவது தேவை தானா?

இராணுவத்தை அனுப்பி அவனை சம்காரம் செய்து விட்டு ராஜ்குமாரை மீட்டு வர வேண்டியதுதானே?

இந்தக் கேள்விகளை யாரேனும் கிளப்பி உசுப்பி விட்டால், பாமரத்தனமாக எண்ணுகிறவர்களுக்கு ஆமாம்! நியாயமான கேள்விதானே! என்று சொல்லத்தான் தோன்றும்.

ஆனால் இந்தப் பிரச்சினையில், ராஜ்குமார் அவர்களின் மனைவி மக்களும், உற்றார் உறவினரும், நண்பர்களும் என்ன கருதுகிறார்கள்?

குறிப்பாக இப்போதுகூட, ராஜ்குமாரின் மகன்கள் விடுத்துள்ள செய்தி என்ன?

ராஜ்குமார் அவர்களை மீட்பதற்கு அதிரடிப் படையை அனுப்பக் கூடாது. பேச்சு வார்த்தை என்ற அணுகுமுறை மூலமே அவரை மீட்க வேண்டும். அப்போதுதான் அவர் உயிருக்கு ஆபத்தின்றி மீட்க முடியும்.

இதுதான் அவரது மைந்தர்களின் வேண்டுகோள்.

முள்ளில் விழுந்த துணியை - எப்படிக் கிழியாமல் எச்சரிக்கையுடன் எடுக்க வேண்டும் என்பதை நிதானமாகச் சிந்திப்பவர்கள் அலட்சியப்படுத்திவிட முடியுமா?

இன்று ஆத்திரத்தில் நம்மீது அக்கினிக் கணைகளை அள்ளிப் பொழிகிற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரின் அனுபவம் என்ன?

அவர் ஆட்சி நடந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்திலும், கர்நாடகத்திலும் வீரப்பனால் உருண்ட தலைகள் எத்தனை எத்தனை என்பதை ஏற்கனவே 11-9-2000 அன்று ஒரு கடிதத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே அதனைத் திரும்பவும் கூறத் தேவையில்லை.

அதிரடிப்படையின் தாக்குதல் என்ற பெயரால், அன்றைய அசகாய சூரப் போலீஸ் அதிகாரிகள் நடத்திய தேடுதல் வேட்டையில் மனித உரிமைகளுக்கெதிரான நடவடிக்கைகள் எத்தனை எத்தனை - பெண்டிர் எத்தனை பேர் வாழ்விழந்தனர்! அப்பாவி மக்கள் மீதும் நடந்த அந்தத் தாக்குதல்களையொட்டி விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டிய நிலையே ஏற்பட்டதே! அதை மறந்து விட முடியுமா?

அதையேன் செய்யவில்லை? இதையேன் செய்யவில்லை? என்று உண்மை நிலையை மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு - ஏதோ வாயில் வந்ததையெல்லாம் ஏப்பம் போல் நிறுத்த முடியாமல் வெளியிட வேண்டுமென்ற மனப்பான்மையுடன் அறிக்கை விடுகின்ற அம்மையார் அவர்களும், அந்த அறிக்கை

கண்டு மகிழ்கிற அளவுக்குள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரும் - கடந்த காலத்தினைத் தங்களுக்கு வசதியாக மறந்துவிட்டது தான் வேடிக்கை.

இதேபோல நான்கு நிகழ்வுகள் அம்மையார் ஆட்சியில் வீரப்பனால் உருவாயின. அவை குறித்து சட்டப்பேரவையில் பிரச்சினை எழுந்தபோது, முதல் அமைச்சராக வீற்றிருந்த ஜெயலலிதா என்ன பதில் அளித்தார் என்பதைச் சட்டப்பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்தே படித்துப் பார்க்கலாமா?

1994-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் நாள், காவல்துறை துணை கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி.) சிதம்பரநாதனும் மற்றும் மூன்று பேரும் வீரப்பனால் கடத்தப்பட்டு 25 நாட்கள் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். அப்போது கோவை மாவட்ட கலெக்டராக இருந்த சங்கர் ஐ.ஏ.எஸ். அவர்களே வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தக் கடத்தல் குறித்து வீரப்பன் விதித்த அதிரடிப்படை வாபஸ், தேடும் பணி நிறுத்தப்பட வேண்டும் என்பது போன்ற நிபந்தனைகளையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

அடுத்து 2-11-1995 அன்று மூன்று, வனத்துறை அலுவலர்கள் வீரப்பனால் கடத்தப்பட்டு 19 நாட்களுக்குப் பிறகு தான் அவர்கள் மீட்கப்பட்டனர். இதற்கிடையில், 20-3-1995 அன்று, சட்டப்பேரவையில் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அம்மையார் பின்வருமாறு கூறினார் :-

> “தமிழக அரசும், காவல்துறையும் எந்த அளவிற்கு விவேகத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்கு (எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்) பாராட்ட மனம் வரவில்லை என்றாலும், தமிழகக் காவல்துறையை இழிவு படுத்தும் வண்ணம் அவையில் பேசியது வேதனைக்குரியதாகும். வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போதுதான் வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த வீரர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக் கூடாது என்கிற எண்ணத்தினால் தான் காவல்துறையினரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் தகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர், எனது ஆணையின் பேரில், பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன், மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன் பின்னர் வீரப்பன் மனைவியையும், வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் 12-12-1994 அன்று மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், வீரப்பனின் நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும், தனது காயத்திற்கு மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும் அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாம் வெளிப்படுத்துகிற எந்தச் செய்தியும் மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப் போவது மட்டுமின்றி, மூன்று பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும்தான் பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம். இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகளை வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள், வீரப்பனை பிடிக்க முடியவில்லையா? தனி ஆள், இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகிறவர்கள், இத்தனை பெரிய காவல் படை சென்று வீரப்பனையும், அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா என்று நிதானமின்றி இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்கு சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட மூன்று பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையிலே 180 பேர் கொண்ட ஒரு குழு, மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியில் இருந்து வந்தது. என்.எஸ்.ஜி. என்பது மத்திய அரசின் அதிரடிப்

படையாகும். கிட்டத்தட்ட 6000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள அடர்த்தியான வனப் பகுதிகளை நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப் பணியை மேற்கொள்வது மிகவும் கடினமான காரியம் என்று கருத்து தெரிவித்து என்.எஸ்.ஜி. குழுவினர் திரும்பிச் சென்று விட்டார்கள். வீரப்பன் எங்கே ஒளிந்து இருக்கிறான்? கட்டாந் தரையிலோ அல்லது களத்து மேட்டிலோ அல்ல. அடர்த்தியான மரங்கள் வளர்ந்து ஆறு அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால் கூட அது கண்ணுக்குத் தெரியாத ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்து கொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில் ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று கொரில்லா தாக்குதலில் ஈடுபட்டால் அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும்?

மனைவி மக்களைப் பிரிந்து, மாதக் கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி, தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று தெரியாத நிலையில் பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல் சிலர் வக்கணை பேசுகிறார்கள், வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் காவல்துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது.

உடன்பிறப்பே,

ஜெயலலிதா ஆட்சியிலே காவல்துறைக்காக இவ்வளவு பரிந்து பேசும் ஜெயலலிதா அம்மையார், இப்போதுள்ள காவல்துறை ஏன் வீரப்பனைப் பிடிக்கவில்லை என்று நீட்டி முழங்குவதைப் பார்க்கும்போது அவரது இரட்டை வேடம் நன்றாக விளங்குகின்றதல்லவா? சட்டமன்றத்திலே இது ஒரு முறையல்ல. 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இதே போன்றதொரு கடத்தல் வீரப்பனால் நடத்தப்பட்ட போது ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்த ஜெயலலிதா என்ன கூறுகிறார்!

> வீரப்பனைப் பிடிப்பதற்காக இராணுவத்தின் உதவியை நாடவேண்டும், இராணுவத்தினரால்தான் இது முடியும் என்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் (எஸ்.ஆர்.பி.) பேசினார். இதை இந்த நேரத்தில் நான் ஏற்றுக்கொள்ள

முடியாது. இராணுவத்தினர் இங்கே வந்தால் அதனால் வேறு சில பிரச்சினைகள் எழக்கூடும். இராணுவத்தினர் போடுகின்ற ஒரு நிபந்தனை அந்தப் பகுதிகளில் வாழ்கிற மக்களையெல்லாம் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இது சாத்தியமான காரியமல்ல. இந்த விஷ பரீட்சையில் இறங்க இந்த அரசு விரும்பவில்லை. இராணுவத்தினருக்கு என்று சில திறமைகள் இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியைப் பொறுத்தவரை, அந்தக் காடுகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு இது ஒரு unknown terrain. இந்தக் காட்டுப் பகுதியில் உள்ள பாதைகள் எங்கே செல்கின்றன, எப்படிச் செல்கின்றன என்பதெல்லாம் இராணுவத்தினருக்குத் தெரியாது.

உடன்பிறப்பே,

அன்று நடைபெற்ற கடத்தல்களின்போது அரசு எப்படி செயல்பட வேண்டியிருந்தது என்பதை அந்நாள் முதலமைச்சரே விளக்கமாக எடுத்துரைத்ததையும் - அவர் இப்போது முன்னாள் முதலமைச்சராகி விட்ட காரணத்தினாலேயே, அவையனைத்தையும் அறவே மறந்து விட்டு - அல்லது வழக்கம்போல் மறைத்து விட்டு நம்மீது பாய்ந்து குதறிட நினைப்பதையும் நீயே ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்க!

கடத்தல் நடைபெற்றுள்ள நேரத்தில், கடத்தப்பட்டவர்களுக்கு உயிர்ப் பாதிப்பு இன்றி மீட்கும் முயற்சியில் ஒரேவிதமான நிதான அணுகுமுறையே சிலாக்யமானது என ஜெயலலிதா சட்டமன்றத்திலேயே முதல் அமைச்சராக நின்று வாதிட்டிருப்பதிலிருந்து என்ன முடிவுக்கு வர வேண்டியுள்ளது?

அவர் இப்போது நம்மீது வீசியுள்ள வசை மொழிகள் - இழிமொழிகள் - அவதூறுகள் - தேசவிரோதக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அவரே திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அனைத்து அர்ச்சனைகளையும் அது தனக்கே உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். அதுதான் அரசியலில் நாணயம்! இந்த நாணயத்தை நாகரிகமானவர்களிடம் மட்டுமே எதிர்பார்க்க முடியும்!

அன்புள்ள,

மு. க.

(21-10-2000)

2532. அரசியல் ஆக்கக் கூடாது என்றோர் அரசியல் ஆக்குவதா?

உடன்பிறப்பே,

காட்டில் வீரப்பனுடன் பேச்சு வார்த்தை நடத்தி நடிகர் ராஜ்குமாரை மீட்கும் முயற்சியில், திரு. பழ. நெடுமாறன் அவர்களும் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படலாமா?

அவர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள குற்றவாளிகளுக்காக வாதாடியவர் அல்லவா?

அவர்களின் விடுதலைக்கு முயற்சிகள் மேற்கொண்டவர் அல்லவா?

தமிழ் ஈழமே புலிகளின் தாகம் என்ற குரலுக்குத் தொடர்ந்து வலிவூட்டிக் கொண்டிருப்பவர் அல்லவா?

இப்படிச் சில கேள்விகள் எழுகின்றன - ராஜ்குமார் எந்த பாதிப்புமின்றி விடுதலையாகட்டும். எது வேண்டுமானாலும் அதற்குப் பிறகு பேசிக் கொள்ளலாம் - என்று செய்தியாளர்களின் பேட்டியின்போது கூறிய கட்சிகளின் தலைவர்கள் மட்டத்தில் கூட சில குரல்கள், ஆம் - நெடுமாறன் அவர்களை அனுப்பியது தவறு என்றும், குற்றம் என்றும் குறிப்பிடும் குரல்கள் எழுந்த வண்ணமுள்ளன.

தமிழகத்தில் பத்மநாபா படுகொலை நிகழ்ச்சி நடைபெற்ற பிறகு, விடுதலைப் புலிகளுக்கு வழங்கி வந்த ஆதரவை தி.மு.க. விலக்கிக் கொண்டது என்பது வெளிப்படையான அறிவிக்கப்பட்ட செய்தி.

பத்மநாபா கொலை நடந்து இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு, தமிழகத்தில் உள்ள ஆங்கில ஏடுகள் (இந்து, எக்ஸ்பிரஸ்) இரண்டுக்கும் தனியான சிறப்புப் பேட்டி அளித்த ஜெயலலிதா, என்ன கூறினார்? அவர் கூறியதை மறுக்க முடியுமா?

விடுதலைப் புலிகளுக்கு தமிழக அரசு உதவி செய்ய வேண்டும். ஏதோ சில நிகழ்ச்சிகள் கடந்த காலத்தில் நடை பெற்றிருக்கலாம். இப்பொழுது அவர்கள் சரியாக இருக்கிறார்கள். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் தவறு செய்தார்கள் என்று கூறி அவர்களை ஆதரிக்காமல் விட்டால், அது இலங்கையில் தமிழ் இனத்துக்கு அழிவை ஏற்படுத்தும்.

அம்மையாரின் இந்த சிறப்புப் பேட்டி 4-10-1990 அன்று வெளிவந்துள்ளது.

சிங்கள ராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கம், துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள ராணுவத்தை எதிர்த்து தீரத்துடன் போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில், தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர்நடத்தி வருகின்றது. இது ஒரு அதிதீரமான செயல்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்துவிடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக, தமிழக முதலமைச்சர் கருணாநிதி, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தியும் மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சரின் நாற்காலியைப் பாதுகாத்துக் கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகிறது. கருணாநிதியின் மனோபாவம் இவ்வாறிருந்தால், இதற்கு மாறாக, வேறுவிதமாகச் செயல்படுவதை வி.பி. சிங்கிடம் நாம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கைத் தமிழர்களின் கதி பற்றி வி.பி. சிங் எந்தவிதக் கவலையும் படுவதாகத் தெரியவில்லை. மாறியுள்ள

சூழ்நிலையில் ஒரே மருந்து, தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளை ஒட்டு மொத்தமாக ஆதரிப்பதுதான். தனது அதிகாரத்திற்கு உட்பட்ட, இயன்ற அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் வழங்க வேண்டும். மத்திய அரசு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்ட விதிகளின்படி சமாதானத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளை இந்திய அரசு நூற்றுக்கு நூறு ஆதரிக்க வேண்டும்.

உடன்பிறப்பே, ஜெயலலிதா அவர்களின் இந்த விரிவான சிறப்புப் பேட்டி தமிழகத்தின் பிரபல ஆங்கில நாளேடுகளில் (இந்து, எக்ஸ்பிரஸ்) முறையே 4-10-1990 மற்றும் 29-4-1991 ஆகிய தேதிகளில் வெளியாகியிருக்கின்றன.

நிருபர் ஒரு குறுக்குக் கேள்வி கேட்கிறார். அதாவது எம்.ஜி.ஆர். செய்த அளவுக்கு இல்லாவிட்டாலும், கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யவில்லையா? என்பது கேள்வி.

அதற்கான எந்த தடயத்தையும் நான் காணவில்லை - இது அம்மையார் ஜெயலலிதாவின் பதில்!

அத்துடன் நிறுத்தவில்லை அவர்! என்ன சொல்லி பேட்டியை முடிக்கிறார் தெரியுமா?

பங்களாதேஷ் பிரச்சினையில் இந்திரா காந்தி செய்ததைப் போல, இலங்கை மீது ராணுவ நடவடிக்கை பற்றி இந்தியா சிந்தித்தால் அதில் தவறு எதுவுமில்லை என்று நான் கருதுகிறேன்.

இவ்விதமெல்லாம் விடுதலைப் புலிகளுக்காக வலிந்தும், பரிந்தும் பேட்டியளித்துக் கருத்தறிவித்த ஜெயலலிதாவும், இப்போது அவருடன் அணி சேர்ந்திருக்கும் சில தலைவர்களும் நெடுமாறன் அவர்கள் வீரப்பனைச் சந்தித்தது குறித்து குறை காணுகிறார்கள் என்பதுதான் விநோதமான விஷயம்.

தமிழ் ஈழப் பிரச்சினையிலும் - விடுதலைப் புலிகள் ஆதரவு விஷயத்திலும் நெடுமாறன் அவர்களின் அணுகுமுறையை விமர்சிப்பவர்கள், அதே நேரத்தில் இப்போது அ.தி.மு.க. அணியின்

அச்சாணியாக இருக்கிற வீரமணி அவர்களின் விடுதலைப் புலிகள் அணுகுமுறை என்ன என்பதை, சற்று சிரமப்பட்டாவது ஞாபகப்படுத்திக் கொண்டுவர வேண்டுமல்லவா?

சென்னை பனகல் பூங்காவில் இந்த ஆண்டு நடைபெற்ற பெரியார் விழாவுக்கு, விழாக்குழுத் தலைவராக திரு. மூப்பனார் அவர்கள் பொறுப்பேற்று, அக்குழுவின் அமைப்பாளராகவும் முக்கியஸ்தராகவும் வீரமணி இருந்து, குலாம்நபி ஆசாத் போன்ற இந்திரா காங்கிரஸ் தலைவர்களுடனும், ஏனைய கட்சித் தலைவர்களுடனும் கைகோத்து நின்று அளவளாவியதை நான் குறை கூறவில்லை, குற்றமெனச் சொல்லவில்லை.

விடுதலைப் புலிகள் பிரச்சினையில் நெடுமாறனுக்குரியது வீரமணிக்கும் உண்டு, வீரமணிக்குரியது நெடுமாறனுக்கும் உண்டு என்ற பொதுவான நிலைமையை உணர்வதற்கு ஏன் மறுக்கிறார்கள் என்பதே என் கேள்வி!

இதோ வீரமணி அவர்கள் பேசுகிறார்! கேட்போம். ஆம் - 1999 ஜனவரி 24-ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற எம்.ஜி.ஆரும் ஈழத் தமிழர்களும் என்ற நூல் வெளியீட்டு விழாவில்தான் அவர் பின்வருமாறு பேசுகிறார்.

> விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ, விரோதமானதோ அல்ல! என்னைப் பொறுத்தவரையில், பிரபாகரன் தமிழ்ச் சமுதாயத் தலைவர் மட்டுமல்ல! என்னுடைய இளைய சகோதரனும் ஆவார்.
>
> நெடுமாறனோ, வீரமணியோ பேசியது – கருதியது சரியா தவறா என்பது அல்ல முக்கியம்.
>
> இந்தப் பிரச்சினையில், இருவரும் ஒரே நோக்கம், ஒரே கருத்துடையவர்கள்தான்!

வித்தியாசம் வேண்டுமானால், வீரமணி இப்போது அவர்கள் அருகில் இருக்கலாம்! நெடுமாறன் இல்லாமல் இருக்கலாம்! அதனால்தான் இவர் காட்டுக்குப் போய் ராஜ்குமாரை மீட்க முயற்சி எடுப்பது தவறு என்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, மயிலாடுதுறையில் கடந்த 1999-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் மத்திய செயற்குழு கூட்டத்தில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி ஆகிய நான்கு கைதிகளுக்கான தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று, குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, தீர்மானம் நிறைவேற்றி வீரமணி அவர்கள், அனுப்பி வைத்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ராஜ்குமார் கடத்தப்பட்ட பிரச்சினையை அரசியல் ஆக்கக் கூடாதென்று ஆரம்பத்தில் அறிவுரை வழங்கியவர்கள், இப்போது அவர்களே எப்படி ஆகிவிட்டார்கள் பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

(22-10-2000)

2533. வெள்ளை மாளிகையை விலை பேசினால் என் செய்வது?

உடன்பிறப்பே,

கோபம் கொப்பளிக்க, ஆத்திரம் அலை மோதிட, எரிச்சல் எதிரொலிக்க, குழு ஒன்று கூடியது. அதன் பெயர் அ.தி.மு.க. பொதுக்குழு!

அப்படியென்றால் பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெரும்பாலோரும், நியமிக்கப்பட்டோர் குறைந்த எண்ணிக்கையினருமாக இருக்கின்ற அமைப்புக்குப் பெயர்.

பொதுவாக ஜனநாயக ரீதியில் இயங்குகிற எல்லாக் கட்சிகளிலுமே பொதுக்குழு, செயற்குழு போன்ற குழுக்களின் இலக்கணமே இதுதான்.

ஆனால் எல்லாவற்றுக்குமே - இலக்கணம் என்றால் என்ன? என்று கேட்கும் அ.தி.மு.க. கட்சியில் நியமிக்கப்பட்டோர் பெரும்பாலானவர்களும், தப்பித் தவறி தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சிலருமே அக்கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள்.

விருப்பப்படும்போது கடைக்கண் திறந்து யார் யாருக்கு அழைப்பிதழ் அனுப்பப்படுகிறதோ, அந்த அழைப்பிதழ் பெற்றவர்களுக்கு மட்டும் அனுமதி - அவர்கள் அப்போதைக்குப் பொதுக்குழு உறுப்பினர்கள்! இப்படியொரு விசித்திரமான கட்சி அமைப்பு. அதற்குத் தலைவர் அம்மையார் ஜெயலலிதா.

அந்தப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களோ, பொய்களின் ஊர்வலங்கள்! போணியாகாத சரக்குகளைத் தள்ளிவிடப் புளுகுச் சந்தை வியாபாரம்! தி.மு.கழகத்தின் மீதோ, அதன் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் மீதோ தீர்மானமாகவோ

- திட்டவட்டமாகவோ எந்தக் குற்றச்சாட்டையும் கூறிடத் திராணியற்று, தெம்பற்று, வக்கற்று, வகையற்று - என்று பேசப்படுகிறது இப்படி மக்கள் பேசுகிறார்கள் என்ற வார்த்தை ஜாலக் கோணிப்பைகளுக்குள் தலையை நுழைத்துக் கொண்டு நிறைவேற்றப்பட்டவைகளுக்குப் பெயர் தீர்மானங்கள்.

முக்கியமான தீர்மானம் ஒன்றே ஒன்றுதான். தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையில் எம்.ஜி.ஆர். ஆட்சியும், பாண்டிச்சேரியில் அ.தி.மு.க. ஆட்சியும் அமைப்போம் என்பதே அந்தத் தீர்மானம்.

அது என்ன; தமிழ் நாட்டில் மட்டும் எம்.ஜி.ஆர். ஆட்சி - பாண்டிச்சேரியில் அ.தி.மு.க. ஆட்சி என்று கேட்கத் தோன்றுகிறதா?

அதெல்லாம் கேட்கக் கூடாது - ஜெயலலிதாவின் செல்வாக்கு வளருவது கண்டு எம்.ஜி.ஆருக்கு பொறாமை; அதனால் எம்.ஜி.ஆர். தன்னை மட்டம் தட்டப் பார்க்கிறார் என்று எம்.ஜி.ஆர். மீதே பிரதமர் ராஜீவ் காந்திக்கு புகார் கடிதம் எழுதிய ஜெயலலிதாவுக்கு திடீர் என்று எம்.ஜி.ஆர். ஆட்சி என்ற மந்திரத்தின் மீது பாசம் எப்படி ஏற்பட்டது? மந்திரமா? மீண்டும் மக்களை ஏமாற்ற ஒரு தந்திரமா? காலம், கட்டாயம் பதில் சொல்லும்!

தீர்மானம் என்ற சொல்லில் இங்கே மட்டும் மானம் அடிபட்டுப் போயிற்று! தீர்! என்பது மட்டுமே தினவெடுத்துப் பாய்ந்த வார்த்தையாக அமைந்தது அந்தப் பொதுக்குழுவில்!

அதனால்தான் அ.தி.மு.க.வுக்குப் பிறவிப் பயன் என்னவென்றால், கருணாநிதி என்ற தீயசக்தியை அழிப்பதுதான் என்று அந்தப் பொதுக்குழுவில் ஜெயலலிதா அம்மையார் உரத்த குரலில் குரலெடுத்து முழங்கியிருக்கிறார்.

ஆளையே அழிப்பது - ஆயுள் தண்டனை வழங்குவது போன்ற ஆணவச் சொற்கள், அதிகாரமில்லாத நேரத்திலேயே அலை பாய்ந்து வருகின்றன என்றால், தமிழக மக்கள் மீண்டும் ஒரு முறை ஏமாந்து போய் விடுவார்களேயானால், என்னென்ன அநியாயங்கள் தலை விரித்தாடும் - எவ்வளவு அக்கிரமங்கள் தாண்டவமாடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்துகொள்ள முடிகிறதல்லவா?

தீர்மானத்தில் மானம் விலக்கப்பட்டு தீர் மட்டும் தீர்த்துக்கட்ட தீப்பொறி கக்குகிறது என்பதற்குச் சான்றாக, அம்மையாரின் அந்தப் பேச்சு அமைந்துள்ளதை எளிதில் உணர்ந்துகொள்ள முடிகிறது.

பிறந்தோர் அனைவருமே ஒரு நாள் அழிய வேண்டியதுதான். இதற்கு யாரும் விதிவிலக்கல்ல! ஆனால் ஒன்று! சிலரை அழித்து விட்டதாக சிலர் இறுமாந்திருப்பர். அவர்களுக்குத் தெரியாது, அழிந்ததும், அழிக்கப்பட்டதும் ஒரு மனிதனின் உடலே தவிர, - உயிரே தவிர - அவன் கட்டிக்காத்த உறுதியல்ல! அவன் உள்ளத்தில் ஏற்றி வைத்திருந்த கொள்கை தீபமல்ல! அவன் உழைப்பால் - உதிரத்தால் - உதிர்த்த வியர்வையால் கட்டியுள்ள தியான மணி மண்டபம் அல்ல! அதனை அழிக்க எத்தனை பிறவி எடுப்பதாகச் சொன்னாலும் பித்தர்களால் முடியாது! எத்தர்களால் முடியாது! முடியவே முடியாது!

எதற்காக என்னை அழிக்க வேண்டும் - நான் தீய சக்தியாம்! அதற்காகவாம்! ஆம்! அறுபது ஆண்டு காலத்திற்கு மேலான பொது வாழ்க்கையில் பெரியாரின் கரம் பிடித்து, அண்ணாவின் நிழலொட்டி நடந்து, இந்த மாநிலத்தின் சாதாரண சாமான்ய மக்களின் சகோதரனாக உழைத்துக் கொண்டிருக்கிற நான் தீய சக்தியாம்! தீர்த்துக் கட்ட வேண்டுமென்று தனது திருக்கூட்டத்திற்கு உபதேசம் செய்கிறார் அம்மையார்.

எனக்கு அதனால் வருத்தமுமில்லை - கோபமும் இல்லை. தமிழ் நாட்டு அரசியல் எந்த அளவுக்குப் புதைகுழி நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்ற கவலையைத் தவிர, யாரைப் போய் சில தலைவர்கள் வளர்த்து விடுகிறார்களென்று வேதனையைத் தவிர, என்னை அழிக்க முனைவதா என்ற ஆதங்கம் எதுவும் எனக்கில்லை. அழிவுக்காக அஞ்சவுமில்லை.

இன்னொரு விந்தையான செய்தி கண்டனையா? உடன்பிறப்பே!

நான் மட்டும் கருணாநிதியுடன் சமரசம் செய்து கொண்டு, அமெரிக்காவுக்குச் சென்று விடுகிறேன் என்று சம்மதித்தால், முதல்வர் கருணாநிதி எனக்கு அங்கே வீடு வாங்கிக் கொடுத்து விமான நிலையம் வரை வந்து, போய் வா! என வழி அனுப்பி வைப்பார்.

இப்படி அப்பொதுக்குழுவில் பேசியுள்ளார் ஜெயலலிதா! அப்போதும் பார்! சமரசம் செய்து கொள்வதாயிருந்தாலும்கூட, அதற்கும் ஒரு வீடு அமெரிக்காவில் வேண்டுமாம்!

மாமல்லபுரம் போகும் பாதை வரையில் கட்டப்பட்டுள்ள அவரது மாளிகைகள் போதாமல், அமெரிக்காவிலும் ஒரு வீடாம்!

அப்படியொரு சமரசம் செய்து கொண்டு அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பதாக இருந்தால், இங்கே வந்து வெள்ளை மாளிகையை விலை பேசக்கூடாது என்று ஒரு கடுமையான நிபந்தனையை அந்த நாட்டுக்காரர்கள் விதிக்க மாட்டார்களா என்ன?

அன்புள்ள,

மு. க.

(28-10-2000)

2534. பண்பாடு காத்திட பண்போடு எழுவோம்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா அம்மையாரின் அடாவடித்தன, அராஜக அரசியலைக் கண்டித்தும், இவர்கள் அரசியலுக்கே தகுதியற்றவர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்திடவும் மாவட்ட, நகர, ஒன்றியக் கழகங்கள் சார்பில் நவம்பர் 1, 2, 3 ஆகிய நாட்களில் ஆங்காங்கே கண்டனக் கூட்டங்கள், பேரணிகள் நடைபெறும் என கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிவித்துள்ளார்.

தலைமைக் கழகத்தின் அறிவிப்பினை ஆணையாக ஏற்றுச் செயல்படும் வீரர்களாக உன்போன்ற உடன்பிறப்புகள் திகழ்வீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அடுத்து நான் ஆட்சிக்கு வந்து, கருணாநிதியை அவரது வாழ்நாள் முழுதும் சிறையில் தள்ளுவேன். கருணாநிதி என்ற தீயசக்தியை அழிப்பதே அ.தி.மு.க. பிறவி எடுத்த பயன் என்பேன்.

இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார், அவர் கூட்டிய பொதுக்குழுவில் கடுஞ்சபதம் மேற்கொண்டிருக்கிறார்.

கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்திடவோ - நெஞ்சிலே கை வைத்து மனச்சாட்சியின் நாடித் துடிப்பை அறிந்து கொள்ளவோ விரும்பாத சிலரும், அந்தப் பொதுக் குழுவிலே அசைவற்று அமர்ந்திருக்கின்றனர். அசைவற்றுப் போனவர்களையன்னியில், மற்றவர்கள் கையொலி செய்து அம்மையாரின் வெறிக்கூத்துக்கு உற்சாக மூட்டியிருக்கின்றனர்.

அடிப்போம் - உதைப்போம் - அழிப்போம் - ஆயுள் முடியும் வரை சிறை வைப்போம் என்பதைத் தவிர, அந்த அம்மையாரால் வேறென்ன பேசியிருக்க முடியும்!

வேங்கைப் புலிக்கு மகுடம் சூட்டி, காட்டுக்கு ராஜாவாக ஆக்கினால், ஆசனத்தில் அமருவதற்கு முன்பு அது என்ன சொல்லும்?

* இந்தக் காட்டுவளத்தைப் பெருக்கி, நாட்டு வளம் சிறக்க ஆட்சி நடத்தப் போகிறேன்.
* காட்டுக்குள் கட்டுப்பாடின்றி ஓடும் ஆறுகளை எல்லாம் வகைப்படுத்தி, வனம் செழிக்க வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கப் போகிறேன்.
* மலைகளில் தொங்கும் அருவிகளையெல்லாம் இணைத்து, பாசன வசதி கொழிக்கும் பசுமை பூமியாக இந்தக் காட்டுப் பகுதியை ஆக்கப் போகிறேன்.

இப்படியெல்லாமா அந்த வேங்கைப் புலி சொல்லும்? அதன் இயல்பு அதுவல்லவே!

அது, தன் இயல்புக்கேற்ப காலையுணவுக்குக் கலைமான் வேட்டை - மாலை உணவுக்குக் கஸ்தூரிமான் வேட்டை என்றுதான் கணக்குப் போடும்.

அப்படித்தான் ஜெயலலிதா அம்மையார், தன்னை அடுத்த முதல் அமைச்சராகக் கற்பனை செய்து கொள்கிற போது கூட, கடந்த ஆட்சியில் நடைபெற்ற நல்ல சாதனைகளைத் தொடருவேன் என்றோ, விரிவுபடுத்துவேன் என்றோ, புதிய சாதனைகள் பலவற்றைப் படைப்பேன் என்றோ கூறிட மனமில்லாதவராக, தன் இயல்புக்கு எதைச் செய்வேன் என்று வேங்கைப்புலி திட்டமிடுமோ - அதே வகையான திட்டத்தைத்தான் தனது கைவசம் வைத்திருப்பதாக வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

நம்பிக்கையிழந்து நிற்கும் அவரது கட்சித் தொண்டர்களை உசுப்பி விடுவதற்கு வேண்டுமானால், இந்த அடாவடிப் பேச்சு பயன்படக்கூடும். அதுவும் சில நாட்களுக்கு!

பேராசிரியர் அவர்களின் அறிக்கைக்கேற்ப ஆங்காங்கு கழக அமைப்புகளின் சார்பில் கூட்டங்கள் நடத்துவோர், அந்தக் கூட்டங்களின் நோக்கம் என்னவென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டிப்பாக நினைவிற்கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட அரசியல் போக்கு வளராமல் தடுத்திடவும், இவர்கள் அரசியலுக்கே தகுதியற்றவர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்திடவும்,

இந்தக் கண்டனக் கூட்டங்கள் என்பதைப் பொதுச் செயலாளரின் அறிக்கை தெளிவுபடுத்தியிருக்கிறது. எனவே, நோக்கமறிந்து செயல்பட வேண்டுமென்பதற்காகவே அதனைச் சுட்டிக் காட்டுகிறேன்.

ஜெயலலிதா அம்மையாருக்குக் கண்டனம் தெரிவிக்கிறோம் - என்று மேடையமைத்து மக்களைத் திரட்டி யாரைப் பார்த்து அழிப்பேன் என்று சொன்னாய்! உன்னை எங்களால் அழிக்க முடியாதா? யாரை ஆயுள் சிறையில் போடுவதாகச் சொன்னாய்! உனக்கு இரண்டு ஜென்ம தண்டனை கொடுத்து சிறையில் போட முடியாதா? என்று சூடு பறக்கக் கேட்டால் கையொலி ஆரவாரம் கூட இருக்கும். களிப்பிலாடுவர் பலர். ஆனால் எதற்காகக் கூட்டம் நடத்தப்பட்டதோ, பேரணி நடத்தப்பட்டதோ அந்தப் பயன் கிட்டாமற் போய்விடும்.

அரசியல் நாகரிகம் கற்றுத்தரப் போய் அரசியலை நாமும் சேர்ந்து சகதியாக்கி விடக்கூடாது. அல்லது அவர்கள் கொட்டி வைத்திருக்கும் சகதியில் நாமும் கால்தவறி விழுந்து விடக்கூடாது.

நினைவிருக்கிறதா! 1957-ஆம் ஆண்டு, கழகம் தேர்தலில் நின்ற போது, அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டார்கள். அப்போது ஒரு நாள் இரவு, மாற்றுக் கட்சியினர் அண்ணாவை மிக மிக மோசமாக இழிவுபடுத்தி எழுதப்பட்ட ஒரு விளம்பரப் பலகையை அவர் வீட்டு வாசலிலேயே கட்டி விட்டுப் போய் விட்டார்கள். கழகத்தினர் அதுகண்டு வெகுண்டெழுந்தனர். அண்ணா என்ன செய்தார்? தொண்டர்களை அமைதிப்படுத்தி விட்டு ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு கொண்டுவரச் சொல்லி, அந்த விளக்கை அந்தப் பலகைக்கு முன் கட்டச் செய்து, பெட்ரோமாக்ஸ் விளக்கு உபயம் அண்ணாதுரை என்று எழுதி வைத்தார்.

கண்டனக் குரல் எழுப்ப இருக்கும் கழக உடன்பிறப்புகள் கண்ணியனாம் நமது அண்ணன் கடைப்பிடித்த அந்த அரசியல் நாகரிகத்தை மறந்து விடக்கூடாது.

உணர்வு பட்டொழிய வேண்டுமென நான் உரைத்திடவில்லை!

மானமற்று வாழ வேண்டுமென்று உபதேசிக்கும் அளவுக்கு மரக்கட்டை நெஞ்சம் கொண்டவனுமல்ல!


அரசியலில் பண்பாட்டைக் காப்பாற்ற அணி வகுக்கும்போது, அந்தப் பண்பாட்டுக்குத் துளியும் சேதம் வராமல் காத்திட வேண்டியதும் நமது கடமை ஆகிறது!

இதை மறந்து விடாமல் நடக்கட்டும் நமது கூட்டங்கள்! பேரணிகள்! அரசியலில் பண்பாடு காத்திட எழுவோம்! பண்போடு எழுவோம்!

அன்புள்ள,

மு. க.

(29-10-2000)



42237

894.8116
முதல்வர்.30

2535. சரித்திரச் சாதனைகள் எனச் சான்றோர் புகழ்வர்!

உடன்பிறப்பே,

கி.பி. 2000 - இந்தப் புத்தாயிரம் ஆண்டில் இரண்டு அரும்பெரும் சாதனைகள், தமிழ் நாட்டில்! கழக அரசினால் நிறைவேற்றப்பட்டவை!

உழவர் சந்தை என்றும், வருமுன் காப்போம், கால்நடைப் பாதுகாப்புத் திட்டங்கள் என்றும், அடித்தள மக்கள் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களின் நெஞ்சைத் தொடும் திட்டங்கள் சாதனைகளாகச் சரித்திரப் புகழ் பெற்றிருப்பினும், சிறப்பு வாய்ந்ததும், வரலாற்றில் மகுடம் போன்றதும், அந்த மகுடத்தில் பதித்த மாணிக்கம், மரகதம் போன்றதுமான இந்த இரண்டு சாதனைகளை நினைத்துப் பார்த்து மகிழ்ச்சியடையாமல் இருக்க இயலாது. எவராயினும் இவற்றை சிலாகித்தே வியந்து போற்றுவர். எதிரிகளாயிருப்பினும் அவர்கள்கூட, பாராட்டிக் கொண்டேயிருப்பர். பதுங்கி பதுங்கியாவது!

இந்தப் புத்தாயிரம் ஆண்டின் துவக்கத்திலேதான் ஜனவரி 1ஆம் நாள், இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில் முக்கடலும் மோதி முழங்கும் குமரியில், அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயரச் சிலையின் திறப்பு விழா நடைபெற்றது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் வருகை தந்தனர். வாழ்த்தினர். வள்ளுவத்தைப் போற்றி மகிழ்ந்தனர்.

அய்யன் வள்ளுவர் சிலை 1975ஆம் ஆண்டு முதல் நான் கண்ட கனவு - அப்போது நான் தொடுத்த முயற்சி - இடையிலே பணி தடைப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பிறகுதான் என் அய்யன் வள்ளுவரை வான் நோக்கி எழும் சிலை வடிவமாகக் கண்டுகளிக்க முடிந்தது. என் மனக் கண்ணை விட்டு மறையாத விழாக்களில் அந்த விழாவும் ஒன்றாயிற்று! ஏன்? விழாக்களின் சிகரமாகவே ஆயிற்று என்பேன்!

இச்சாதனையை அடுத்து மற்றொரு சாதனைதான் விஞ்ஞானப் புதுமைக்கோர் ஆலயமாக - இன்றைய உலகத் தேவையாகவும், அச்சாணியாகவும் இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தை ஆணி வேராய்க் கொண்ட மென்பொருள் உற்பத்தி வளர்ச்சிக்கான அருங்கூடமாக - டைடல் பூங்கா அமைந்ததாகும்.

தொன்மையின் புகழ்பாடும் அய்யன் சிலையை அமைத்த அதே புத்தாயிரம் ஆண்டில், இந்த டைடல் பூங்காவும் கழக அரசின் அரிய பெரிய முயற்சியால் அமைந்துள்ளது.

1998 ஆகஸ்டில் அடிக்கல் நாட்டி, ஒன்றரை ஆண்டுக்காலத்தில் பத்து இலட்சம் சதுர அடிகள் கொண்டு விண்முட்டும் பூங்காவை அமைத்த சாதனை, ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

இதே புத்தாயிரம் ஆண்டில் ஜூலை 4ஆம் நாள், இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள், என் தலைமையில் இந்தச் சாதனைக் கோட்டத்தைத் திறந்து வைத்த வைபவத்தை நீயும் நாடும் கண்டு களித்ததை மறக்கவொண்ணுமோ!

ஏ, அப்பா இவ்வளவு பெரிய மென்பொருள் பூங்காவா? - இத்துணை உயரத்துக்கு தகவல் தொழில்நுட்பப் பூங்காவா? - என அதிசயங்கண்டு அகலக் கண் திறந்தோர் ஒருபுறம் - இந்தப் பூங்காவுக்கு, பத்து இலட்சம் சதுர அடிகளும் நிறைவு பெறக்கூடிய அளவுக்கு, நிறுவனங்கள் வரக்கூடுமா? வருமா? எங்கே வரப்போகின்றன? எனக் கேலி பேசியோர் ஒரு புறம் - ஆனால் என்ன நடந்திருக்கிறது தெரியுமா? உடன்பிறப்பே!

ஆசியாவில் எங்குமில்லாத அளவுக்கு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் ஆகிய நான்கே மாதங்களுக்குள் பத்து இலட்சம் சதுர அடி கொண்ட அந்தப் பனிரெண்டு மாடிக் கட்டிடப் பூங்கா, உலகப்புகழ் பெற்ற பல்வேறு நிறுவனங்களால் நிரம்பி விட்டது.

அதாவது, 50 விழுக்காடு கம்பெனிகள் அமெரிக்க நாட்டினைச் சார்ந்தவை. 40 விழுக்காடு கம்பெனிகள் இந்தியாவின் பெரிய நிறுவனங்கள். 5 விழுக்காடு நிறுவனங்கள் புதிதாக தொடக்கப்படும் கம்பெனிகள். 5 விழுக்காடு கம்பெனிகள் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவை.

இதன் தொழில்நுட்ப வர்த்தக வெற்றிகளை கருத்தில் கொண்டு, டைடல் பூங்காவினுடைய திறப்பு விழாவின்போது, இரண்டாவது டைடல் பூங்கா விரைவில் உருவாக்கப்படுமென அறிவித்திருந்தேன். அதனைத் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருவாளர்கள் சி.பி. ரிச்சர்டு எல்லிஸ் சவூத் ஆசிய பிரைவேட் நிறுவனத்தினால் விரிவான சந்தை வாய்ப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன. சந்தை நிலவர ஆய்வுகள் கிடைத்தவுடன், அமைக்கப்படவுள்ள இரண்டாவது டைடல் பூங்காவின் அளவு, வடிவமைப்பு, அமையும் இடம், அதன் சிறப்பு அம்சங்கள் ஆகியவைகளை குறித்து முடிவு செய்யப்பட இருக்கிறது.

போர்டு மோட்டார் கம்பெனியின் புதிய தகவல் தொழில்நுட்ப மையம் தமிழகத்தில் அமைய இருப்பதன் அடையாளமாக போர்டு இந்திய நிறுவனத்திற்கு, டைடல் பூங்காவில் தொண்ணூறாயிரம் சதுரஅடி பரப்புடைய ஒரு முழு தளத்திற்கான ஒதுக்கீட்டு ஆணையை, அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஃபில் ஸ்பென்டர் (Thiru. Phil Spender) அவர்களிடம் இன்று (1.11.2000) வழங்கினேன். இத்துடன் டைடல் பூங்காவின் முழு இடமும் நிரப்பப்பட்டுவிட்டது.

போர்டு மோட்டார் கம்பெனி இந்தியாவில் பல்வேறு இடங்களை விரிவாக ஆய்வு செய்த பின்னர், ஆசியா பசிபிக் மண்டலத்தில் அதன் புதிய தகவல் தொழில்நுட்ப மையத்தை நிறுவுவதற்கு சென்னையைத் தேர்வு செய்துள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்ப மையம் சென்னையில் உலகத் தரத்திற்கு இணையாக அமைந்துள்ள டைடல் பூங்காவின் ஒரு தளம் முழுவதிலும் அமையும்.

இந்தத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இத்திட்டம் முழுமைக்கும் தேவைப்படும் 2500 மென்பொருள் தொழில் பணியாளர்களில், தொடக்கத்தில் ஏறத்தாழ 600 பணியாளர்கள் நியமனம் பெறுவர். இதன் மொத்த முதலீடு இருநூறு கோடிக்குமேல் அமையும்.

இப்பூங்காவில் பணிபுரிவோர் எண்ணிக்கை பத்தாயிரம் பேர் எனப் பெருகும் என்பதை அறியும்போது எவ்வளவு பூரிப்பு ஏற்படுகிறது!

எனவே, இந்தப் புத்தாயிரம் ஆண்டில் போற்றத்தக்க புதுமைக்கோர் சின்னமாக டைடல் பூங்காவும் - வணங்கத்தக்க பழமைக்கோர் சின்னமாக அய்யன் வள்ளுவர் சிலையும்! ஆம்! இரண்டுமே சரித்திரச் சாதனைகள் எனச் சான்றோர் புகழ்வர்!

அன்புள்ள,

மு. க.

(02-11-2000)

2536. கவலையளிப்பது மட்டுமல்ல! கண்ணீர் சிந்திட வைப்பது!

உடன்பிறப்பே,

நவம்பர் 1ஆம் நாள் சென்னையில் வெளிவந்த ஒரு நாளிதழில் (தினமலர்) வெளிவந்த செய்தியை அப்படியே கூடுதல் குறைச்சல் எதுவுமின்றி தருகிறேன்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதாவின் வருகை பற்றி செய்தி சேகரித்துக் கொண்டு இருந்த (தினமலர்) செய்தியாளர் என். சுந்தர், அ.தி.மு.க. பிரமுகரால் கடுமையாக தாக்கப்பட்டு காயமடைந்தார். மதுரை அசோக் ஓட்டலில் தங்கி இருந்த ஜெயலலிதா, நேற்று தூத்துக்குடி புறப்பட்டுச் சென்றார். இதுபற்றி செய்தி சேகரிக்க சென்ற சுந்தரை, மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் வி.ஆர். ராஜாங்கத்தின் நெருங்கிய நண்பரான தாஸ் என்பவர், ஆபாசமாக திட்டி, கடுமையாக தாக்கினார். இதில் சுந்தரின் இடது முன் கை உடைந்தது. மீனாட்சி மிஷன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சுந்தர் சிகிச்சை பெற்று வருகிறார். அடிக்கும் போதும், திட்டும் போதும் நிருபரை கொலை செய்து விடுவதாகவும், அ.தி.மு.க., பிரமுகர் மிரட்டினார். இதுபற்றி போலீஸ் கமிஷனரிடம் புகார் செய்யப்பட்டு இந்திய குற்றவியல் சட்டம் 307வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.தி.மு.க. பிரமுகர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

இச்செய்தி ஒருசில ஏடுகளில் கண்ணில் படுகிற அளவுக்கும் ஒரு சில ஏடுகளில் தேடிப்பிடித்துப் படிக்க வேண்டிய அளவுக்கும் வெளியாகியுள்ளது. எந்தப் பத்திரிகையின் நிருபர் தாக்கப்பட்டாரோ, அந்தப் பத்திரிகையிலேகூட இச்செய்திக்குத் தரப்பட வேண்டிய முக்கிய இடம் தரப்படவில்லை. ஒரு நிருபர் தாக்கப்பட்டுள்ளார். அவர் கொடுத்த புகாரின்படி கடுமையாகத்

தாக்கப்பட்டுள்ளார். ஆனால் எந்த ஒரு நிருபர்கள் சங்கமும் கொதிப்படையா விட்டாலும், கோபங் கொண்டதாகக்கூடத் தெரியவில்லை.

இதிலிருந்து என்ன புரிகிறது? ஒன்று, அந்தச் செய்தி பொய்யாக இருக்க வேண்டும் - அல்லது உண்மைச் செய்தியாக இருந்து, கட்டுப்பாடாக அதனை எல்லோருமாகச் சேர்ந்து மறைத்திட முயன்றிருக்க வேண்டும்.

எண்ணிப்பார்! இதுபோல ஒரு தி.மு.க.காரர், ஒரு நிருபர் மீது கை வைத்திருந்தால், இந்நேரம் பத்திரிகை சுதந்திரம் பற்றி எவ்வளவு முழக்கங்கள்! நடைபெற்ற சம்பவம் குறித்து இமயம் முதல் குமரி வரையில் எவ்வளவு கண்டனங்கள்! ஏ, அப்பா! காதுகள் செவிடுபடும் படியாகச் செய்தியாளர்களின் மறுப்பு அறிக்கைகள் ஒலியெழுப்பியிருக்குமே! ஆனால் அதே சமயம், கோவையில் கழக முகாமுக்குள் ஒரு விரும்பத் தகாத நிகழ்ச்சி! நீண்ட காலக் கழக முன்னோடிகள் இருவர் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர்!

அதை நானோ அல்லது கட்டுப்பாடு காத்திடும் இந்தக் கழகமோ பொறுத்துக் கொள்ள முடியாது - அதனால்தான் அதற்கான விசாரணைக்கு ஏற்பாடாகியுள்ளது. குற்றம் எவ்வாறு நிகழ்ந்தது? குற்றம் விளைவதற்கான காரணம் என்ன? கட்டுப்பாடு எவ்வண்ணம் மீறப்பட்டது? அடிதடி என்கிற அளவுக்கு நிலைமை உச்சக்கட்டத்துக்குச் சென்றது எப்படி? இவற்றையெல்லாம் விசாரித்து முடிவெடுக்கும் பொறுப்பை தலைமைக் கழகம் ஏற்றுள்ளது. விரும்பத்தகாதது மட்டுமல்ல, வெறுக்கத்தக்க விபரீத நிகழ்ச்சியுமாகும் கோவை நிகழ்ச்சி!

ஆம்! என் மனத்தைப் புண்ணாக்கியுள்ள நிகழ்ச்சி - இதற்குப் பரிகாரம் கண்டு கழகத்தின் கண்ணியம் காப்பதற்குத் தலைமைக் கழகம் தயங்காது! உடன்பிறப்பே, ஒன்றைக் கவனித்தாயா? மதுரையில் ஒரு செய்தியாளர் தாக்கப்பட்டதை அலட்சியமாக விட்டு விட்டவர்கள் - பத்திரிகைத் துறை நண்பர்கள் - கோவை நிகழ்ச்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் - எப்படிப்பட்ட தலையங்கம் - எத்தனை எத்தனை கேலிச் சித்திரங்கள்!

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை எதிர்த்து, வேட்புமனு தாக்கல் செய்ய திரு. ஜிதேந்திர பிரசாத் சென்ற போது, டெல்லி காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற கலவரத்தை தலையங்கம்

எழுதியா கண்டித்தார்கள்? கேலிச் சித்திரம் வரைந்தா சிரித்தார்கள்? இல்லையே.

இதிலிருந்தாவது புரிந்து கொள்ள வேண்டும் பொறுப்பிலே உள்ள கழக முன்னோடிகள், தி.மு.க.வில் கடுகளவுப் பிரச்சினையென்றாலும் அது மலையளவு ஆக்கப்படும்! காரணம், இந்த இயக்கத்தை அழிக்க ஏதாவது ஒன்று கிடைக்காதா என்று அலைபவர்கள் அதிகம். அதனால்தான்! இதனைப் பொறுப்பிலே உள்ள கழக முன்னோடிகள் உணர்ந்து கொள்ளாதது எனக்கு கவலை அளிப்பது மட்டுமல்ல; என்னைக் கண்ணீர் சிந்திட வைக்கக் கூடியதுமாகும்!

அன்புள்ள,

மு. க.

(03-11-2000)

குறிப்பு :- கண்ணீரைத் துடைத்துக் கொள்ளும் வகையில் கோவைக் கழக முன்னணியினரை வைத்து இன்று பேசி, இனிய முடிவு ஒன்றும் காணப்பட்டுள்ளது.

2537. கையில் இருந்தது கிரிக்கெட் 'மட்டை' அல்ல; 'அட்டை!'

உடன்பிறப்பே,

ஒரு காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் என் மனம் ஈடுபாடு கொண்டதேயில்லை. தொலைக்காட்சிகள் வராத அந்தக் காலத்தில் கிரிக்கெட் விளையாட்டுப் பந்தயங்களைப் பற்றிய வர்ணனைகள், வீழ்த்தப்பட்ட விக்கெட்டுக்களின் எண்ணிக்கை, எடுக்கப்பட்ட ஓட்டங்கள் எவ்வளவு என்ற விபரங்கள், அவுட், ரன் அவுட், கேட்ச், பௌண்ட்ரி, சிக்சர், ஸ்டம்டு, போல்டு போன்ற பந்தய மைதானத்துச் செய்திகளை வானொலி வாயிலாகத்தான் தெரிந்துகொள்ள முடியும்.

கிரிக்கெட் ரசிகர்கள் ஒவ்வொருவரும் ஒரு வானொலிப் பெட்டியுடன்தான் பந்தயம் நடைபெறும் நாட்களில் காட்சி தருவர். இன்றைய செல்போன் பலருடைய கைகளில் இருப்பது போல, அன்றைக்கு சிறிய வானொலிப் பேழைகள் கிரிக்கெட் பிரியர்களின் கைகளில் இருக்கும்.

என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், கிரிக்கெட் பந்தயம், இந்தியாவிலோ, வெளிநாடுகளிலோ நடைபெறும் போது, இந்தியாவின் வெற்றியை எதிர்பார்த்தவாறு வானொலிப் பேழையொன்றை சிறிய அளவில் தனது செவியோரத்திலேயே வைத்துக் கொண்டிருப்பார். இந்திய அணிக்கு என்ன நேர்ந்தது என்பதை அவரது முகபாவத்திலிருந்தே தெரிந்து கொள்ள முடியும்.

ஆகா! ஊஹூம்! என்று அவர் உரத்த ஒலி எழுப்பினால், இந்திய அணியின் வீரர் ஒருவர் சிக்சர் அடித்து விட்டார் என்று அர்த்தம்!

உஸ்! என்று முகம் சுளித்தால், நமது வீரர் ஒருவர் எதிர்பார்த்தபடி ஆடாமல் குறைந்த எண்ணிக்கை ரன்களுடன் களத்திலிருந்து திரும்புகிறார் என்று அர்த்தம்!

பலமுறை படக்கதை பற்றிய விவாதம் நடக்கும்போதுகூட, டைரக்டர் காசிலிங்கம், பெரியவர் எம்.ஜி. சக்கரபாணி, பி.எஸ். வீரப்பா ஆகியோரை என்னிடம் இருக்கச் செய்துவிட்டு, எம்.ஜி.ஆர். மட்டும் தனியாகச் சென்று வானொலிப் பெட்டியில் கிரிக்கெட் விளையாட்டை கவனித்துக் கொண்டிருப்பார்.

எனக்கு மட்டும் கிரிக்கெட் பற்றி பெர்னாட்ஷா கூறிய வார்த்தைகள்தான் அப்போதெல்லாம் நினைவுக்கு வரும்.

அப்படியொரு பிடிவாதமாக கிரிக்கெட் பக்கமே போகாமலிருந்த நான், அந்த விளையாட்டு நடைபெறும் மைதானத்தைக் கூட திரும்பிப் பார்க்காமல் இருந்த நான், விளையாடிய வீரர்கள் யார் எந்தப் பந்தை எப்படி அடித்தார் - யார் எந்தப் பந்தை கேட்ச் பிடித்தார் - யார் பீல்டிங் செய்ததில் திறமை காட்டினார் என்றெல்லாம் எவரேனும் கூறும்போது, அதைக் காதிலே வாங்குவது கூட வீண் வேலையென்று கருதிக் கொண்டிருந்த நான், சுமார் முப்பது ஆண்டுக் காலமாக கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியென்றால், அதில் தனியொரு மோகம் கொண்டலையும் நிலைக்கு ஆளானேன்.

1969ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், சென்னையில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டி, மேற்கிந்திய தீவுகளின் அணிக்கும் - இந்திய அணிக்கும் இடையே நடைபெற்ற போது அதனைத் தொடங்கி வைக்கும் பொறுப்பை நிறைவேற்றிட வேண்டியவனானேன். என்னுடன் குறிப்பாக நாவலர் நெடுஞ்செழியன் உட்பட சில அமைச்சர்கள் வந்திருந்தனர். கிரிக்கெட் விளையாட்டு பற்றிய பல அம்சங்களை விரிவாக எனக்கு விளக்கியவர் நாவலர்தான்.

பின்னர் ருசி கண்ட பூனையானேன்! ஆம், கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில்!

தொடர்ந்து கிரிக்கெட் மைதானத்திற்கே சென்று அந்த விளையாட்டுப் போட்டிகளை கண்டு களித்தேன்.

இதற்கிடையே தொலைக்காட்சி வசதி உருவாகி, அது பெருகிடவும் தொடங்கியது.

தொலைக்காட்சியில் மிக மந்தகதியில் ஆடப்பட்ட டெஸ்ட் மேட்ச்களைக் காணும் ஆர்வம் மெல்லக் குறைந்து - ஒரு நாள்

பந்தயங்களின் (One Day Match) பரபரப்பு அதிகமாயிற்று. ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு மணி நேரம் தொலைக்காட்சி முன் அமர்ந்து, கிரிக்கெட் விளையாட்டை ரசிக்கும் பழக்கம் என்னைப் பற்றிக் கொண்டது.

கிரிக்கெட் குறித்து ஜார்ஜ் பெர்னாட்ஷா சொன்ன வார்த்தைகள் எங்கேயோ ஒலியொடுங்கி ஓடிப்போய் விட்டன! அல்லது அவர் சொன்ன அந்தப் பதினோராயிரம் என்பதில் நானும் ஒருவனாகி விட்டேன் போலும்!

அவர் என்ன சொன்னார், கிரிக்கெட் பற்றி! பதினோரு முட்டாள்கள் ஆடுகிறார்கள். அதைப் பதினோராயிரம் முட்டாள்கள் பார்த்து ரசிக்கிறார்கள் என்று சொன்னார்.

அவர் சொன்னது என்னவோ, கிரிக்கெட் ஆட்டத்தைப் பொறுத்தவரையில், சில திருத்தங்களுடன் சரி என்று ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு வாசகமாகவே இப்போது ஆகிவிட்டது எனலாம்.

பதினோருபேர் கிரிக்கெட் ஆடுவார்கள் என்று பார்த்தால், அவர்கள் கிரிக்கெட் என்ற திரைமறைவில் சூதாடியிருக்கிறார்கள். அதுவும் எப்படி? தங்கள் அணியை மட்டும் காட்டிக் கொடுத்தா? இல்லை! தங்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்து!

தோற்றுப் போகிறேன்! இவ்வளவு தொகை கொடு என்று இலட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் பணம் பெற்று தேசத் துரோகம் செய்தவர்களை, பெர்னாட்ஷா பாஷையில் முட்டாள்கள் என்று சொல்ல முடியுமா? துரோகிகள் அல்லவா அவர்கள்!

விளையாட்டை வேடிக்கை பார்த்த - ரசித்த - மகிழ்ந்த - வெற்றி கண்டு குதித்த - தோல்வி கண்டு தீ மிதித்த - நம்மைப் போன்ற கிரிக்கெட் பிரியர்களுக்கு வேண்டுமானால், பெர்னாட்ஷா சூட்டிய முட்டாள்கள் பட்டம் பொருந்தக்கூடும்!

விளையாடிய வீரர்கள் முட்டாள்கள் அல்ல! கோடி கோடியாய்க் குவித்து விட்டு - நாட்டுக்கு - சமுதாயத்துக்கு ஒரு அரிய விளையாட்டுக் கலைக்கு அவமானம் தேடியவர்கள், இன்னமும் தங்களை உத்தம புத்திரர்களாய்க் காட்டிக்கொண்டு ஊரை ஏமாற்ற எண்ணுகிறார்களே! அவர்கள் எப்படி முட்டாள்களாக

இருக்க முடியும்? ஊழல் பேர்வழிகளை - சமூக விரோதிகளை - தேசப்பற்றை விலை கூறியவர்களை - இன்னமும் நம்பினால் நம்மைவிட முட்டாள்கள் யாரும் இருக்க முடியாது!

உடன்பிறப்பே, கடிதத் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டது போல ஆரம்ப காலத்தில் அந்த ஆட்டத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தால், அதன் பக்கம் போகாமலிருந்தேன் - இப்போது அதில் ஆடுகிற வீரர்கள் பலர் எப்படிப்பட்டவர்கள் என்று புரிந்து கொண்டதால் அந்தப் பக்கம் போகவே தயக்கமாகி விட்டது.

இந்தச் சூதாட்டக்காரர்கள் கையில் இது வரையில் இருந்தது கிரிக்கெட் மட்டையல்ல! டாலரும், பவுனும் உறிஞ்சிய அட்டை என்பது தெளிவாகி விட்டது.

இந்தப் போட்டி மைதானத்தில் பந்து மட்டும் பிடிபடவில்லை. பந்தாடிய வீரர்கள் பலரும் பந்து போல் சட்டத்தின் கையில் பிடிபட்டுச் சிக்கியுள்ளனர்.

இந்த லஞ்சாவதாரங்கள் ஓட்டமெடுக்க வேண்டியது இரண்டு ஸ்டம்புகளுக்கு இடையே அல்ல! கிரிக்கெட் மைதானங்களை விட்டே ஓட்டமெடுக்க வேண்டியதுதான்!

இவர்கள் நீடித்தால் இந்த அரிய விளையாட்டின் புகழே அவுட்!

அன்புள்ள,

மு. க.

(4-11-2000)

2538. பாசு, புகழொளி பரப்பிப் பல்லாண்டு வாழ்க!

உடன்பிறப்பே,

இன்று (4-11-2000) காலை சென்னையில் தனியார் மருத்துவமனை அப்பல்லோவில் சிகிச்சை பெற்று வரும் தம்பி முரசொலி மாறனை சந்தித்து உடல்நலம் விசாரிக்க நானும், நண்பர் ஆர்க்காடு வீராசாமியும் சென்றோம். நான் தூக்கி வளர்த்து ஆளாக்கிய பிள்ளையல்லவா தம்பி மாறன்! பால பாடம் கற்றுத் தந்த ஆசிரியன் நான் என்றாலும் மாறன், குருவையும் மிஞ்சிடும் சிஷ்யனாக அரசியல் கலையைக் கற்றறிந்து, அறிஞர் அண்ணாவின் செல்லப் பிள்ளையாக, அவரது அடியொற்றிய அரசியல் வித்தகனாக வளர்ந்துள்ள காரணத்தால், உடல் நிலை விசாரிக்கச் சென்ற என்னிடம், தம்பி மாறன் மேற்கு வங்க முதலமைச்சர் தோழர் ஜோதிபாசு பதவி விலகியது குறித்து விரிவாகவும், உருக்கமாகவும் பேசத் தொடங்கினார். உடல் நலம் குன்றியிருக்கும்போது அதிகம் பேச வேண்டாமென்று தடுத்தும் கூட ஜோதிபாசு மீது மாறன் கொண்டுள்ள அன்பையும், வைத்திருக்கும் மதிப்பு மரியாதையையும் அள்ளிக் கொட்டி மகிழ்ந்தார்.

கம்யூனிஸ்டு கட்சியின் பெருந்தூண்களில் ஒருவரான தோழர் ஜோதிபாசுவை 1969 முதல் நான் நன்கு அறிவேன்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் திரு. வி.வி. கிரியை ஆதரிப்பது என்ற முடிவு டெல்லி தமிழ்நாடு மாளிகையில் எடுக்கப்பட்ட போது அந்த கலந்துரையாடல் கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வராக இருந்த திரு. அஜய் முகர்ஜியும், மேற்கு வங்க துணை முதல்வராக இருந்த ஜோதிபாசுவும் பங்கேற்ற நிகழ்ச்சி, இன்னமும் என் நெஞ்சை விட்டகலவில்லை.

தேசிய வளர்ச்சி மன்ற (என்.டி.சி.) கூட்டம் டெல்லியில் நடைபெறுகிறது. அப்போதுதான் அண்ணாவின் மறைவுக்குப்

பிறகு முதல்வர் பொறுப்பேற்று நான் அந்தக் கூட்டத்திற்கு சென்றிருக்கிறேன். என்னுடன் அன்றைய நிதி அமைச்சர், நண்பர் மதியழகன் அவர்களும் வந்திருக்கிறார். மேற்கு வங்க முதல்வர் அஜய் முகர்ஜியும், துணை முதல்வர் ஜோதிபாசுவும் அந்த முதலமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கூட்டத்தில் தான் வங்கிகளை தேசிய மயமாக்கிட வேண்டுமென்ற கருத்தை நான் முதன்முதலாக வலியுறுத்திப் பேசுகிறேன். அப்போது இந்திரா காந்தி அம்மையார் பிரதமர். மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமர். வங்கிகளை தேசிய மயமாக்க வேண்டுமென்ற என் கருத்தை மொரார்ஜி ஆதரிக்கவில்லை. மறுப்புக் கருத்து வெளியிட்டார். இச்செய்தி டெல்லி ஏடுகளில் பெருந்தலைப்பிட்டு வெளிவந்தது. பல முதலமைச்சர்கள் இதனைக் கண்டு கொள்ளவேயில்லை. மேற்கு வங்கத்தின் துணை முதலமைச்சராக இருந்த ஜோதிபாசு அவர்கள்தான், நான் வெளியிட்ட வங்கிகள் தேசிய மயம் என்ற கருத்துக்கு ஆணித்தரமான ஆதரவாளராக அன்றைய கூட்டத்தில் உரையாற்றினார். இதுவும் என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

அனைத்திந்திய தலைவர்களையெல்லாம் அழைத்து கல்கத்தாவில் அவர் முன்னின்று நடத்திய (Conclave) மாநில சுயாட்சி மாநாட்டுக்கு நானும், தம்பி முரசொலி மாறனும், ஆர்க்காடு வீராசாமியும் சென்றிருந்தோம். மாநாடு முடிந்து தலைவர்கள் குரூப் போட்டோவுக்கு ஒரு பெரிய மாடித் தளத்தில் ஏற்பாடாகியிருந்தது. போட்டோவுக்கான இருக்கையில் அமர என்.டி. ராமராவ் அவர்கள் வருவதற்கு சற்றுத் தாமதமாயிற்று. நடிகரல்லவா! மேக் அப் போட்டுக் கொண்டு வர நேரமாகத்தான் செய்யும் என்று ஜோதிபாசு அடித்த கிண்டல் என்றும் மறக்க முடியாததாகும்.

இரண்டு முறை தி.மு.க. ஆட்சியை 356-வது பிரிவைப் பயன்படுத்தி மத்திய அரசு கலைத்தபோது, துடித்துப் பறந்து உடனடியாக கண்டன அறிக்கை வெளியிட்ட முதலமைச்சரும் தோழர் ஜோதிபாசுதான்.

இப்படி இந்திய நாட்டு அரசியல் விவகாரங்களில் எனக்கும், அவருக்கும் எவ்வளவோ நெருக்கமான பழக்கம் உண்டு.

அவர் ஏறத்தாழ 23 ஆண்டுக் காலம் முதலமைச்சர் பதவியில் இருந்து பணியாற்றி விட்டு - அந்தப் பதவியிலிருந்து ஓய்வு

பெறும்போது அரசியல் நாகரிகத்தின் அடிப்படையில், அவரது கட்டுப்பாடு மிக்க பொது வாழ்க்கையையும் - கண்ணியம் மிக்க அரசியல் நடவடிக்கைகளையும் - பண்பார்ந்த நட்புறவின் நிலைத்த தன்மையையும் நினைத்து, பாராட்டி, வாழ்த்துவது என்பது என் போன்றோர்க்கு இயல்பேயாகும்.

கட்சிகள், கொள்கைகள், திட்டங்கள், கருத்து வேறுபாடுகள் இவைகள் ஒரு புறம் இருப்பினும், அந்த இயக்கங்களில் முன்னணித் தலைவர்களாக இருந்தோர் - இருப்போர் - தலைமையேற்று வழி நடத்துவோர் இவர்களின் அருமை பெருமைகளை நினைவு கூர்வது என்பது அரசியல் பண்பாடு மட்டுமல்ல. அரசியலுக்கு வரும் இளைஞர்களுக்கு தோன்றாத் துணையெனும் பாடமுமாகும்.

ஜோதிபாசு அவர்களைப் பற்றி 4-11-2000 தேதியிட்ட பிசினஸ் லைன் குறிப்பிடும்போது,

"Mr. Basu can take legitimate pride in the fact that he provided a clean government and became a role-model at a time when the whole country was stinking with corruption all over" என்று தெரிவித்துள்ளது.

அதாவது நாடு முழுவதும் ஊழல் சகதியிலே மூழ்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் நேர்மையான ஒரு அரசை நடத்தியதற்காக ஜோதிபாசு அவர்கள் பெருமையடையலாம் என்று தெரிவித்துள்ளது.

எனவே ஜோதிபாசு அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டராக - சட்டப்பேரவை உறுப்பினராக - சட்ட எதிர்க்கட்சித் தலைவராக - நிதி அமைச்சராக - உள்துறை அமைச்சராக - துணை முதல் அமைச்சராக -முதல் அமைச்சராக - ஐம்பதாண்டுக் காலத்திற்கு மேல் பொதுத் தொண்டாற்றி நிர்வாகப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும், பொதுவாழ்விலும், கட்சிப் பணியிலும் தொடர்ந்து பணியாற்றுவேன் என்று குறிப்பிட்டிருப்பது அவருக்கு மேலும் பெருமை சேர்க்கக் கூடியதாகும்.

1977-ஆம் ஆண்டில்தான் ஜோதிபாசு அவர்கள், மேற்கு வங்கத்தின் முதலமைச்சராகிறார். ஜோதிபாசு அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான் மேற்கு வங்காளத்தில் பெருமளவிற்கு நிலச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்துடன் அந்த மாநிலத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஜனநாயக உயிர்

கொடுத்ததிலும் அவருக்கு பெரும்பங்கு உண்டு. கூட்டணி ஆட்சி அமைத்து அனைவரையும் ஒருங்கிணைத்து 23 ஆண்டுகள் தொடர்ந்து இந்திய வரலாற்றிலேயே முதல் அமைச்சராக பொறுப்பேற்றிருந்தவர் என்ற தனிப்புகழை தட்டிச் சென்றப் பெருமையும் இவருக்கு உண்டு.

அவர் மிக இளைஞனாக இருந்தபோதே அவர் வீட்டிற்கு பௌமிக் என்ற ஒரு ஆயுதம் தாங்கிய புரட்சிக்காரர் அடிக்கடி வருவார் என்றும், அவர் தன்னுடைய ஆயுதங்களை ஜோதிபாசு வீட்டிலே பாதுகாப்பாக வைத்திருந்தார் என்றும் ஒருமுறை காவல்துறையினர் ஜோதிபாசு வீட்டை சோதனையிட வந்தபோது அந்த ஆயுதங்களை ஜோதிபாசுவின் அன்னையார் தனது சேலையிலே மறைத்து வைத்திருந்தார் என்றும் அவர் தனது வரலாற்றிலே குறிப்பிட்டிருந்ததை நான் படித்துள்ளேன்.

ஜோதிபாசுவிற்கு 16 வயதாக இருந்தபோது காந்தியடிகள், உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தார். அது பாசு அவர்களை மிகவும் பாதிக்கச் செய்த காரணத்தால், பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை. அவரது தந்தையும் அதனை ஆட்சேபிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதே 1930-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் சாகித் மினார் மைதானத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றதாகவும், அதற்கு பாசு அவர்களும், அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவரும் செல்ல முடிவு செய்த போது கதர் சட்டை வீட்டிலே இல்லாத காரணத்தால் எப்படி அங்கே செல்வது என்று யோசித்து பிறகு கைத்தறி ஆடைகளையே அணிந்து கொண்டு அந்தக் கூட்டத்திற்கு சென்றதாகவும், அந்தக் கூட்டம் நடைபெற்ற மைதானமே பெரும் போர்க்களம் போல அமைந்திருந்ததாகவும், ஆயுதம் தாங்கிய நூற்றுக்கணக்கான போலீசார் கூட்டத்திற்கு வந்த மக்களை அடித்து விரட்டியபோது அந்த அடியிலே சில இவர்களுக்கும் விழுந்தன எனினும் தாங்கள் இருவரும் அதனைக் கண்டு மிரளாமல் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்ட நிகழ்ச்சி தனக்கு பசுமையாக நினைவிலே இருப்பதாகவும் பாசு குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் பல்கலைக் கழக கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே, லண்டன் பொருளாதாரப் பள்ளியில்

வாரந்தோறும் நடைபெறும் ஹெரால்டு லாஸ்கி அவர்களுடைய சொற்பொழிவுகளைத் தொடர்ந்து கேட்டதின் காரணமாக சோஷலிச உணர்வுகள் ஜோதிபாசுவின் இளம் மனதைக் கவர்ந்தது.

இந்த ஹெரால்டு லாஸ்கி அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு திராவிட நாடு இதழிலே அவரைப்பற்றி எழுதிய சில கட்டுரைகளையும், குறிப்பாக லாஸ்கியின் அரசியல் இலக்கணம் என்ற நூலைப் பற்றி எழுதியதையும் நான் படித்திருக்கிறேன். லாஸ்கியின் உரைகளைக் கேட்ட பிறகுதான் ஜோதிபாசு காரல்மார்க்ஸ் எழுதிய மூலதனம், ஏங்கல்ஸ் நூல்களைப் படிக்கத் தொடங்கினார்.

கல்விக்குப் பிறகு தாயகம் திரும்பிய ஜோதிபாசு அவர்கள், முழு நேர அரசியல்வாதியாகி கம்யூனிஸ்ட் இயக்கத்திலே தன்னை முழுவதுமாக ஒப்படைத்துக் கொண்டார். அப்பொழுது இந்தியாவிலே கம்யூனிஸ்ட் இயக்கம் ஆங்கில அரசினால் தடை செய்யப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்டுகளுக்கும், வெளியுலகிலே இருந்த கம்யூனிஸ்டுகளுக்கும் இடையிலே பாசு பாலமாக இருந்து வந்தார். கம்யூனிஸ்ட்கள் தலைமறைவாக இருப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்வதற்கும், ரகசியமாகக் கூட்டங்களை நடத்துவதற்கும் தேவையான ஏற்பாடுகளையும் பாசு அவர்கள் செய்திருக்கிறார்.

1948-ஆம் ஆண்டு மார்ச் 26ந்தேதி அன்றைய மேற்கு வங்க அரசு கொண்டு வந்த பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார். அதே ஆண்டு மற்றொரு முறை மிதுனாபூர் மத்திய சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார். மீண்டும் 1950-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலே அகில இந்திய தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டிலே தடையை மீறி கலந்து கொண்ட காரணத்தால், கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார். மீண்டும் 1962-ஆம் ஆண்டு நவம்பர் 21ந்தேதி இந்திய-சீனா போரையொட்டி, இந்தியா முழுமையும் கம்யூனிஸ்ட்கள் கைது செய்யப்பட்ட போது, பாசு அவர்களும் கைது செய்யப்பட்டு 1963 டிசம்பர் 19 வரை சிறைவாசம் இருந்துள்ளார். மீண்டும் ஒரு முறை 1966-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலே கலந்து கொண்டு சிறைவாசம் அடைந்துள்ளார்.

1954-ஆம் ஆண்டு பிப்ரவரி 16-ஆம் நாள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஆதரித்து மேற்கு வங்க சட்டமன்றத்தை நோக்கி பேரணி ஒன்று நடத்துவதென்று கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்தது. இந்தப் பேரணியை எப்படியும் முறியடித்திட வேண்டுமென்று அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் பி.சி. ராய் முடிவு செய்து, முக்கிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர். பாசு மட்டும் கைதாவதால் பயனில்லை என்று போலீஸ் கண்ணிலே மண்ணைத் தூவிவிட்டு, தனது நண்பர் ஒருவரின் காரிலே ஏறி சட்டமன்றக் கூட்டத்திற்கு நேரடியாகச் சென்றார்.

> "நான் அரசியலில் நுழைந்தபோது விடுதலைப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. அப்பொழுது நமது இலட்சியம் நாட்டுக்கு விடுதலை பெறுவது மட்டுமல்லாமல், அந்த விடுதலையை அதற்குப் பின் எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பதுமாகும். புதியதொரு நாட்டை நிர்மாணிப்பதென்பது மிகவும் முக்கியமானதாக இருந்தது. ஆனால், ஏழை மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைப்பதே இறுதி இலட்சியமாக இருந்தது."

50 ஆண்டு காலத்திற்கு மேல் பொது வாழ்க்கையிலும், 23 ஆண்டு காலம் மேற்கு வங்கத்தின் முதலமைச்சராகவும் பணியாற்றி பொது வாழ்க்கைக்கு ஓய்வு தராமல் முதலமைச்சர் பதவிக்கு மட்டும் ஓய்வு தந்துள்ள திரு. ஜோதிபாசு அவர்கள், தனது வாழ்க்கைச் சரித்திரத்தின் முன்னுரையிலே தெரிவித்துள்ள வார்த்தைகளே இவை.

இந்திய நாடு, தான் பெற்ற சுதந்திரத்தை ஏழை, எளிய, சாமானிய, பாட்டாளி வர்க்கத்துடனும் - மத்திய தர மக்களுடனும் பகிர்ந்துகொள்ள அரசியல் சட்டத்தில் மகத்தான திருத்தங்கள் வேண்டுமென்பதிலும், அடிப்படை உரிமைகளுக்குச் சேதமின்றி அந்தப் பணி நடைபெற வேண்டுமென்பதிலும் ஜோதிபாசு அவர்களின் கருத்தும், நமது தி.மு.கழகத்தின் கருத்தும் ஏறத்தாழ ஒருமித்த கருத்துதான் எனினும் - மாநிலங்களை மத்திய அரசு தன் இஷ்டத்துக்கு கலைத்திடப் பயன்படுத்தும் 356-வது பிரிவை கம்யூனிஸ்டுகள் ஆரம்பத்தில் எதிர்த்த போது இருந்த கடுமை பிறகு ஓரளவு தளர்ந்த போது தோழர் ஜோதிபாசு அவர்களுக்கு

நான் ஒரு கடிதம் 13-2-1997 அன்று எழுதினேன். அந்த நீண்ட கடிதத்தில் நான் இறுதியாகக் குறிப்பிட்ட பகுதி வருமாறு:-

> "அண்மையில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையே ஆன நிலைக்குழு (இண்டர்-ஸ்டேட் கவுன்சில்) கூட்டத்தில் நீங்கள் 356-வது பிரிவைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்ற பாதுகாப்போடு, அந்தப் பிரிவு நீடித்திருக்கலாம் என்று தெரிவித்த கருத்தினைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டுப் போய் இருக்கிறேன்.
>
> எனவே இந்த யோசனையை தாங்கள், தீவிரமாக பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், உண்மையான கூட்டாட்சி என்ற இலட்சியத்தை நோக்கி நடைபோடுவதற்கு இதுவே தக்க தருணமாகும்."

உண்மையான கூட்டாட்சியை நோக்கி நமது பயணத்தைத் தொடருவதற்கான முயற்சியை தாங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுவே நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்கின்ற ஒரு விலை உயர்ந்த பொக்கிஷமாகத் திகழும்.

இப்படி அரசியல் ரீதியாகவும் - கருத்துப் பரிமாற்ற ரீதியாகவும் - நட்பு ரீதியாகவும் நான் பழகிய பண்பாளர் ஜோதிபாசு அவர்கள்!

இன்று அவர் பதவியில் இல்லாவிட்டாலும், என்றும் போல் அவரது மக்கட்பணி தொடரும்!

அவர் பல்லாண்டுக் காலம் மேலும் வாழ்ந்து புகழொளி பரப்பிட வேண்டுமென விழைகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(5-11-2000)

2539. பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்!

உடன்பிறப்பே,

> “எம்.ஜி.ஆர். ஆட்சியிலும், என் ஆட்சியிலும் பஸ்களில் திருக்குறளை எழுதி வைத்தோம். தற்போது கருணாநிதி அதில் கருணாநிதியின் பொன் மொழிகள் என எழுதி வைத்துள்ளார். மீண்டும் நான் ஆட்சிக்கு வந்ததும் கருணாநிதியின் பொன்மொழிகளை நீக்கி விடுவேன்.”

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, மேற்கொண்டுள்ள சுற்றுப்பயணத்தில் அவிழ்த்துவிடும் பொய் மூட்டைகளுக்கிடையே அள்ளிவிடும் அறைகூவல்களில் இதுவும் ஒன்று.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையும் கடித்ததாகச் சொல்வார்களே; அதுபோல அம்மையார் ஜெயலலிதா, எதை எதையோ இட்டுக்கட்டிச் சொல்லி, கடைசியில் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் கை வைத்துவிட்டார்.

தனது ஆட்சியில்தான் பேருந்துகளில் திருக்குறள் எழுதப்பட்டது என்று கூறுகிற ஜெயலலிதா! மக்கள் ஏமாறத் தயாராக இருந்தால் கருணாநிதிக்கு குறளோவியம் எழுதிக் கொடுத்ததே நான்தான் என்றும் - குறளுக்கு கருணாநிதி உரைநூல் எழுதிடக் கற்றுக் கொடுத்ததும் நான்தான் என்றும் கூறிட வெகு நாட்கள் ஆகாது!

தேவையில்லாமல் இதில் என் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரையும் இழுத்து ஜெயலலிதா வம்பு செய்துள்ளார். 1976க்கு முன்பு நான் வடிவமைத்துக் கட்டி முடித்த வள்ளுவர் கோட்டம், எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் நல்ல முறையில்தான் பராமரிக்கப்பட்டது. ஆனால் இந்த அம்மையார் ஆட்சியில்தான் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு வள்ளுவர் கோட்டம் பாழடைந்த மண்டபமாக - பழுதெண்ணும் கயவர்

மறைவிடமாக - ஆக்கப்பட்டது என்பதை அன்றைய நடுநிலை வார ஏடுகள் புகைப்படங்களுடன் வெளியிட்டு அழுதிட்ட அவலத்தை யாரும் மறந்திருக்க முடியாது.

இவர் வள்ளுவரைப் பற்றிப் பேச வந்து விட்டதுதான் வையகத்தில் இல்லாத அதிசயம்!

அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, பொதுப்பணித் துறைக்கும், போக்குவரத்துத் துறைக்கும் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நான், பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான விருந்தினர் விடுதிகளில் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் அமைக்குமாறு அரசின் சார்பில் முயற்சி எடுத்து நிறைவேற்றி வைத்தேன்.

அவ்வாறே போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் அமைத்திட அரசின் சார்பில் ஏற்பாடு செய்தேன்.

அன்றைய எதிர்க்கட்சியினர் சிலர்கூட, பேருந்துகளில் வள்ளுவர் படம் இருப்பதையும், திருக்குறள் எழுதப்பட்டிருப்பதையும் கேலி செய்தது உண்டு. காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக இருந்த திரு. கே. விநாயகம் அவர்கள், யாகாவாராயினும் நா காக்க - என்று பேருந்துகளில் குறள் எழுதியிருக்கிறீர்களே; யாருக்காக? என்று கேட்டார். அப்போது முதலமைச்சர் அண்ணா 'சட்' எனப் பதில் சொன்னார், நாக்கு இருப்பவர்களுக்காக என்று!

உடன்பிறப்பே, இவ்வளவு ஆதாரத்துடன் இதை நான் கூறுவதற்குக் காரணமே பேருந்துகளில் திருக்குறளை ஜெயலலிதா வந்து எழுதவில்லை. அது அண்ணா முதல்வராக இருந்தபோதே, அவரிடம் அனுமதி பெற்று போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த என்னால் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழ்ப்பணி ஆகும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான்!

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியாக இருந்த போது திருவள்ளுவர் படம் வைக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு. பக்தவத்சலனார் அவர்களிடம் கோரிக்கை வைத்தது இந்தக் கருணாநிதிதான்! அப்படம் வைக்கும் செலவைக்கூட ஏற்றுக் கொள்வதாக நான் உறுதியளித்த பிறகு - அந்தப் படம் அரசின் சார்பிலேயே சட்டமன்றத்தில் வைக்கப்படுமென்று

பெரியவர் பக்தவத்சலம் உரைத்து, அவ்வாறே வள்ளுவர் படம் வைக்கப்பட்டது. அப்போதெல்லாம் இந்த அம்மையார் சிறுமியாக இருந்திருப்பார்.

திருக்குறளுக்கும் எனக்குமுள்ள ஒட்டுறவை - திருவள்ளுவருடன் ஒன்றிப் போய்விட்ட என் உள்ள உணர்வை - வெளிப்படுத்தும் எடுத்துக்காட்டுகள் எத்தனை! எத்தனை! நீ அறியமாட்டாயா என்ன?

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அவரது பிறந்த நாளில், காவல் துறையைச் சேர்ந்த திறமையானவர்களுக்கு முதல்வர் பதக்கம் வழங்க வேண்டும். சிறந்த சேவைக்காகப் பொற்கிழியும், நற்சான்றிதழும் தரவேண்டும் என்று முடிவெடுத்து - அப்படிப்பட்ட பதக்கத்தில் யாருடைய திருவுருவம் பொறிக்கப்பட வேண்டும் என்ற கேள்வி எழுந்தபோது, திருவள்ளுவரின் திருவுருவம்தான் பொறிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தேன். ஏனென்றால், கடிதோச்சி மெல்ல எறிக! என்பதை மறவாமல் இருப்பதற்காக.

1921-ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில், மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், திருவள்ளுவர் பிறப்பு கி.மு.31 என்று முடிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைக் கருத்தில் கொண்டு, நான் முதலமைச்சராக இருந்தபொழுது 1971-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும், 1972-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும், திருவள்ளுவர் ஆண்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சென்னை - திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயம் திருப்பணிக்கான அடிக்கல் 27-4-1973 அன்று என்னால் நாட்டப் பெற்று பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறையாம் குறள் தந்த கோமானுக்குக் கோட்டம் எந்த அமைப்பில் உருவாக வேண்டும், எவ்வெவ் வகையில் அது பயன்தரத் தக்கதாக அமைய வேண்டும் என்பதையெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து, உலகோர் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலை நுணுக்கத்தோடு வள்ளுவர் கோட்டம் வடிவமைக்கப்பட்டது.

சுமார் 4000 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணத்தக்க வகையில், தூண்களே இல்லாமல் அரங்க மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. இக்கலைமண்டபம் ஆசியாக் கண்டத்திலுள்ள பெரிய அரங்குகளில் ஒன்றாகும்.

திருவாரூர் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டு வந்ததுபோல், வள்ளுவர் கோட்டத்தின் மணிமுடியாய்க் காண்போரைக் கவரும் வண்ணம் உயர்ந்து நிற்கும் சிற்பத் தேர். இவ்வழகிய தேரை இரண்டு யானைச் சிலைகள் இழுப்பது போல், சிற்பக் கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்டது.

தேர்ச்சக்கரத்திற்கும், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பளிங்கு பீடத்திற்கும் இடையில் உள்ள தேரின் மத்திய பாகத்தில் 133 குறட்பாக்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் அழகிய சிற்பங்கள் உயிரோவியங்களாய்ச் செதுக்கப்பட்டன.

புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் கழக அரசின் சார்பில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு அந்தச் சிலை 16-1-1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.

குறளோவியம் வெளியீட்டு விழா 17-2-1985 அன்று, சென்னையில் நடைபெற்றபோது திருவள்ளுவருக்கு ஓவியம் தீட்டிய வேணுகோபால் சர்மாவையும், அந்த விழாவிற்கு அழைத்து அவருக்கு நூலின் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையில் பத்தாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியை வழங்கினேன்.

ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று ஓவியரின் புதல்வர் என்னைச் சந்தித்துத் தெரிவித்தவுடன், முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாயை ஓவியருக்கு வழங்க உத்தரவிட்டேன்.

வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கான உரிமையை தமிழக அரசு பெற்றுக்கொண்டு, அவரது குடும்பத்தாருக்கு 1990 ஏப்ரல் 7-ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் 3 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினேன்.

1996-ஆம் ஆண்டில் புதுதில்லியிலுள்ள தில்லி தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவர் கலையரங்கம் அமைத்திட 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கிட ஆணையிட்டேன்.

திருவள்ளுவர் விருது எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1986-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது என்றாலும், தொடக்கம் முதல் அந்த விருதுக்கான பொற்கிழித் தொகை பத்தாயிரம் ரூபாய் என்றிருந்ததைக் கழக அரசில்தான், 1996-ஆம் ஆண்டில் 20 ஆயிரம் ரூபாயாகவும், 1998-ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி அறிவித்தேன்.

சூழும் தென்கடல் ஆடும் குமரி என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிறப்பித்துக் கூறிய தென்னகத்து முனையில், திருவள்ளுவர் பெருந்தகைக்குச் சிலை எடுக்கும் விழா! உலகத் தமிழினமே ஒன்று திரண்டு நிற்க - இரண்டாயிரம் ஆண்டு தொடக்கத்தின் முதல் நாளே நடைபெற்றது.

இவ்வாறு அய்யன் வள்ளுவனுக்கு அடிமையாகிக் கிடக்கும் என்னைத்தான் அவரிடமிருந்து பொய் கூறிப் பிரித்திடப் புலம்பித் திரிகிறார் இந்தப் புனிதவதியார்!

போக்குவரத்து அமைச்சரிடம் மட்டுமல்ல, பேருந்துகளில் பயணம் செய்வோர் பலரிடமும் கேட்டேன். தொழிலாளர்களிடமும் கேட்டறிந்தேன்.

எல்லாப் பேருந்துகளிலும் அய்யன் வள்ளுவர் படம் இருக்கிறது. திருக்குறளும் எழுதப்பட்டிருக்கிறது.

1. நான் நீ என்று சொல்லும் போது
உதடுகள் ஒட்டாது.

நாம் என்று சொன்னால்தான்
உதடுகள்கூட ஒட்டும்.

2. விவேகம் எனும் வெள்ளி முளைத்து,
சாதி மதப்பித்து எனும்
சனி தொலைந்தால்தான்
சமத்துவம் எனும் ஞாயிறு பிறக்கும்.

என்று நான் எழுதிய இந்த வாசகங்களும் இருக்கின்றன.

“நாம் என்று சொல்லப் பிடிக்காத,
நான் என்ற ஆணவத்தை மட்டும் விரும்புகிற,
சமத்துவத்தை வெறுக்கிற,

சாதி மதப்பித்து கொண்டலைகிற,
சில ஜென்மங்களுக்கு வேண்டுமானால்
இந்த வாசகம் பிடிக்காது!
ஆள வந்து அழிப்போம் என்கிறார்கள்.
முதலில் ஆள வரட்டும்! அழிப்பதைப்
பிறகு பார்க்கலாம்!

"தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்பது குறள்!

அன்புள்ள,

மு. க.

(6-11-2000)

2540. கைதிகள் எழுதிய கண்ணீர்க் கடிதம்!

உடன்பிறப்பே,

கன்னட நடிகர் டாக்டர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பிறகு, கோவையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அன்புக்கினிய நண்பர் திரு. மூப்பனார் அவர்கள், செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது செய்தியாளர்கள் அவரிடம் ராஜ்குமார் விடுதலையானதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

அதற்கு திரு. மூப்பனார் அவர்கள், இதில் நிறைய குறைபாடுகள் உள்ளன. பல வகையிலும் உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறிவிட்டது. தடா கைதிகளை விடுவிக்கக்கூடாது என்ற உச்சநீதி மன்றத் தீர்ப்பை நான் பாராட்டுகிறேன். நீதிமன்றம் சொல்லியிருக்காவிட்டால் கைதிகளை விட்டிருப்பார்கள் இல்லையா? என்று பதில் அளித்திருக்கிறார்.

இதுபற்றி நான் விவாத அரங்கில் நுழைய விரும்பவில்லை. ஒரு விளக்கத்தை மாத்திரம் அளிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கர்நாடக மாநிலச் சிறைச்சாலையிலே உள்ள தமிழர்களின் விடுதலை என்பது பல ஆண்டு வரலாறுகளைக் கொண்டது. வீரப்பன் சம்பந்தப்பட்ட வழக்குகள் என்று கூறி கர்நாடகத்தில் உள்ள ராமாபுர காவல்நிலைய எல்லைக்குள் 19-5-1992 அன்று 13 பேர்களும், 14-8-1992 அன்று அதே ராமாபுர காவல் நிலைய எல்லைக்குள் 58 பேர்களும், எம்.எம்.ஹில்ஸ் காவல் நிலைய எல்லைக்குள் 9-4-1993 அன்று 29 பேர்களும், அதே காவல் நிலைய எல்லைக்குள் 24-5-1993 அன்று 20 பேர்களும், 16-1-94 அன்று ஒருவருமாக மொத்தம் 121 பேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 70 பேர் நிபந்தனை ஜாமீனில் வெளியே உள்ளார்கள். இன்னமும் கர்நாடக சிறைக் கொட்டடியிலே உள்ள தடா கைதிகள் 51 பேர்.

1997ஆம் ஆண்டு வீரப்பன், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த வன இலாகா அதிகாரிகள் எட்டு பேரைக் கடத்தியபோது, அவர்களை மீட்க அப்போதும் தமிழக, கர்நாடக அரசுகள் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டன. அதற்காக நக்கீரன் கோபால் காட்டிற்கு இரண்டு முறை சென்று பேச்சுவார்த்தை நடத்தி 44 நாட்களுக்குப் பிறகு அவர்களை மீட்டு வந்தார்.

அந்தக் காலகட்டத்தில் வீரப்பன் வைத்த கோரிக்கைகளில் கர்நாடக சிறைச்சாலைகளில் அடைபட்டுள்ள 51 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்பதும் ஒன்றாகும். இதைப்பற்றி நான் சட்டப்பேரவையில் கடந்த வாரம் 13-11-2000 அன்று எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பேசும்போது விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே அவற்றை மீண்டும் கூறத் தேவையில்லை என்றே கருதுகிறேன். அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்பது குறித்து அன்றைய கர்நாடக முதல்வர் மாண்புமிகு திரு.ஜெ.எச். பட்டேல் அவர்களுக்கு, 9-10-1997, 21-11-1998, 11-1-1999, 23-2-1999, 28-3-1999, 5-5-1999, 28-5-1999 ஆகிய நாட்களில் கடிதங்கள் எழுதியது பற்றியும், சட்டப் பேரவையிலே கவனஈர்ப்புத் தீர்மானத்தில் விளக்கியிருக்கிறேன்.

இதற்கிடையே மைசூர் மத்திய சிறைச்சாலையிலிருந்து தடா விசாரணைக் கைதிகள் 51 பேர் கையெழுத்திட்டு, 31-3-1999 தேதியிட்டு எனக்கு எழுதிய நீண்ட கடிதத்தின் முக்கியப் பகுதிகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

> அன்புமிக்க தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, பணிவான வணக்கங்களுடன் தடா எனும் கொடிய சட்டத்தால் பாதிக்கப்பட்ட கர்நாடகா, தமிழ்நாடு எல்லைப்புரம் வாழ்ந்து வந்த அப்பாவித் தமிழர்கள் மைசூர் மத்திய சிறையில் இருந்து 12 பெண்கள் உட்பட 51 தடா விசாரணை அப்பாவி தமிழர்கள் ஒன்றுகூடி ஐயாவின் கவனத்திற்கு எழுதிக் கொள்வது.
>
> 1993ம் வருடம் சந்தன கடத்தல் வீரப்பனை பிடிப்பதாகச் சொல்லி கர்நாடகா, தமிழ்நாடு இரு மாநிலங்களும் சேர்ந்து கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரால் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டன. தமிழ்நாடு,

கர்நாடகா எல்லைப்புரத்தில் வாழும் தமிழர்கள் நிறைந்த பகுதியான சேலம் மாவட்டம் மேட்டூர் தாலுக்கா, கொளத்தூர் ஒன்றியம், ஈரோடு மாவட்டம் பவானி தாலுக்கா, அந்தியூர் ஒன்றியம், பர்கூர் கிராமம், கர்நாடகா சாமராஜ் நகர மாவட்டம், கொள்ளேகாலம் தாலுக்கா மாட்டல்லி ஜெல்லிபாளையம், பெத்தனபாளையம், அஞ்சிபாளையம், நல்லூர் செங்கபாடி கிராமம், மாதேஸ்வரன் மலை இப்பகுதிகளில் வாழ்ந்து வந்த விவசாய தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும், கர்நாடகா அதிரடிப்படை வீரப்பனைத் தேடுதல் என்ற வேட்டையின் பெயரால் காட்டுக்குள் வீரப்பனை தேடுவதை விட்டு தமிழர்கள் நிறைந்த பகுதியில் ஊருக்குள் புகுந்து வீரப்பனை தெரியுமாடா என்றும், வீரப்பனுக்கும் உங்களுக்கும் சம்மந்தம் இருக்கிறது என்றும், எங்கடா வீரப்பன் என்றும் கேட்டதுடன் நிற்காமல் மிகுந்த துயரங்களுக்கு ஆளாக்கித் தமிழர்களை துன்புறுத்தி உள்ளனர்.

எஸ்.டி.எப். போலீஸ்காரர்கள் எண்ணற்ற தமிழ்ப் பெண்களை, கொடூரமான முறையில், ஊர் பொதுமக்கள் அறிய கண்முன்னே இழுத்துச் செல்லப்பட்டு பல துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். கற்பழிக்கப் பட்டுள்ளனர்.

மேலும் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று ஊர் முக்கியஸ்தர்கள் கேட்டதின் பெயரால், ஊரில் உள்ள முக்கியமான ஆட்களை எல்லாம் மாதேஸ்வரன் மலைக்கு கொண்டு வந்து மறைவான ஒரு கட்டிடத்திற்குள் அடைக்கப்பட்டு, பிறந்த மேனியுடன் ஆண், பெண் இருவருக்கும் மார்பகத்திற்கும், உயிர் நாடிக்கும், பிறப்பின் உறுப்பிற்கும் கிளிப்புகளால் இணைக்கப்பட்டு கரண்ட் ஷாக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊர் பொதுமக்கள் அறிய, எண்ணற்ற தமிழ் அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றும் உள்ளனர். 12 பெண்கள் உட்பட 51 தடா கைதிகளும் ஒன்று சேர்ந்து 2-10-97 அன்று முதல் 5-10-97 வரை எங்கள் மீது

போடப்பட்ட வழக்கினை மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) விசாரணை வேண்டும் என்று சிறையில் உண்ணாவிரதம் இருந்தோம். கர்நாடகா அரசு எங்களைக் கண்டுகொள்ளவில்லை. 93இல் இருந்து 98ஆம் ஆண்டு வரை, நூறு தடவைக்கும் மேல் மைசூர் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ஜாமீன் வேண்டும் என்று முறையிட்டோம். கிடைக்கவில்லை.

நாங்கள் நிரபராதிகள் என்பதனால் சி.பி.ஐ. விசாரணை கேட்டு மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் கடிதம் எழுதினோம். ஆறு ஆண்டுகள் ஆகியும் எங்களுக்காக கர்நாடகா மாநில அரசோ, மத்திய அரசோ செவி சாய்க்கவில்லை. 12 பெண்கள் சிறையில் இருப்பவர்கள். இவர்களில் 9 பேரின் கணவர்கள், கர்நாடகா காவல் துறையினரின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாகி விட்டார்கள். உண்மை என்ன என்பதனை நாடறிய, டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அப்பாவித் தமிழர்களின் விடுதலைக்காக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென நாங்கள் அனைவரும் பாதம் பணிந்து வேண்டிக் கொள்கிறோம்.

உடன்பிறப்பே,

கர்நாடக மாநிலச் சிறையிலே உள்ள 51 பேரும் கையெழுத்திட்ட கடிதம் எனக்கு கிடைப்பதற்கு முன்பும், கிடைத்த பின்பும் பலமுறை கர்நாடக முதலமைச்சரோடு நான் தொடர்பு கொண்டு, இதற்காகக் கடிதங்கள் எழுதியும், பேசியும் வந்துள்ளேன். நான் கர்நாடக முதல்வருக்கு எழுதிய கடிதங்களையெல்லாம் நினைவூட்டி 5-5-1999 அன்று கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு பட்டேல் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். அந்தக் கடிதத்தின் விவரம்:-

> வீரப்பன் குறித்த வழக்குகள் தொடர்பான விசாரணையின் போது கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கர்நாடக மாநிலச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிப்பது தொடர்பாக, சென்னையிலே 19-8-97 அன்று நாம் நடத்திய கலந்துரையாடலையும் அதைத்

தொடர்ந்து 9-10-97, 21-11-98, 11-1-99, 23-2-99 மற்றும் 28-3-99 ஆகிய நாட்களில் நான் அனுப்பிய நேர்முக கடிதங்களையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக நிலுவையிலே இருப்பதால், தாங்கள் இது குறித்து பரிசீலித்து அப்பாவி மக்களை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, இதைத் தவிர கர்நாடகச் சிறைச்சாலையிலே உள்ள கைதிகளைப் பற்றி நான் வேறு விளக்கம் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது என்பதை நீயே தெளிவாகப் புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன். இன்றைய கர்நாடக அரசு, இந்தக் கைதிகள் பிரச்சினையில் கருணை காட்ட முன் வந்திருப்பதும், அதற்கெனச் சட்ட ரீதியான காரியங்களில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

அனபுள்ள,

மு. க.

(19-11-2000)

2541. மறு சிந்தனைக்கு வழி வகுத்துள்ள தேர்தல்!

உடன்பிறப்பே,

அமெரிக்க அதிபர் தேர்தல் அமர்க்களமாக நடந்து முடிந்து, தேர்தல் முடிவு தொங்கலிலே இருக்கும் இந்த வேளையில் எஞ்சியுள்ள நாடுகளைச் சுற்றிப் பார்க்க எஞ்சியுள்ள பதவிக் காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு கிளிண்டன் குடும்பத்துடன் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

அந்நாட்டு தேர்தல் முறைப்படி அதிபர் யார் என்ற அறிவிக்கப்பட்டாலுங்கூட புதிய அதிபர் பதவியேற்பதற்கு ஜனவரி 20ஆம் தேதி வரை காத்திருக்க வேண்டும். அந்த இடைவெளியிலே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அமெரிக்க மக்களோடு நெருங்கிப் பழகிக் கொள்வார்கள். மிகுந்த பரபரப்புக்கிடையே தேர்தல் நடைபெற்று அந்தக் களைப்பு தீர்ந்து அதிபர்கள் பொறுப்பேற்பதற்கு தயாராவது இந்த இடைக்காலத்திலேதான். ஆனால் இந்த முறை தேர்தல் நடைபெற்ற பிறகு ஒரு குளறுபடியான நிலை ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதைப் பற்றிய விபரங்களை அறியவே இக்கடிதம்.

அமெரிக்காவில் குடியரசுத் தலைவரும் துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படும் முறை சற்று சிக்கலான நடைமுறையாகும். அந்த முறை குறித்து அரசியல் விற்பன்னர்களிடையே கூட இரண்டு வித கருத்துக்கள் உண்டு.

அமெரிக்க தேர்தல் முறை 1787 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்திலே வகுக்கப்பட்ட ஒன்றாகும். 178ஆம் ஆண்டு அந்த நாட்டிற்கான அரசியல் சட்டத்தை உருவாக்கிய போது அந்தச் சட்டத்தை உருவாக்கக் காரணமாக இருந்தவர்கள் புதிதாக தேசிய அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் உருவாகும்

என்பதை எதிர்பார்க்கவில்லை. அதனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேர்தலில் பல கட்சிகள் சார்பில் பல வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஆனாலும், பெரிய கட்சிகளான ஜனநாயகக் கட்சிக்கும், குடியரசு கட்சிக்கும் இடையேதான் உண்மையான போட்டி இருக்கும்.

இந்த முறை குடியரசுக் கட்சியின் சார்பில் 1989ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ஜார்ஜ் ஹெர்பட் புஷ் அவர்களின் மகனும், தற்போது டெக்சாஸ் மாநிலக் கவர்னராக இருப்பவருமான ஜார்ஜ் டபிள்யூ புஷ் அவர்களுக்கும், ஜனநாயகக் கட்சியின் சார்பில் இதுவரை துணைக் குடியரசுத் தலைவராக இருந்த அல்கோர் அவர்களுக்கும் இடையே தான் போட்டி. இந்தப் போட்டியின் முடிவுதான் மதில் மேல் பூனையாக உள்ளது. ஆனால், முதலில் வெளியான தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், அவசரப்பட்டு புஷ் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த உலகத் தலைவர்கள் பலர் பின்னர், தங்கள் வாழ்த்துச் செய்தியைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். புகழ்பெற்ற நாளிதழ்கள் கூட அதிபர் ஆனார் புஷ் என்ற தலைப்புடன் வெளிவந்து விட்டன. ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ரொமானோ ப்ரோடி, ஜெர்மன் அதிபர் ஜோஹன்ஸ் ராவ், நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க் ஆகியோர் இவ்வாறு அவசரப்பட்டு வாழ்த்துச் செய்தி அனுப்பியோராகும். கொரியா டைம்ஸ், மெக்சிகோவில் புகழ்பெற்ற ரிஃபார்ம், தி ஸ்டார் போன்ற நாளிதழ்களும் அவசரப்பட்டு செய்தி வெளியிட்ட ஏடுகளாகும். அவ்வளவு ஏன், தேர்தலில் வெற்றி பெற்றதாக வெளிவந்த செய்தியை அடுத்து, அல்கோர் அவர்களே புஷ் அவர்களுக்கு முதலில் வாழ்த்து தெரிவித்து விட்டு, பின்னர் அந்த வாழ்த்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் என்றும் செய்தி வந்தது.

அமெரிக்கக் கூட்டாட்சி முறையில், மத்தியில் பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்று இரண்டு அமைப்புகள் உள்ளன. பிரதிநிதிகள் சபைக்கு மாநிலங்களின் மக்கள் தொகைக்கேற்றவாறு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். செனட் சபைக்கு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சரிசமமாக இரண்டு செனட்டர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 50 மாநிலங்களுக்கும் சேர்ந்து 100 உறுப்பினர்கள் செனட் சபையிலே இருப்பார்கள். இவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். மூன்றில் ஒரு பங்கு

உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டாண்டிற்கும் ஒரு முறையாக சுழல் முறையிலே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அமெரிக்க அரசின் பிரதிநிதிகள் சபையிலே மொத்தம் 435 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பிரதிநிதிகள் சபைக்கு தேர்தல் நடைபெறும். பிரதிநிதிகள் சபைக்கும், செனட் சபைக்கும் பொதுமக்கள் நேரடியாக வேட்பாளர்களின் தகுதியின் அடிப்படையிலே வாக்களிப்பார்கள். ஆனால் அதிபர் தேர்தலிலே இவர்களுக்குப் பங்கில்லை. தேர்தல் குழு என்று கூறப்படும் எலெக்ட்டோரல் காலேஜ் முறையிலே தான் அதிபர் மற்றும் துணை அதிபர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் தான் எனினும், நாட்டின் தலைநகரான வாஷிங்டன் உள்ளடங்கிய கொலம்பியா மாவட்டத்தையும் அதிபர் தேர்தலைப் பொறுத்தவரை மேலும் ஒரு மாநிலமாகவே கருதப்படுகின்றது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் இத்தனை பிரதிநிதிகள் (Electors) என்று எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். உதாரணமாக கலிபோர்னியா மாநிலத்திலிருந்து 54 பிரதிநிதிகளும், டெக்சால் மாநிலத்திலிருந்து 32 பிரதிநிதிகளும், நியூயார்க் மாநிலத்திலிருந்து 33 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஒருசில மாநிலங்களிலிருந்து 5 பேர் 6 பேர் என்ற அளவிலே கூட பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அலாஸ்கா மாநிலத்திலிருந்து மூன்றே மூன்று பிரதிநிதிகள்தான். இவ்வாறு 51 மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை 538 ஆகும்.

இந்த 538 என்பது எப்படி வருகிறதென்றால் பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்படும் 435, செனட்டர்கள் சபைக்கு தேர்ந்தெடுக்கப்படும் 100, நாட்டின் தலைநகரான வாஷிங்டன் உள்ளடக்கியுள்ள கொலம்பியா மாவட்டத்திற்கு 3 என்ற மூன்றையும் சேர்த்தால் 538 என்ற எண்ணிக்கை வரும். அந்த 538 எலெக்டர்களை ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு பேர் என பிரிக்கப்படுகிறது. இந்த 538 எலெக்டர்களுக்குத்தான் தற்போது நவம்பர் 7ந்தேதியன்று தேர்தல் நடைபெற்றது.

இந்த 538 பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பெரும்பான்மையான 270 பேருக்குக் குறைவில்லாத ஆதரவைப்

பெறுபவர்களே குடியரசுத் தலைவராக வர இயலும். மக்கள் வாக்களிக்கும்போது இந்தப் பிரதிநிதிகளைப் பொறுத்து அவர்களின் திறமையைப் பாராட்டி வாக்களிப்பதில்லை. தேர்தல் நடைபெறும் போது, இரண்டு முக்கிய கட்சிகளின் சார்பில், குடியரசுத் தலைவர் பதவிக்காக போட்டியிடுபவர்களின் தராதரத்தை மனதிலே கொண்டுதான் மக்கள், வாக்களிப்பார்கள். குறிப்பிட்ட மாநிலத்திலே வாக்களிக்கும் மக்கள் அந்த இரண்டு தலைவர்களிலே எந்தத் தலைவருக்கு பெரும்பான்மையான வாக்குகளை அளிக்கிறார்களோ, அந்தத் தலைவரின் கட்சியின் சார்பிலே அந்த மாநிலத்திற்காக பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இன்னும் புரியும்படி விளக்கமாக கூற வேண்டுமேயானால், கலிபோர்னியா மாநிலத்திலிருந்து 54 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த மாநிலத்தில் அல்கோர் சுமார் 52 இலட்சத்து 55 ஆயிரம் வாக்குகளும், புஷ் சுமார் 40 இலட்சத்து 55 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர். இவர்களின் இருகட்சிகளின் சார்பிலும் முறையே 54 பிரதிநிதிகளின் பெயர்கள் பட்டியலிட்டு முன்பே தரப்பட்டுவிடும். இந்த மாநிலத்திலே அதிக வாக்குகளைப் பெற்ற அல்கோர் அவர்களின் கட்சி சார்பில் பட்டியலிட்டு தரப்பட்ட 54 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட எலெக்டர்களாக அறிவிக்கப்படுவார்கள். இந்த மாநிலத்தில் புஷ் அவர்களுக்கு ஒரு பிரதிநிதி கூட கிடையாது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு - எலெக்டர்களுக்கு குடியரசுத் தலைவர் தேர்தலில் தாங்கள் எந்தக் கட்சியின் சார்பில் எலெக்டர்களாக அறிவிக்கப்பட்டார்களோ அந்தக் கட்சி சார்பிலே போட்டியிடுபவருக்கு வாக்களிப்பது ஒன்று தான் பணியாகும். அதைத் தவிர அவர்களுக்கு வேறெந்த பொறுப்பும் கிடையாது.

தேர்தல் குழு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் வாக்களிப்பு முறையே கூட, மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இந்த ஆண்டு நவம்பர் 7ந்தேதி நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் வருவதில் எவ்வளவு குழப்பம் ஏற்பட்டாலும் முடிவாக, தேர்தல் குழு வாக்காளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் டிசம்பர் 18ந்தேதியன்று குடியரசுத் தலைவராக யார் வரவேண்டுமென்று வாக்களிப்பார்கள். இந்த வாக்காளர்கள் ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும், தங்கள் வாக்கினை முத்திரையிட்ட கவரிலே போட்டு செனட் சபையின் தலைவருக்கு அனுப்புவார்கள்.

சென‌ட் சபையின் தலைவர் தான் பிரதிநிதிகள் சபையும், சென‌ட் சபையும் இணைந்து நடைபெறும் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான முடிவினை அறிவிப்பார். அமெரிக்காவில் சென‌ட் சபையின் தலைவர் துணைக் குடியரசுத் தலைவராகும். இந்தியாவில் கூட மாநிலங்கள் அவைக்குத் தலைவர் துணைக் குடியரசுத் தலைவர் என்பதும் அறிந்த ஒன்றே! அமெரிக்காவில் தற்போது துணைக் குடியரசுத் தலைவராக இருக்கும் அல்கோர்தான் ஜனவரி 6ந்தேதியன்று, குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார் என்பதை அறிவிப்பார். இந்தத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றாலும், தோற்றாலும் அந்த முடிவினை அறிவிக்கப் போகின்றவர் அவர் தான்.

உடன்பிறப்பே,

நவம்பர் 7ந்தேதி தேர்தல் நடைபெற்று வாக்குகள் எண்ணப்பட்ட போது, 51 மாநிலங்களில் குடியரசு கட்சியின் வேட்பாளர் புஷ் 29 மாநிலங்களிலும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் 19 மாநிலங்களிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று - புஷ் அந்த 29 மாநிலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மொத்த பிரதிநிதிகளான 246 தேர்தல் குழு வாக்குகளையும், அல்கோர் 19 மாநிலங்களிலே மட்டும் பெரும்பான்மை பெற்றிருந்தாலும் அந்த 19 மாநிலங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட மொத்தப் பிரதிநிதிகளான 255 தேர்தல் குழு வாக்குகளையும் பெற்றிருந்தனர். அல்கோர் 19 மாநிலங்களிலும், புஷ் 29 மாநிலங்களிலும் என்று பெரும்பான்மை பெற்ற போதிலும் தேர்தல் குழு வாக்குகளைப் பொறுத்த வரையில், புஷ் அவர்கள் அல்கோரை விட 9 வாக்குகள் குறைவாகப் பெற்றுள்ளார். இந்த நிலையில் ப்ளோரிடா, ஒரிகான், நியூமெக்சிகோ ஆகிய மூன்று மாநிலங்களிலே மீண்டும் வாக்கு எண்ணப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

இந்த மூன்று மாநிலங்களிலிருந்து 37 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதில் ப்ளோரிடா மாநிலத்திலிருந்து 25 பேரும், ஒரிகான் மாநிலத்திலிருந்து 7 பேரும், நியூமெக்சிகோ மாநிலத்திலிருந்து 5 பேரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மறு எண்ணிக்கை நடைபெற்றபோது ஒரிகான் மாநிலத்தில் பெரும்பான்மை அல்கோருக்கு கிடைத்த காரணத்தால், அந்த மாநிலத்திற்கான தேர்தல் குழு பிரதிநிதிகள்

7 பேரும் அல்கோருக்கு கிடைத்துள்ளனர். அதைப் போலவே நியூமெக்சிகோ மாநிலத்திலும் அல்கோர் குடியரசு கட்சியின் வேட்பாளர் புஷ் அவர்களை விட 481 வாக்குகள் அதிகமாகப் பெற்றதால் அந்த மாநிலத்திற்கான 5 தேர்தல் குழு வாக்குகளும் அல்கோருக்கே கிடைத்துள்ளன. ப்ளோரிடா என்ற ஒரேயொரு மாநிலம் தவிர, மற்ற 50 மாநிலங்களிலே முடிவு தெரிந்த வரையில் இப்போது அல்கோருக்கு 267 வாக்குகளும் புஷ்க்கு 246 வாக்குகளும் கிடைத்துள்ளன. அதாவது அல்கோர் அவர்கள் புஷ் அவர்களை விட 21 வாக்குகள் அதிகம் பெற்ற நிலையிலே உள்ளார். ப்ளோரிடா மாநிலத்தின் தேர்தல் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 25. தற்போதுள்ள நிலைமையில் புஷ் அவர்கள் சுமார் 900 வாக்குகள் அதிகம் பெற்று இருப்பதாகவும், அந்த முடிவினை அறிவிக்க ப்ளோரிடா மாநில நீதிமன்றம் தடையாணை பிறப்பித்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

இந்த நிலையில் புஷ் இந்த 900 வாக்குகள் வித்தியாசத்தில் ப்ளோரிடா மாநிலத்திலே பெரும்பான்மை பெற்று விடுவாரேயானால், அந்த மாநிலத்திற்கான தேர்தல் குழு வாக்குகளான 25 வாக்குகளும் அவருக்குச் சேர்ந்து அவரது மொத்த தேர்தல் குழு வாக்குகள் 271 என்றும், அல்கோரின் மொத்த தேர்தல் குழு வாக்குகள் 267 என்றுமாக அமைந்து 4 வாக்குகள் வித்தியாசத்தில் புஷ் அமெரிக்காவின் குடியரசு தலைவராக நான்காண்டு காலம் பொறுப்பேற்கக் கூடிய வாய்ப்பினைப் பெற்று விடுவார். அதே நான்கு வாக்குகள் வித்தியாசத்தில் அல்கோர் இந்த மகத்தான வாய்ப்பினை இழந்து விடுவார்.

அமெரிக்க நாட்டின் அதிபராக வரக்கூடிய வாய்ப்புக்கு 4 வாக்குகள் தான் வித்தியாசம் என்ற நிலையிலே தேர்தல் குழு வாக்காளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இரண்டு பேரோ மூன்று பேரோ வாக்களிக்காமலோ அல்லது வாக்கினை மாற்றிப் போட்டு விட்டாலோ என்ன நிலை? இதுபோன்ற நிலை இந்தியாவிலே வந்தால் குதிரை வியாபாரம் எந்த அளவிற்கு நடைபெறும்? எவ்வளவு கோடி ரூபாய் அங்கும் இங்கும் மாறும்?

ஆனால் அமெரிக்காவிலே இதுவரை நடைபெற்ற எல்லா தேர்தல்களிலும், மொத்தம் 18 ஆயிரம் தேர்தல் குழு வாக்காளர்களில் 9 பேர் மட்டும் அவ்வாறு தடம் புரண்டிருக்கிறார்கள் என்று சரித்திரக் குறிப்பு கூறுகிறது. அப்படி முறை தவறி கட்சி மாறி வாக்களிக்க

மாட்டோம் என்று தேர்தல் குழு பிரதிநிதிகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டு விட்டு பின்னர் அதற்கு மாறாக வேறு கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பார்களேயானால், அவர்களுக்கு என்ன தண்டனை என்று பார்த்தால் மொத்தம் 51 மாநிலங்களில் ஐந்து மாநிலங்களில் மட்டும் இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கேயும்கூட இந்தக் குற்றத்திற்கான தண்டனை மிகக் குறைவாகும். எடுத்துக்காட்டாக ஓக்ல ஹோமா என்ற மாநிலத்தில் வெறும் ஆயிரம் டாலர்கள் அபராதம் தான் இதற்கான தண்டனை. தண்டனை இவ்வளவு குறைவாக இருந்தபோதிலும், இத்தகைய தவறைச் செய்ய அமெரிக்காவிலே பெரும்பாலானோர் முன் வருவதில்லை என்பது பாராட்டத்தக்க ஒரு அம்சமல்லவா!

தேர்தலில் மறு வாக்கு எண்ணிக்கை, எண்ணப்படுவதற்கு முன்பாக பொது மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் என்று பார்த்தால், அல்கோர் 4,92,52,780 வாக்குகளையும், புஷ் 4,90,36,353 வாக்குகளையும் பெற்றிருந்தார்கள். பொதுமக்களின் 2,16,427 வாக்குகள் குறைந்த நிலையிலும் புஷ் குடியரசுத் தலைவராக வரக்கூடிய வாய்ப்பு அரும்பியுள்ளது.

இதைப் போலவே, முன்பொரு முறை 1988ஆம் ஆண்டு, அமெரிக்காவிலே நடைபெற்ற அதிபர் தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளர் பெஞ்சமின் ஹாரிசன் என்பவர் 54,44,337 வாக்குகளையும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் குரோவர் கிளீவ்லந்த் 55,40,050 வாக்குகளையும் பெற்றார்கள். ஜனநாயகக் கட்சி வேட்பாளர் 95,715 பொதுமக்கள் வாக்குகளை குடியரசுக் கட்சியின் வேட்பாளரை விட அதிகமாகப் பெற்றார். ஆனால் குடியரசுத் தலைவராக வரமுடியவில்லை. காரணம் அமெரிக்க தேர்தல் முறை காரணமாக ஜனநாயக கட்சியின் வேட்பாளர் 188 தேர்தல் குழு உறுப்பினர்களின் வாக்குகளையும், குடியரசு கட்சியின் வேட்பாளர் 233 தேர்தல் குழு உறுப்பினர்களின் வாக்குகளையும் பெற்றிருந்ததால் அந்நாட்டின் அதிபராக குடியரசு கட்சியின் வேட்பாளர் வர முடிந்தது.

அமெரிக்க நாட்டின் தேர்தல் முறையிலே 1804ஆம் ஆண்டு ஒரு முக்கியமான அரசியல் சட்டத் திருத்தம் 12-வது திருத்தமாகக் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்பு குடியரசுத் தலைவர் தேர்தலில் அதிக வாக்குகள் பெறுபவர் குடியரசுத் தலைவராகவும்

அதற்கடுத்து வாக்குகளைப் பெறுபவர் துணைக் குடியரசுத் தலைவராகவும் வருகின்ற நிலை இருந்தது. அதன் காரணமாக 1796ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 71 வாக்குகளைப் பெற்ற ஜான் ஆடம்ஸ் குடியரசுத் தலைவராகவும், 68 வாக்குகளைப் பெற்று வெற்றி வாய்ப்பை இழந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த தாமஸ் ஜெபர்சன் துணை குடியரசுத் தலைவராகவும் ஆகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இருவரும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்த நிலையிலே நிர்வாகத்தை நடத்துவதில் சிரமம் ஏற்பட்ட காரணத்தினால் 1804ஆம் ஆண்டு 12-வது அரசியல் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு தற்போது குடியரசுத் தலைவரும் துணைக் குடியரசுத் தலைவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவராக வரக்கூடிய வகையிலே திருத்தம் செய்யப்பட்டது.

இப்போது நடைபெற்ற தேர்தலிலே கூட புஷ், அல்கோர் தவிர நாடர் என்பவர் பசுமைக்கட்சி என்ற ஒரு கட்சி சார்பிலே போட்டியிட்டார். அவருக்கு 27,02,648 பேர் குடியரசுத் தலைவராக வர வாக்களித்துள்ளார்கள். ஆனால், அவருக்குத் தேர்தல் குழு வாக்குகள் ஒன்று கூடக் கிடைக்கவில்லை. காரணம் அவர் எந்தவொரு மாநிலத்திலும் பெரும்பான்மை பெறாத காரணத்தினால், அவருக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. மேலும் இந்தத் தேர்தல் முறை காரணமாக ஒரு வேட்பாளர் அதிகம் தேர்தல் குழு உறுப்பினர்களைக் கொண்ட 11 மாநிலங்களிலே மட்டும் பெரும்பான்மை பெற்று 40 மாநிலங்களிலே பெரும்பான்மை கிடைக்காத நிலை இருந்தால் கூட அவருக்கு குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கற்றறிந்தவர் நிறைந்த, ஜனநாயகத்தைப் பெரிதும் போற்றும் இந்த நாட்டிலே கூட, 50 சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே வாக்களித்ததாகக் கூறப்படுவதும், பாம்பீச் கவுண்டி என்ற மாவட்டத்திலே 19 ஆயிரம் செல்லாத வாக்குகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்று செய்தி வருவதும் அமெரிக்காவின் தேர்தல் முறையை மாற்ற வேண்டுமென்ற கருத்தினை விரைவுபடுத்துகிறது.

தேர்தல் குழு மொத்த வாக்குகளான 538, இரு வேட்பாளருக்கும் சரி சமமாகக் கிடைத்து, ஒவ்வொருவரும் 269 வாக்குகளைப் பெற்றுவிட்டால் என்ன நிலை என்ற ஒரு சந்தேகம்

ஏற்படலாம். அப்போது பிரதிநிதிகள் சபை தான் முடிவெடுக்க வேண்டும். ஆனால் அப்போது பிரதிநிதிகள் சபையிலே ஒரு மாநிலத்தின் சார்பிலே எத்தனை உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்த போதிலும், அந்த மாநிலத்திற்கு ஒட்டுமொத்தமாக ஒரு வாக்குதான் உண்டு. 54 தேர்தல் குழு வாக்குகளைக் கொண்ட கலிபோர்னிய மாநிலத்திற்கும் ஒரு வாக்குதான். 3 தேர்தல் குழு வாக்குகளை கொண்ட அலாஸ்கா மாநிலத்திற்கும் ஒரு வாக்குதான். இதன் காரணமாக எத்தனை மாநிலங்களிலே ஒரு கட்சி கூடுதல் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கின்றதோ அந்தக் கட்சியின் வேட்பாளர்தான் குடியரசுத் தலைவராக வர இயலும். 1800ஆம் ஆண்டு மற்றும் 1824ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலின்போது இது போன்றதொரு நிலை ஏற்பட்டு பிரதிநிதிகள் சபையிலே தான் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியா போன்ற நாடுகளில் தேர்தல் நடைபெற்று முடியும் வரை தேர்தல் ஆணையத்தின் முடிவே இறுதியானது. அதற்கிடையே யாரும் நீதி மன்றத்திற்குச் செல்ல முடியாது. ஆனால் அமெரிக்காவில், தேர்தல் முடிவதற்கு முன்பாகவே நீதிமன்றத்திற்குச் செல்லக் கூடிய வாய்ப்பு உண்டு. அதன் காரணமாகத்தான் தற்போது கூட ப்ளோரிடா மாநிலத்திலே முடிவுகளை அறிவிக்கக் கூடாது என்று நீதிமன்றத்திலே உத்தரவு பெற்றுள்ளார்கள்.

அமெரிக்கத் தேர்தல் முறையை மாற்ற வேண்டுமென்று கூறுபவர்கள் முக்கியமாக பொதுமக்களுடைய அதிக வாக்குகளை வாங்கக் கூடியவர் குடியரசுத் தலைவராக வர முடியாத நிலை ஏற்படுவதைத்தான் காரணமாகக் கூறுகிறார்கள். 1824ஆம் ஆண்டு ஜான் குவின்சி ஆடம்ஸ் என்பவரும், 1876ஆம் ஆண்டு ருதர்போர்டு ஹெய்ஸ் என்பவரும், 1888ஆம் ஆண்டு பெஞ்சமின் ஹாரிசன் என்பவரும் குடியரசுத் தலைவர் தேர்தலில் பொதுமக்களின் வாக்குகளைக் குறைவாகப் பெற்ற போதிலும் தேர்தல் குழு வாக்குகளை (Electoral College) அதிகமாகப் பெற்று குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார்கள்.

இந்தத் தேர்தல் முறையிலே அடுத்து கூறப்படும் குற்றச்சாட்டு, ஒரு மாநிலத்தின் சார்பாக தேர்தல் குழு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும்போது பொது மக்கள் வாக்குகளை

இலட்சக்கணக்கிலே பெற்று ஒட்டு மொத்தமாக ஒரு சில வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப் போகும் நிலையில் தோற்றுப் போன கட்சி வேட்பாளருக்கு அந்த மாநிலத்தில் தேர்தல் குழு பிரதிநிதிகளாக ஒருவருக்குக் கூட வாய்ப்பில்லாமல் போகும் நிலை உள்ளது. உதாரணமாக, எல்லா மாநிலங்களிலும் ஒரு குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் விரல் விட்டு எண்ணத்தக்க வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போவதாக வைத்துக் கொள்வோம். அவருக்கு எந்த மாநிலத்திலும் தேர்தல் குழு பிரதிநிதிகள் வாக்குகள் ஒன்று கூட கிடைக்காத நிலை ஏற்படும்.

அடுத்து 54 தேர்தல் குழு உறுப்பினர்களைக் கொண்ட கலிபோர்னியா போன்ற மாநிலத்திற்கும் 2 செனட் உறுப்பினர்கள், 3 தேர்தல் குழு உறுப்பினர்களைக் கொண்ட அலாஸ்கா போன்ற மாநிலத்திற்கும் 2 செனட் உறுப்பினர்கள் என்ற நிலை உள்ளது என்று ஒரு குற்றச்சாட்டையும் கூறுகிறார்கள். அதே நேரத்தில் பெரிய, சிறிய மாநிலம் என்ற வித்தியாசம் இன்றி, இந்த முறையில் தேர்ந்தெடுப்பது கூட்டாட்சி முறையை வலுப்படுத்தும் என்ற கருத்தும் கூறப்படுகிறது.

தற்போதுள்ள தேர்தல் முறையால் இரண்டு கட்சி ஜனநாயகம் வலுப்பெறும் என்றும் இந்த முறையை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். தற்போது நடைபெற்ற தேர்தலில் செனட் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி ஹிலாரி கிளிண்டன் அமெரிக்க அதிபரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்றும், நாடாளுமன்றத்தில் இது தொடர்பான சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டால் ஆதரவளிக்கத் தயார் என்றும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் பேசும்போது கூறியுள்ளார்.

பொதுவாக இத்தகைய மறு சிந்தனைக்கு இந்தத் தேர்தல் வழி வகுத்துள்ளது என்பது தான் இன்றுள்ள நிலை.

அன்புள்ள,

மு. க.

(21-11-2000)

2542. கல்வி நீரோடையில் சாதனை மலர்கள்!

உடன்பிறப்பே,

உன் அயராத உழைப்பினாலும் - ஆர்வமிகு தியாகத் தொண்டினாலும் - தமிழ்ப் பெருங்குடி மக்கள் தடைபடாது தந்து வரும் ஆதரவினாலும் - அமைந்திட்ட கழக அரசும், இந்த அரசை நிறுவிய திராவிட முன்னேற்றக் கழகமும் சந்தித்திடும் சகலவித மான சாதக பாதகங்கள் குறித்தும், அவ்வப்போது உன் போன்ற உடன்பிறப்புகளுடன் என் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளவே நான் எழுதும் இந்தக் கடிதங்கள் பயன்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில் எனக்கோர் எண்ணம், இந்த அரசு, தனது நிர்வாகத்திற்குட்பட்ட அனைத்துத் துறைகளிலும் புரிந்துள்ள சாதனைகள் - புரிந்து வரும் சாதனைகள் பற்றி உன் வாயிலாகவும் பல விபரங்களை என்னருந்தமிழ் மக்களுக்கு அளிக்கலாம் என்று!

நாடு விடுதலை பெற்ற நாளை கணக்குத் தீர்த்த நாள் என்றும், அந்த விடுதலை நாளை ஆண்டு தோறும் விழா எடுத்துக் கொண்டாடும்போது அந் நாளை, கணக்குப் பார்க்கும் நாள் என்றும் நமது கண்மணித் தலைவர் அண்ணா அவர்கள் எடுத்தியம்பியதை நெஞ்சில் நிறுத்தி, இந்த முறை ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது முதல் இதுவரை கண்டுள்ள சாதனைகளைக் கணக்கிட்டுப் பார்ப்பது தேவையெனக் கருதி, இந்தச் சாதனைக் கடிதங்களையும் தேவைப்படும் போதெல்லாம் உனக்கு எழுதிட முன் வந்துள்ளேன்.

இந்த நான்கரை ஆண்டுகளில் துறைவாரியாக என்னென்ன பணிகள் - எத்தகைய சாதனைகள் - எத்தனை திட்டங்கள் என்பன பற்றி நமக்கு வாக்களித்தோர்க்கும், வாக்களிக்காதோர்க்கும் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு உண்டல்லவா? அதனைத்தான் இக்கடிதங்கள் வாயிலாக நிறைவேற்ற முற்படுகிறேன்.

அந்த வரிசையிலே கல்வித்துறை மூலமாக இந்த நான்கரை ஆண்டு காலத்தில் கழக அரசு ஆற்றிய பணிகளின் பட்டியல் வருமாறு :-

1995-96ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கல்வித் துறைக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 2,233 கோடி ரூபாய். 2000-2001ஆம் ஆண்டிற்கு கல்வித்துறைக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 4,949 கோடி ரூபாய். அதாவது 2,716 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு கல்வித் துறைக்காகச் செய்யப்பட்டுள்ளது. 95-96இல் ஒதுக்கப்பட்ட நிதியைப் போல மேலும் கூடுதலாக ஒரு மடங்கு நிதி இந்தத் துறையின் முக்கியத்துவத்தைக் கருதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் புதிதாக உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 531. தற்போதைய கழக ஆட்சியில் நான்கரை ஆண்டுக் காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 965.

கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 196 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 512 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. முந்தைய ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 134 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 380 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சியிலே 80 உயர்நிலைப் பள்ளிகள்தான் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்க, இந்த ஆட்சியிலே 303 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சியிலே ஐந்தாண்டுக் காலத்தில் 8,450 இடைநிலை ஆசிரியர்கள் பணிகள் மட்டுமே வழங்கப்பட்டதற்குமாறாக, இந்த ஆட்சியிலே 41,887

இடைநிலை ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு முன்னுரிமைப்படி நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அதைப் போலவே கடந்த கால ஆட்சியில் வெறும் 843 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே புதிதாக நியமிக்கப்பட்டதற்கு மாறாக, இந்த ஆட்சியிலே 2,916 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிலே அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

கடந்த கால ஆட்சியிலே 838 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதற்கு மாறாக, இந்த ஆட்சியில் 4,046 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த ஆட்சியிலே சிறப்பாசிரியர் பணிகளிலே ஒருவர்கூட நியமனம் செய்யப்பட வில்லை. மாறாக, இந்த நான்கரை ஆண்டுகளில் 2,270 பட்டதாரி சிறப்பு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களிலே 238 ஆசிரியர்கள் இந்த ஆட்சியிலே அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பத்தாம் வகுப்புத் தேர்விலும், 12ஆம் வகுப்புத் தேர்விலும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களது உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வதென்று முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே 1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களில் இருந்து ஒவ்வொரு வகைத் தொழில் கல்விப் பிரிவுகளிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவை 1996-97 முதல் அரசே ஏற்றுக் கொள்கிறது.

கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற் கல்விப் பிரிவுகளிலும் 15 விழுக்காடு இடஒதுக்கீடு திட்டம் 1997-98ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதன் மூலம் 97-98இல் 864 மாணவர்களும், 98-99இல் 1190 மாணவர்களும், 99-2000இல் 1544 மாணவர்களும் பயன் பெற்றுள்ளனர்.

1999-2000ஆம் ஆண்டு முதல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்புகளில் 112 கோடி ரூபாய் செலவிலும், 2000-2001ஆம் ஆண்டு முதல் எஞ்சிய 516 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 75.66 கோடி ரூபாய் செலவிலும், 16 சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 192 இலட்சம் ரூபாய் செலவிலும், 12 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 279 இலட்சம் ரூபாய் செலவிலும், 5 அரசு சட்டக் கல்லூரிகளில் 155 இலட்சம் ரூபாய் செலவிலும், 60 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் 28.22 கோடி ரூபாய் செலவிலும் கணினிப் பாடம் கற்பிக்கப்படுகிறது.

தீவிர தொடக்கக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதன் விளைவாக, 1999-2000ஆம் ஆண்டில் 6 முதல் 14 வயது வரையுள்ள 27,000 குழந்தைகள் முந்தைய ஆண்டுச் சேர்க்கையை விட கூடுதலாகப் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டுள்ளனர்.

1998-99ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்பட்ட வகையில் பயன்பெற்ற மாணவர்கள் 59.13 இலட்சம். இதற்காக அரசு வழங்கிய தொகை 25.31 கோடி ரூபாயாகும்.

857 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 40.49 கோடி ரூபாய் செலவில் வகுப்பறை வசதிகளும், 400 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 3 கோடி ரூபாய் செலவில் கழிப்பறை வசதிகளும், 662 பள்ளி களுக்கு 39.09 கோடி ரூபாய் செலவில் அறிவியல் ஆய்வகக் கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

1544 பள்ளிகளுக்கு 6.98 கோடி ரூபாய்ச் செலவில் அறிவியல் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

400 பள்ளிகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர் உடல் நலன்காக்க 1999-2000இல் வாழ்வொளித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும்போதே மாணவர்களுக்கு சாதிச்சான்றிதழ், வாழ்விடச் சான்றிதழ், குடும்ப வருமானச் சான்றிதழ் ஆகியன வழங்கும் திட்டம் 1999-2000ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு அதன் மூலம் 14 இலட்சத்து 11,173 மாணவ, மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

பள்ளிகளில் நியமனம் செய்திட, இடை நிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆதி திராவிட வகுப்பினர் இல்லாத காரணத்தினால், 1997-98ஆம் ஆண்டு முதல் 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் ஒவ்வொன்றிலும் 50 மாணவர்கள் வீதம் ஆண்டு தோறும் 850 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளித்திடும் தனிப் பிரிவுகள் கூடுதலாகச் செயல்படுகின்றன.

அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் பயின்று, கடந்த ஆட்சியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 1998-99ஆம் ஆண்டு முதல் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு, 2000-2001 இல் 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. ஐந்தாண்டுகள் வரை வயது வரம்பும் தளர்த்தப்பட்டுள்ளது.

1997இல் உயர் கல்வித் துறை என்று தனியே ஒரு துறை தலைமைச் செயலகத்தில் உருவாக்கப்பட்டது.

கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 31 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதற்கு மாறாக, இந்த நான்கரை ஆண்டுகளில் 81 சுய நிதி பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஐந்தாண்டு ஆட்சியில் 32 சுயநிதி பாலிடெக்னிக் நிறுவனங்கள் தொடங்கப்பட்டதற்கு மாறாக, இந்த நான்கரை ஆண்டுகளில் 72 சுயநிதி பாலிடெக்னிக் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் 1997-98 முதல் ஒற்றைச் சாளர முறை அறிமுகம் செய்யப்பட்டது.

1998-99 முதல் பாலிடெக்னிக் நிறுவனங்களிலும் இந்த ஒற்றைச் சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் 65 புதிய சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப் பட்டதற்கு மாறாக, இந்த நான்கரை ஆண்டுகளில் 125 புதிய சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளுக்கும், இரண்டு அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

42 தனியார் கல்லூரிகளில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., ஆகிய பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. 60 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் கணினி அறிவியல் பாடம் தொடங்கப்படுகிறது.

இளம் கலை/இளம் அறிவியல் பட்டப்படிப்பில் தமிழ்வழி பயின்ற 76,526 மாணவ மாணவியர்க்கு 400 ரூபாய் வீதம் சுமார் மூன்று கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசு பாட முறையை பின்பற்றும் பள்ளிகளில், தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்றும், தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்றும் கழக அரசின் சார்பில் 19-11-1999 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் இந்த ஆணையை எதிர்த்து நீதிமன்றத்திலே தடையாணை பெறப்பட்டதால் அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

1997-98இல் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் தொடங்கப்பட்டுள்ளது.

1-1-96 முதல் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி. ஊதிய விகிதம் தரப்படுகிறது. 1996 இல் நெல்லையில் சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. இந்தக் கல்லூரிக்கு புதிய கட்டிடம் 3.10.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.

திருச்சியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவ நாதம் பெயரில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, அதற்கான கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டு, இந்த ஆண்டு ஜூன் திங்களில் திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி 1-10-2000 அன்று திறக்கப்பட்டது.

சேலத்தில் 17-9-1997 அன்று பெரியார் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.

20-9-1997இல் சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரிலே சட்டப் பல்கலைக் கழகம் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களைக் கொண்டு திறந்து வைக்கப்பட்டது.

15 பல்கலைக் கழகங்களில் பழங்கால மன்னர்கள், தலைவர்கள், புலவர்கள் பெயரில் 25 இலட்சம் ரூபாய் வீதம் ஏழு கோடி ரூபாய் செலவில் 28 அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டுள்ளன.

உயர்கல்வியில் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்குவது குறித்து முதல்வர் தலைமையில் உயர்மட்டக் குழு துணைத் தலைவராக கல்வி அமைச்சர் பேராசிரியர் மற்றும் செயல் தலைவராக முனைவர் வா.செ. குழந்தைசாமி நியமிக்கப்பட்டுள்ளனர்.

1999இல் உருது அகாடமி தொடங்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக பதினைந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மலர்க்கூட்டமென மொய்த்துள்ள கல்வித்துறை சாதனைகளை மட்டுமே தாங்கி வருகிறது இந்தக் கடிதம்! மற்றும் மலைமலையாய்க் குவிந்துள்ள சாதனைச் சரித்திரத்தை இனிவரும் கடிதங்கள் பறை சாற்றும்!

அன்புள்ள,

மு. க.

(25-11-2000)

2543. நினைத்து மகிழ்கிறேன்; நீ படித்து மகிழலாம்!

உடன்பிறப்பே,

கல்வி நீரோடையில் பூத்துக் குலுங்கும் சாதனை மலர்களின் மணம் நுகர்ந்திட, நேற்றைய கடித வாயிலாக உன்னை அழைத்தேன். கழக அரசின் சாதனைப் பட்டியலில் வேளாண் துறையின் வளர்ச்சியும், விவசாயப் பெருங்குடி மக்களின் மீது அக்கறையுடன் பொழிந்திடும் அன்பின் அரிய விளைவுகளும் இன்றைய என் கடிதத்தை அணி செய்கின்றன.

அய்யன் வள்ளுவரின் கருத்துப்படி, அனைத்துலகையும் தாங்கி நிற்கும் அச்சாணியாக அமைந்தோர் உழவர் குடி மக்கள் என்பதை உணர்ந்து, அவர்கள் எல்லா வகையிலும் ஏற்றமுற எத்தனை திட்டங்கள் - எத்தனை சாதனைகள் இந்த அரசின் முயற்சியால் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன என்பதை நீ அறிந்திடவும், அறிந்ததை அனைவருக்கும் எடுத்தியம்பிடவும் இக்கடிதம் பயன்படுமென நம்புகிறேன்.

முதலில் உணவுப் பொருட்கள் உற்பத்தியில், கடந்த நான்கரை ஆண்டுகளில் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளோம் என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் தெளிவாக்கிடும்.

1995-96 - 64.05 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1996-97 - 69.30 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1997-98 - 81.04 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1998-99 - 94.12 இலட்சம் மெட்ரிக் டன்கள்

அரிசி உற்பத்தியில் சாதனை

1995-96 - 52.90 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1996-97 - 58.05 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1997-98 - 68.94 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1998-99 - 81.41 இலட்சம் மெட்ரிக் டன்கள்

தமிழகத்தின் முப்பெரும் சாதனை

15-5-2000 தேதிய 'பிசினஸ் லைன்' என்ற ஆங்கில இதழில் பஞ்சாப் மாநிலம் கோதுமை உற்பத்தித் திறனில் தொடர்ந்து முன்னணியில் இருந்தாலும், அரிசி உற்பத்தித் திறனில் பஞ்சாப் மாநிலம் இதுவரை தக்க வைத்துக் கொண்டிருந்த தனிச் சிறப்பான நிலையை மாற்றி, தமிழ்நாடு முதல் இடத்திற்கு வந்துவிட்டது. இதனை அசோசியேட்டட் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் நடத்தியுள்ள ஆய்வு வெளிப்படுத்துகிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா மாநிலம் இதுவரை முதலாவது இடத்தில் இருந்து வந்துள்ளது. ஆனால் அந்த முதல் நிலை தற்போது, அரியானாவிடமிருந்து நழுவிவிட்டது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா, ஒரிசா ஆகிய இரண்டு மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு தமிழ்நாடு முதல் இடத்திற்கு வந்து விட்டது. 1998-99ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு என்று மூன்று தனிச் சிறப்புகள் சேர்ந்துள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாடு அரிசி உற்பத்தித் திறனில் முதல் இடம், கரும்பு உற்பத்தித் திறனில் முதல் இடம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் முதல் இடம் பெற்றுள்ளது என்று எழுதப்பட்டுள்ளது.

* இந்திய மாநிலங்களில் அரிசி உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 3,579 கிலோ எனச் சாதனை புரிந்து முதல் இடத்தில் உள்ளது.

* உலகத்திலேயே கரும்பு உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 134.16 மெட்ரிக் டன் எனச் சாதனை செய்து முதல் இடத்தில் இருக்கிறோம்.

* இந்திய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 1,650 கிலோ எனச் சாதனை புரிந்து அதிலும் முதல் இடத்தில் இருக்கிறோம். (Based on Season & Crop Report 1998-99 of Director of Statistics)

* ஒரிசா புயல், மேற்கு வங்கப் புயல், ஆந்திர மாநில வறட்சி நிலை போன்ற காரணங்களால், அகில இந்திய அளவில் உணவு

உற்பத்தி குறைந்தாலும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கூடுதல் உணவு உற்பத்தியால் இந்திய நாட்டு உணவு நிலை மேம்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. ("FINANCIAL EXPRESS" dated 14.2.2000)

* கடந்த கால ஆட்சியில் தமிழகத்தில் 1995-96ஆம் ஆண்டு காய்கறிகளின் மொத்த உற்பத்தி 39.57 இலட்சம் மெட்ரிக் டன். 1999-2000ஆம் ஆண்டு காய்கறிகளின் மொத்த உற்பத்தி 49.13 இலட்சம் மெட்ரிக் டன்.

* 1995-96ஆம் ஆண்டு தமிழகத்தில் பழங்கள் மொத்த உற்பத்தி 31.20 இலட்சம் மெட்ரிக் டன். 1999-2000 ஆம் ஆண்டு பழங்கள் மொத்த உற்பத்தி 46.12 இலட்சம் மெட்ரிக் டன்.

100 உழவர் சந்தைகள் - ஒரு புதிய சாதனை

* உழுவோரும், நுகர்வோரும் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்துடன் கழக அரசினால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்தான் உழவர் சந்தை. மதுரையில் 14.11.1999 அன்று, முதல் உழவர் சந்தை திறக்கப்பட்டது. ஓராண்டு காலத்தில் 100 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. 100-வது உழவர் சந்தை 14.11.2000 அன்று பல்லாவரத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

* இதுவரை மாநகராட்சி பகுதிகளிலே 12 உழவர் சந்தைகளும், நகராட்சிப் பகுதிகளிலே 76 உழவர் சந்தைகளும், பேரூராட்சி பகுதிகளிலே 12 உழவர் சந்தைகளும் திறக்கப்பட்டுள்ளன.

* 23-11-2000 வரை உழவர் சந்தைகளில் வரப் பெற்ற காய்கறிகள் 17 கோடியே 85 இலட்சத்து 51 ஆயிரத்து 130 கிலோ. இந்தக் காய்கறிகளின் மதிப்பு 120 கோடியே 82 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய். பயனடைந்த விவசாயிகள் 16 இலட்சத்து 8 ஆயிரத்து 914 பேர். பயனடைந்த நுகர்வோர் 5 கோடியே 10 இலட்சத்து 92 ஆயிரத்து 740 பேர். வெளியே மொத்த வியாபாரிகளிடம் விற்பதைக் காட்டிலும், 20 முதல் 25 சதவிகிதம் கூடுதலாக விவசாயிகளுக்கு விலை கிடைக்கிறது என்று ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு கழக அரசினால் வழங்கப்பட்ட முக்கிய சலுகைகளின் பட்டியல் பின்வருமாறு :-

* இந்தியாவிலேயே முதன்முதலாக 1990இல் கழக அரசு விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சாரம், தொடர்ந்து எத்தனையோ எதிர்ப்புகள், சிரமங்களுக்கிடையிலும் நீடிக்கப்பட்டு, அதனால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் 16 இலட்சம் மோட்டார் பம்புகள் பயனடைகின்றன.

* விவசாயிகளுக்கு 8,00,000 உர அடையாள அட்டைகள் 11.41 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

* 1995-96இல் நெல் கொள்முதல் குவிண்டால் ஒன்றுக்கு, மோட்டாரகம் ரூ. 360, சன்ன ரகம் ரூ.375. 1.9.2000 முதல் குவிண்டால் ஒன்றுக்கு, மோட்டா ரகம் ரூ.510, சன்ன ரகம் ரூ.540. அதாவது கடந்த கால ஆட்சியை விட குவிண்டால் ஒன்றுக்கு, மோட்டா ரகத்திற்கு 150 ரூபாயும் சன்ன ரகத்திற்கு 165 ரூபாயும் கழக அரசினால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

* காவிரிப் பாசனப் பகுதிகளில் கொள்முதல் செய்யும் போது சாதாரண மற்றும் ஏ கிரேடு ரக நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணய விலையைவிட குவிண்டால் ஒன்றுக்கு, 35 ரூபாய் இடைநிகழ் செலவாக அரசினால் விவசாயிகளின் நலன் கருதி வழங்கப்படுகிறது.

* இரண்டாம்தர நெல்லுக்கு தர வெட்டுத்தொகை ரூ.15இல் இருந்து ரூ.5ஆகவும், மூன்றாம்தர நெல்லுக்கு ரூ.20இல் இருந்து ரூ.10ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

* 4 ஆண்டுகளில் 32 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நெல் கொள்முதல் 95-96இல் 2.45 இலட்சம் டன்; 97-98இல் 16.78 இலட்சம் டன். 1998-99இல் 11.81 இலட்சம் டன், 1999-2000இல் 12.13 இலட்சம் டன்.

* மைய அரசு நிர்ணய விலையைவிட, முந்தைய அரசினால் கரும்பு டன் ஒன்றிற்கு ரூ.50, ரூ.60 என்ற அளவிலேயே விலையை உயர்த்தி பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தது. ஆனால், கழக அரசுதான் மைய அரசு நிர்ணய விலையைவிட, டன்

ஒன்றிற்கு ரூ.180/- கூடுதலாகப் பரிந்துரை விலையை நிர்ணயித்தது.

* சர்க்கரைக் கட்டுமானத்தைப் பொறுத்து, 8.5 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிற்கு 1995-96இல் முந்தைய அரசு பரிந்துரை விலை ரூ.560/- தற்போது கழக அரசில் பரிந்துரை விலை ரூ.740. 1999-2000இல் சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்குக் கூடுதல் விலைகளும் வழங்கப்படுகின்றன. 10 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1000 வழங்கப்படும் என கழக அரசினால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

* கரும்பு பயிர்க்கடன் ரூ. 45,000 என்பது ரூ. 55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. 25,000 என்பது ரூ.35,000 ஆகவும் தற்போது உயர்த்தி வழங்கப் படுகிறது. கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997-98இல் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கழக அரசு வழங்கிய முன்பணம் ரூ.76.41 கோடி. 1998-99இல் இத்தொகை ரூ.210 கோடி. 1999-2000 ஆண்டிற்கு ரூ.30 கோடி.

* இத்துடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் தேவைப்படும் வெளிச்சந்தை சர்க்கரைக்கு முன்பணமாக ரூ.36.66 கோடி.

* டிசம்பர் 1996இல் ஏற்பட்ட வெள்ளச்சேதம் காரணமாக, விளைபொருள் இழப்புக்காக, கழக அரசினால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 55.15 கோடி. இதன் மூலம் பயன் பெற்ற விவசாயிகள் 10,05,166 பேர்.

* மீண்டும் நவம்பர் 1997இல் ஏற்பட்ட வெள்ளச்சேதம் காரணமாக - விவசாயிகளுக்கு கழக அரசினால் வழங்கப்பட்ட பயிர்கள் இழப்பீட்டுத் தொகை உட்பட வெள்ள நிவாரணம் ரூ.59 கோடி. இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 2,50,297.

* 1997ல் ஏற்பட்ட பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கழக அரசினால் ரத்து செய்யப்பட்ட நிலவரி மதிப்பு ரூ.44 கோடி.

* 1999 - மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ.33.28 கோடி.

* இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால் ரூ. 1000/, மாடு இறந்தால் ரூ.5,000, கன்று இறந்தால் ரூ. 3,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்று கழக அரசினால் அறிவிக்கப்பட்டு அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

* மூன்று குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின் களுக்குப் பதிலாக, ஐந்து குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வாங்க சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடு அளவிற்கும், மிகச்சிறு விவசாயிகளுக்கு 30 விழுக்காடு அளவிற்கும், தாழ்த்தப்பட்ட/மலைவாழ் இன விவசாயிகளுக்கு 50 விழுக்காடு அளவிற்கும் மானியத் தொகை கழக அரசினால் வழங்கப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு 25,000 ரூபாய் வரை வழங்கப்படும் கடன் தொகைக்கு விதிக்கப்படும் 13 சதவிகித வட்டி 12 சதவிகிதமாகவும், 50,000 ரூபாய் வரையிலான கடன் தொகைக்கு விதிக்கப்படும் 16 சதவிகித வட்டி 15 சதவிகிதமாகவும் குறைப்பதென்று 24-10-2000 அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

* 1996-97இல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும், மத்தியகாலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றப்பட்டதோடு அபராத வட்டி ரூ.50 கோடி விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

* 1997-98ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகியகாலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியதால் ரூ.62.35 கோடி அரசுக்கு செலவு ஏற்பட்டது.

* 30-6-99க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 31-7-2000க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்திய 3,40,727 சிறிய, பெரிய விவசாயிகள் அனைவர்க்கும் 13.20 கோடி ரூபாய் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது.

* 1998-99ல் நடப்புக் கடன்தொகையை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை 1.7.1998 முதல் 30.9.1999 வரையான தவணைத் தேதிக்குள் வட்டியுடன் திருப்பிச் செலுத்திய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 6.25 விழுக்காடு வட்டி ஊக்குவிப்புத் தொகை ரூ.6.58 கோடியாகும்.

இதனால் பயன்பெற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை - 1,47,654.

* 1999-2000இல் இந்த ஊக்குவிப்புத் தொகை 7 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த விவசாயிகள் எண்ணிக்கை 2,42,817; இந்த விவசாயிகளுக்கு ரூ.19.72 கோடி அளவிற்கு வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

* 1995-96இல் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.25,000 என்பது, 6.9.1996 முதல் ரூ.50,000 என்றும், 27.5.1998 முதல் ரூ.1 இலட்சம் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. யூரியா உரத்திற்கு விற்பனை வரி 4 விழுக்காடு என்பது கழக அரசினால் 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ. 100 என்பது 1997இல் ரூ.150 ஆகவும், 2000-2001இல் ரூ. 200 ஆகவும் கழக அரசிலே உயர்த்தப்பட்டுள்ளது.

* விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை

விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) 2000-2001இல் கழக அரசில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

* வரலாற்றிலேயே முதல்முறையாக 2000-2001 நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்குமுன் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை 12.3.2000 அன்று அழைத்துப்பேசி, அவர்களின் கருத்தினைப் பெற்று பரிசீலித்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

* 1999-2000இல் மாநில நிதியைக் கொண்டு 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 1000 எக்டேர் நிலப் பரப்பில் மொத்தம் 10,000 எக்டேர் தரிசு நிலத்தினை மேம்பாடு செய்து பழமரக் கன்றுகள் 3979 எக்டேரிலும், வேளாண் மரக்கன்றுகள் 6,021 எக்டேரிலும் 4 கோடியே 90 இலட்ச ரூபாய் செலவில் நடப்பட்டுள்ளன.

* 1996-97லிருந்து 2000-2001 வரை 500 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முடிவெடுத்து இதில் 59 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டிடங்கள் ரூ.5 கோடியே 6 இலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கட்டிடம் கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

* 50 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டிடங்கள் கட்டித்தர அரசு முடிவெடுத்து, இதில் 16 கட்டிடங்கள் ரூ.2கோடியே 8 இலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. 16 வங்கிகளின் கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது.

* 1643 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி களுக்கு பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்பு கதவுகள் வசதி ரூ.21கோடியே 98 இலட்ச ரூபாய் செலவில் செய்து தரப்பட்டுள்ளது.

* விவசாயத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க கழக அரசில் திரு.கோலப்பன், ஐ.ஏ.எஸ்., தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

* கோலப்பன் குழுவின் பரிந்துரைகளையேற்று, சொந்த ஏர் மாட்டுடன் உழவு செய்யும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் என்றும், சொந்த ஏர் மாடு இல்லாத தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 54 ரூபாய் என்றும் கூலி உயர்த்தப்பட்டதோடு வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் மற்றத் தொழிலாளர்களுக்கும் இதுபோன்று கூலி உயர்த்தப்பட்டது.

* விவசாயத் தொழிலாளர்களுக்கென்று தனியாக நல வாரியம் ஒன்று தொடங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே,

விவசாயத் தொழிலாளர் உள்ளிட்ட விவசாயிகளின் நலன் - அந்த நலன் வழங்கிடத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புக்கு வேண்டிய வாய்ப்பு வசதி - அனைத்தையும் இக்கடிதம் விளக்குகிறது. மேலும் தொடரும் பல்துறைச் சாதனைகளை நானும் நினைத்து மகிழ்கிறேன்! நீயும் படித்து மகிழலாம்!

அன்புள்ள,

மு. க.

(26-11-2000)

2544. நாடிச்சென்று வழங்குகிறோம் நல்வாழ்வு!

உடன்பிறப்பே,

ஒரு மனிதனுக்கு வாழ்வில் வளம் சேர்க்க வற்றாத செல்வம் இருக்கலாம். அவன் ஆணை கேட்டு நடக்க ஆள் அம்புகள் ஆயிரக்கணக்கில் இருக்கலாம். அதிகாரம் செலுத்தும் வாய்ப்புள்ள அரியாசனத்தில் கூட அமர்ந்திருக்கலாம். அறிவுடையோன் என்று அறிஞர் போற்றும் கீர்த்தியும் இருக்கலாம். எல்லாம் இருந்தும் என்ன பயன்?

அதனை நல்வாழ்வு என்று நவின்றிட இயலுமோ! இயலாது, இயலவே இயலாது! நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனும் முதுமொழி, அக்கால மனிதனின் அனுபவத்தினால் விளைந்ததன்றோ!

வசதி வாய்ப்புடையோரே நோயற்ற நல் வாழ்வுக்குச் சிரமம் பல ஏற்க வேண்டி யிருக்கிறது என்கிற போது, சாதாரண சாமானிய நடுத்தர மக்கள் ஏழை எளியோர் நல்வாழ்வை நாடிச் செல்ல அவர்கள் தமக்காக அமைத்துக் கொண்ட அரசு தானே கை கொடுக்க வேண்டும், வழி காட்டவும் வேண்டும். அந்தக் குறிக்கோளைக் குறிப்பிடும் நோக்கத்துடன் தான் மக்கள் நல்வாழ்வுத் துறை என இத்துறைக்குக் கழக அரசு பெயரே சூட்டியுள்ளது.

இத்துறையின் சாதனைகள் குறித்து இக் கடிதத்தில் காண்போம்.

குழந்தைகள் நலம் காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம், இந்தியாவில் முதல் இடம் வகிக்கின்றது. (According to National Polio Surveillance Programme - W.H.O. Report)

எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம், இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது. (National Aids Control Organisations Report)

இருக்கும் வளத்தைப் பகிர்ந்துகொள்ள, பிறக்கும் விகிதத்தைக் குறைத்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் இந்தியாவிலே முதல் இடத்தை வகிக்கின்றது. குழந்தைகள் பிறப்பு தேசிய அளவில் சராசரி 27. அதாவது மக்கள் தொகை கணக்குப்படி, 1000 பேர் என்றால் ஆண்டு ஒன்றுக்கு புதிதாக 27 பேர் பிறக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் சாதனை 19. அதாவது ஆயிரம் பேர் கொண்ட மக்கள் தொகைக்கு 19 பேர் மட்டுமே தமிழகத்திலே பிறக்கிறார்கள்.

சிசு மரண விகிதத்தை குறைத்துள்ளதிலும் தமிழகம் மகத்தான சாதனை புரிந்துள்ளது. 1000 பேர் பிறக்கிறார்கள் என்றால் இதில் பிறந்த ஓராண்டிற்குள் அகில இந்திய அளவில் 72 குழந்தைகள் இறந்து போகிறார்கள். ஆனால் தமிழகத்தில், 1000 பேர் பிறக்கிறார்கள் என்றால் 53 குழந்தைகள் மட்டுமே இறந்து போகிறார்கள். 1995-96ஆம் ஆண்டு கடந்த ஆட்சியிலே மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென ஒதுக்கப்பட்ட 688.85 கோடி ரூபாய் என்பது இந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையிலே 1263 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அதாவது சுமார் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

* அரசு மருத்துவமனைகள் மூலம் கழக அரசின் சார்பில் கடந்த நான்காண்டுகளில் மாத்திரம் ஏழை எளியோர்க்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களின் மதிப்பு 354 கோடி ரூபாயாகும்.

* 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அதிமுக ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் நியமிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 1,327 என்பதற்கு மாறாக, கடந்த நான்காண்டு காலத்தில் மட்டும் 2,641 மருத்துவர்கள் அதாவது இதிலும் இரண்டு மடங்கு அளவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

* அது போலவே கடந்த ஐந்தாண்டு கால அதிமுக ஆட்சியிலே நியமிக்கப்பட்ட 786 செவிலியர்களுக்கு மாறாக, கடந்த நான்காண்டு கால கழக ஆட்சியிலே 1,570 செவிலியர்கள் (இதிலும் இரண்டு மடங்கு) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

* 1989-90 மற்றும் 1990-1991 ஆகிய இந்த இரண்டே ஆண்டுகளில் கழக ஆட்சியிலே 136 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டன. பிறகு 1991

முதல் 1996 வரையிலான ஐந்தாண்டுகளில் அதிமுக ஆட்சியிலே 15 கோடியே 92 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் 213 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே கட்டிடங்கள் கட்டப்பட்டன. மீண்டும் 1996ஆம் ஆண்டு திமுக கழகம் ஆட்சிக்கு வந்த போது 653 தொடக்கச் சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டிடம் இல்லாத நிலையிலே இருந்தன. எனவே சொந்தக் கட்டிடம் இல்லாத தொடக்கச் சுகாதார நிலையங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று அறிவித்தோம். அதன்படி 1996க்குப் பின் கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 653 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும், 200 துணை சுகாதார மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட 61 கோடியே 16 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அதில் 613 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் 196 துணை சுகாதார மையங்களுக்குமென கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த கால அதிமுக ஆட்சி ஐந்தாண்டுகளில் கட்டியதைப் போல மூன்று மடங்காகும்.

* முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் கட்டிய மருத்துவமனைக் கட்டடங்கள் 145 என்பதற்கு மாறாக, கழக அரசு 1996க்குப்பின் நாலரை ஆண்டுகளில் இதுவரை கட்டிமுடித்துள்ள மருத்துவமனைக் கட்டடங்களின் எண்ணிக்கை 261. கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

* கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காக 28 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு வட்டார மருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

* மருத்துவத்துறை நவீன மயமாகி வருவதை யொட்டி கருவுற்ற தாய்மார்களுக்குத் தரமான சிகிச்சை யளித்திட 201 மருத்துவமனைகளுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* இரத்தப் பரிசோதனைகளைத் துல்லியமாக உடனுக்குடன் அறிய உதவும் செமி-ஆட்டோ அனலைசர் (Semi-Auto Analyser) என்னும் நவீன கருவி ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் 140 மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

* மருத்துவப் பரிசோதனைக்காக மனித உறுப்புகளை வண்ணத்தில் படம் பிடித்துக் காட்டும் கலர் டோப்லர் (Colour Doppler) கருவிகள் இரண்டு வாங்கப்பட்டு, சென்னை அரசு

பொது மருத்துவ மனைக்கும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவ மனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

* நோய்களைக் கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்க உதவிடும் நவீன கருவிகள் ரூ.20 கோடி செலவில் அனைத்து மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

* மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு 26 நோயாளி ஊர்திகள் ஒரு கோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

* 1989ல் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட சேலம் மருத்துவக் கல்லூரிக்குப் பிறகு, ஐந்தாண்டு கால அதிமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரிகூட தொடங்கப்படவில்லை. ஆனால் மீண்டும் கழக ஆட்சியில் 26.10.1997இல் தொடங்கப்பட்ட திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.12 கோடியே 73 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கட்டடம் 26.6.2000 அன்று திறக்கப்பட்டது.

* தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி 1.10.2000 அன்று தொடங்கப்பட்டது.

* வேலூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி 2000-2001இல் தொடங்கப்பட உள்ளது. தொடர்ந்து குமரி மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும்.

* 1996க்குப் பின் கழக ஆட்சியிலே தனியார் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றும், தனியார் மருந்தாக்கக் கல்லூரிகள் மூன்றும், தனியார் செவிலியர் பயிற்சி நிறுவனங்கள் பதினாறும், தனியார் பிசியோதரபி கல்வி நிறுவனங்கள் இருபத்தி இரண்டும், தனியார் முடநீக்கியல் கல்வி நிறுவனங்கள் மூன்றும் தொடங்கப் பட்டுள்ளன.

* சித்த மருத்துவத்தில் இரண்டு தனியார் கல்லூரிகள், ஆயுர்வேத மருத்துவத்தில் ஒரு தனியார் கல்லூரி, ஓமியோபதி மருத்துவத்தில் நான்கு தனியார் கல்லூரிகள், இயற்கை மருத்துவத்தில் இரண்டு தனியார் கல்லூரிகள், அரசு யுனானி மருத்துவக் கல்லூரி ஒன்று எனத்தொடங்கி நடைபெற்று வருகின்றன. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் ஒரு செவிலியர் பயிற்சிப்பள்ளி 13-10-2000ல் தொடங்கப்பட்டுள்ளது.

* மாவட்ட / வட்ட தலைமை மருத்துவமனைகளில் 10 ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

* மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஒவ்வொரு மருத்துவமனையிலும் தலா மூன்று ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

* சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

* சித்தமுறை மருத்துவத்தை மேம்படுத்தவும், சித்த மருத்துவர்களின் பதிவு மற்றும் புதுப்பித்தல் முறைகளை வரைமுறைப்படுத்தவும், தமிழ்நாடு சித்த மருத்துவ முறை சட்டம் 1997, மாநில அரசால் இயற்றப்பட்டு அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

* கடும் நோயால் அவதியுறும் ஏழை மக்களின் மருத்துவச் சிகிச்சைக்கு உதவிட, தமிழ்நாடு மாநில நோயாளர்கள் நிதி அமைப்பிற்கு ரூ.10 கோடி 30.3.1998 அன்று அரசினால் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இந்த நிதிக்கு மேலும் ஐந்து கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளிலும் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கிட 11.6.1999 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

* மருத்துவமனைகளின் உள்நோயாளிகளின் வசதிக்காக ரூ.8 கோடி செலவில் கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புகள் முதலியன புதிதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

* புதிதாய் அமைந்த திருவாரூர், நாகை, பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.5 கோடி செலவில் காசநோய் மையங்கள் கட்டப்பட்டுள்ளன.

24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

திட்டமிடப்பட்டவை 298 - இதுவரை செயலாக்கப்பட்டவை 250.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோர்க்கு
ரூ.25,000 மருத்துவ சிகிச்சை நிதி

* 1997-98இல் இதய நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் ஆகிய நோய்களுக்கு அறுவை செய்து கொள்ளும் வறுமைக் கோட்டிற்குக்

கீழ் வாழும் மக்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரை 4,774 பயனாளிகளுக்கு 8 கோடியே 16 இலட்சத்து 31,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் வெளி நோயாளிகள் பார்வை நேரம் பகல் 12 மணி வரை நீடிக்க ஆணையிட்டதின் மூலம் இலட்சக்கணக்கான ஏழையெளிய நோயாளிகள் பயனடைகிறார்கள். மருத்துவமனையிலே உள்ள நோயாளிகளைக் காண வரும் பார்வையாளர்களுக்கு முந்தைய அரசு விதித்திருந்த கட்டணம் இரண்டு ரூபாய் இந்த அரசு பொறுப்பேற்ற அன்றே ரத்து செய்யப்பட்டது.

* கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட 10 கோடி ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் 381 ஆம்புலன்ஸ் வண்டிகள்.

* 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும் சி.டி. ஸ்கேன் கருவிகளை நிறுவிட கழக அரசு திட்டமிட்டு இதுவரை 17 அரசு மருத்துவமனைகளிலே அந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* ஜப்பானிய அரசின் 21 கோடி ரூபாய் மானிய உதவி பெற்று, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் பல்வேறு துறைகளுக்கும் மருத்துவக் கருவிகளும், மருத்துவச் சாதனங்களும் வழங்கப்பட்டு குழந்தை மருத்துவம் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது.

தொழில் நிறுவனங்களின் உதவியோடு மருத்துவமனை மேம்படுத்தும் திட்டம்

* 1.11.1997 அன்று தமிழகத்தைச் சார்ந்த தொழிலதிபர்கள் கூட்டத்தை நடத்தி ஒரு சில மருத்துவ மனைகளை அவர்களுடைய தொழில் நிறுவனங்களின் சார்பில் தத்து எடுத்துக் கொண்டு மேம்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன்.

* அதன் பயனாக 51 தொழில் நிறுவனங்கள், 24 அரசு மருத்துவ மனைகளையும், 69 ஆரம்ப சுகாதார நிலையங்களையும், 5 துணை சுகாதார நிலையங்களையும் மேம்படுத்திட பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன.

கண்ணொளி வழங்கும் திட்டம்

* 1972-73இல் நான் முதன் முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த காலக் கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு இடையில் தொய்வு ஏற்பட்டது. 1996க்குப் பின் கழக அரசு இத்திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்து அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் கண் சிகிச்சை பிரிவுகள் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளன.

* மேலும் முக்கியமா வட்ட மருத்துவமனைகளில் கண் மருத்துவ சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 26 மாவட்டங்களில் நடமாடும் கண் சிகிச்சை பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

* 4 ஆண்டுகளில் 13,42,000 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

* 2,87,776 பேருக்கு கண் உள் ஆடி (Intra-Ocular Lens) பொருத்தப்பட்டுள்ளது. ஏழையெளிய மக்களும் இந்த வசதியை எளிதில் பெறத்தக்க வகையில் கண் உள் ஆடிகளுக்கு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

* நவீன மருத்துவ சிகிச்சை பெறுவதற்கென தொலைத் தொடர்பு (Telemedicine) வழி மருத்துவத்தால் சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையுடன் வேலூர் மாவட்ட வாலாஜா மருத்துவமனை இணைக்கப்பட்டுள்ளது.

* அமெரிக்க நாட்டின் உதவியுடன் டெலிமெடிசின் டிரான்ஸ்மிஷன் யூனிட் டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக வளாகத்திலும், ரெசீவர் யூனிட் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்திலும் அமைக்கப்படவுள்ளது.

* 60 வயதிற்கு மேம்பட்ட பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 150 என்பது ரூ. 500 ஆக உயர்வு.

* பயிற்சி மருத்துவர்களின் கோரிக்கையினை யேற்று அவர்களின் மாத ஊதியத்தினை உயர்த்திய இந்த அரசு தொடர்ந்து 1.3.2001 முதல் ஆண்டு தோறும் இந்த உதவித்தொகை 10 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்படும் எனவும் ஆணையிட்டுள்ளது.

* பல்வேறு மருத்துவ முதுநிலை பட்ட/பட்டய/ சிறப்பு மேற்படிப்புகளை அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1996ஆம்

ஆண்டு முதல் துவங்குவதற்கான அனுமதிகளை வழங்கியது இந்த அரசு.

* 1996-ஆம் ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பல்வேறு மருத்துவ முதுநிலை பட்ட / பட்டய படிப்பிற்கான இடங்களின் எண்ணிக்கையை உயர்த்தியுள்ளது இந்த அரசு.

* அரசு பல் மருத்துவக் கல்லூரியில் (BDS) இளநிலை பல் மருத்துவப் படிப்பின் இடங்களை 60லிருந்து 100 ஆக 1997ஆம் ஆண்டில் உயர்த்தியது இந்த அரசு.

வாழ்வொளித் திட்டம்

* 1999-2000ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட வாழ்வொளித் திட்டத்தின் மூலம் அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களிடையே செயல்படுத்தப்பட்டு, முதற் கட்டமாக 59 இலட்சம் மாணவ மாணவியர்கட்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுள் 29 இலட்சம் பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. மேலும் 66 ஆயிரம் மாணவர்கள் குறிப்பான நோய்களுக்கான சிறப்புச் சிகிச்சை பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

வருமுன் காப்போம் திட்டம்

* கழக அரசினால் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக தொடங்கப்பட்ட இத் திட்டத்தின் மூலம் மருத்துவர்கள் கிராமங்களை நாடிச் சென்று முகாமிட்டு ஏழை யெளியோர்க்கு மருத்துவ, பரிசோதனைகளும், சிகிச்சைகளும் வழங்கும் திட்டம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. 24-11-2000 அன்று வரை வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் 7,926 முகாம்கள் நடைபெற்றுள்ளன. அந்த முகாம்களில் மருத்துவ பரிசோதனை செய்து கொண்ட ஏழை எளிய மக்களின் எண்ணிக்கை 78 இலட்சத்து 43 ஆயிரம் பேர். இவர்களில் தொடர் சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 58 ஆயிரத்து 880 பேர். இங்கே பரிசோதிக்கப்பட்ட ஏழையெளிய நோயாளிகளுக்கு அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 4 கோடியே 8 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாயாகும்.

உடன்பிறப்பே,

இந்தச் சாதனைகளில் மாநிலத்தில் உள்ள எல்லா மக்களின் நலனும் பின்னிப் பிணைந்து கிடப்பதை உணர்ந்திடுவாய்! உணர்ந்ததை ஊருக்கு உரைத்திடுவாய்!

அன்புள்ள,

மு. க.

(27-11-2000)

2545. நாட்டின் உயிர்மூச்சும்; நாடி நரம்புகளும்!

உடன்பிறப்பே,

மக்களாட்சியில் அரசு நிர்வாகத்தை ஆலமரத்துக்கு ஒப்பிட்டால், அதன் வேர்களாகவும், விழுதுகளாகவும் உள்ளாட்சி அமைப்புகள் விளங்குகின்றன. மனிதனோடு ஒப்பிடும்போது, அந்த அமைப்புகள் நாடி நரம்புகளாகவும், உயிர் மூச்சாகவும் இருக்கின்றன.

இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைப்புகள் இடையில் பத்தாண்டுக் காலம் செயல்பட முடியாமலே கட்டுண்டு கிடந்ததையும் - நான்காவது முறையாக இந்த ஆட்சி 1996ஆம் ஆண்டு அமைந்த பிறகு தான் உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை அறிவித்து மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றதையும் நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவருமே நன்கறிவார்கள்.

அந்தப் பொறுப்புகளில் மகளிருக்கு அனைத்துப் பதவிகளிலும் 33 விழுக்காடு ஒதுக்கீடு செய்து பெரும் சாதனையைப் புரிந்ததின் காரணமாக, 44,143 பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பதவியேற்கும் நிலையை இந்த அரசு செய்து காட்டியது. இந்த அமைப்புகளுக்குத் தேவையான உரிமைகளை வழங்கி, உதவிகளையும் உடனுக்குடன் செய்து, அரசு நிர்வாகத்திற்கும் மக்களுக்குமிடையே இருந்திடும் தொலைவைச் சுருக்கி, நெருக்கத்தை ஏற்படுத்தி, நேர்மையான முறையில் நெறி பிறழாமல் இந்த அமைப்புகள் செயல்பட எல்லா வகையிலும் இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது என்பதற்கான பட்டியலை இன்றைய கடிதமாக்கித் தருகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி அதிகாரம்

* உள்ளாட்சி அமைப்புகள் யாவும் சுய ஆட்சி அமைப்புகளாக செயல்பட, மாநில அரசு நிதி மற்றும் உரிய பிற அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளித்து ஒவ்வொரு நிலையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெளிவாக;ப பொறுப்புகளை வரையறை செய்ததோடு, ஜனநாயக அமைப்பில் மக்களின் பங்கினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் கிராம சபையையும் வலுப்படுத்தி வருகிறது. திட்டங்கள் தாமதமின்றி உடனுக்குடன் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காக, உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படும் நிதிவரம்பு 1996க்குப் பின் சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.50 இலட்சம் வரை என்பது ரூ.50 இலட்சம் வரை என்றும், மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.2 இலட்சம் வரை என்பது ரூ.25 இலட்சம் வரை என்றும், நகராட்சிகளுக்கு ரூ.10 ஆயிரம் என்பது ரூ.10 இலட்சம் வரை என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

* மாவட்டத் திட்டக் குழுவிற்கு மாவட்ட ஊராட்சித் தலைவரையே தலைவராக நியமிப்பது என்று அரசு அறிவித்துள்ளது.

* ஊராட்சி அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்பட, ஊராட்சித் தலைவரையே நிர்வாக அதிகாரியாக நியமித்து அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சிக்கு தனியாக ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

* வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்கு 8 விழுக்காடு 1997-98 முதல் மாநில வரி வருவாயிலிருந்து 8 விழுக்காடு நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து வழங்கப்படுகிறது.

* 97-98இல் இதன்படி 612 கோடியே 57 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக 2000-2001இல் 1036 கோடியே 42 இலட்சம் ரூபாயாக இது உயர்த்தி வழங்கப்படுகிறது.

* ஊராட்சி நிதியைப் பெருக்க விளம்பர வரி, கேபிள், தொலைக்காட்சி மீதான கேளிக்கை வரி போன்றவற்றை ஊராட்சிகளே வசூலித்துக் கொள்ள அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

* தல வரி, தல மேல் வரி, சிறு கனிமம் மீதான வரி, முத்திரைத் தாள் வரி, கேளிக்கை வரி இவற்றை முழுமையாக

ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரத்தை பெருக்கியுள்ளது.

* ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் முந்தைய ஆட்சியில் நிலுவையிலிருந்த தொகுப்பு வீடுகள், சிறு பாலங்கள் போன்ற 1,14,141 பணிகளுடன், கடந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புதிய பணிகளையும் சேர்த்து மொத்தம் 9,36,129 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் ஆதி திராவிடர்களுக்காகக் கட்டிய இலவசத் தொகுப்பு வீடுகள் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 700. ஆனால் 96க்குப் பின் இந்த நான்காண்டு காலத்தில் 631 கோடியே 6 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 2,96,131 தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

* இந்த வீடுகளுக்கு காங்க்ரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றுக்கு மாநில அரசால் வழங்கப்பட்ட 7000 ரூபாய் 98-99 முதல் 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

* 29 கோடியே 49 இலட்ச ரூபாய் செலவில் உள்ளாட்சி நிறுவனங்களைச் சேர்ந்த 737 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்களும், 133 கோடியே 15 இலட்ச ரூபாய் செலவில் 5,326 ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

* 106 கோடியே 43 இலட்ச ரூபாய் செலவில் 6,652 நியாய விலைக் கடைகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

* 18 கோடியே 28 இலட்ச ரூபாய் செலவில் 1,406 சத்துணவு மையங்களுக்கான கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.540 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சாலைகள், தெரு விளக்குகள் போன்ற அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவலம் நீக்கி அரிய சாதனை

மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலையை அகற்றிட, அனைத்துப் பேரூராட்சிகளிலும் இருந்த 417 உலர் கழிப்பிடங்களும், அனைத்து நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலும் இருந்த 238 உலர் கழிப்பிடங்களும் - ஆக மொத்தம் 655 உலர்

கழிப்பிடங்களும் நவீன கழிப்பிடங்களாக 10 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. தற்போது எந்தவொரு நகராட்சியிலும், மாநகராட்சியிலும் பொது உலர் கழிப்பிடம் எதுவும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

9 புதிய ஊராட்சிகளும், ஏற்காடு ஊராட்சி ஒன்றியமும் உருவாக்கப்பட்டன.

* 533கோடியே 86 இலட்ச ரூபாய் செலவில் 35 ஆயிரத்து 591 நீர்ப்பிடிப்பு / ஆதாரப் பணிகளும், 67 கோடியே 56 இலட்ச ரூபாய் செலவில் 13,513 ஜீவன்தாரா கிணறுகளும், 11 கோடியே 92 இலட்ச ரூபாய் செலவில் 701 ஊராட்சி அலுவலகக் கட்டிடங்களும் 44 கோடியே 11 இலட்ச ரூபாய் செலவில் 22 ஆயிரத்து 53 தொலைக்காட்சி அறைகளும், 53 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 2,67,871 தனி நபர் கழிப்பறைகளும் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. 4 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவில் 4,60,000 புகையில்லா அடுப்புகளும், 9 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் 9,500 கரிமவாயு கலன்களும் அமைக்கப்பட்டுள்ளன.

7 கோடியே 99 இலட்ச ரூபாய் செலவில் 2,499 தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

* 221 கோடியே 56 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 4,70,442 பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 4 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் பேருந்து நிலையங்களும், வணிக வளாகங்களும் பேரூராட்சிகளில் கட்டப்பட்டுள்ளன.

* பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 11,836 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி 11 கோடியே 94 இலட்சத்து 39,000 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

* 4,855 சுயஉதவிக் குழுக்களுக்கு சுயதொழில் துவங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவி 121 கோடியே 82 இலட்சம் ரூபாய். 23,920 தனிநபர் பயனாளிகளுக்கு 45 கோடியே 25 இலட்சத்து 91,000 ரூபாய் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

* பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், 31 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள்.

* 19 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், 44,737 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், சுயஉதவிக் குழுக்களுக்கு 7 கோடியே 78 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் ஆரம்பப் பயிற்சி மற்றும் திறன்வளர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

* ஊரகப் பகுதிகளில் 12,000 தெரு விளக்குகளும், நகர்ப்புறப் பகுதிகளில் 90,000 தெரு விளக்குகளும் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

* சாதி சமயப் பூசல் அகற்றிட, இந்த அரசின் மிகச் சிறந்த திட்டமான பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் 150 அமைக்கத் திட்டமிடப்பட்டதில், இதுவரை 82 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. 25 சமத்துவபுரங்கள் திறப்பு விழாவிற்கு தயாராக உள்ளன.

* மற்றுமொரு சீரிய திட்டமான அண்ணா மறு மலர்ச்சி திட்டத்தின்கீழ், 692 கோடி ரூபாய் செலவில் 74,810 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* நமக்கு நாமே திட்டத்தின்கீழ், 147 கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் 18,590 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி நிறைவேற்றப்படும் பணிகளுக்கு பொதுமக்களும், செலவில் ஒரு பங்கினை உழைப்பாகவோ, நிதியாகவோ தந்திட வேண்டுமென்ற விதிப்படி மக்கள் பங்கு 51 கோடியே 42 இலட்ச ரூபாய் கிடைத்துள்ளது.

* இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சட்டமன்ற உறுப்பினர்களின் 234 தொகுதிகளிலும் 414 கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் 30,505 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1989-91 ஆண்டுகளில் நடைமுறையிலிருந்த மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம், அதிமுக

ஆட்சியில் 13-7-91 அன்று கைவிடப்பட்டது. மீண்டும் 96ஆம் ஆண்டு கழக அரசு ஏற்பட்ட பிறகு, பணியிழந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. முதியோர் கல்வியைப் பரப்புவதிலும், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்கு உணர்த்துவதிலும், தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் மற்றும் சத்துணவு மையங்களைக் கவனிப்பதிலும் இவர்களது பணி பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வருகிறது.

* வரலாறு காணாத அளவில் கிராமங்களில் சுமார் 20,900 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. 2900 கிலோ மீட்டர் கிராமத் தெருக்கள் சிமெண்ட் காங்கீரீட் தெருக்களாக மாற்றப்பட்டுள்ளன.

* ஊரக வளர்ச்சித் துறை உருவான காலத்திலிருந்து இதுவரையில் இல்லாத சாதனையாக இத்துறைக்கென தனியாக ஒரு பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஏற்கனவே இருந்த வாகனத்தோடு மேலும் ஒரு வாகனம் வழங்க 621 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன.

* இதுவரை ஊரக வளர்ச்சித் துறையில் இல்லாத அளவிற்கு கடந்த நான்காண்டுகளில் 338 வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உதவி இயக்குநர்களாகவும், 65 உதவி இயக்குநர்களுக்கு இணை இயக்குநர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இது தொடர்பான பொறியியல் பிரிவில் பல்வேறு கட்டத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

* கிராம இளைஞர்கள் பயன்பெற ஊராட்சிகளிலே அய்யன் திருவள்ளுவர் நூலகங்களை அமைத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* கடந்த நான்காண்டுகளில் பேரூராட்சிகளில் மட்டும் சிமெண்ட் சாலைகளின் நீளம் 380 கிலோ மீட்டரிலிருந்து 909 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. தார்ச்சாலைகளின் நீளம் 2733 கிலோ மீட்டரிலிருந்து 3421 கிலோ மீட்டராக உயர்த்தப் பட்டுள்ளது.

* ஊரக உற்பத்திப் பொருட்கள், பூமாலை வணிகச் சின்னத்துடன் விற்பனை செய்ய மாநிலம் மற்றும் மாவட்ட

தலைநகரங்களில் விற்பனை அரங்கங்கள் அமைக்க 14 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

* 9 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் 3 ஆயிரத்து 850 கிராமப்புற விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

* புதிதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகளுக்கு தலா இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஊக்க நிதி வழங்கப்படுகிறது.

* சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள 52 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன.

* நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டணம், குடிநீர் கட்டணம் செலுத்த தற்போதுள்ள சிறப்பு நிதி ஐந்து கோடி ரூபாய் இந்த ஆண்டு ஏழு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

* இந்த ஆண்டு மட்டும் 10 நகராட்சிகளுக்கு நகர் மன்றக் கூட்டம் நடத்துவதற்கு புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* நகராட்சிகளில் பராமரிக்கப்படும் பேருந்து நிலையங்களில் ஓடு தளத்தை சிமெண்ட் காங்கரீட் தளமாக மாற்றிட ஏழு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சிகள்

சென்னை மாநகராட்சி

* 1997க்குப் பின் கட்டப்பட்ட சிறு பாலங்கள் 52 - செலவு ரூ.4.51 கோடி.

* ரூ.115.50 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்ட 10 மேம்பாலங்களில் 7 மேம்பாலங்கள் திறக்கப்பட்டு விட்டன. வரும் டிசம்பர் திங்கள் 2ந்தேதி யன்று மேலும் இரண்டு மேம்பாலங்கள் திறக்கப்பட உள்ளன. ரூ.5 கோடியே 11 இலட்சம் செலவில் நேப்பியர் பாலம் எழிலுடன் அகலப்படுத்தப்பட்டுள்ளது.

* சென்னை இராயபுரத்தில் ரூ. 17 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1.10 கிமீ. நீளமுள்ள ரயில்வே மேம்பாலம் 1999 நவம்பரில் திறந்து வைக்கப்பட்டது. சைதாப்பேட்டை ரயில் பாதையின் கீழாக வாகன சுரங்கப்பாதை சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

* எழிலகம் அருகில் பயணிகள் சுரங்கப்பாதை 74.37 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

* கோயம்பேட்டில் ஆசியாவிலேயே பெரிய பேருந்து நிலையம் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

* கொத்தவால் சாவடி காய்கறிச் சந்தை, கோயம்பேட்டிற்கு மாற்றப்பட்டதால் உயர்நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள பகுதியில் நெரிசல் நீக்கப்பட்டுள்ளது.

* உயர்நீதிமன்றத்தின் அருகில் பூக்கடை வளாகம் அகற்றப்பட்டுப் புறநகர் பேருந்து நிலையம் அங்கு அமைக்கப்பட்டதால், போக்குவரத்து சீரடைந்துள்ளது.

* சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் திருவல்லிக்கேணி, மயிலை, கோடம்பாக்கம் பகுதிகளில் தூய்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* பத்தாவது நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் சென்னை நீங்கலாக 5 மாநகராட்சிகளுக்கும் நான்கு ஆண்டுகளில் ரூ.16.85 கோடி வழங்கப்பட்டு, எடுக்கப்பட்ட 770 பணிகளில் - தெருவிளக்குகள், சாலை வசதிகள், பொதுக் கழிப்பிடம், குடிநீர் மேம்பாடு உள்ளிட்ட 751 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* மாநகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்த 6 மாநகராட்சிகளுக்கும் மாநில நிதிப்பங்கீடாக 1997-98 முதல் 3 ஆண்டுகளில் ரூ.313.61 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் ரூ.142.18 கோடி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி

* மதுரை, திருச்சி, நெல்லை, கோவை, சேலம் ஆகிய ஏனைய ஐந்து மாநகராட்சிகளுக்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திட மொத்தம் ரூ.100 கோடி வழங்கப்பட்டு, குடிநீர், சாலை, தெருவிளக்குகள், வடிகால்கள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 8755 பணிகள் முடிந்துள்ளன.

* ரூ.11.31 கோடி செலவில் பேருந்து தடச் சாலைகளும், பிரதானச் சாலைகளும், ரூ. ஒன்றரைக் கோடியில் புறச்சாலைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* விசுவாசபுரி, ஆர்.வி. நகர், ஆரப்பாளையம், கண்மாய்க்கரை ஆகிய இடங்களில் ரூ.1 கோடியே 81 இலட்சம் செலவில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* தரைப்பாலம் ரூ.1 கோடி செலவிலும், கல்பாலம் ரூ.8 கோடி செலவிலும், மதுரா கோட்ஸ் பாலம் ரூ.9 கோடி செலவிலும் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

* ரூ.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.

* ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதை வடிகால் திட்டம் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 75 சாலைப் பணிகள் 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 39 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

* உட்புறச் சுற்றுசாலை அமைக்கும் பணி 44 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

* 8 கோடி ரூபாய் செலவில் வைகையாற்றின் கரைகளை வலுப்படுத்தி சீரமைக்கும் திட்டம்.

கோவை மாநகராட்சி

* ரூ.2 கோடியே 52 இலட்சம் செலவில் 31.76 கி.மீ. நீளச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

* ரூ.1 கோடியே இரண்டு இலட்சம் செலவில் 10.94 கி.மீ. நீள வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* ரூ.ஒன்றரைக் கோடியில் மின்தகன நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

* பில்லூர் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.27 கோடியே 23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

* ரூ.5 கோடி செலவில் தடாகம் ரோடு, சக்தி ரோடு ஆகிய இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

* கோவை நான்காவது மண்டலத்தில் புதை வடிகால் அமைக்க ரூ.57.46 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

* சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 133 பணிகள் 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 47 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

திருச்சி மாநகராட்சி

* ரூ.2.76 கோடியில் 1412 சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

* திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், ரூ.1.50 கோடியில் பல்வேறு வாகனங்களும், தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன.

* சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 179 பணிகள் 6.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 25 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

* 50 கோடி ரூபாய் செலவில் உய்யகொண்டான் கரைகளை வலுப்படுத்தும் திட்டம்.

சேலம் மாநகராட்சி

* ரூ.4.39 கோடி மதிப்பீட்டில் 176 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்டி திறக்கப்பட்டுள்ளது.

* சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 278 பணிகள் 8.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 150 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

* 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் திருமணிமுத்தாறு மேம்பாட்டுத் திட்டம்.

நெல்லை மாநகராட்சி

* வேய்ந்தான்குளம் பகுதியில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாயில் பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 136 பணிகள் 7.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு,

இதுவரை 31 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

* ஆறு மாநகராட்சிகளிலும் 51,404 குடிசைகளை 70 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளால் வேயப்பட்ட வீடுகளாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

நகராட்சிகள்

* 1997-98 முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூன்று ஆண்டுகளில் ரூ.1013.97 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.458.63 கோடி வழங்கப்படுகிறது.

* ஆண்டுக்கு ரூ.10 கோடி வீதம் ரூ.40 கோடி வழங்கப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதார மேம்பாடு, துப்புரவு, சிமெண்ட் சாலை முதலிய இனங்களில் 2271 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன;

* 63,975 தெருவிளக்குகள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 8000 தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. குப்பை அகற்றும் பணியில் மாட்டு வண்டிகளை படிப்படியாக அகற்றிட 1180 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

* ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் வீதம் நான்கு ஆண்டுகளில் 60 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு 53 மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இப்பணிக்காக 15 இலட்சம் ரூபாய் எட்டு நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு, மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்படவுள்ளன.

* பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின்கீழ் 4 ஆண்டுகளில் ரூ.35 கோடியே 71 இலட்சம் விடுவிக்கப்பட்டு, சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள் போன்ற 23,635 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

* தமிழக நகராட்சிகளில் திட்ட அமைப்பாளர்கள், புள்ளி விவரக் குறிப்பாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் போன்ற பல்வேறு பதவிகளில் 5400 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

* இரண்டாம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், சிறப்புச் சாலைப் பணிக்காக 30 கோடி ரூபாய்

1999-2000ஆம் ஆண்டிற்கும், 50 கோடி ரூபாய் 2000-2001ஆம் ஆண்டிற்குமாக 80 கோடி ரூபாய் நகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4011 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2288 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை 40.20 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

* ஊரகப் பகுதிகளில் கடந்த நான்காண்டுகளில் மட்டும் 90,907 தெரு விளக்குகள் உட்பட மொத்தம் 2,72,012 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 1997-98ஆம் ஆண்டு 27,907 தெரு விளக்குகள் அமைப்பதற்கு, 7 கோடியே 28 இலட்சம் ரூபாயும், 1998-99ஆம் ஆண்டு 35,284 தெரு விளக்குகள் அமைப்பதற்கு, 12 கோடியே 60 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* 1998-99ஆம் ஆண்டு நகரப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள ஊரகப் பகுதிகளில் பத்தாயிரம் குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக உயர்த்துவதற்கு, சுமார் 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 1999-2000ஆம் ஆண்டில், 2000 சோடியம் ஆவி விளக்கு அமைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே,

அடி வேர் முதல் உச்சிக் கொப்பு வரையில் அணுஅணுவாக அக்கறையுடன் கவனித்து அயராப் பணி புரியும் கழக அரசின் கடும் உழைப்பினால் களிப்படைகின்றனர், கிராமப்புறத்து மக்கள் நகர்ப்புறத்து மக்கள் என்பதற்கு இவையனைத்தும் அழிக்க முடியாத ஆதாரங்களாகும். அம்மக்களின் இன்றியமையாத தேவை இன்னொன்றும் உண்டு. அதுதான், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்! அப்பணியையும் ஒரு திருப்பணி போல் தி.மு.க. அரசு ஆற்றி வருவதற்குத் தனியாகவே ஒரு மடல் தீட்டுகிறேன்!

அன்புள்ள,

மு. க.

(28-11-2000)

2546. தொடரும் தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்று!

உடன்பிறப்பே,

பல நோய்கள், அதிலும் பயங்கரமான நோய்கள் பரவுவதற்கும் மக்களைப் பலி கொள்வதற்கும் தண்ணீர் காரணமாக இருப்பதால், தாகம் தீர்த்துக் கொள்ளப் பருகிடும் அந்த நீர், பாதுகாக்கப்பட்ட குடிநீராக இருக்க வேண்டும் என்ற அக்கறையுடன் 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் அதற்கெனத் தனியாக ஒரு வாரியம் குடிநீர் வடிகால் வாரியம் என்ற பெயரில் அமைக்கப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் தலை சிறந்த வாரியமாகத் திகழ்கிறது என்று ஹட்கோ நிறுவனம் நற்சான்றிதழும், கேடயமும் வழங்கியுள்ளது.

குடிநீர்த் திட்டங்களைச் சிறப்பாகவும், தரக் கட்டுப்பாட்டுடனும் செயல்படுத்துவதில் தெற்காசியாவிலேயே சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்தான் சிறந்த வாரியம் என்று உலக வங்கி சான்றிதழ் அளித்துள்ளது.

சான்றிதழ்கள் பெற்ற மகிழ்ச்சியுடன் நின்று விடாமல் மேலும் மேலும் மக்களின் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய நமது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் அதற்கென செலுத்தும் சிறப்பு கவனத்தையும் இக்கடிதத்தில் காட்டப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் விளக்கும்.

* 1995-96 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 213 கோடியே 82 இலட்சம் ரூபாய் என்பதற்கு மாறாக, 2000-2001 ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 842 கோடி ரூபாய் என்ற ஒரு புள்ளி விவரத்திலிருந்தே குடிநீர் வழங்குவதில் இந்த அரசுக்கு எந்த அளவுக்கு ஆர்வம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

* சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து 1996ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கை 17,501 தான். ஆனால் கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 24,793 மேல்நிலை குடிநீர் தொட்டிகளை அமைத்து சுமார் 50 ஆண்டு காலத்தில் நிறுவப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கையைத் தாண்டி சாதனை புரிந்துள்ளோம்.

* அதைப் போலவே 1996க்கு முன்பு 50 ஆண்டுக் காலத்தில் பொருத்தப்பட்ட அடிகுழாய்களின் எண்ணிக்கை 1,44,102. ஆனால் கடந்த நாலரை ஆண்டுக் காலத்தில் பொருத்தப்பட்ட அடிகுழாய் பம்புகளின் எண்ணிக்கை 33,576 ஆகும்.

ஊரகக் குடிநீர் வசதிகள்

* அ.தி.மு.க. ஆட்சியில் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு 1995-96 ஆம் ஆண்டில் 69.93 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 2000-2001இல் அதை ஏழு மடங்கு அளவுக்கு உயர்த்தி 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏராளமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

* 1992-93 முதல் 1995-96ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சியில் ஊரகக் குடிநீர் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 307 கோடியே 43 இலட்ச ரூபாய். 1996-97 முதல் 2000-2001 ஆம் ஆண்டு வரை கழக ஆட்சியில் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 1,503 கோடியே 79 இலட்ச ரூபாய்.

* ஆரம்ப காலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றில் கைபம்புகள் பொருத்தப்பட்டன. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர, விசைப்பம்புகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருக் குழாய்கள் மூலம் வழங்கும் முறையை தீவிரமாக அமல்படுத்தி வருகிறோம்.

* ஊரகக் குடியிருப்புத் திட்டத்தைப் பொறுத்தவரை 1999-2000இல் 6,300 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 378 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டது. 2000-2001இல் 6,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

* அரசு 9-12-98 அன்று பிறப்பித்த ஆணைப்படி, ஆயிரம் ரூபாய் காப்புத் தொகையாகவும், மாதாந்திர குடிநீர் கட்டணமாக முப்பது ரூபாயும் ஊராட்சிகளுக்குச் செலுத்த முன்வருவோரின் வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கே அரசு வழங்கியுள்ளது.

* இதுவரையில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஊரகப் பகுதிகளில் 4,06,000 வீட்டு குடிநீர் இணைப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

* இதுவரை நகர்ப் பகுதிகளில் மட்டுமே இருந்து வந்த குடிநீர் வீட்டு இணைப்பு வசதியினை ஊரகப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டது.

* தற்போது கிராம ஊராட்சிகள் மூலம் 1,75,965 கைப்பம்புகளும், 37,956 விசைப்பம்புகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

* பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத குடியிருப்புகளே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று 97-98ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே நான் அறிவித்ததற்கிணங்க, அந்தச் சபதம் இன்றையதினம் நிறைவேறியிருக்கின்றது.

* ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் அளிக்க உறுதிபூண்டு, 32,203 குடியிருப்புகளில் 1996 முதல் இதுவரை 24,720 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 1,213 கோடியே 91 இலட்சம் செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 7,483 குடியிருப்புகளுக்கும் மார்ச், 2002-க்குள் முழுமையாக குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

* ஆனால் 1-4-92 முதல் 1-4-96 வரையிலான நான்காண்டுகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் அ.தி.மு.க. ஆட்சியில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்ட குடியிருப்புகள் சுமார் 14,000 மட்டுமே.

* இந்திய துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் அளவினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக

உயர்த்தியிருக்கிறோம். நீர் ஆதாரமில்லாத பகுதிகளில் 40 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

* அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், 846 ஊராட்சிகளில் 6,134 குடிநீர்த் திட்டப் பணிகள் 179 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் பணி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் 4,414. இதற்கான செலவு 145 கோடியே 96 இலட்ச ரூபாயாகும்.

* பெரியார் நினைவு சமத்துவபுரங்களுக்கு 6 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

* பயனற்றுப் போனவை என்று கடந்த கால ஆட்சியில் ஒதுக்கப்பட்ட 3,740 குடிநீர்த் திட்டங்களை புனரமைப்பு செய்து, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக, முதன் முறையாக திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு இதுவரை 53 கோடியே 37 இலட்சம் ரூபாய்க்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* 1,288 ஊராட்சிகளில் அடங்கிய 3,555 குடியிருப்புகள் புளோரைடால் பாதிக்கப்பட்டிருந்தன. இந்தக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு இதுவரை 2419 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு விட்டது.

* அரசு துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல் நிலைப்பள்ளி ஆகியவைகள் அடங்கிய 18,511 அரசு பள்ளிகளுக்கு, நாள் ஒன்றுக்கு பள்ளி ஒன்றுக்கு ஆயிரம் லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 4,417 பள்ளிகளுக்கு 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி கொடுக்கப்பட்டுள்ளது.

* கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களில் ஊரகப் பகுதிகளை இணைக்க பிரதான குழாயிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள் ஊரகக் குடியிருப்பு இருக்க வேண்டுமென்ற வரம்பு நீக்கப்பட்டு, தேவையை மட்டும் கருத்தில் கொண்டு கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

* ஊரகப் பகுதிகளுக்கு மின் மோட்டார் பொருத்தி குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஒரு குடியிருப்பில் மக்கள் தொகை 300க்கு மேல் இருக்க வேண்டும் என்கிற வரம்பைத் தளர்த்தி, ஒரு குடியிருப்பில் மக்கள் தொகை 150க்கு மேல் இருந்தாலே போதுமென்று மாற்றியமைக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 72 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட உவர்நீரை நன்னீராக்கும் 11 திட்டங்களால் (கலன்களால்) 237 கிராமக் குடியிருப்புகள் குடிநீர் வசதி பெற்றுள்ளன.

நகர்ப்புறக் குடிநீர் வசதிகள்

* நகரக் குடிநீர் வழங்கும் பணிக்கென 1992-93 முதல் 1995-96 வரை அ.தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 128 கோடியே 87 இலட்சம் ரூபாய். 1996-97 ஆம் ஆண்டு தொடங்கி 2000-2001ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை வரை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு 455 கோடி ரூபாய். நகர்ப்புற குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரையில், அரசு சிறப்பு நிதி உதவியாக கடந்த ஆண்டு 50 கோடி ரூபாய் வழங்கியதற்கு மாறாக, இந்த ஆண்டு 80 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 12 நகராட்சிகளுக்கும் மற்றும் 25 பேரூராட்சிகளுக்கும் புதிய குடிநீர்த் திட்டங்களை அமைத்திட உத்தரவிட்டதற்கு மாறாக, இந்த ஆண்டு 74 நகரங்களுக்கு புதிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

* விரைவுபடுத்தப்பட்ட நகரக் குடிநீர் திட்டம் என்னும் பெயரில், தமிழகத்தில் 26 நகரங்களில் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி, செலவில் 50 சதவிகிதத்தை மைய அரசும், 45 சதவிகிதத்தை மாநில அரசும், 5 சதவிகிதத்தை அந்த உள்ளாட்சி அமைப்பும் ஏற்க வேண்டும்.

* ஆசியாவிலேயே மிகப் பெரிய - கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - 27.6.1999 அன்று இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் ரூ.51 கோடியில் நிறைவேற்றப்பட்டது.

* மதுரை மாநகராட்சியில் ரூ.95 இலட்சம் செலவில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு, ரூ.2.70 கோடி செலவில் குடிநீர் வழங்கும் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* கடந்த நான்கரை ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நந்திவரம் கூடுவாஞ்சேரி, திருநீர்மலை, பெருங்களத்தூர், திருக்கழுக்குன்றம், சோளிங்க நல்லூர். விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி, அனந்தாபுரம், உளுந்தூர்பேட்டை. தர்மபுரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை, காவிரிப்பட்டினம், ஓசூர், மத்தகிரி, கடத்தூர், கிருஷ்ணகிரி. திருவாரூர் மாவட்டத்தில் கொரடாச்சேரி. திருச்சி மாவட்டத்தில் நங்கவரம், அரியமங்கலம், இனாம்கரூர், கே.அபிஷேகபுரம், பிராட்டியூர். கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி, புலியூர், பி.ஜெ. சோழபுரம், பள்ளப்பட்டி. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, பொன்னமராவதி. சேலம் மாவட்டத்தில் ஜலகண்டா புரம். நாமக்கல் மாவட்டத்தில் ஆலப்பாளையம், இடப்பாடி, ராசிபுரம். ஈரோடு மாவட்டத்தில் அரியப்ப பாளையம், பெருந்துறை, ஆப்பக்கூடல், சத்திய மங்கலம், சித்தோடு, பெரிய சேமூர், இலத்தூர் நம்பியூர், அரச்சலூர். கோவை மாவட்டத்தில் சியாமளாபுரம், சூலிசுரப்பட்டி, கிணத்துக்கடவு, சர்க்கார் சாமக்குளம், வீரபாண்டி, ஆனைமலை, பள்ளபாளையம், மூப்பேறிபாளையம், உடுமலைப் பேட்டை, வீரகேரளம். மதுரை மாவட்டத்தில் திருநகர், ஒத்தக்கடை, ஆர்.வி.பட்டி. திண்டுக்கல் மாவட்டத்தில் எரியோடு, அம்மையநாயக்கனூர், கன்னிவாடி. சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி, திருப்பத்தூர், நாட்டரசன்கோட்டை; திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு, திருவேங்கடம், அம்பாசமுத்திரம், திசையன்விளை, ராயகிரி, அச்சம்புதூர், தச்சநல்லூர், ஆயக்குடி, பண்பொழி. கன்யாகுமரி மாவட்டத்தில் குளச்சல், களியக்காவிளை, வடகரை கீழ்ப்படுகை, காட்டாத்துறை. தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடை மருதூர், ஆடுதுறை, பாபநாசம், திருநாகேஸ்வரம், திருவோணம், ஆனைக்காரன்சத்திரம், கும்பகோணம், தாராசுரம், பட்டுக்கோட்டை. நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம், வைத்தீஸ்வரன்கோவில். தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, தென் திருப்பேரை. இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை, ராமேஸ்வரம். பெரம்பலூர் மாவட்டத்தில் ஜெயங் கொண்டம். நீலகிரி மாவட்டத்தில் உதக மண்டலம். விருதுநகர் மாவட்டத்தில் மம்சாபுரம். திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுப்பாளையம், வந்தவாசி. வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, தாரப்படவேடு, ஆம்பூர், கழிஞ்சூர், காந்திநகர், உதயேந்திரம், பனப்பாக்கம், தக்கோலம், காவேரிப்பாக்கம். திருவள்ளூர் மாவட்டத்தில் நாரவாரிக்குப்பம் ஆகிய 98 குடிநீர்த் திட்டங்கள் முழுவதுமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் முடிக்கப்படவுள்ள
முக்கிய குடிநீர்த் திட்டங்கள் :-

* திருநெல்வேலி மாவட்டத்தில் 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் பாளையங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வாசுதேவநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெருங்குளம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடம்பூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர் திட்டம். விருதுநகர் மாவட்டத்தில் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரோசல்பட்டி மற்றும் 11 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* மதுரை மாவட்டத்தில் 14 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பேரையூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழனி நகராட்சி குடிநீர்த் திட்டம்.

* கோவை மாவட்டத்தில் 9 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம். நீலகிரி மாவட்டத்தில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குன்னூர் ஒன்றியத்தில் மூன்று குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* ஈரோடு மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளக்கோவில் மற்றும் காங்கேயம் ஒன்றியத்தைச் சேர்ந்த 127 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 6 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காங்கேயம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். நாமக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குமாரபாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம்.

* சேலம் மாவட்டத்தில் 2 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகுடஞ்சாவடி, கொங்கனாபுரம் ஒன்றியங்களில் உள்ள 49 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* திருவண்ணாமலை மாவட்டத்தில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போளூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செவிலிமேடு பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* 3 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* திருவள்ளூர் மாவட்டத்தில் 3 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புழல் பேரூராட்சி மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநின்றவூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* விழுப்புரம் மாவட்டத்தில் 5 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* விழுப்புரம் மாவட்டத்தில் 5 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சின்னசேலம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* கரூர் மாவட்டத்தில் 4 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாந்தோணி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

* திருச்சி மாவட்டத்தில் 14 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

என்ற முக்கிய திட்டங்கள் உட்பட, 48 குடிநீர்த் திட்டங்கள் சுமார் 129 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்படவுள்ளது. இதனால் சுமார் 21 இலட்சம் மக்கள் பயனடைவர். இது தவிர மேலும், 119 புதிய குடிநீர்த் திட்டங்களும் இந்த ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இந்தக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 30 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

உடன்பிறப்பே,

இன்னும் எத்தனை எத்தனை சாதனைகள்! சென்னை மாநகர் குடிநீர் வசதிக்கான சாதனைகள் தனியாக இருக்கின்றன! - அத்தனையும், தொகுத்துப் பத்திரப்படுத்திட வேண்டிய சரித்திரச் சாதனைகள்! ஏட்டில் படிப்பதுடன் நில்லாமல் நாட்டில் இதனைப் பரப்புவதும் உன் கடமையன்றோ!

அன்புள்ள,

மு. க.

(29-11-2000)

2547. தலைநகரில் தடைபடாத் தண்ணீர் விநியோகம்!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் தலைநகரம் சென்னை! மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகளில் மிகப் பெரிய மாநகராட்சி! மக்கள் தொகை 45 இலட்சம் பேர்! பதினான்கு சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட மாநகர மாவட்டம். இங்கு வாழும் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்திட, பாதுகாக்கப்பட்டக் குடி தண்ணீருக்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றில் சில திட்டங்களே வெற்றிபெற்றன. ஆயினும் சென்னை மாநகரத்து மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட இந்த அரசு, தனது முயற்சிகளை இடை விடாது செய்து வருகிறது.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தின் மூலமாக 1995-96இல் 38.41 லட்சம் மக்கள் பயன்பெற்று வந்ததற்கு மாறாக, 2000-2001இல் பயன்பெறும் மக்களின் எண்ணிக்கை சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகள் உட்பட 60 லட்சம் பேர் என்று உயர்ந்துள்ளது.

* 1996இல் கழக அரசு மலர்ந்ததற்குப் பிறகு நாம் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, ஆந்திர அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, இடையிடையே சிறு சிறு தடங்கல்கள் நேர்ந்த போதிலும், கிருஷ்ணா நீரைப் பெறத் தொடங்கினோம். 1996ஆம் ஆண்டில் 70 மில்லியன் கன அடியும், 1997ஆம் ஆண்டில் 2417 மில்லியன் கன அடியும், 1998ஆம் ஆண்டில் 2806 மில்லியன் கன அடியும், 1999ஆம் ஆண்டில் 1833 மில்லியன் கன அடியும் பூண்டி நீர்த் தேக்கத்தில் கிருஷ்ணா கால்வாயிலிருந்து தண்ணீர் கிடைக்கப் பெற்றது.

* சென்னை வாழ் மக்களுக்கு தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு 1995-96இல் 24 கோடி லிட்டர் என்பது கிருஷ்ணா நீர்வரத்துக்குப் பிறகு 1998-1999இல் 48 கோடி லிட்டராக இரண்டு மடங்கு அளவிற்கு உயர்ந்துள்ளது.

* ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 95-96இல் 70 லிட்டராக இருந்தது, கிருஷ்ணா நீர் வருகைக்குப் பிறகு 96-97இல் 80 லிட்டராகவும் 1997-1998 முதல் 100 லிட்டராகவும் உயர்ந்துள்ளது.

* குடிநீர் சுத்திகரிக்கும் திறன் 1995-96இல் 32 கோடி லிட்டர் மட்டுமே. 1999-2000இல் அது 62 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது.

* 1995-96இல் 24 கோடி லிட்டராக இருந்த குடிநீரேற்றும் திறன் 1999-2000இல் 62 கோடி லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

* 1995-96இல் குடிநீர் கொண்டு செல்லும் பெரும் குழாய்களின் மொத்த நீளம் 193 கிலோ மீட்டர். அது 1999-2000இல் 275 கிலோ மீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* 95-96இல் 4 குடிநீர் வழங்கும் நிலையங்களே சென்னையில் இருந்தன. தற்போது 13 குடிநீர் வழங்கும் நிலையங்கள் உள்ளன.

* குழாய்கள் மூலம் 24 இலட்சம் மக்கள் 1995-96இல் பயனடைந்தனர் என்பதற்கு மாறாக, தற்போது 48 இலட்சம் மக்கள் பயனடைந்து வருகின்றனர். 1995-96இல் சென்னையில் மொத்தம் 1 லட்சத்து 92 ஆயிரம் குடிநீர் இணைப்புகள் இருந்தன. இன்று 2 இலட்சத்து 37 ஆயிரம் குடிநீர் இணைப்புகள் உள்ளன.

* 1991 முதல் 1996 வரை கடந்த கால ஆட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அபிவிருத்தி பணிகளுக்காக 312 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால் கழக ஆட்சியில், இந்த நான்கரை ஆண்டு காலத்தில் 958 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

* இந்தியாவிலுள்ள மற்ற பெருநகரங்களோடு ஒப்பிடும்போது, குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரை அகற்றுதல் ஆகிய பணிகளில் சென்னைப் பெருநகரம் முதல் இடத்தை வகிக்கும் அளவிற்கு பணிகளைச் செய்துள்ளது. இந்தியாவின் மற்றொரு பெருநகரமான மும்பையைப் பொறுத்தவரையில், குடிநீர் வழங்குதல் 97 சதவிகிதப் பகுதிகளுக்கு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், கழிவுநீரகற்றுதலைப் பொறுத்தவரை, 75 சத விகிதப் பகுதிகளுக்கு மட்டுமே சேவைகள் வழங்கப் படுகின்றன. மற்றொரு பெரு நகரமான கல்கத்தாவில் 70 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டுமே

குடிநீர் வழங்குதலும், 60 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டுமே கழிவு நீரகற்றுதலும் நடைபெற்று வருகின்றன. இந்தியாவின் தலைநகரமான டெல்லியைப் பொறுத்த வரையில், 60 சதவிகிதப் பகுதிகளுக்கு மட்டும் குடிநீர் வழங்குதலும், 55 சதவிகித பகுதிகளுக்கு மட்டும் கழிவுநீரகற்றுதலும் நடைபெறுகின்றன.

* ஆனால் சென்னைப் பெருநகரத்தில் குடிநீர் வழங்குதலைப் பொறுத்தவரை, 97 சதவிகித பகுதிகளுக்கும், கழிவுநீரகற்றுதலைப் பொறுத்தவரை, 96 சதவிகித பகுதிகளுக்கும் சேவைகள் வழங்கப்படுகின்றன. உலக வங்கியின் தர உறுதிக் குழுவினர் 1999ஆம் ஆண்டு சென்னை பெருநகரத்திற்கு வந்து ஆய்வு செய்து, இங்கு அமைந்துள்ள குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் வசதிகள் தெற்காசியாவிலேயே மிகச் சிறந்தவையாகும் என்று பாராட்டு தெரிவித்துள்ளனர்.

* இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இங்கு வந்து ஆய்வு செய்த உலக வங்கியினர், சென்னைப் பெருநகர குடிநீர் வாரியம் நகரத்தில் வளர்ந்து வரும் குடிநீர் தேவையை நிறைவு செய்வதிலும், குடிநீரின் அளவு குறையும் போது குடிநீர் வழங்குதலை நிறைவாகச் செய்வதிலும் சிறந்த பணியாற்றி வருகிறதென்று பாராட்டியுள்ளனர்.

* வேளச்சேரி, கொளத்தூர், கொடுங்கையூர், சாலிக்கிராமம், விருகம்பாக்கம் பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் விரிவுபடுத்தப்பட்டது.

* இந்த ஆண்டு, கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் குறைவான மழை (சராசரி ஆண்டு மழையில் 50 விழுக்காடுகள் குறைவு) பெய்ததால் ஏரிகளில் நீர் இருப்பு குறைந்தது. எனவே, பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஏரிகளில் 1.12.1999லிருந்த 5 ஆயிரத்து 983 கோடி லிட்டர் தண்ணீர் இருப்பை கணக்கில் கொண்டும், மற்ற ஆதாரங்களான செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 2 ஆயிரத்து 123 கோடி லிட்டர், இரட்டை ஏரியிலிருந்து 99 கோடி லிட்டர் மற்றும் நிலத்தடி நீர் 4 கோடி லிட்டர் கூடுதலாக எடுத்து, அடுத்த பருவமழை வரை தொடர்ந்து தினசரி தடையின்றி குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து போரூர் ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்ல இரு ஏரிகளையும் இணைக்கும் 11 கிலோ மீட்டர் நீளமுள்ள தந்திக்கல் கால்வாயில் தூர்வாரும் பணி 23.12.1999 அன்று பொதுப்பணித் துறையினரால் முடிக்கப்பட்டது.

* குடிநீர் விநியோக முறையில் சென்னைப் பெரு நகரில் இதுவரை குடிநீர் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கு குழாய்கள் அமைத்து, குடிநீர் வழங்கும் பணிகளை நான்கு கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றியுள்ளோம்.

* நொச்சிக்குப்பத்தில் உவர் நீரை நன்னீராக்கும் நிலையம் 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, தினமும் ஒன்றரை இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

* வீட்டுக் குழாய் இணைப்பு மற்றும் விநியோகக் குழாய்களில் நீர்க் கசிவினை கண்டுபிடித்து, 87,000 இனங்களில் சீர்படுத்துதல் வேலையினை 52 கோடி ரூபாய் செலவில் முறையாக, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

* கழிவுநீர் வசதியற்ற கானகம் தரமணி, கொடுங்கையூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய இடங்களில் ஹட்கோ உதவி பெற்று 38 கோடி ரூபாய் செலவில் நிரந்தரமாக கழிவுநீர் அகற்றும் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆதிஆந்திரா குடியிருப்புகள் மற்றும் குடிசைகளுக்கு ஐந்து கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கழிவு நீர் அகற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் விநியோக அமைப்பு முறையினை 16 மண்டலங்களாகப் பிரித்து முதற்கட்டமாக திருவல்லிக்கேணி, வள்ளுவர் கோட்டம் ஆகிய நீர் வழங்கும் நிலையங்கள் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு 25-9-98 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

* இரண்டாம் கட்டப் பணியாக ஈக்காட்டு தாங்கல், கண்ணப்பர்திடல் ஆகிய இடங்களில் குடிநீர் விநியோக நிலையங்கள் கட்டும் பணிகள் முடிவடைந்துவிட்டன. சூளைமேடு, பட்டேல் நகர், குளத்தூர், வியாசர்பாடி, மைலாப்பூர், நந்தனம், வேளச்சேரி, பள்ளிப்பட்டு ஆகிய இடங்களில் விநியோக நிலையங்கள் கட்டும்பணிகள் 31 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

* தமிழ்நாடு குடிசைப் பகுதி குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணமான 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டும், ஒன்றரைக் கோடி ரூபாய் கட்டணத்தையும் அரசு தள்ளுபடி செய்யும்.

* சென்னையை அடுத்துள்ள நகரப் பகுதிகளான மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் நகராட்சிகளிலும் பம்மல், அனகாபுத்தூர், மீனம்பாக்கம், சிட்லபாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், வளசர வாக்கம், மதுரவாயல், போரூர் பேரூராட்சிகளிலும், பரங்கிமலை கன்டோண்மென்ட் பகுதியிலும், பொழிச்சலூர், ராமாபுரம் ஊராட்சிகளிலும் கீழ்நிலைத் தொட்டி, மேல் நிலைத் தொட்டி கட்டுமானப் பணிகள், நீரேற்று நிலையம், நீர் கொணரும் குழாய்கள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக முப்பது கோடி ரூபாய்க்கு பணிகள் தொடங்கப்பட்டு முடியும் நிலையில் உள்ளன. இத்திட்டத்தின் மூலம் பதினைந்து இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

* சென்னைக் குடிநீர் இரண்டாவது திட்டத்தின்கீழ், 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில், 16 கழிவுநீர் நிலையங்கள் மேம்படுத்துதல், 36 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில், குடிநீர் கசிவு கண்டறிந்து தடுப்புத் திட்டம் மேற்கொள்ளுதல், 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில், புழலேரியில் நீரேற்றும் நிலையம் கட்டுதல், 11 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில், குடிநீர் கொண்டு வரும் பெரும் குழாய்கள் அமைத்தல், 74 கோடி ரூபாய் செலவில், மண்டல குடிநீர் வழங்கும் குழாய்கள் அமைத்தல், 27 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில், மண்டல நீரேற்றும் நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* 84 இலட்சம் ரூபாய் செலவில், புழலேரியிலிருந்து போரூர் வரையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்துச் செல்லும் குழாய்கள் அமைக்கும் பணி, 81 இலட்சம் ரூபாய் செலவில் வள்ளுவர்கோட்டம், திருவல்லிக்கேணி மற்றும் கண்ணப்பர்திடல் ஆகிய இடங்களில் தலைமை நீர்நிலையங்கள் அமைக்கும் பணி, 7 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில், ஈக்காட்டுத் தாங்கல், சூளைமேடு ஆகிய இடங்களில் தலைமை குடிநீர் நிலையம் கட்டும் பணி, 2 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில்

வியாசர்பாடி ஏரிப் பகுதி, கொடுங்கையூர் மற்றும் கானகம் தரமணி ஆகிய பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் பணி, 84 இலட்சம் ரூபாய் செலவில், வேளச்சேரியில் கழிவு நீர் அகற்றும் வசதி, 82 இலட்சம் ரூபாய் செலவில், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் கழிவு நீர் அகற்றும் வசதி, 35 இலட்சம் ரூபாய் செலவில், சாரதி நகர், வ.உ.சி. நகர் ஆகிய பகுதிகளில் கழிவு நீர் அகற்றும் வசதி, 3 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில், கழிவு நீர் குழாய்களை மாற்றுப் பாதையில் அமைக்கும் பணி, 11 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில், தூர்ந்து போன குடிநீர்க் குழாய்களை புனரமைத்து தலைமைக் குடிநீர் விநியோக முறையை மேம்படுத்தும் பணி, 12 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில், ஆலந்தூருக்கான திட்டப் பணிகள் ஆகியவை ஹட்கோ நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* ஆலந்தூர் நகராட்சி மற்றும் பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், மீனம்பாக்கம், தோமையர்மலை, ராமாவரம், உள்ளகரம், புழுதி வாக்கம், போரூர், வளசரவாக்கம், மதுரவாயல் ஆகிய உள்ளாட்சிகள் மற்றும் அம்பத்தூர், ஆவடி நகராட்சிப் பகுதிகளில் வரும் ஜனவரி 2001 முதல் சென்னை நகரின் குடிநீர் விநியோக அமைப்பிலிருந்து கூடுதல் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு ஐந்து கோடி ரூபாய் செலவில், குடிநீர் வழங்கும் குழாய்களை இணைக்கும் பணி நடைபெறுகிறது.

* போரூர் ஏரிக்கரையில் 250 குதிரைத் திறன் கொண்ட 3 விசை இறைப்பான்கள் நிறுவப்பட்டு 21.1.2000 முதல் செங்குன்றத்திலிருந்து போரூர் வழியாக ஈக்காட்டுத்தாங்கல் வரை அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் கான்கிரீட் குழாயினைப் பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 7.5 கோடி லிட்டர் முதல் 10 கோடி லிட்டர் வரை தண்ணீர் 18.5 கிலோ மீட்டர் ரிவர்ஸ் பம்பிங் (Reverse Pumping) முறையில் இறைக்கப்பட்டு, செங்குன்றம் அருகே உள்ள கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையம் செல்லும் மூடுகால்வாயில் விடப்பட்டு, பின் சுத்திகரிக்கப்பட்டு நகருக்கு குடிநீராக வழங்கப்படுகிறது. பஞ்செட்டி, மீஞ்சூர் போன்ற பகுதியில் உள்ள பெரிய ஆழ்துளைக் கிணறுகளை மேம்படுத்தியும், மேலும் புதியதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டும் முன்பு எடுக்கப்பட்ட சுமார் 4 கோடி லிட்டர் தற்போது உயர்த்தப்பட்டு, 8 கோடி லிட்டர் வரை நிலத்தடி நீர் சென்னை குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

* மேலும் சென்னை நகருக்குள் உள்ள வாரியத்தின் கிணறுகளில் இருந்து, நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் தண்ணீர் எடுத்து விநியோகிக்கப்படுகிறது.

* குடிநீர்ப் பற்றாக்குறையினால் சில பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்க இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை, சமாளிக்க 338 லாரிகளில்ச் நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 850 நடைகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. ஏற்கனவே இருந்த 2 ஆயிரத்து 525 தொட்டிகளுடன் புதிதாக 2 ஆயிரம் குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. கூடுதலாக ஆயிரம் தொட்டிகள் வாங்கி தேவைக்கேற்ப வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* 1992 ஆம் ஆண்டு பருவ மழையின் அளவு 848 மில்லி மீட்டராக இருந்தது. இதனால், 1993 ஆம் ஆண்டு முழுவதும் சராசரியாக நாள் ஒன்றுக்கு 105 மில்லியன் லிட்டர் மட்டுமே விநியோகிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு பருவ மழையின் அளவு 607 மில்லி மீட்டர் மட்டுமே. ஆனால், இவ்வரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளினாலும், மூன்றாண்டுகள் தொடர்ந்து ஆந்திர மாநிலத்திலிருந்து கூடுதலாகத் தண்ணீர் பெறப்பட்டதாலும், இன்றும் நாளொன்றுக்கு 250 மில்லியன் லிட்டர் தண்ணீருக்கு குறையாமல் விநியோகிக்கப்படுகிறது.

* ஏற்கனவேயிருந்த சுமார் 4 ஆயிரம் இந்தியா மார்க் 2 பம்புகளைப் பழுது பார்த்ததுடன், புதிதாக 500 இந்தியா மார்க் 2 பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் தேவையைக் கருத்தில் கொண்டு, கூடுதலாக சுமார் ஆயிரம் பம்புகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

* தேவைக்கேற்ப கூடுதல் தொட்டிகள் வைத்து, அதிக லாரிகள் மூலம் குடிநீர் வழங்கவும், கூடுதலாக புதிய இந்தியா மார்க் 2 பம்புகள் அமைத்து நிலைமையைச் சமாளிக்கவும் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

* குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்ட 1993 ஆம் ஆண்டு, 49 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருந்தாலும், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் 22 கோடி லிட்டர் அதாவது நாள் ஒன்றுக்கு 11 கோடி லிட்டர் மட்டுமே வழங்கப் பட்டது. தற்போது இந்த அரசு எடுத்த பல்வேறு துரித நடவடிக்கைகளினால் 10 கோடி ரூபாய் செலவிலேயே 25 கோடி லிட்டர் குடிநீர் தினசரி

தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. வாரியம், தனது சொந்த நிதியில் இருந்தும், டுபிட்கோ (TUFIDCO), ஹட்கோ (HUDCO) நிறுவனங்களிடம் கடன் பெற்றும், கொடுங்கையூர், கோயம்பேடு, வில்லிவாக்கம், நெசப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் 51 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படுகின்றன. இது தவிர, அடையாறு, கூவம் நதிகள் மற்றும் பக்கிங்காம் கால்வாய்,ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றில் கழிவு நீர் கலக்கும் சுமார் 350 இடங்களை அடைத்து அக்கழிவுநீரை மறுபடியும் கழிவு நீர் அமைப்புகளுக்கு திருப்பிச் செலுத்தவும் 17 கோடி ரூபாய் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* 2 இலட்சத்து 98 ஆயிரத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில், 16 கழிவுநீர் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* 1 கோடியே 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், புழலேரியில் நீரேற்று நிலையம் கட்டப்பட்டுள்ளது.

* 11 கோடியே 94 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில், குடிநீர் கொணரும் பெருங்குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* 74 கோடியே 9 ஆயிரம் ரூபாய் செலவில், மண்டல குடிநீர் வழங்கும் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* 27 கோடியே 76 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில், மண்டல நீரேற்று நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

* 2 கோடியே 11 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன், 36 கோடியே 51 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவில், நீரியற் கழிவுகளை எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* 15 கோடியே 57 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் செலவில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை (permeate) தொழிற் சாலைகளுக்கு எடுத்துச் செல்லும் பணிகள் நடைபெற்றுள்ளன.

ஹட்கோ நிதியுதவியுடன்

* 83 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்துச் செல்லும் குழாய்கள் புழலேரியில் இருந்து போரூர் வரை அமைக்கப்பட்டுள்ளது.

* 80 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில், வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி, கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் தலைமை நீர் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* 7 கோடியே 12 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில், ஈக்காட்டுத்தாங்கல், சூளைமேடு ஆகிய இடங்களில் தலைமைக் குடிநீர் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

* 83 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில், வேளச்சேரியில் விடுபட்ட பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 82 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் வடக்குப் பகுதியில் கழிவு நீரகற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

* 34 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில், சாரதி நகர், வ.உ.சி. நகர், ஜோதி இராமலிங்க நகர், முத்துரங்கம் பிளாக், கட்டபொம்மன் பிளாக் ஆகிய பகுதிகளில் கழிவு நீரகற்றும் வசதிகள் அமைக்கப் பட்டுள்ளன. 3 கோடியே 91 இலட்சத்து 87 ஆயிரம் கழிவுநீர்க் குழாய்கள் மாற்றுப்பாதையில் அமைக்கப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே,

சென்னை மட்டுமல்ல, அன்னைத் தமிழக முழுதுமுள்ள அனைத்து கிராம நகரப் பகுதிகளிலும் இந்த அரசின் இணையற்ற திட்டங்கள் இடைவிடாது நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை, நாள்தோறும் நான் எழுதும் கடிதங்கள் வாயிலாக நீ அறிந்திடுகிறாய்! நீ அறிந்ததைப் பிறரும் அறிந்திடக் கடமை ஆற்றிடுவாய் என நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(30-11-2000)

2548. சாலைகள், பாலங்கள் என சாதனைகள் பாரீர்!

உடன்பிறப்பே,

போக்குவரத்துக்கு வான் வழிக்கென விமானங்கள் பயன்படுகின்றன. இருப்புப் பாதைக்கென இரயில்கள் இருக்கின்றன. கடல் வழி செல்வதற்குக் கப்பல்கள் உண்டு. இத்தனை போக்குவரத்து வசதிகள் இருந்தும் கூட பழங்காலந்தொட்டு இருந்து வருகிற அடிப்படைப் போக்குவரத்துக்கென அமைந்திடும் சாலை வசதிகளைப் புறக்கணிக்கத்தான் முடியுமா? அவற்றில் புதுமை காணாமல் இருந்திடத்தான் முடியுமா? முன்பு ஆண்டிருந்த முடியுடை மன்னர்கள் ஆட்சியைப் பற்றிச் சிறப்பிக்கும் வரலாறுகள், அவர்கள் வெட்டிய குளங்கள் - சீர்படுத்திய ஆறுகள் - வளர்த்திட்ட, மரங்கள் - என்று வர்ணனை செய்யும் போது, அவர்கள் அமைத்திட்ட சாலை வசதிகளையும் ஓர் சாதனையாகச் சொல்வதை அறிந்திருக்கிறோம் அல்லவா!

போக்குவரத்து விரிவாக்கத்திற்கு அடிப்படையாகச் சாலைகளும் - அவற்றுக்கு அவ்வப்போது தேவைப்படும் மேம்பாட்டுப் பணிகளும் - இன்றியமையாதவையாகும்.

தமிழகத்தின் சமூகப் பொருளாதார தொழில் வளர்ச்சிகளுக்குத் தேவையான அடித்தளங்களை உருவாக்கிடும் முயற்சிகளில், சாலை வசதிகளை உருவாக்கி, மேம்படுத்தி தொடர்ந்து பராமரிப்பதில் தனிக் கவனம் செலுத்துவதும் ஒன்றாகுமெனக் கருதி 1-8-1996 அன்று தலைமைச் செயலகத்தில் அதற்கென தனியானதொரு துறை உருவாக்கப்பட்டது.

கிராமப்புறங்களை, முக்கிய சாலைகளுடன் இணைக்கும் இணைப்புச் சாலைத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் 1976க்கு முன்பே தீட்டி அதில் வேகமான வளர்ச்சி கண்டது என்பதை அனைவரும் அறிவர்!

அவ்வழி நின்றுதான் 1998 மார்ச் 26ஆம் நாள் தமிழக வரலாற்றில் முதன் முறையாக நெடுஞ்சாலைத் துறைக்கென தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது.

நெடுஞ்சாலைத் துறைக்கு 1991 முதல் 1995 வரை அ.தி.மு.க. ஆட்சியிலே ஒதுக்கப்பட்ட நிதி 1632 கோடியே 45 இலட்சம் ரூபாய். 1996க்குப் பின் கழக ஆட்சியில் 3728 கோடியே 56 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாலங்களும், மேம்பாலங்களும்

* கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் நபார்டு நிறுவனம், ஹட்கோ நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவிகளுடனும், பல்வேறு சிறப்புத் திட்டங்களின் மூலமும் இதுவரை திறக்கப்பட்ட பாலங்கள் 247. அவற்றின் மதிப்பு ரூ.292 கோடி.

* மேலும் 200 பாலங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளன. 35 பாலங்களுக்கு 80 விழுக்காடும், 51 பாலங்களுக்கு 60 விழுக்காடும் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

* கட்டிமுடிக்கப்பட்டுள்ள 247 பாலங்களில் 1 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீடு உள்ள பாலங்களின் விவரங்கள் பின்வருமாறு:

* மதுரை மாவட்டத்தில் மதுரை அண்ணா நகர் 80 அடி சாலையையும், காமராசர் சாலையையும் இணைத்து வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 30.4.97 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதுரா கோட்ஸ் அருகில் புதிய ஜெயில் சாலையில் ஆறு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம் 13.11.99 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதுரை வைகை ஆற்றின் குறுக்கே ஏற்கனவே இருந்த கல்பாலம் தாம்போகிக்குப் பதிலாக 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலம் 23.2.2000 அன்று கட்டி முடிக்கப்பட்டது. மதுரைச் சுற்றுச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே 4 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப்பாலம் 25.5.2000 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதுரைச் சுற்றுச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும், 6 கோடி ரூபாய் செலவில் மற்றொரு மேம்பாலமும் 15.9.2000 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டம் மேலூர்-பூவந்தி திருப்புவனம் சாலையில்

தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் 31.10.1997 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதுரை - தென்காசி சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் 30.7.2000 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

* திருவாரூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை - முத்துப்பேட்டை சாலையில் திருவாரூரில் 5 கோடி ரூபாய் செலவில் சாலைகீழ் பாலம் அமைக்கும் பணிகள் 31.8.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* கடலூர் மாவட்டத்தில் கொத்தாச்சாரி - குண்டியமல்லூர் சாலையில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.7.2000 அன்று முடிவடைந் துள்ளன. முருகர்குடி - கிள்ளிமங்கலம் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே 1 கோடியே 21 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* திருவள்ளூர் மாவட்டத்தில் பெரியபாளையம் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 2.1.1999 அன்று முடிவடைந்தன.

* தண்டலம் - பேரம்பாக்கம் சாலையில் 2 கோடியே 33 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந் துள்ளன.

* திருவொற்றியூர் - பொன்னேரி சாலையில் நாப்பாளையம் அருகில் 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 2.1.99 அன்று முடிவடைந்தன.

* இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமம் - முதுகுளத்தூர் சாலையில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 31.10.2000 அன்று முடிக்கப்பட்டுள்ளன.

* சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி - மறவமங்கலம் சாலையில், 1 கோடியே 29 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.3.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* இளையான்குடி - மறவமங்கலம் சாலையில், 1 கோடியே 11 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள மற்றொரு பாலத்தின் பணிகள் 30.8.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* அதே இளையான்குடி - மறவமங்கலம் சாலையில், 2 கோடியே 22 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஓர் உயர் மட்டப் பாலத்தின் பணிகள் 30.9.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* திருவண்ணாமலை மாவட்டத்தில், வந்தவாசியிலிருந்து கொடநல்லூர் சேதாரக்குப்பம் சாலை வழியாக ஒசூர் செல்லும் சாலையில், 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 30.4.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* புதுப்பாளையம் சாலையில், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.9.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* போளூர் ஜமுனாமத்தூர் ஆலங் காயம் சாலையில், 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* சென்னையில் ராயபுரத்தில், இரண்டு இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக, 17 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பெரிய மேம்பாலத்தின் பணிகள் 15.11.1999 அன்று முடிவடைந்தன.

* கிண்டி இரயில் நிலையத்தின் அருகில், 5 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தின் பணிகள் 30.4.2000 அன்று முடிவடைந்தன.

* சென்னை - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், சென்னை யிலிருந்து 7வது கிலோ மீட்டரில் 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டப் பாலத்தின் பணிகள் 31.3.1998 அன்று முடிவடைந்துள்ளன.

* சென்னை - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கொசத்தலை ஆற்றின் குறுக்கே 2 கோடியே 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் பி.ஓ.டி. திட்டத்தின்கீழ் விரிவுபடுத்திக்

கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் முடிவடைந்து அணுகுசாலைப் பணிகள் நடைபெறுகின்றன.

* திருச்சி மாவட்டத்தில், 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் தில்லைநகர் சாலையையும், கரூர் புறவழிச்சாலையினையும் இணைக்கும் இணைப்புச் சாலையும், அதில் அமைந்துள்ள பாலத்தின் கட்டுமானப் பணிகளும் 31.12.99 அன்று முடிவடைந்தன.

* திருச்சி - நாமக்கல் சாலையில், 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ள ஒரு பாலத்தின் பணிகளும், அதே சாலையில், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ள ஒரு பாலத்தின் பணிகளும் 31.10.2000 அன்று முடிவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி நகரில் மதுரை - கன்னியாகுமரி புறவழிச்சாலையுடன் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் 31.12.99 அன்று முடிவடைந்துள்ளன.

கோவை மாவட்டத்தில், கோவை நகராட்சி சாலையை மேம்பாடு செய்து, நொய்யல் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 28.5.99 அன்று முடிவடைந்துள்ளன.

* கோவை பெரிய கடைவீதியில் அமைந்துள்ள கீழ்வழிப் பாதை 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு பணிகள் 15.11.99 அன்று முடிவடைந்துள்ளன.

* பெரம்பலூர் மாவட்டத்தில், ஆலாத்துக்கரை - கோலக்காநத்தம் சாலையில், 1 கோடியே 17 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.10.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* கிருஷ்ணாபுரம் - பூலாம்பாடி சாலையில், 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.7.2000 அன்று முடிவடைந்தன.

* விழுப்புரம் மாவட்டத்தில், வேட்டைக்காடு - கயத்தாறு சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.9.2000 அன்று முடிவடைந்துள்ளன.

* விழுப்புரம் - சென்னை சாலையில், கீழ்பெரும்பாக்கத்தில் இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக, 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கீழ்பாலத்தின் பணிகள் 31.3.2000 அன்று முடிவடைந்தன.

* விருதுநகர் மாவட்டத்தில், சிவகாசி - கழுகு மலைச் சாலையில் 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.8.2000 அன்று முடிவடைந்தன.

* காஞ்சிபுரம் மாவட்டத்தில், பழவந்தாங்கல் இரயில் நிலையத்தின் அருகில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரயில்வேகீழ் பாலத்தின் பணிகள் 2.6.1997 அன்று நிறைவேறின.

* மதுராந்தகம் - வெண்நாகுபட்டு சாலையிலிருந்து தச்சூர் செல்லும் சாலையில், 1 கோடியே 10 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.8.2000 அன்று முடிவடைந்தன.

* தருமபுரி மாவட்டத்தில், காவேரிப்பட்டினம் - காக்கன்கரை சாலையில் 5 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் ஹட்கோ உதவித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

* வேலூர் மாவட்டத்தில், 4 கோடி ரூபாய் செலவில் அம்முண்டி பூட்டுதாக்கு சாலையில் ஒரு புதிய பாலத்தின் கட்டுமானப் பணிகளும், பூட்டுதாக்கு தாம்போகி சாலையில் விரிவுபடுத்தி கட்டப்பட்ட பாலத்தின் பணிகளும் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

* புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை ஏம்பல் சாலையில் 1 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தி கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

* கரூர் மாவட்டத்தில், பள்ளப்பட்டு - மண்மாரி சாலையில் 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தி கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

* சேலம் மாவட்டத்தில், சேலம் புறவழிச்சாலையில் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.4.2000 அன்று முடிவடைந்தன.

* கொன்னன் செட்டி - ராஜபட்டினம் சாலையில் 1 கோடியே 35 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.3.2000 அன்று முடிவடைந்தன.

சாலை வசதிகள்

* 1.7.1972இல் 1500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டம் கழக அரசினால் அறிமுகம் செய்யப்பட்டது.

* 1990இல் 1000க்குமேல் மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1996க்குப் பின், 517 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதிகளைப் பெற்றன.

* இணைப்புச் சாலை வசதி இல்லாத 1000 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது.

* இணைப்புச் சாலைகள் உருவாக்கும் திட்டத்தின் தொடர்ச்சியாக 1999-2000இல் முதற்கட்டமாக, 500க்கு மேல் 1000க்குள் மக்கள் தொகை கொண்ட 340 கிராமங்களுக்கு ரூ.123.70 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன.

* 2000-2001இல் ரூ.90.75 கோடி செலவில் 140 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு விட்டன.

* முந்தைய அரசு காலத்தில், 5 ஆண்டுகளில் இணைப்புச் சாலைத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 186 கோடி ரூபாய்.

* ஆனால், கழக அரசு 1996 முதல் 2000 வரை நான்கு ஆண்டுகளில் மட்டும் இணைப்புச் சாலைகளுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 433 கோடி ரூபாய். மேலும், 72 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

* நபார்டு வங்கி உதவியில் ரூ.410.23 கோடி மதிப்பீட்டில் 4976.20 கி.மீ. நீள ஊரகச் சாலைகள் எடுக்கப்பட்டு, 4053 கி.மீ. நீளப் பணிகள் 294.30 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன.

* 4154.15 கி.மீ. நீள மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளின் பணிகள் ரூ.271.09 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 3588 கி.மீ. நீளப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* 1977க்குப்பின் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப் படாததால் நெடுஞ்சாலைகள் சரிவரப் பராமரிக்கப்படவில்லை.

இக்குறையைப் போக்கிட 1998-99இல் நியமிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் 10,000 பேர்.

ஆரச்சாலைகள்

* ஹட்கோ உதவியுடன் சென்னை மாநகர் நோக்கி வரும் 251.60 கி.மீ. நீள ஆரச்சாலைகளும், 24 பாலங்களும், 212.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் அமைந்துள்ள 11 பாலங்களின் கட்டுமானப் பணிகளும், 128.90 கி.மீ. நீளச் சாலைப் பணிகளும் ரூ. 103 கோடியே 24 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 122.70 கி.மீ. நீளத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

* நிலஎடுப்பு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், 1000த்திற்கு மேற்பட்ட மின் கம்பங்களையும், 50க்கு மேற்பட்ட மின்மாற்றிகளையும் வேறு இடங்களுக்கு மாற்றுதல் முதலிய பணிகளும் விரைவுபடுத்தப்பட்டுள்ளதால், இந்த ஆரச்சாலைகளின் பணிகள் விரைவில் நிறைவு பெற்று சென்னையை நோக்கி வரும் சாலைகள் அனைத்தும் அழகும் வலிவும் பெறும். அமைக்கப்பட்டுவரும் புறவழிச்சாலைகள்:-

* ரூ.49.85 கோடி செலவில் இரண்டு பெரிய பாலங்கள் உட்பட 18.80 கி.மீ. நீள தாம்பரம் - மதுரவாயல் - சென்னை புறவழிச்சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* 24.70 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 3 மேம்பாலப் பணிகளும் அடங்கிய மதுரைச் சுற்றுச்சாலை அமைக்கும் பணி ரூ.47.35 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

* ரூ.110 கோடி செலவில் 28.40 கி.மீ. நீளக் கோவை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

* 1841.33 கி.மீ. நீள சாலைப் பணிகள் இயந்திரம் மூலம் தார்ச்சாலைகளைப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 1241.68 கி.மீ. நீளத்திற்குரிய பணிகள் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள சாலைகளின் பணிகள் 31.12.2000த்திற்குள் முடிவடையும் நிலையில் உள்ளன.

* பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத் திட்டத்தின்கீழ், திருப்பூர் நகர் மற்றும் அதன் சுற்றுப்புறச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 57.80 கி.மீ. சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்டப் பாலமும் ரூ.15.60 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

* கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 210 கி.மீ. நீள சாலை ரூ.17.19 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

* தேசிய நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக கடந்த ஆட்சியில் 118 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், 653.7 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக கடந்த ஆட்சியில் பாலங்கள் கட்டிட 9.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த நான்கரை ஆண்டு காலத்தில், 120.82 கோடி ரூபாய் செலவில் 31 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

* 1946 ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்த தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1637 கிலோ மீட்டர். 1991 ஆம் ஆண்டில் 2002 கி.மீ. 1996 ஆம் ஆண்டிலும் 2002 கிலோ மீட்டர் மட்டுமே. தற்போது மொத்த தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3864 கி.மீ. கடந்த நான்கரை ஆண்டுகளில் கூடுதலாக ஆக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை 1862 கிலோ மீட்டர். மாநில நெடுஞ்சாலைகள்,

* 1991-92இல் மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 1896 கி.மீ. 1995-96இல் தமிழகத்தில் இருந்த மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 1934 கி.மீ. 62 கிலோ மீட்டர் தான் அதிகம். 1996க்குப்பின் தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ள மாநில நெடுஞ் சாலைகளின் நீளம் 2258 கி.மீ. ஆக மொத்தம், தற்போதுள்ள மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4192 கி.மீ.

கிழக்குக் கடற்கரைச் சாலை

* கிழக்குக் கடற்கரைச் சாலையை உருவாக்கிடும் திட்டத்தின்கீழ், 1970 ஆம் ஆண்டில் கடலோரப் பகுதிகளில் பெரிய பாலங்களைக் கட்டிட கழக அரசு திட்டமிட்டது.

* பாலாற்றின்மீது வயலூர், தேன்பாக்கம் ஆகிய இடங்களில் பாலங்களைக் கட்ட அப்போது ஆணையிடப்பட்டது.

* 1990ஆம் ஆண்டில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னையிலிருந்து கடலூர் வரை கிழக்குக் கடற்கரைச் சாலையின் முதற்கட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆணையிடப்பட்டது.

* அதன் தொடர்ச்சியாக, 1996இல் கழக அரசு அமைந்த பிறகு இப்பணிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு ஏறத்தாழ, 102 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு சென்னை-கடலூர் இடையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை 16.1.98 அன்று போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது.

* இதன் தொடர்ச்சியாக சிதம்பரம், நாகை வழியாக தூத்துக்குடி வரை செல்லும் 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அமைப்பதற்கும், ஆர்க்காடு முதல் போளூர், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், உளுந்தூர் பேட்டை, விழுப்புரம், கும்பகோணம் வழியாக திருவாரூர் வரை செல்லும் 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அமைப்பதற்கும்,

* 80 கி.மீ. நீளத்தில் 12 நகரங்களுக்கு புறவழிச் சாலைகளை அமைப்பதற்கும்,

* 2600 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் பராமரிப்பிற்கும் உலக வங்கியிடம் இருந்து 350 கோடி ரூபாய் கடன் உதவி பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* நெடுஞ்சாலைத் துறையின்கீழ் 1996க்குப்பின் 1640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 21,555 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளில் இதுவரை 13,775 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகளும் அடுத்தடுத்து முடியும் நிலையில் விரைவாக நடைபெற்று வருகின்றன.

ஊரக வளர்ச்சித்துறை மூலம் சாலை மேம்பாட்டுப் பணிகள்

* புதிதாக அமைக்கப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 10,000 கி.மீ.

* இதுவரை 1,672 கோடி ரூபாய் செலவில் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 20,900 கி.மீ.

* 2000-2001 முடிவுக்குள் மேலும் 7,669 கி.மீ. கிராமச் சாலைகள் ரூ.900 கோடி செலவில் தார்ச் சாலைகளாக மாற்ற

திட்டமிடப்பட்டு பணிகள் நடை பெறுகின்றன. இதில் 1999-2000இல் 3600 கி.மீ.

* தார்ச்சாலை அமைக்கும் பணியும், 2800 கி.மீ. சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சிய பணிகள் 2000-2001இல் முடிவடையும்.

* 290.50 கோடி ரூபாய் செலவில் 2,905 கி.மீ. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

* 1996க்குமுன் பேரூராட்சிகளில் இருந்த சிமெண்ட் சாலை நீளம் 380கி.மீ. இது நான்கு ஆண்டுகளில் 909 கி.மீட்டராக அதிகரிப்பு.

* பேரூராட்சிகளில் தார் சாலைகளின் நீளம் 733 கி.மீட்டரிலிருந்து 1996க்குப்பின் 3421 கி. மீட்டராக அதிகரிப்பு.

* நபார்டு நிறுவனத்தின் மூலம் - ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன் ஊரகப் பகுதிகளில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி முதலியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.780.5 கோடி.

* சென்னை மாநகரில், 10 சிறு மேம்பாலங்கள் மாநகரில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த சாலைச் சந்திப்புகளில் மொத்தம் 115 கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 10 மேம்பாலங்களைக் கட்டுவதற்கு 31.1.99 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

* இந்த மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகள் 15.3.99 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. அந்த 10 மேம்பாலங்களில், பீட்டர்ஸ் சாலை - கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பிலும், சர்தார் பட்டேல் சாலை - காந்தி மண்டபம் சாலை சந்திப்பிலும், கட்டப்பட்ட இரண்டு மேம்பாலங்கள் 5.2.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

* பின்னர், பீட்டர்ஸ் சாலை - வெஸ்ட்காட் சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலமும், டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலமும், சர்தார் பட்டேல் சாலை - டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சாலை சந்திப்பில் கட்டப்பட்ட ஒரு மேம்பாலமும், 6.5.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

* பின்னர், சென்னை மியூசிக் அகாடமி அருகில் டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலை - டி.டி.கே. சாலை சந்திப்பிலும், டி.டி.கே. சாலை - சர்.சி.பி. இராமசாமி சாலை சந்திப்பிலும் கட்டப்பட்ட 2 புதிய மேம்பாலங்கள் 12.8.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

* புரசைவாக்கம் டவுட்டன் பகுதியிலும், எழும்பூர் பாந்தியன் சாலையிலும் கட்டப்பட்டுள்ள 2 மேம் பாலங்கள் 2.12.2000 அன்று திறக்கப்பட உள்ளன.

* அவற்றை அடுத்து, பெரம்பூர் இரயில்வே நிலையத்தின் அருகில் திருத்திய மதிப்பீட்டின்படி, 34.84 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் மேம்பாலம் அடுத்த ஆண்டில் (2001இல்) திறக்கப்படவுள்ளது. முந்தைய அரசு ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் கட்டிமுடித்த பாலங்களின் எண்ணிக்கை 53. செலவு 26 கோடியே 10 இலட்சம் ரூபாய்.

* முந்தைய அரசு காலத்தில் 5 ஆண்டுகளில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட ரயில்வே மேம்பாலங்கள் எண்ணிக்கை 5. கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட ரயில்வே மேம்பாலங்களின் எண்ணிக்கை 40. 1996க்குப் பின் கட்டி முடிக்கப்பட்ட ரயில்வே மேம்பாலங்கள் 10.

உடன்பிறப்பே,

பாலங்கள், சாலைகள் எனப் பல்வேறு சாதனைகளின் பட்டியல், படித்தறிவதற்கே நேரம் போதாது! உன் போன்றோர் எடுத்துச் சொல்லித்தானே மக்களுக்கு விளக்கிட வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(01-12-2000)

2549. பொதுப்பணித்துறையில் குவியும் புதுப்பணிகள்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் அரசுத் துறைகளில் பொது மராமத்து இலாக்கா என ஒன்றுண்டு. அந்த இலாக்காவின் அமைச்சர் மராமத்து மந்திரி என அழைக்கப்படுவார். ஆங்கிலத்தில் P.W.D. எனப்படும் அந்த Public Works Department ஐத்தான் பொதுப்பணித்துறை என்ற தலைப்பில் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த அமைச்சரவையில் நான் நிர்வகித்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

1969ல் அறிஞர் அண்ணா மறைவுக்குப் பிறகு, என் தலைமையில் என்னை முதல்வராகக் கொண்டு அமைச்சரவை அமைந்தது எனினும், பொதுப் பணித்துறையிடம் எனக்கு ஒரு சிறப்பான கவனம் என்றைக்குமே இருந்து வந்திருக்கிறது. இன்னமும் இருந்து வருகிறது.

தனித்தனி துறைக்கென அமைச்சர்கள் இருப்பினும், எல்லாத் துறைகளிலும் ஒரு முதல்வருக்கு அக்கறையுண்டு. அதில் ஓர் ஆர்வம், என்னுடைய பழைய துறையான பொதுப்பணித்துறையிடம் சற்று கூடுதலாகவே உண்டு. எல்லாம் மக்களின் நன்மைக் காகத்தான். இத்துறையின் சார்பில் நிகழ்த்தப்படும் சாதனைகளின் பட்டியல் நேர்த்தியானது மட்டுமல்ல, மிக நீளமானதுங் கூட! அது வருமாறு :-

காவிரிப் பிரச்சினை

* சட்டப்பேரவையில் கழக அரசின் சார்பில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, 1990ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. ஜூன் 91இல் வழங்கப்பட்ட காவிரி நதிநீர் நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த கழக அரசின்

வலியுறுத்தலுக்கிணங்க, பிரதமர் வாஜ்பாய் அவர்கள், 9 மணி நேரம் அமர்ந்துபேசி கர்நாடக அரசை சம்மதிக்க வைத்ததன் காரணமாக 1998இல் காவிரி நீர் பிரச்சினைக்காக பிரதமர் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டது.

* பொதுப்பணித்துறை சார்பில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு பணிகளைச் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெருமளவிற்கு கோரப்படுகின்றன. எனவே இதிலே எந்தவிதமான தவறும் நேர்ந்து விடக் கூடாது என்பதற்காக இந்த அரசு பொறுப்பேற்றவுடன் சில கொள்கை முடிவுகளை எடுத்தது. அவைகளில் முக்கிய முடிவுகள் சில வருமாறு :-

* கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் துறையின் மதிப்பீட்டைக் காட்டிலும் அதிக விழுக்காட்டில் ஒரே ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியை ஒப்படைக்கும் முறை இருந்தது. இந்த முறையை ஒழித்து ஒப்பந்தக்காரர்களிடையே போட்டியை உருவாக்கி ஊழலை தவிர்த்துள்ளது இந்த அரசு. இதன் காரணமாக நூற்றுக்கணக்கான பணிகளுக்கு துறை மதிப்பீட்டிற்கும் குறைவாக ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

* அரசுக்கு வந்து ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற வேண்டும் என்ற நிலையை மாற்றி, அதிகாரங்களைப் பரவலாக்கி, துறை பொறியாளர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது இந்த அரசு. இதனால் காலதாமதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

* ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் கொண்டு வந்துள்ளோம். இந்தச் சட்டத்தின் கீழ், எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஒப்பந்தப் புள்ளிகளின் தொகுப்பு வெளியிடப்படுகிறது. இந்த முயற்சிகளினால் இந்த அரசு 100 கோடி ரூபாய்க்கும் மேலாக சேமிப்பை எய்தியுள்ளது.

* முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் சிறுபாசனத் திட்டங்கள் உட்பட தமிழகத்தில் பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 568 கோடியே 56 இலட்சம் ரூபாய். 1996க்குப் பின் இந்த அரசு ஒதுக்கீடு செய்த தொகை 1,902 கோடியே 51 இலட்சம் ரூபாய்.

* முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் மேற்கொண்ட பாசனத் திட்டங்கள் மூலம் பயன் பெற்ற நிலம் 11,809 எக்டேர். 1996க்குப் பின் இந்த ஆட்சியில் பயன்பெற்ற நிலம் 40,033 எக்டேர்.

* கிருஷ்ணா நீரை சென்னை மக்களின் குடிநீருக்காக வழங்கிட ஆந்திர மாநில எல்லையிலிருந்து பூண்டி ஏரிக்கு 25 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்ப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

* பூண்டியிலிருந்து செங்குன்றம் ஏரி, செம்பரம்பாக்கம் இணைப்புக் கால்வாய் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

* செங்குன்றம் ஏரி, பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரண்டு அடி உயரத்திற்குக் கூடுதலாகத் தண்ணீர் சேமிக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

* முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து இந்த அரசின் சார்பில் பல கடிதங்கள் எழுதப்பட்டதோடு திருவனந்தபுரத்திலும், டெல்லியிலும் கேரள முதல்வரோடு உச்சக்கட்ட பேச்சுவார்த்தை நடத்தியதோடு நீதிமன்றத்திலே விரைவிலே முடிவு காணக்கூடிய ஒரு சூழ்நிலையையும் உருவாக்கியிருக்கிறோம்.

காவிரி கழிமுகப் பகுதியில் தூர்வாரல்

* 1997-98 முதல் 82.14 கோடி ரூபாய் செலவில் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் காவிரி கழிமுகப் பகுதி வாய்க்கால்களில் தூர்வாரப்பட்டதுடன் நெய்வேலி காட்டாமணிச் செடிகளும் அகற்றப்பட்டன. இதன் காரணமாக அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய முடிந்தது, விளைச்சலும் அதிகமாகக் கிடைத்தது.

* 31.3.2000 முடிய மொத்தம் 7523 கி.மீ. நீளம் ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* 39.91 கோடி ரூபாய் செலவில் தொகுதிக்கு ஒரு ஏரி வீதம் ஆண்டுக்கு 200 சட்டமன்றத் தொகுதிகளில் 1997, 1998 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப் பட்ட 400 ஏரி குளங்களில் 381 ஏரி குளங்களில் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

* 22.81 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ள மாநில ஏரிப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 560 கண்மாய்களும், 475 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

* 111 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் வீராணம் ஏரியின் 22 கி.மீ. நீள வடவாறு வரத்துக் கால்வாயைச் சீரமைத்து, ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்களைத் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்தில் இதுவரை 42 கோடி ரூபாய் மதிப்புடைய பணிகள் முடிவடைந்துள்ளன. விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் வாய்க்கால் சீரமைப்புத் திட்டம் ரூ.90 இலட்சத்தில் முடிக்கப் பட்டுள்ளது. இதனால் 650 எக்டோ் நிலம் பயன் பெறும்.

* இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவேரி, ரகுநாத காவேரி, சங்கரத்தேவன் பாசனக் கால்வாய்களில் ரூ.7.41 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி பகுதியில் 22,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளன.

* தேனி மாவட்டம் கோம்பையில், 100 ஆண்டு காலக் கோரிக்கையான 18ஆம் கால்வாய்த் திட்டம் 26 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 25.5.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.

* சென்னை ஓட்டேரி நல்லாவில், ரூபாய் ஒரு கோடியே 12 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டது.

நடுத்தர - சிறுபாசனத் திட்டங்கள்

* கடந்த நான்கு ஆண்டுகளில் 396.20 கோடி ரூபாய் செலவில் நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டதில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவிரி வாய்க்கால் சீரமைப்பு, லால்குடி வட்டம் ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டும் பணி, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் கடானா நதி நீர்த்தேக்க பாசன விரிவாக்கத் திட்டம், நிலக்கோட்டை வட்டம் சிறுமலை யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி. கரூர் வட்டம் குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் அமைந்துள்ள வெள்ளியணை மற்றும்

3 குளங்களுக்கு நீர்வரத்தினை அதிகரிக்கச் செய்யும் திட்டம். மதுரை வண்டியூர் குளத்தைத் தூர்வாரி, நவீனப்படுத்தி, பூங்கா அமைத்து அழகுபடுத்தும் திட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் கால்வாய், சடையனேரி வாய்க்கால் சீரமைத்தல். லால்குடி வட்டத்தில் உப்பாறு ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல். சென்னம்பட்டி கிராமத்தில் முதலை முத்துவாரியின் குறுக்கே ஏரி அமைத்தல். தாராபுரம் வட்டத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். சிவகங்கை மாவட்டத்தில் ராஜகம்பீரம் ஏரி மற்றும் பிற 15 ஏரிகளுக்கு நீர் வழங்கிட வைகை வெள்ள நீரைத் திருப்புதல். காவிரியில் மேலணையை (முக்கொம்பு) வலுப்படுத்துதல் ஆகிய 13 திட்டங்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* 19.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு உதவியுடன் 17 திட்டங்கள் உட்பட நிறைவேற்றப்படும் 61 சிறப்பு சிறுபாசனத் திட்டங்களில் இதுவரை 27 திட்டங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் தாராபுரம் ஆயக்கட்டில் இருந்து நீக்கப்பட்ட சுமார் 23,000 ஏக்கர் நிலங்கள் கீழ்பவானி ஆயக்கட்டில் சேர்க்க உத்தரவிடப்பட்டது.

* நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், தமிழகம் முழுவதும் ரூ.768 கோடி மதிப்பில் 636 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள், நெல்லை மாவட்டத்தில் - அடவிநயினார் நீர்த்தேக்கத் திட்டம், நாங்குநேரி கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் கிருதமால் நதி அணைத் திட்டம், தேனி மாவட்டத்தில் - சோத்துப்பாறை நீர்த் தேக்கத் திட்டம் ஆகியவை முடியும் தருவாயிலும், வேலூர் மாவட்டத்தில் மோர்தானா நீர்த் தேக்கத் திட்டம், இராஜா தோப்புக்கானாறு நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய பணிகள் 233.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன. மேற்சொன்ன 9 நீர்த்தேக்கத் திட்டப் பணிகளில் மோர்தானா நீர்த்தேக்கம் 2.9.2000 அன்றும், நம்பியாறு நீர்த்தேக்கம், பொய்கையாறு நீர்த்தேக்கம் ஆகியவை 2.10.2000 அன்றும் திறக்கப்பட்டுள்ளன.

* கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களின் பட்டியல் வருமாறு :-

1. வேலூர் மாவட்டத்தில், மோர்தானா நீர்த் தேக்கத் திட்டம். இதனால் குடியாத்தம் மற்றும் வேலூர் வட்டங்களில் 34 கிராமங்களில் மொத்தமாக சுமார் 4022 எக்டேர் நிலம் பயனடையும்.

2. திருநெல்வேலி மாவட்டத்தில், நம்பியாறு நீர்த் தேக்கத் திட்டம். இதனால் இராதாபுரம் வட்டத்தில் உள்ள கோட்டைக் கருங்குளம், உருமான்குளம், இராதாபுரம், கரைச்சிட்டிபுதூர், கஸ்தூரிரங்கபுரம், குமாரபுரம், முத்துமோதுமொழி, திசையன்விளை ஆகிய கிராமங்களில் மொத்தமாக சுமார் 706 எக்டேர் நிலம் பயனடையும்.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில், பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம். இதனால் தோவாளை வட்டத்தில், செண்பகராமன்புதூர், ஆரல்வாய்மொழி மற்றும் இராதாபுரம் வட்டத்தில் பழவூர் ஆகிய கிராமங்களில் மொத்தமாக சுமார் 451 எக்டேர் நிலம் பயனடையும். மேலும் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நான்கு கிராமங்களுக்கு 20 மில்லியன் கன அடி என்ற அளவில் குடி தண்ணீர் வழங்கவும் வகை செய்கிறது.

4. வேலூர் மாவட்டத்தில், பாலாறு பாசன அமைப்புத் திட்டம் - இதன் மதிப்பீடு 14 கோடி ரூபாய் - இதனால் வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 32,786 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும்.

5. வேலூர் மாவட்டத்தில், பொன்னை அணைகட்டு பாசன அமைப்புத் திட்டம் - இதன் மதிப்பீடு 5.50 கோடி ரூபாய் - இதனால் வேலூர் மாவட்டத்தில் 23,104 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

6. கடலூர் மாவட்டத்தில், தொழுதூர் மற்றும் பிலாந்துறை பாசன அமைப்புத் திட்டம் - இதன் மதிப்பீடு 3.50 கோடி ரூபாய் - இதன் மூலம் கடலூர் மாவட்டத்தில் 36,855 ஏக்கர் நிலம் பயனடையும்.

7. தர்மபுரி மாவட்டத்தில், பாரூர் நெடுங்கல் பாசன கால்வாய் புனரமைப்புத் திட்டம் - இதன் மதிப்பீடு

4 கோடியே 8 இலட்சம் ரூபாய் - இதனால் தர்மபுரி மாவட்டத்தில் 6,400 ஏக்கர் நிலம் பயனடையும்.

8. தர்மபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி நீர்த் தேக்க வலது, இடதுபுற கால்வாய்கள் புனரமைப்புத் திட்டம் - மதிப்பீடு 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் - இதனால் தர்மபுரி மாவட்டத்தில் 8,994 ஏக்கர் நிலம் பயனடையும்.

9. தர்மபுரி மாவட்டத்தில், வாணியாறு நீர்த் தேக்கக் கால்வாய் புனரமைப்புத் திட்டம் - இதன் மதிப்பீடு 2 கோடியே 20 இலட்சம் ரூபாயாகும். தர்மபுரி மாவட்டத்தில் இதன் மூலம் 4003 ஏக்கர் நிலம் பாசன வசதி உறுதி பெறும்.

10. தர்மபுரி மாவட்டத்தில், பாம்பாறு நீர்த் தேக்கக் கால்வாய் புனரமைப்புத் திட்டம் - இதற்கான செலவு சுமார் ஒருகோடி ரூபாய் - இதனால் 4003 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

11. தர்மபுரி மாவட்டத்தில், சூளகிரி சின்னாறு கால் வாய் மேம்பாட்டுத் திட்டம் - இதற்கான செலவு ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் - இதனால் 1754 ஏக்கர் பாசன வசதி உறுதிபெறும்.

12. தர்மபுரி மாவட்டத்தில், மாறாண்டஹள்ளி, தும்பள ஹள்ளி கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் - செலவு 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் - 4,645 ஏக்கர் பாசன வசதி பெறும்.

13. திருவண்ணாமலை மாவட்டத்தில், சாத்தனூர் இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் புனரமைப்புத் திட்டம். இதற்கான செலவு 18 கோடி ரூபாய். 45,014 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

14. திருவண்ணாமலை மாவட்டத்தில், சாத்தனூர் அணை பாதுகாப்புத் திட்டம் - செலவு 7 கோடி ரூபாய்.

15. விழுப்புரம் , வீடூர் அணை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் - செலவு சுமார் ஒரு கோடி ரூபாய் - 3212 ஏக்கர் நிலம் பயனடையும்.

16. விழுப்புரம் மாவட்டத்தில், திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் அதன் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் - 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீடு - 35,439 ஏக்கர் நிலம் பயனடையும்.

17. கடலூர் மாவட்டத்தில், மணிமுத்தாநதி கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் - செலவு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் - 400 ஏக்கர் நிலம் பயனடையும்.

18. கடலூர் மாவட்டத்தில், கோமுகி நதி நீர்த் தேக்கக் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் - செலவு 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் - 4991 ஏக்கர் நிலம் பலனடையும்.

19. கடலூர் மாவட்டத்தில், மேமாத்தூர் அணை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் - செலவு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய்.

20. திருவள்ளூர் மாவட்டத்தில், ஆரணியாறு அணைக்கட்டு மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் - 3 கோடி ரூபாய் செலவு - 6,079 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

21. திருவண்ணாமலை மாவட்டத்தில், செய்யாறு அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் - செலவு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய். இதனால் 35,427 ஏக்கர் நிலம் பயனடையும்.

22. தர்மபுரி மாவட்டத்தில், ஈச்சம்பாடி அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் - செலவு சுமார் 80 இலட்சம் - இதனால் 6252 ஏக்கர் நிலம் பயனடையும்.

23. விழுப்புரம் மாவட்டத்தில், கீழ்க்கண்டாரக் கோட்டை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் - செலவு சுமார் 90 இலட்சம்.

24. திருச்சி மாவட்டத்தில், கல்லகம் ஆண்டி யோடைத் திட்டம் - செலவு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் - 410 ஏக்கர் நிலம் புதிய பாசன வசதி பெறும்.

25. விருதுநகர் மாவட்டத்தில், குள்ளூர் சந்தை பாசன மேம்பாட்டுத் திட்டம் - சுமார் 52 இலட்சம் ரூபாய்

செலவு - 2,570 ஏக்கர் நிலம் இதனால் பாசன உறுதி பெறும்.

26. விருதுநகர் மாவட்டத்தில், வெம்பக்கோட்டை அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் - செலவு சுமார் 36 இலட்சம் ரூபாய் - 8105 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

27. விருதுநகர் மாவட்டத்தில், கோல்வார்பட்டி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் - மதிப்பீடு 36 இலட்சம் ரூபாய் - இதனால் 7364 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

28. திருநெல்வேலி மாவட்டத்தில், சர்குனியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம் - செலவு சுமார் 36 இலட்சம் - இதனால் 26,736 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

29. திருநெல்வேலி மாவட்டத்தில், ராமாநதி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் - மதிப்பீடு சுமார் 85 இலட்சம் ரூபாய் - இதனால் 4,942 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

30. திருநெல்வேலி மாவட்டத்தில் ,குண்டாறு அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் - இதன் மதிப்பீடு 80 இலட்சம் ரூபாய் - 4,102 ஏக்கர் நிலம் இதனால் பயன் அடையும்.

31. சிவகங்கை மாவட்டத்தில், விருசுளியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம் - மதிப்பீடு சுமார் 76 இலட்சம் ரூபாய் - 2,916 ஏக்கர் நிலம் இதனால் பாசன உறுதி பெறும்.

இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவைகளை சீரிய முறையில் பயன்படுத்தி வறட்சியின் கொடுமையை தணித்து, சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பின்றி வேளாண்மை சாராத பணிகளை மேற்கொண்டு வேலைவாய்ப்புகளை அதிகரித்து நீர்வடிப் பகுதிகளில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுப்பணித் துறை உட்பட வேறு சில துறைகளிலும் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட இப்பணிகளின் மூலம் 16 மாவட்டங்களில் 15 ஆயிரத்து 500 தடுப்பணைகளும், 3000 கசிவு நீர்க்குட்டைகளும் 180 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பொதுப்பணித் துறை நவீன மயம்

* 491 கணிப்பொறிகள், 140 படிப்பெருக்கிகள், 437 ஈப்புகள் உட்பட வாகனங்கள் போன்றவை,35 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு பொதுப்பணித் துறை நவீனமய மாக்கப்பட்டுள்ளது.

* கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் 41 இளநிலை பொறியாளர்கள் உட்பட 43 பேர் பணி நியமனம் செய்யப் பட்டதற்கு மாறாக, இந்த நான்கரை ஆண்டுகளில், 512 உதவிப் பொறியாளர்கள், 150 இளநிலைப் பொறியாளர்கள் உட்பட 797 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

* அ.தி.மு.க. ஆட்சியில் 91 முதல் 96 வரை 305 தினக் கூலி பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டார்கள். 96க்குப் பின் கடந்த நான்கரை ஆண்டுகளில் தினக்கூலிகளாக விளங்கிய 1184பணியாளர்களும், 204 தொழில்நுட்ப உதவியாளர்களும் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

* உலக வங்கி நிதியுதவியுடன் 38.647 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலத்தடி நீர் முதலிய விவரங்களை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீரியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* ஹட்கோவின் கடனுதவியுடன் சென்னை மாநகரில் 5 நீராதாரங்களில் 120.25 கி.மீ. நீளத்திற்கு தூர்வாருதல், நீர்நிலைகளின் சாலையோரங்களில் ஆக்கிரமித்துள்ள 28,511 குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல் ஆகிய பணிகள் 300 கோடி ரூபாய் செலவில் புத்தாயிரமாண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

* பரம்பிக்குளம் ஆளியாறு திட்டப்பகுதியில், ஒரு மதகு விட்டு ஒரு மதகு மூலம் நான்கு மண்டலங்களுக்கு நீர் வழங்குவதற்காக, கால்வாய்களின் அமைப்புகள் மேம்படுத்துவதற்காக ஒரு கோடியே 2 இலட்ச ரூபாய் நிதி அனுமதி அளிக்கப்பட்டு இந்தப் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளன.

* திருவாரூரில், தியாகராஜ சுவாமி திருக்கோயில் தெப்பக்குளத்தில் தூர் எடுப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் ரூ.16.56 லட்சம் நிதி அனுமதி அளிக்கப்பட்டு இந்தப் பணிகள் முடிவடைந்து விட்டன.

* 18.5.2000 அன்று தமிழ்நாடு குடியானவர்கள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்ட முன்வடிவு சட்டப் பேரவையால் ஏற்கப்பட்டது. இது தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைப்பு முறைகளின் மேலாண்மையில், குடியானவர்களைப் பங்கேற்கச் செய்வதே இச்சட்ட முன்வடிவின் தலையாய நோக்கமாகும்.

* வேலூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஆறுகள், குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றை தூர் வாருதல், கரைகளைப் பழுது பார்த்தல், கட்டுமானப் பணிகளைப் பழுது பார்த்தல் ஆகிய பணிகளுக்காக 2000-2001-ம் ஆண்டில் ஐம்பது கோடி ரூபாய் நிதி அனுமதி அளிக்கப்பட்டு, இந்தப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

* நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாசனத் திட்டங்களின் செயலாக்கத்திற்காகவும், அறிவிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளின் செயலாக்கத்திற்காகவும் இந்நிதியாண்டில் ரூ.430.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

கட்டிடப் பணிகள்

* 1991-96 ஆம் ஆண்டுகளில் கடந்த ஆட்சியில் பொதுப்பணித் துறை சார்பில் கட்டிடப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 846 கோடியே 54 இலட்சம் ரூபாயாகும். கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 1371 கோடியே 92 இலட்சம் ரூபாயாகும்.

* சென்னை, விழுப்புரம், திருவாரூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், நாமக்கல், கரூர், நாகை, தூத்துக்குடி, தேனி ஆகிய 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, தேனி தவிர எஞ்சிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

* தேனியிலும் 28-12-2000 அன்று திறக்கப்படவுள்ளது. 1991-1996 ஆம் ஆண்டுகளில் கடந்த ஆட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் ஒன்று கூடத் திறக்கப்பட வில்லை. ஒரு மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு, 3 மாவட்ட வருவாய்

அலுவலர் குடியிருப்பு, 1 ஊரக வளர்ச்சி அலுவலர் குடியிருப்பு மற்றும் 22 இடங்களில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகளும், 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டன.

* 10 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் ரூ.4.90 கோடியிலும், 16 இடங்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் ரூ.12.21 கோடியிலும் கட்டிடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* நில அளவைத்துறைக்காக சென்னை சேப்பாக்கத்தில் மத்திய ஆவணக் காப்பகக் கட்டிடம் கட்டும் பணி ரூ.3 கோடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலத்தில் 33 இடங்களில் மாவட்ட ஆவணக் காப்பகக் கட்டிடங்கள் கட்டும் பணி 3.03 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

* காவல் துறைக்காக 150 காவல் நிலையங்கள் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் அளித்ததில், 85 காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள 65 இடங்களில் கட்டுமானப் பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. 2.62 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பளிக்கப்பட்ட கோவை காவல்துறை ஆணையாளர் அலுவலகக் கட்டிடம் அனைவரும் வியக்கும் வண்ணம் கட்டி முடிக்கப்பட்டது. நாகப்பட்டினம், வெளிப்பாளையத்தில் 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவல்துறை அலுவலகம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

* காவல்துறைக்காக கடந்த கால ஆட்சியில், ஐந்தாண்டுகளில் ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 13 கட்டிடங்கள்தான் கட்டப்பட்டுள்ளன. ஆனால் கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், 31 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 160 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

* சிறைத்துறைக்காக 10.66 கோடி ரூபாய் மதிப்பில் தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல் மற்றும் பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, கட்டிட மேம்பாட்டுப் பணிகள் 5.47 கோடி ரூபாய் செலவில் பெரும்பாலும் முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். சென்னை புழலில் 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மத்திய சிறை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 8 கோடி ரூபாய் செலவில் இரண்டாம் கட்டமாக பணிகள் தொடங்கப்படவுள்ளன.

* நீதித்துறைக்காக 6 இடங்களில் நீதிமன்றங்கள், சட்டவல்லுநர்கள் அறை மற்றும் குடியிருப்புகள் 8.53 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கப்பட்டு, இதில் மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய 3 இடங்களில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சென்னையில், உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 30 வீடுகள் 13.65 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன. முந்தைய ஆட்சியில் நீதித் துறைக்காக 25 கோடியே 44 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவிட்டதற்கு மாறாக, கடந்த நான்கரை ஆண்டுகளில் 100 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

* தீயணைப்புத் துறைக்காக தாம்பரத்தில், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநிலப் பயிற்சிப் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, 9 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

* ஊரக வளர்ச்சித் துறைக்காக பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி உள்ளூர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், அனைத்து மாவட்டங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து 1,506 பணிகள் ரூ.45 கோடியில் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1,154 பணிகள் ரூ.35.45 கோடியில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 352 பணிகள் ரூ.9.55 கோடியில் நடைபெற்று வருகின்றன. அவ்வாறே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 898 பணிகள் ரூ.29.42 கோடியில் மேற்கொள்ளப்பட்டு, அதில் 605 பணிகள் ரூ.17.88 கோடியில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 293 பணிகள் ரூ.11.54 கோடியில் நடைபெற்று வருகிறது.

* சட்டமன்றத் துறைக்காக 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் தொகுதியில் அலுவலகம் கட்டும் பணி ரூ.10.53 கோடியில் துவங்கப்பட்டு, அதில் 40 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 119 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, மீதமுள்ள பணிகள் இந்த ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

* ஆய்வு மாளிகை, சுற்றுலா மாளிகை, அமைச்சர் குடியிருப்புகள் மற்றும் அதிகாரிகள் குடியிருப்பு, அலுவலகங்கள் ஆகிய 36 பணிகளில் 25 பணிகள் ரூ.8.14 கோடியில் முடிவுற்றுள்ளன. 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* போக்குவரத்துத்துறைக்காக வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், தேர்ச்சி மையம் மற்றும் கழிவறைகள்

ஆகிய 44 பணிகளில், 27 பணிகள், ரூ.3.91 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதம் 17 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* கல்வித்துறைக்காக அரசினர் கலைக் கல்லூரிகளில் மொத்தம் 28 பணிகள் ரூ.7.38 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி அரசினர் சட்டக் கல்லூரி கட்டிடங்கள் ரூ.1.78 கோடியில் கட்டப்பட்டுள்ளது. அரசினர் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் 817 இடங்களிலும், அறிவியல் ஆய்வகங்கள் 572 இடங்களிலும், கழிப்பறைகள் 733 இடங்களிலும், தொடக்கக் கல்வி அலுவலகங்கள் 20 இடங்களிலும், கணினி கல்வி மையங்கள் 666 பள்ளிகளிலும் ரூ.86 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 280 இடங்களில் வகுப்பறை கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* மருத்துவத் துறைக்காக மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு 100 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 353 கட்டிடப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 250 பணிகள் 63 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 103 கட்டிடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 58 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் 653 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 200 துணை சுகாதார நிலைய கட்டிடப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 613 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 196 துணை சுகாதார நிலையங்கள் 52 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

* திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக் கட்டிடங்கள் 12 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடியில் 15 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் மருத்துவக் கல்லூரி கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்காக 47 மாணவ மாணவியர் விடுதிகளுக்கு 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டிடப்

பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 40 விடுதிகள் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 விடுதிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

* சமூக நலத்துறைக்காக 12 அலுவலகங்கள் மற்றும் விடுதிகளுக்கு 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டிடப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 7 பணிகள் 2 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 6 குழந்தைகள் காப்பகங்கள் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கால்நடைப் பராமரிப்புத் துறைக்காக 8 இடங்களில் கால்நடைப் பராமரிப்புக் கட்டிடங்களுக்கு 3 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 5 கட்டிடங்களுக்கான பணிகள் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. வேளாண்மைத் துறைக்காக சென்னையில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் வேளாண் இயக்குநர் கட்டிடமும், 229 இடங்களில் 28 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பில் இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அலுவலகக் கட்டிடங்களும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நினைவகம் மற்றும் மணிமண்டபம்

* சென்னை வள்ளுவர் கோட்டத்தின் மேம்பாட்டுப் பணிகள், பேரறிஞர் அண்ணா நினைவக மேம்பாட்டுப் பணிகள், கன்னியாகுமரியில் அமரர் ஜீவா நினைவகம், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணி மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவு மண்டபம், மதுரை திருமங்கலத்தில் தியாகி விஸ்வநாததாஸ், திருநெல்வேலி நெல்கட்டும் செவலில் சுதந்திரப் போராட்ட வீரன் பூலித்தேவன் ஆகியோர் இல்லங்களில், நினைவகம் மற்றும் திருமண மண்டபம், நூலகம் ஆகியவைகள் அமைக்கும் பணி, பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மற்றும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோருக்கு நினைவகம் அமைக்கும் பணி உட்பட 44 பணிகள் ரூ. 6.23 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராசர், குன்றக்குடியில் தவத்திரு அடிகளார், சென்னையில் மாமேதை அண்ணல் அம்பேத்கர் ஆகியோருக்கு நினைவு மண்டபங்கள் கட்டும் பணிகள் ரூ. 4.52 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டு, காமராசர், அம்பேத்கர் மணிமண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. குன்றக்குடி அடிகளார் மணி மண்டபம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

* மறுவாழ்வுத்துறைக்காக மத்திய அரசின் உதவியுடன் இலங்கை அகதிகளுக்காக 5842 தற்காலிகக் குடியிருப்புகள் ரூ. 3.82 கோடியில் கட்டப்பட்டுள்ளன. மண்டபம், கொட்டப்பட்டு ஆகிய அகதிகள் குடியிருப்பு முகாமில் 77 இலட்சம் ரூபாயில் சிறப்பு மராமத்து பணிகள் முடிக்கப்பட்டன. மேலும் 2,057 தற்காலிகக் குடியிருப்புகள் ரூ.1.93 கோடியில் கட்டும் பணி வருகின்ற நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

* தமிழ் வளர்ச்சித் துறைக்கென பல மாடி கட்டிடம் ரூபாய் இரண்டு கோடியில் சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் விரைவில் கட்டப்படவுள்ளது.

* சுற்றுலாத்துறைக்கென விடுதிகள் மற்றும் வரவேற்பு மையம், 5 இடங்களில் மத்திய மற்றும் மாநில அரசு உதவி திட்டத்தின்கீழ் ரூ.1.46 கோடியில் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 5 இடங்களில் ரூ. 1.76 கோடியில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்ட வளாகத்தில் மைய மற்றும் மாநில அரசின் உதவி திட்டத்தின்கீழ், சுற்றுலா அலுவலக வளாகம் கட்டும் பணி ரூ. 2.50 கோடியில் துவக்கப்பட்டுள்ளது.

* தோட்டக்கலைத் துறைக்காக சென்னை மாதவரத்தில் தோட்டக்கலை பயிற்சி மையம் மற்றும் தங்கும் விடுதி ரூ. 1.42 கோடியில் கட்டப்பட்டுள்ளது.

* நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 9,651 கட்டிடங்கள் 962 கோடி ரூபாய் செலவில் பொதுப்பணித்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* மேலும், பல்வேறு துறைகளுக்கும் 1,110 கட்டிடங்கள் 236 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

உடன்பிறப்பே,

பொதுப்பணி என்றாலே அது மக்களுக்காக ஆற்றும் பணிதான். மக்களுக்காக இயங்குகின்ற அரசின் எல்லாத் துறைகளிலும் பொதுப்பணித்துறை இழையோடிக் கொண்டிருக்கிறது. எனவே அத்துறையின் அளப்பரிய சாதனைகளை இந்த மடலில் பட்டியலிட்டேன். படித்தோர் முதல் பாமரர் வரையில் பாராட்டும் இத்துறையின் செயல்பாடுகளை எல்லோருக்கும் எடுத்தியம்புவது உன் பணியாக அமையட்டும்.

அன்புள்ள,

மு. க.

(03-12-2000)

2550. மகளிர் உயர்வே மனித சமுதாயத்தின் உயர்வு!

உடன்பிறப்பே,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும் ஆமை நிலைமைதான்
ஆடவர்க்கும் உண்டு"

என்ற புரட்சிக் கவிஞரின் வாக்கினை நன்கு அறிந்து இந்த அரசு, வகுக்கும் திட்டங்கள் அனைத்திலும் மகளிர்க்கு முக்கியமான இடம் அளித்தே வருவதை அனைவரும் அறிவர். ஒவ்வொரு துறையிலும் சாதனை படைத்துள்ள இந்த அரசு, மகளிருக்கு ஆற்றியுள்ள சாதனைப் பட்டியலையும் இன்றைய கடிதத்தில் இணைத்துள்ளேன்.

*1929ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர் சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்கும் தனிச்சட்டத்தினை முன்னோடி மாநிலமாக 1989-ஆம் ஆண்டில் மே திங்கள் 6ஆம் நாள் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தி.மு.கழக அரசு, மேலும் அடுக்கடுக்காக நிறைவேற்றிவரும் திட்டங்கள் மகளிர் சமுதாயத்தின் எழுச்சிக்கு வழி வகுத்துள்ளன. அது போலவே இந்த அரசு, ஊனமுற்றோரின் ஊன்றுகோலாகவும் திகழ்கிறது.

*1996-க்குப்பின் மகளிர் முன்னேற்றத்திற்காகவும், நலிந்தோர் மற்றும் ஊனமுற்றோர்க்காகவும் கழக அரசு ஆற்றியுள்ள பணிகள் விவரம் வருமாறு :

திருமண உதவித் திட்டங்கள்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்

* 1989இல் கழக அரசில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ், தரப்பட்ட உதவித்தொகை ரூ. 5,000. 1996இல் நிதியுதவி ரூ. 10,000 என உயர்த்தப்பட்டது. முந்தைய அரசில் ஐந்தாண்டுகளில் ரூ. 5,000 வீதம் 53,229 மகளிருக்கு 26 கோடியே 61 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக, 1996க்குப்பின் ரூ. 10,000 வீதம் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 593 ஏழைப் பெண்களுக்கு 228 கோடியே 59 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்

* 1989இல் கழக அரசில் கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு உதவித்தொகை ரூ. 5000 என்பது 1996இல் ரூ. 10,000 என உயர்த்தப்பட்டதோடு மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் எனில் 2-10-1997 முதல் உதவித்தொகை ரூ. 20,000 என அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1996க்குப்பின் 3,281 தம்பதியர்க்கு 4 கோடியே 72 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்

* 1975இல் கழக அரசில் அறிமுகம் செய்யப்பட்ட இத்திட்டத்திற்கான உதவித் தொகை 1989இல் ரூ. 5,000 என்றும், 1997-98இல் ரூ. 7,000 என்றும், 1999-2000இல் ரூ. 10 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. 1996க்குப்பின் 904 விதவைப் பெண்களுக்கு ரூ. 66.68 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்

* 1996-97இல் இத்திட்டத்திற்கு நிதியுதவி 2000 ரூபாய் என்றிருந்தது 1997-98இல் ரூ. 3000 என்றும், 1998-99இல் ரூ. 5000 என்றும், 1999-2000இல் ரூ. 7,000 என்றும் படிப்படியே

இந்த ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. 1996க்குப் பின் 452 மகளிர்க்கு ரூ. 22.72 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு
மகளிர் இலவசப் பட்டப்படிப்பு திட்டம்

* 1989-90இல் கழக அரசு அமைந்த போது குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்கு குறைவாக உள்ள மாணவிகளுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க ஆணையிடப்பட்டது. மீண்டும் 1996இல் கழக அரசு அமைந்தவுடன் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்பது 24 ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு
ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம்

* 1990இல் நிதியுதவி ரூ. 1000, 1996இல் நிதியுதவி ரூ. 2000 என உயர்வு. 1997ல் ரூ. 3000, 1998இல் ரூ. 5000, 1999இல் ரூ. 7,000 என உதவிநிதி உயர்த்தப்பட்டது.

* 1996க்குப்பின் 5,207 பெண்களுக்கு ரூ. 2 கோடியே 44 இலட்சத்து 98,400 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

சத்தியவாணி முத்து அம்மையார்
இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

* ஆண்டுக்கு 4,000 தையல் இயந்திரம் என்பது 2000-2001இல் 5,500 என அதிகரித்ததோடு, இதில் 500 தையல் இயந்திரத்தை ஊனமுற்றவர்களுக்கு வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

* 1996க்குப்பின் 14,365 ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு 2 கோடியே 30 இலட்சத்து 3,000 ரூபாய் செலவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு
மகப்பேறு நிதியுதவித் திட்டம்

* 1989ல் கழக அரசில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. கருவுற்ற தாய்மார்கள் சத்துணவு உட்கொள்வதற்காக பேறுகாலத்தின் முன் இரண்டு மாதங்களுக்கும், பின் இரண்டு மாதங்களுக்குமாக

4 மாதங்களுக்கு 50 ரூபாய் வீதம் மொத்தம் 200 ரூபாய் வழங்கப்பட்டது.

* 1998இல் இந்நிதியுதவி 500 ரூபாய் என உயர்த்தப்பட்டது. 1996 முதல் இதுவரை 7,33,731 கருவுற்ற மகளிர்க்கு 28 கோடியே 74 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் முந்தை அரசு 5 ஆண்டுகளில் 1,95,833 மகளிர்க்கு 5 கோடியே 87 இலட்சத்து 65000 ரூபாய் மட்டுமே வழங்கியது.

சத்தியா அம்மையார்
குழந்தைகள் காப்பகங்கள் திட்டம்

* வேலைக்குச் செல்கின்ற மகளிர் மற்றும் நோயுற்ற தாய்மார்களின் குழந்தைகளைப் பராமரித்திட, 1996 வரை இருந்த குழந்தைகள் காப்பகங்கள் எண்ணிக்கை 37. 1996க்குப்பின் புதிதாக கழக அரசினால் உருவாக்கப்பட்ட குழந்தை காப்பகங்களின் எண்ணிக்கை 175. இதன் காரணமாக 96க்குப் பின் 17,700 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். பராமரிப்புச் செலவு 2 கோடியே 21 இலட்சத்து 1 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

சிவகாமி அம்மையார்
பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

* ஆண் குழந்தை இன்றி இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 40 வயதுக்குட்பட்ட தாய் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் 1500 ரூபாய் தமிழ்நாடு அரசு நிதி நிறுவனத்தில் 5 வது காலத்திற்கு வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, ஒவ்வொரு ஐந்தாண்டிலும் புதுப்பிக்கப்பட்டு அப்பெண் குழந்தைகளுக்கு 20 வயது முடியும்போது வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம் என 97இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* ஒரே பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் பெற்றோர்க்கு 3000 ரூபாய் 5 ஆண்டு காலத்திற்கு வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் புதுப்பிக்கப்பட்டு பெண் குழந்தைக்கு 20 வயது முடியும்போது வட்டியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

* 1996க்குப்பின் 1500 ரூபாய் வீதம் 1,15,895 பெண் குழந்தைகளுக்கும், 3000 ரூபாய் வீதம் 1,241 பெண்

குழந்தைகளுக்கும் - ஆக மொத்தம் 1,17,136 பெண் குழந்தைகளுக்கும் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியாக உருவாக்கப்பட்டுள்ளது.

பங்காரு அம்மையார் மகளிர் குழுக்கள் திட்டம்

* கிராமப்புற ஏழை எளிய பெண்களை சமூக, பொருளாதார நிலைகளில் உயர்த்திடும் நோக்கில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கழக அரசினால் தொடங்கப்பட்டு தமிழகம் முழுவதும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டது. 1996ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தயாரித்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதித் திட்டம் முழுவதுமாக புதிதாக உருவாக்கப்பட்ட மகளிர் திட்டத்தோடு இணைக்கப்பட்டு எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* 1997-98இல் 14 மாவட்டங்களிலும், 1998-99இல் 7 மாவட்டங்களிலும், 1999-2000இல் 7 மாவட்டங்களிலும் என, சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 8 இலட்சத்து 6 ஆயிரத்து 969 மகளிர், 45,719 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

* மகளிர் திட்டச் செயலாக்கத்தில் அரசு சார்பில்லாத தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் திட்டத்தின் வெற்றிக்கு ஆற்றி வரும் அரும்பணி பாராட்டிற்குரியது.

* இவர்களில் 1,26,882 மகளிர்க்கு பல்வேறு தொழில்களைத் தொடங்கிட ரூ. 73.25 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் இவர்களுக்கு வழங்கப்பட்ட வங்கிக்கடன் ரூ. 28.43 கோடி. மானியம் ரூ. 48.42 கோடி. இவர்களுடைய சேமிப்புத் தொகை மட்டும் ரூ. 52.18 கோடி. இத்திட்டம், கிராமப்புறப் பெண்களை சமூக, பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி வழிநடத்திடும் ஒரு புரட்சிகரமான திட்டமாகும்.

* சிறந்த முறையில் செயல்படும் சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கும் திட்டம் இந்த (1999-2000) ஆண்டுமுதல் செயல்படுத்தப்படுகிறது. 21 மாவட்டங்களில்,

1999ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல்பட்ட 63 சுயஉதவிக் குழுக்களுக்கும், 7 வட்டாரக்குழு கூட்டமைப்புக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

* சிறந்த முதல் குழுவிற்கு ரூ. 2,000/- என்றும், இரண்டாவது குழுவிற்கு ரூ. 1,000/- என்றும், மூன்றாவது குழுவிற்கு ரூ. 500/- என்றும், வட்டாரக் குழு கூட்டமைப்புக்கு ரூ. 2,000/- என்றும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

ஊனமுற்றவர்களை மணந்துகொள்ளும் ஊனமுற்றவர்களுக்கு ஊக்க நிதி

* காதுகேளாத, வாய்பேசாதவர்களை மணம் செய்துகொள்ளும் ஊனமுற்றவர்களுக்கும், ஒரு கை அல்லது கால் இழந்தோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமுற்றவர்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவி ரூ. 5,000 என்பது ரூ. 7,000 என 2000-2001இல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

* உடல் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், பயனடைந்து வந்த பயனாளிகள் எண்ணிக்கை 6,400 என்பது 11.07.2000 முதல் 7,400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகை 1 கோடியே 33 இலட்சத்து 20,000 ரூபாய் ஆகும்.

* உடல் ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகை 6.7.2000 முதல் ரூ. 1000லிருந்து ரூ. 2000 ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 800லிருந்து 1000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நலிந்தோர் உதவித்தொகை

* மாத ஓய்வூதியம் ரூ. 100 என்பது, 1997இல் ரூ. 150 ஆகவும், 2000இல் ரூ. 200 ஆகவும் உயர்த்தப்பட்டதோடு பயனாளிகள் எண்ணிக்கைக்கு இருந்த உச்சவரம்பு 1997இல் ரத்து செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், முதியோர், நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்றோர் / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்ற பிரிவினரில் 1996க்குப்பின் 9,53,719 பேர் பயன் பெற்றுள்ளனர்.

* விதவைப் பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும் முதியோர் உதவித்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கிட 2.6.1998 அன்று ஆணையிடப்பட்டது.

விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்களும், குறிப்பேடுகளும்

* ரூ. 12,000த்திற்குள் ஆண்டு வருவாய் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகள் அனைவருக்கும் இலவசப் பாடநூல்களும், குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. 1996க்குப்பின் 54,852 குழந்தைகள் இத்திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர். இதற்கான செலவு 57.33 இலட்சம் ரூபாய்.

மகளிர் தொழில் முனைவோருக்கு நிதியுதவி

* முதல் தலைமுறையாக தொழில் முனையும் மகளிர் 250 பேருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மானிய உதவி வழங்கும் திட்டம் 1996இல் அறிமுகம் செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்படுகின்றன.

தொழில் மனை ஒதுக்கீட்டில் முன்னுரிமை

* தொழில் வளாகங்களில் - தொழில் மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் 96 முதல் தொடங்கப்பட்டது.

மீனவ மகளிருக்கு உதவிகள்

* மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மோட்டார் பொருத்திய 25 வாகனங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, மீனவ மகளிர் மீன் விற்பனைக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் தேர்தல்களில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு

* இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு தமிழகம் முழுவதிலும் 44,143 பெண்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் தற்போது பதவி பெற்றுள்ளனர்.

மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள்

* 1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் முதலில் மதுரையிலும், பின்னர் பல பகுதிகளிலுமாக மொத்தம் 230 இடங்களில் முழுவதும் மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள்

தொடங்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெறுகின்றன. மேலும் கூடுதலாக மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்

* 1.1.1999இல் சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் மற்ற மாநகராட்சிகளுக்கும் 2.5.1999 முதல் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

* கிராமப்புறங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின்கீழ், 535 மகளிர் குழுக்களுக்கு 2000ஆம் ஆண்டு அக்டோபர் வரை ரூ. 2.33 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

* திருவள்ளூர், கோவை மாவட்டங்களில் கிராமப்புறங்களுக்கும் பரிட்சார்த்தமாக இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அது பெற்றுவரும் வரவேற்பின் காரணமாக அனைத்து மாவட்டங்களின் கிராமப்புறங்களுக்கும் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

* தினசரி வழங்கப்படும் கடன் தொகை ரூ. 100 முதல் ரூ. 5000 வரை. இதுவரை பயன்பெற்ற மகளிர் 1,44,913. வழங்கப்பட்டுள்ள கடன் தொகை 18 கோடி ரூபாய். இத்திட்டத்தில் மகளிரின் சேமிப்பு 11.54 கோடி ரூபாய்.

தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியைகள்

* கழக அரசு வெளியிட்ட ஆணைகளின் மூலம் தொடக்கப் பள்ளிகளில் பெண்கள் அதிக அளவில் ஆசிரியைகளாக நியமனம் செய்யப்படுவதற்கு வழி ஏற்பட்டது. தற்போது பள்ளிகளில் பணிபுரியும் மொத்த ஆசிரியர்கள் 1,66,187 பேரில் ஆசிரியைகள் 98,291.

* கழக அரசு பிறப்பித்த ஆணையின்படி, அரசுப் பணிகளில் 30 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு.

காவல்துறையில் பெண்கள்

* காவல்துறையில் பெண்களை நியமனம் செய்யும் திட்டம் கழக அரசில் 1973இல் தொடங்கப்பட்டதின் காரணத்தால் தற்போது காவல் துறையில் பணி வாய்ப்புப் பெற்றுள்ள பெண்கள் 4,570 பேர்.

* முந்தைய அரசு ஐந்து ஆண்டுகளில் நியமனம் செய்த பெண் காவலர்களின் எண்ணிக்கை 389 என்பதற்கு மாறாக 1996க்குப்பின் இதுவரை கழக அரசு நியமனம் செய்த பெண் காவலர்களின் எண்ணிக்கை 3,636.

ஆதரவற்ற விதவைப் பெண்கள் / கணவனால் கைவிடப்பட்டோர்க்கு நலிந்தோர் உதவித்தொகை

* 1.6.1975-இல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், தற்போது எண்ணிக்கை வரம்பின்றி விதவைப் பெண்கள் எல்லோருக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

* 1996 முதல் இத்திட்டத்தின்கீழ், பயன்பெற்ற விதவைப் பெண்கள் 3,86,149 பேர். 1996 முதல் இத்திட்டத்தின் கீழ் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் 63,566 பேர் பயன்பெற்றுள்ளனர்.

டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

* சத்துணவுத் திட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 2 இலட்சம் மகளிர் வேலை செய்கின்றனர்.

* இத்திட்டத்தின்கீழ் சாப்பிடுபவர்களுக்கு, 1989-90இல் 2 வாரங்களுக்கு ஒரு முட்டையும், 1.6.1998 முதல் வாரம் ஒரு முட்டையும் வழங்க ஆணையிட்டது இந்த அரசு.

* 1995-96இல் சத்துணவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 360 கோடி. 2000-2001இல் ரூ. 581 கோடி - கூடுதல் ஒதுக்கீடு ரூ. 221 கோடி.

* பள்ளி சத்துணவு பணியாளர்கள் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு குழுக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (Group Insurance Scheme) குடும்ப நலநிதி வழங்க 7.11.1990 அன்று கழக அரசு ஆணையிட்டது;

* ஆனால் முந்தைய அரசு, இந்த ஆணையை 1994ஆம் ஆண்டில் நிறுத்தி வைத்ததன் காரணமாக இறந்துபோன சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நலநிதி வழங்கப்படாமலேயே இருந்தது.

* 1996ல் கழக அரசு மீண்டும் அமைந்த பிறகு இந்த ஆணையை மீண்டும் செயல்படுத்தியதுடன், முந்தைய ஆட்சி காலத்தில் இறந்துபோன சத்துணவுத் திட்டப் பணியாளர்களின்

குடும்பங்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கிட ஆணையிடப்பட்டது.

* சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்கள் (Permanent part time employees) என்று 16.4.1989இல் ஆணையிட்ட கழக அரசு சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதித் திட்டத்தையும் (Special Provident Fund) 25.4.1998 முதல் விரிவுபடுத்தியது.

*சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் நிலை - 1 மற்றும் நிலை - 2, ஊட்டச்சத்து பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ. 200-5-250-10-400 என வழங்கப்பட்ட ஊதியத்தினை ஆண்டுக்கு ரூ. 140 கோடி செலவில் 1.1.1996 முதல் ரூ. 600-10-700-20-1100 என உயர்த்தி, புதிய ஊதிய விகிதத்தை வழங்கி, குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ. 840, அகவிலைப்படி ரூ. 319 சேர்த்து ரூ. 1159 என நிர்ணயித்து வழங்கப்படுகிறது.

* அதே போல சமையலர்களுக்கு மாதம் ரூ. 175 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ. 450/- எனவும், உதவியாளர்களுக்கு மாதம் ரூ. 125 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ. 400/- எனவும் உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது. தற்சமயம் இது ரூ. 610 மற்றும் ரூ.450 என வழங்கப்படுகிறது.

* சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55 என்பது 58 ஆக உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது.

* சத்துணவுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால், ஈமச் சடங்குக்காக வழங்கப்பட்ட தொகை 2000 ரூபாய் என்பது 5,000 ரூபாயாக உயர்த்தி 24.4.1997 அன்று ஆணையிடப்பட்டது.

* சத்துணவுப் பணியாளர்களுக்கு கோடை விடுமுறை காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

* சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஆகியோர் பணிக் காலத்தில் இறக்க நேர்ந்தால்

அவர்களுடைய வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் வேலை வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

* ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 13 காசுகள் என்பது 18 காசுகளாக 23.12.1996 அன்று உயர்த்தப்பட்டது.

* தற்போது 18 காசுகள் என்பது 23 காசுகளாக உயர்த்தப் படுமென நிதிநிலை அறிக்கையில் (2000-2001) அறிவிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டுள்ளது.

* சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் - 3 ஆகிய மூவகைத் திட்டங்களில் உள்ள அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் நிலையில் உள்ள எல்லா சத்துணவுப் பணியாளர்களையும் அஞ்சலகத் துறையின் கீழ் உள்ள பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் சேர்க்க 29.9.2000இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வட்டார பயிற்சி மையம் மற்றும் கிடங்குக் கட்டிடம்
(Block Resource Centre and Godown)

* மத்திய அரசு 159 வட்டாரப் பயிற்சி மையம் மற்றும் கிடங்குக் கட்டிடம், கட்ட தலா ரூ. 5 இலட்சம் செலவில் அனுமதியளித்துள்ளது. இதில் 60 கட்டிடங்கள் கட்ட அரசு ஆணை (ம) எண். 10, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 4.2.2000 மூலம் பெறப்பட்டு, மாவட்டக் கட்டிட மையத்தின் மூலம் கட்டிடங்கள் கட்ட வேலை தொடங்கப்பட்டுள்ளது.

அங்கன்வாடி மையங்கள்

* அரசுக் கட்டிடம் இல்லாத 82 அங்கன்வாடி மையங்களுக்கு கட்டிடங்கள் கட்ட 5.10.2000 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

அங்கன்வாடி மையங்கள் பழுது பார்த்தல்

* அரசுக் கட்டிடங்களில் இயங்கும் 15,139 அங்கன்வாடி மையங்களில் 10,000 மையங்களுக்கு தலா ரூ. 7000/- வீதம் மூன்றாண்டுகளில் பழுது பார்க்க 1.3.2000 ஆணையின்படி 6,250

மையங்கள் ரூ. 437.50 லட்சம் செலவில் பழுதுபார்க்க ஆணை வழங்கப்பட்டு, அத்தொகை மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு, பழுது பார்க்கும் பணி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டுள்ளது. மீதமுள்ள 3,750 மையங்களின் கட்டிடங்களும் அடுத்த ஆண்டில் பழுதுபார்க்கப்படும்.

* சத்துணவுத் திட்டத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 5 அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 25,000 பரிசு வழங்க 10.7.2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டத்தின்கீழ், 1999-2000 ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றிய 4 அங்கன் வாடிப் பணியாளர்களுக்குப் பரிசு வழங்கப்படவுள்ளது.

* சத்துணவுத் திட்டத்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 100 அங்கன்வாடிப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 2,500/- வீதம் பரிசு வழங்க 10.7.2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1999-2000ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றிய 74 அங்கன்வாடிப் பணியாளர் களுக்கும் தலா ரூ. 2,500/- வீதம் பரிசு வழங்கப்படவுள்ளது.

* 1999-2000 ஆண்டிற்கு சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட/வட்டார அளவில் பணியாற்றும் மண்டல ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்களுக்கும் ரூ. 4,000/-மும், பயிற்றுநர்களுக்கு ரூ. 500/-ம், மேற்பார்வையாளர்களுக்கு ரூ. 500/-ம், குழந்தை நல அமைப்பாளர்களுக்கு ரூ. 300/-ம் மற்றும் உதவியாளர்களுக்கு ரூ. 240/-ம் (மொத்தம் 1005 நபர்களுக்கு) மொத்தம் ரூ. 3 இலட்சத்திற்கு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்க 9.3.2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்புத் துறை

ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட சிறார்களுக்கு அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இளைஞர் இல்லம் தொடங்குதல்

* 1999 - 2000 ஆம் ஆண்டில் இளைஞர் இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு பராமரிப்பு மானியத் தொகை (ரூ. 90 மற்றும் ரூ. 135லிருந்து) மாதம் ஒன்றுக்கு ரூ. 200 என உயர்த்தி வழங்கப்பட்டது. செலவினம் ரூ. 20 இலட்சம். பயன்பெற்றோர் 1000 இல்லவாசிகள்.

* 1999-2000ஆம் ஆண்டில் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையினை ரூ. 30லிருந்து ரூ. 50 எனவும், ரூ. 50லிருந்து ரூ. 70 எனவும் உயர்த்தப்பட்டது. செலவு ரூ. 1.14 இலட்சம். பயன்பெறுவோர் 150 இல்லவாசிகள்.

* 1999ஆம் ஆண்டு முதல் குடும்ப உதவித் திட்டத்தின்கீழ், பெற்றோர் வசம் ஒப்படைக்கப்படும் சிறார்களின் பராமரிப்பிற்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை ரூ. 100 என்பது ரூ. 200 என உயர்த்தி வழங்கப்பட்டது. செலவினம் ரூ. 120 இலட்சம். பயன்பெறுவோர் 1000 சிறார்கள்.

சாலையோரச் சிறார்களுக்கு தன்னார்வ
தொண்டு நிறுவனம் மூலம் புகலிடங்கள் அமைத்தல்

* 1995-96 ஆண்டிலிருந்த அரசு சாரா நிறுவனங்கள் எண்ணிக்கை 6. 1997-98 ஆம் ஆண்டில் கூடுதலாக 10 புகலிடங்கள் தொடங்கப்பட்டன. செலவினம் ரூ. 6.55 இலட்சம். பயன்பெறுவோர் 5000 சிறார்கள்.

உடன்பிறப்பே,

சமுதாயத் தொண்டனை மையமாக வைத்து தொடங்கப்பட்ட இந்த இயக்கம் - சமுதாயத்தில் ஆற்றிட எண்ணியவற்றை ஆட்சிப் பொறுப்பு எனும் வாய்ப்பின் வாயிலாகவும் நிறைவேற்றிக் கொண்டிருப்பதிலே ஏற்பட்டுள்ள மன நிறைவுக்கு ஈடு இணையில்லை என்ற கருத்துடன் செய்திடும் காரியச் சாதனைகளை விவரித்துள்ளேன் இடமிருக்கும் வரையில்! இன்னும் உண்டு ஏராளமாக! நீ எடுத்துச் சொல்ல வேண்டும் மகளுகுத தாராளமாக!

அன்புள்ள,

மு. க.

(04-12-2000)

2551. வரிக்கொள்கை மாற்றம் வணிக சமுதாய முன்னேற்றம்!

உடன்பிறப்பே,

"தூய்மையான ஆட்சியையும் நேர்மையான நிர்வாகத்தையும் தமிழகத்திற்கு அளிப்பதே எங்களுடைய தலையாய குறிக்கோளாகும். அதனை எய்துவதற்கும் தொழில் வளர்ச்சியும், வணிகமும் தழைத் தோங்குவதற்கும், குழப்பமற்ற, நிலையான நேயமான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இத்தகையச் சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு தொலை நோக்கு வரிக்கொள்கை (Long Term Taxato Policy) ஒன்றினை உங்கள் முன் வைக்கிறேன். வணிக சமுதாயத்தினரும், தொழில் முனைவோரும் இதனை பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்."

நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, நான் நாட்டிற்கு அளித்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள வாசகங்கள்தான் இவை. இந்த வரிக் கொள்கைகளில் முக்கியமாக மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுக்கு வரிப் பளுவினைக் குறைத்தல், வரிவிதிப்பில் பெரிதும் வெளிப்படை தன்மையை ஏற்படுத்துதல், வரி வீதத்தை சீரமைத்தல், வரி விதிப்பு மற்றும் வரி வசூலினை எளிமையாக்குதல், மிக அதிக எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு வரி விலக்கு அளித்தல், இணக்க வரி முறை மற்றும் சுயவரி விதிப்பு முறைகளின் வாயிலாக சிரமத்தைக் குறைத்தல் போன்றவைகளை மனதிலே கொண்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வணிகர்களும் நாட்டு மக்களின் ஒரு அங்கம்தான் என்பதை உணர்ந்து அவர்கள் வாழ்விலும் ஒளியேற்ற வேண்டும், அதே நேரத்தில் பொருட்களை வாங்குவோரும் பயனடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசினால்

செயல்படுத்தப்பட்ட சாதனைகளின் தொகுப்புகளையே இன்றைய மடலில் இணைத்துள்ளேன்.

* பெரும்பான்மையான பொருள்கள் மீதிருந்த பல முனை வரியை நீக்கி 1989-90ஆம் ஆண்டில் கழக அரசில் ஒரு முனை வரி கொண்டுவரப்பட்டது. பின்னர் வந்த ஆட்சியால் பல பொருள்களுக்கு பல முனை வரி விதிக்கப்பட்டது. 96இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாப் பொருள்களின் மீதும் பல முனை வரியை அகற்றி ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டது.

* 1975ஆம் ஆண்டு இறுதியில் கழக அரசினால் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு வணிகர் நல வாரியம் 1976 சனவரியில் கழக அரசு கலைக்கப் பட்டமையால் தொடங்கப்படவில்லை. பின், 1989இல் கழக அரசு மீண்டும் அமைந்த போது, 25.9.1989 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி தொடங்கப்பட்டு, 28.9.2000 வரை 35,352 வணிகர்கள் ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசு ஆரம்ப காலத்தில் ஒதுக்கிய நிதி ரூ.2 கோடியைத் தவிர, அரசிடமிருந்து ஈட்டுத் தொகையாக ரூ.35,49,000 பெறப்பட்டு, 17.10.2000 வரை கல்வி ஊக்கத்தொகையாக 49 நபர்களுக்கு 1 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாயும், மருத்துவ உதவித் தொகையாக 15 நபர்களுக்கு 3 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாயும், தீ விபத்துக்கான உதவித்தொகையாக 27 நபர்களுக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயும், மாணவர் ஊக்கத் தொகையாக 6 மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும், குடும்பநல உதவியாக 118 குடும்பங்களுக்கு 38 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாயும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற ஒரு நபருக்கு வழங்கப்பட்ட தொகை 5 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் 217 நலிவுற்ற வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட ரூ.47 இலட்சத்து 67 ஆயிரம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தை மேலும் சீரமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* தமிழக வரலாற்றில் முதன்முறையாக 1999-2000 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்முன் மாநிலத்திலுள்ள அனைத்து வர்த்தகச் சங்கங்கள், வணிகர் சங்கங்கள் ஆகியோரை அழைத்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு வரிச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதுபோலவே, 2000-

2001 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன்பும் 11.3.2000 அன்று இக்கூட்டம் நடத்தப்பட்டு கருத்துகள் கேட்கப்பட்டன.

* விற்பனை வரி அமைப்பு மற்றும் நடைமுறைகளில் சீர்திருத்தங்கள் செய்வதற்காக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு சி.தங்கராசு அவர்களைத் தலைவராகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளைப் பெற்று அவற்றை இந்த அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. ஆண்டுவாரியாக வழங்கப்பட்ட வரிச்சலுகைகள் வருமாறு:-

1996-97

* விற்பனை வரி மீது இருந்த 15 விழுக்காடு மேல்வரியும், 5 விழுக்காடு கூடுதல் மேல்வரியும் 17.7.1996 முதல் நீக்கப்பட்டது.

* ரூ.100 கோடிக்குக் குறைவாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. (இது 98 - 99 ல் 25 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டது.)

* பருப்பு வகைகள், மஞ்சள், மிளகாய், வெல்லம், புளி, தனியா, பெருங்காயம், சீரகம், சீயக்காய், பனங் கற்கண்டு ஆகியவற்றிற்கு 4 விழுக்காடு மற்றும் 3 விழுக்காடு வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

* கரும்பின் மீது விதிக்கப்பட்ட 11 விழுக்காடு வரி மற்ற வரிகளோடு சேர்ந்து 14.7 விழுக்காடாக இருந்தது, 8 விழுக்காடாக குறைக்கப்பட்டது. 1-4-97 முதல் இது ஒரு குறிப்பிட்ட தொகை (Flat Rate) என்று வரையறுக்கப்பட்டது.

* எட்டாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்ட தொழில் மூலதனப் பொருட்கள் (capital goods) 3 விழுக்காடு சலுகை வரி விதிப்பில் 17.7.1996 முதல் சேர்க்கப்பட்டது.

* கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு 3 விழுக்காடு வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது. தேங்காய் மட்டை, நெல் உமி மற்றும் குருணை, அலுமினிய வீட்டு உபயோகப் பாத்திரங்கள், வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு ஆகியவைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

* கம்ப்யூட்டர்கள், அதன் உதிரி பாகங்கள், பொரி கடலை, பட்டாணிக் கடலை, புகைப்படத் தொழிலில் பயன்படுத்தப்படும்

சுருள், தாள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவற்றுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

* சமையல் எரிவாயு, எலெக்ட்ரானிக் கேஷ் ரிஜிஸ்டர், கணக்கிடும் மற்றும் பட்டியலிடும் பொறிகள், எலெக்ட்ரானிக் கருவிகள் மற்றும் எலெக்ட்ரானிக் பொருட்கள், எலெக்ட்ரானிக் கால்குலேட்டர்கள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், மரம், எலெக்ட்ரிக் பம்பு, செருப்பு , பாக்கு, சீவல் உள்ளிட்ட வாசனைப் பாக்கு, பிரஷர் குக்கர், உலர் பாட்டரிகள், உலர் செல்கள், இங்க், மின் விசிறி, மின்சார பல்புகள், டியூப் லைட்டுகள், பிட்டிங்ஸ், சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள், நீர் வழங்குவதற்குப் பயன்படும் குழாய் போன்ற சாதனங்கள், காமிரா, என்லார்ஜர் மற்றும் லென்சுகள், பித்தளை, செம்புப் பாத்திரங்கள், ஆடியோ கேசட்டுகள், அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

* வணிகக் குறியிடப்படாத வெண்ணெய், நெய், பிஸ்கட், மிட்டாய் மற்றும் சாக்லெட்டுகள், எழுதுகிற காகிதம், அச்சடிக்கத் தேவைப்படும் காகிதம், கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் காகிதம், பால் கொண்டுசெல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் ரெடிமேடு ஆடைகளுக்கு 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

* பருப்பு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவு வகைகளுக்கு 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

1997-98

* யூரியா உரத்துக்கு விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* சொட்டுநீர்ப் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு 11 விழுக்காடு மற்றும் 4 விழுக்காட்டிலிருந்து முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

* மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள், தேங்காய் ஓடுகள், நிலக்கடலைத் தோல், சீயக்காய் பொடி, தொன்னை, சாம்பிராணி, சம்மட்டி, கடல் சிப்பி மற்றும் சிப்பிகளால்

செய்யப்பட்ட பொருள்கள், தயிர், பஞ்சாமிர்தம், நாட்டு மருந்துகள் 39 மற்றும் புற்றுநோய், தொழுநோய், காசநோய்களுக்கான உயிர்காக்கும் மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள் வாகனங்கள், கல்வி அட்டவணைகள், வரைபடங்கள், சுற்றுலா கையேடு, வரைபடங்கள், சூரியஒளி மின்கலன்கள் (Solar Cell) செங்கல் மற்றும் ஓடு செய்யப் பயன்படும் களிமண், அவுரி இலை மற்றும் காய், நிலவாகை செடி இலை, மரவள்ளிக் கிழங்கின் கப்பி மற்றும் திப்பி, பழைய வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, ரூ.50/-க்கும் குறைவான காலணிகள், தங்க நகைகள் ஏற்றுமதி செய்வோர்க்கு மத்திய அரசு நிறுவனமான எம்.எம்.டி.சி. விற்கும் தங்கம் ஆகிய இனங்களுக்கு முறையே 11 சதவீதம், 8 சதவீதம், 4 சதவீதம் மற்றும் 2 சதவீதம் என்று இருந்த வரிகள் ரத்து செய்யப்பட்டன.

* கைப்பெட்டிகள், ஆயில் இன்ஜின் பாகங்கள், மேசை, நாற்காலி போன்ற அறைகலன்கள், வணிகர் சின்னம் உள்ள (Branded) வெண்ணெய், நெய் ஆகியவற்றிற்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

* மூக்குக் கண்ணாடி மற்றும் தட்டச்சுப் பொறிகளுக்கு வரி 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்பட்டது. காகிதப்பைகள், குடைகள், கைவினைப் பொருட்கள், 30 அடி சரக்குப் பொருட்கள் மற்றும் தார்ப்பாய் போன்ற இனங்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* தமிழ் தட்டச்சுகளுக்கு 20 விழுக்காடு வரி என்பது 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது. கண்ணாடி மணிகள், கண்ணாடி கோலி குண்டுகள், கொசு விரட்டிகள் மற்றும் அழிப்பான்கள், அதற்கு பயன்படும் வில்லைகள் முதலியவற்றிற்கு வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது. வறுத்த வேர்க்கடலை, தலைக்கவசங்கள், தாவரக் கழிவு கட்டிகள், ஜல்லி, பொம்மைகள், மின்னணுப் பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள் (Electronic parts and accessories) மாணவர்கள் ஓவியத்திற்குப் பயன்படுத்தும் எழுது பொருட்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* வணிகச் சின்னம் இல்லாத காலணிகள், செப்பு, எவர்சில்வர் மற்றும் பித்தளையால் செய்யப்பட்ட வீட்டு உபயோகப்

பாத்திரங்கள், சுவையூட்டப்பட்ட பால், கழிவு காகிதங்கள், கல்வி நிலையங்களுக்கு விற்கப்படும் விஞ்ஞானக் கருவிகள், தையல் மற்றும் சித்திர தையல் இயந்திர பாகங்கள் மற்றும் அதன் ஊசிகள் ஆகியவற்றின் மீதான வரி விகிதம் 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* பனியன் உள்ளிட்ட பின்னலாடைகளுக்கு வரி 4 விழுக்காட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது.

* பருத்திக்கு கொள்முதல் வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* சரிகை மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது. .

* செயற்கை இழை, நூல் மற்றும் செயற்கை இழைகளுக்கு பிற மாநில முகவர்களுக்கு கிளை மாற்றமாகவோ அல்லது முகவர் விற்பனையாகவோ செய்யக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது.
1998-99

* சமையல் எண்ணெய்களுக்கு 4 விழுக்காட்டிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

* ரப்பர் பொருட்கள் தயாரிப்பாளர்கள் கொள்முதல் செய்யும் இயற்கை ரப்பர் மீது செலுத்த வேண்டிய கொள்முதல் வரிகள் 3 விழுக்காடிற்கு மேல் செலுத்த வேண்டிய வரியை, உற்பத்திப் பொருள் மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து குறைத்துக் கொள்ளும் சலுகை அளிக்கப்பட்டது.

* வணிகச் சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீம் மீதான 16 விழுக்காடு வரி 11 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. பேக்கரியால் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்களின் மீதான வரி 8 விழுக்காடிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* வணிகச் சின்னமுள்ள மற்றும் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கான 16 விழுக்காடு வரி முறையே 4 மற்றும் 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் மீதான 2 விழுக்காடு வரி 1 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து புதிய திரைப்படங்களுக்கு 30 விழுக்காடு எனவும், பழைய திரைப்படங்களுக்கு 20 விழுக்காடு எனவும் குறைக்கப் பட்டது.

* விழியினிடையே பொருத்தப்படும் ஆடிக்கு (Intra Ocular Lense) வரி விலக்கு அளிக்கப்பட்டது. காசினி கீரைப் பொடிக்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரி விலக்கு அளிக்கப்பட்டது.

* எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசி தவிட்டிற்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

1999-2000

* விசை உழுக்கருவிகளின் இழுவைகள் (Trailers of Powers Tillers) மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து அரை விழுக்காடாகக் குறைக்கப் பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் ஒரு விழுக்காடாக மாற்றப்பட்டது.)

* தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மொத்த விற்பனைத் தொகை மீதான கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டது. பழுதடைந்த அல்லது தேய்ந்த நகைகளுக்கான கொள்முதல் வரி 2 விழுக்காட்டிலிருந்து அரை விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் ஒரு விழுக்காடாக மாற்றப்பட்டது.)

* நவரத்தினங்கள் மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* உலர்ந்த ரொட்டித் துண்டுகள் (ரஸ்க்) மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* அடக்கமான பேரொளி குழல் விளக்குகள் (Compact fluorescent lamps) மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* வாழ்த்து அட்டைகள் மற்றும் அழைப்பிதழ்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* கணினிகள் மற்றும் புற உறுப்புகள் மீதான வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* கணினிகள் மற்றும் புற உறுப்புகள் மொத்த விற்பனைத் தொகை மீதான கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டது.

* செல்லுலார் தொலைபேசி மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* தமிழ்த் தினசரி நாட்காட்டி மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக் காகிதம், தட்டச்சு படிப்பெருக்கும் காகிதம் மற்றும் உயர்தன்மை காகிதம் (Bond Paper) மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* ரொக்கம் பதிவு செய்யும் மின்னணுப் பொறிகள் மற்றும் டிரான்சிஸ்டர் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் 8 விழுக்காடாக மாற்றப்பட்டது.)

* தடையில்லா மின் வழங்கும் அமைவுகள் (UPS) மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் 4 விழுக்காடாக மாற்றப்பட்டது.)

* ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் போன்றவற்றிற்கு (REP Licences etc.) வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* சலுகை வரி மூலம் மூலப் பொருட்களை கொள்முதல் சரக்கு மாற்றம் செய்வோர் செலுத்த வேண்டிய வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* ஒவ்வொரு மாதமும் தாக்கல் செய்ய வேண்டிய படிவம்-17, ஒரு ஆண்டுக்கு ஒரு படிவம் தாக்கல் செய்யும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனை வரி விதி திருத்தம் செய்யப்பட்டது.

* அனைத்து வகையான கொசு வலைகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* நிலக்கடலைப் பருப்பு, எள், அரிசிப் பொரி, வறுகடலை மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

* சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள், காலணிப்பட்டிகள், பருத்தி நூல் கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், இறால் உண்ணும் உணவு, கூனி இறால் உண்ணும் உணவு, நீராவி, கரும்புச் சக்கை ஆகியவற்றிற்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

* மின்னணு படிப்பெருக்கிப் பொறிகள், மின்னணு அட்டவணையிடும் பொறிகள், மின்னணு தொலையச்சுப் பொறி, ஒலித்தட்டை இயக்கச் செய்யும் கருவிகள், ஒலிப்பதிவு மற்றும் மறு ஒலிக்கருவிகள், தொலைக்காட்சிப் படமெடுக்கும் கருவிகள் மற்றும் படம் பதிவு செய்யும் கருவிகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. (சமச்சீர் வரிக் கொள்கைப்படி 23.1.2000 முதல் 8 விழுக்காடாக மாற்றப்பட்டது.)

* மின்னணு அல்லாத படிப்பெருக்கி இயந்திரங்கள் மீதான வரி 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* மோட்டார் வாகன பல்ப் மற்றும் ஒலிப்பான்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* இரும்பு அல்லாத உலோகக் கழிவுகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* கம்பளியால் பின்னப்பட்ட பொருட்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* சர்பத் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* காகித உறைகள் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* மின்சார உதவியில்லாமல் தயார் செய்யப்படும் தகர கொள்கலன்கள் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. 2000-2001

* மொசைக் கற்கள், செராமிக் சுவர், தள ஓடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* பளிங்குக் கற்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரியானது 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. செராமிக் துப்பரவுக் கலன்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 16 விழுக்காடு வரியானது 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* இஸ்திரிப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீட்டு உபயோக மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* அனைத்துவகை மின் சக்திக் கருவிகள், (apparatus) உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

அனைத்து வகை மின்சக்திப் பொருட்கள் (Electrical Goods) மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. உருளைகள் (bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* நித்தியக் கல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord), அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச் சின்னமில்லாத காய்கறி வத்தல்கள், தமிழ்த் தினசரி

காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றின் மீதான 11 விழுக்காடு, 8 விழுக்காடு, 4 விழுக்காடு மற்றும் 2 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

* அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* பேஜர்கள், செராமிக் கற்கள் (ceramc brcks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (bleac lquid) மீதான விற்பனைவரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* மின்வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் போன்ற மின் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் டிரான்ஸ்பார்மர் எண்ணெய் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* கேளிக்கை வரிச் சட்டப்பிரிவு-4ன் கீழ், வரி செலுத்தும் திரையரங்குதாரர்கள் புதிய திரைப்படங்களின் மீது செலுத்தும் கேளிக்கை வரி 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

* ரூபாய் மூன்று லட்சத்திற்கு மேல், ஆனால் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் குறைவாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள், முதல் மூன்று இலட்சம் வரை உள்ள விற்பனை மீது வரி வசூல் செய்திராவிடில், அத்தொகையின் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது.

* ஆயுர்வேதா மற்றும் ஓமியோபதி மருந்துகளின் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

* அனைத்து வகை பருத்திக் கழிவுகள் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* பி.வி.சி. பைப்புகள் மற்றும் குழாய்கள் மீதான வரி 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* சமச்சீர் வரிவிதிப்பு சம்மந்தமாக அனைத்து மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தியதின் காரணமாக, அத்தியாவசியத் தேவைக்குப் பயன்படக்கூடிய பொருட்கள் மீதான வரியை 39 இனங்களில் வரி சீரமைப்புக் குழு குறைத்துள்ளது.

* வணிக வரித்துறை மூலம் 1996-97இல் 353 கோடி ரூபாய்க்கும், 1997-98இல் 143 கோடி ரூபாய்க்கும், 1998-99இல் 81 கோடி ரூபாய்க்கும், 1999-2000இல் 25 கோடி ரூபாய்க்கும், 2000-2001இல் 76 கோடி ரூபாய்க்கும் வரிச் சலுகை தரப்பட்ட வகையிலும், முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையிலும் ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் மதிப்பு 2,700 கோடி ரூபாயாகும்.

* 28.5.1993 முதற்கொண்டு 16.7.1996 வரை விற்பனைத் தொகை ரூ.5 இலட்சம் வரையில் இருந்த சுய வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு, 17.7.1996 முதல் ரூ.10 இலட்சமாகவும், 1.4.1998 முதல் ரூ.10 இலட்சம் என்பது ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டு, 1999-2000 ஆண்டு வரிவிதிப்புக்கு அது ரூ.1 கோடி எனவும் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர்கள், ஆண்டு முடிவில் முடிக்கப் பெற்ற ஒப்பந்தப் பணித் தொகையில், கட்டிடப் பணி ஒப்பந்தத் தொகையில் 2 விழுக்காடு இணக்க வரியாகவும், மற்ற ஒப்பந்த பணித் தொகையில் 4 விழுக்காடு இணக்க வரியாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

* இதைப் போன்றே, தங்கம் மற்றும் வெள்ளி நகை வணிகர்களின் வியாபாரத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சங்கள் மிகாதிருப்பின், அவர்கள் விருப்பத் தெரிவின்படி, இணக்க வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. திரு. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையிலான வணிக வரி சீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளுக்கேற்ப தங்கம், வெள்ளி நகைகள் விற்பனை, உணவு விடுதிகளில் நிகழும் விற்பனை ஆகியவற்றிற்கு படிமுறை (Sla System) வரி விகிதம் 1997-98இல் அறிமுகம் செய்யப்பட்டது.

* விற்பனை வரி விதிக்கத்தக்க குறைந்தபட்ச விற்பனைத்தொகை அளவு ரூ.1 இலட்சம் என்பது ரூ.3 இலட்சமாக

1996-97இல் உயர்வு. இதனால் 40 ஆயிரம் வணிகர்கள் பயனடைகிறார்கள்.

* வணிகராகப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு ரூ.75 ஆயிரம் என்பது 1998-99இல் ரூ.1.50 இலட்சமாகவும், 1999-2000இல் ரூ.3 இலட்சமாகவும் உயர்வு.

வரித் தள்ளிவைப்புத் திட்டம்

* வட்டியில்லா வரித் தள்ளி வைப்பு மற்றும் வரித் தள்ளுபடித் திட்டத்தின் கீழ், இதுவரை 992 கோடியே 51 இலட்சம் ரூபாயை தொழில் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

* வணிக வரித்துறை வாயிலாகச் சமாதான் திட்டம் 1.6.1999 முதல் கொண்டு வரப்பெற்று, மொத்தம் 1706 வணிகர்கள் பயன் பெற்றனர். இதன் வாயிலாக 19 கோடியே 93 இலட்சம் ரூபாய் வரி நிலுவை வசூலிக்கப்பட்டு, 47 கோடியே ஆறு இலட்சம் ரூபாய் வரி நிலுவைத் தள்ளுபடிச் செய்யப்பட்டது.

சோதனைச் சாவடிகள் நீக்கம்

* இடைமாநில சோதனைச் சாவடிகள் நீங்கலாக, உள்மாநிலத்தில் அமையப் பெற்ற சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் 31.5.2000 அன்று வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் நீக்கப்பட்டன. இந்த அரசாணை 1.9.2000 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டது.

* வணிக வரித்துறையில், வரிவிதிப்பு வட்டங்கள், சோதனைச் சாவடிகள், உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் மொத்தம் 246 கணினிகள் மூன்று கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்பட்டன.

* பத்திரப் பதிவில் முத்திரைத் தீர்வை சலுகைகள், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த ஒதுக்கீட்டுதாரர்களுக்கு எழுதித் தரப்படும் கிரைய ஆவணங்களின் மீது செலுத்தப்படும் முத்திரைத் தீர்வைக்கு விலக்கு அளித்து 8.1.1998 அன்று ஆணையிடப்பட்டது.

* படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் 19 மற்றும் 20.7.1997

ஆகிய நாட்களில் ஆவண எழுத்தர்களுக்கான உரிமத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற 22,000 பேருக்கும் ஆவண எழுத்தர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

* குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே செய்யப்படும் பாகப்பிரிவினை ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை 4 சதவீதம் என்பது 2 சதவீதமாகக் குறைத்து 13.8.1997இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது..

* ரூ.3 ஆயிரத்திற்கு மேற்படாத அசையாச் சொத்துக்கள் விற்பனையில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் இருந்து முழு விலக்கு 27.7.1998இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதிலும் கூடுதலாக 1524 முத்திரைத் தாள் விற்பனை இடங்களை உருவாக்கி 6.7.98இல் ஆணையிடப்பட்டுள்ளது. ஒத்தி ஆவணங்கள் மீதான முத்திரைத் தீர்வை 7 சதவிகிதம் என்பதை 4 சதவிகிதமாக குறைத்து 13.8.97இல் ஆணையிடப்பட்டுள்ளது.

* வீட்டுவசதிக் கடன் நிறுவனங்கள் பொதுமக்களிடம் அடமானம் பெறும் சொத்துக்களை மறு ஈடு வைத்து கடன் பெற விதிக்கப்படும் 13 விழுக்காடு முத்திரைத் தீர்வை 0.1 விழுக்காடாக குறைத்து 17.12.97இல் ஆணையிடப்பட்டதால் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனங்கள் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டி, வீடு கட்டுபவர்களுக்கு அதிக அளவில் கடன் வசதிகளை அளிக்கிறது.

* 26.2.1999 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட சமாதான் சலுகை திட்டத்தின்கீழ், 1.3.1999 அன்று முத்திரைத் தனித் துணை ஆட்சியரிடம் நிலுவையில் உள்ள ஆவணங்களில் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பின்மீது விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை மற்றும் ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தினை செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் 1.3.1999 முதல் 30.9.1999 வரை செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 36,813 ஆவணங்கள் முடிக்கப்பட்டு 34 கோடியே 56 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

* பதிவுத்துறையை கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஆவணங்கள் பாதுகாப்பு, சான்றிட்ட நகல்கள்,

வில்லங்கச் சான்று, வழிகாட்டி மதிப்பு தகவல் போன்றவை உடனடியாக வழங்கப்பட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

* தமிழகத்தில் நெடுஞ்சாலை, நீர்ப்பாசனம், மின்உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் போன்ற பெரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து 50 கோடி ரூபாய்க்கு மேல் எழுதிக் கொடுக்கும் அடமான ஆவணங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையை ரூ. 25 இலட்சம் எனவும், பதிவுக் கட்டணம் ரூ. 5 இலட்சம் எனவும், 2.12.1999 அன்று குறைத்து ஆணையிடப்பட்டது.

உடன்பிறப்பே,

புதிய வரிக் கொள்கை மாற்றத்தினாலும் - வரி விதிப்பு குறித்து வணிகப் பெருமக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசுகிற நிலையை இந்த அரசு கடைப்பிடித்ததாலும் - விற்பனை வரி சம்பந்தமான ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகளை பெருமளவு ஏற்றுக் கொண்டதாலும் - நாலரை ஆண்டுகளில் 2,700 கோடி ரூபாய் அளவுக்குச் சலுகைகளையும், வரிவிலக்குகளையும் வழங்கியும்கூட, 1996ஆம் ஆண்டு விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் 5,023 கோடி ரூபாய் என்பது இந்த ஆண்டு சுமார் 8,000 கோடி ரூபாய் அளவுக்கு உயருமென்றால் இந்த அரசின் வணிகர் உறவும், வரிக் கொள்கையின் பலனும் பெற்றுள்ள வெற்றிக்கு அடையாளம் என்பதைத் தவிர, வேறு என்னவாக இருக்க முடியும்?

அன்புள்ள,

மு. க.

(5-12-2000)

2552. தமிழ்த்துறை வளர்த்திட தனித்துறை கண்டோம்!

உடன்பிறப்பே,

“நீரார்ங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீரார்ம் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே,
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!”

என்ற மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய பாடலை 1970ஆம் ஆண்டில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலாக ஆக்கிய பெருமை நமக்கு என்றென்றும் உண்டு. தமிழர்களின் நலன் காக்க நாளும் பாடுபடும் கழக அரசு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பாடுபடுவதை எந்த நிலையிலும் நிறுத்தாது என்பதற்கு உதாரணம்தான் நான்காவது முறையாக இந்த அமைச்சரவை பதவியேற்ற போது தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கி அந்தத் துறை 13-5-1996 முதல் செயல்பட்டு வருகின்றது. அந்தத் துறையின் சார்பில், கடந்த நான்கரை ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள சாதனைகளின் பட்டியல்தான் இன்றைய கடிதத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

அகரமுதலி

* 1974 இல் அன்றைய கழக அரசில் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் நிறுவப்பட்டு, மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் அதன் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்டார். 1974 முதல் 1980 வரை

முழுமையாக உழைத்தும் பாவாணர் அவர்களால் ஆசைமொழி வரைதான் எழுத முடிந்தது. 1981 இல் பாவாணர் மறைந்தார். அதன்பின் 1985 ஜனவரியில் அவர் உருவாக்கிய முதல் தொகுதி நூல் வெளியிடப்பட்டது. 1989இல் கழக அரசு அகரமுதலித் திட்டத்திற்கு அளித்த ஊக்கம் காரணமாக இரண்டாம் தொகுதி உருவாக்கப்பட்டது. 1991 ஜனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டதன் காரணமாக இப்பணியில் தொய்வு ஏற்பட்டு, இந்த இரண்டாம் தொகுதி நூல் 8.5.1992இல் தான் வெளியிடப்பட்டது. 13.5.1996இல் கழக அரசு அமைந்த பிறகு அகரமுதலி உருவாக்கும் திட்டம் முடுக்கி விடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மூன்றாம் பாகம் உருவாக்கப்பட்டு, 25.2.1997இல் வெளியிடப்பட்டது. அ முதல் ஒள வரையிலான சொற்கள் தொகுக்கப்பட்டு நூல்களாகிவிட்டன. மேலும் நான்கு, ஐந்தாம் பாகங்களும் வெளிவந்துவிட்டன.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

* 58 வயது முடிந்த தமிழறிஞர்களுக்கு திங்கள் தோறும் 400 ரூபாய் என வழங்கப்பட்ட நிதியுதவி 10.1.1996 முதல் 500 ரூபாயாக உயர்த்தப்பட்டு, தற்போது 467 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

அஞ்சல்வழிக் கல்வி - தமிழ்

* சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக, அஞ்சல் வழியில் தமிழ்க் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, மொரீசியஸ், ரீயூனியன், டர்பன், மடகாஸ்கர் ஆகிய பகுதிகளில் அஞ்சல் வழித் தமிழ்க் கல்வியைத் தொடரவும், மொரீசியசில் உள்ள மகாத்மா காந்தி நிலையம் இதன் தொடர்பகமாக விளங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம்

* 1869இல் தொடங்கப்பட்ட பழமையான இந்த நூலகத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, இசுலாமிய மொழிகளில் உள்ள 72,314 ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கு 13.32 இலட்சம் ரூபாய் செலவில் 1996இல் குளிர்ப்பதன வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்துச் சுவடிகளையும் நுண்படச்

சுருளில் கொண்டு வர 25 இலட்சம் ரூபாய் செலவில் நுண்படக் கருவி (Microfilm) வாங்கப்பட்டுள்ளது.

அரசு அருங்காட்சியகம்

* 13.5.1996க்குப்பின் பழநி, திருவாரூர், சிவகங்கை, காஞ்சிபுரம், நாகை, இராமநாதபுரம், கரூர் ஆகிய 7 இடங்களில் புதிய அருங்காட்சியகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கபிலர் எழுதிய குறிஞ்சிப்பாட்டு இலக்கியத்தில் கூறப்படும் 96 மலர்களைப் பற்றிய காட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி இம்மலர்கள் தொகுக்கப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழக வரலாற்றில் இது முதல் முயற்சியாகும்.

ஆசியவியல் நிறுவனம்

* 1996க்கு முன் தமிழியல் ஆய்வுக்காகத் தமிழக அரசிடமிருந்து இந்நிறுவனம் பெற்ற தொகை ரூ.11 இலட்சம். 1996க்குப் பின் 1996-97இல் ரூ.19 இலட்சமும், 1997-98இல் ரூ.20 இலட்சமும், 1998-99இல் ரூ.20 இலட்சமும், 1999-2000இல் ரூ.22.50 இலட்சமும் இந்நிறுவனத்திற்கு இந்த அரசு வழங்கியுள்ளது.

ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

* 1996க்குப் பின், ஆண்டுக்கு 6 மாவட்டங்கள் எனும் அளவில், 29 மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. மாவட்ட அலுவலகங்களில் 100 விழுக்காடு தமிழை ஆட்சி மொழியாக்கிட இந்த முயற்சி பெரிதும் பயன்படுகிறது.

இசைப்பள்ளி

* 13.5.1996க்கு முன் சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 மாவட்டங்களில் மட்டுமே இசைப்பள்ளிகள் இருந்தன. 13.5.1996க்குப் பின் திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, சீர்காழி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு ஆகிய 17 இடங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. திருவையாற்றில் தமிழிசை விழா நடத்திட ஒரு இலட்சம் ரூபாய்

ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சீர்காழியில் மாரிமுத்தா பிள்ளை, முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் ஆகிய தமிழிசை மூவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

இணையம்

* 1999 பிப்ரவரியில் உலகத் தமிழ் இணைய மாநாடு தமிழக அரசினால் நடத்தப்பட்டு, கணினியின் விசைப்பலகை ஒரே சீராக்கப்பட்டதுடன், உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இணையத்தில் நான் அனுப்பிய தமிழ் வாழ்த்துச் செய்தியே முதல் வாழ்த்துச் செய்தியாகும். இந்தியாவிலேயே இணையத்தில் அதிக பக்கங்களைக் (Home Page) கொண்ட மொழி தமிழ்தான் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய ஆட்சிப்பணித் தேர்வு

* இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளைத் தமிழில் எழுதினால் அதிகம் பேர் வெற்றி பெற வாய்ப்புள்ளது. இதற்கு ஏற்ப முந்தைய ஆட்சியில் தமிழில் நூல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. தமிழ் மொழி, இலக்கிய வரலாறு, புவியியல், வரலாறு போன்ற பாடங்களை தமிழில் தனித் தனியே தொகுத்து வெளியிட முடிவு செய்யப்பட்டு, முதல் முயற்சியாக தமிழ்மொழி வரலாறு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இயல் இசை நாடக மன்றம்

* இயல் இசை நாடக மன்றத்திற்கு வழங்கப்பட்ட நல்கைத் தொகை 25 இலட்சம் ரூபாய் என்பது 1996க்குப் பின் 45 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவுக்குப் பின் கலங்கும் குடும்பத்தாருக்கு நிதியுதவி அளிப்பதற்காக வைப்பு நிதி ரூ.4.70 இலட்சம் என்பது ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நலிந்த கலைஞர்கள் எனும் முறையில் இதுவரை 4267 பேர் மாத உதவித்தொகையாக ரூ.500 வீதம் பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் 300 பேருக்கு வழங்கப்பட்ட இந்த உதவித்தொகை இந்த ஆண்டு 500 பேருக்கு உயர்த்தி வழங்கப்படுகிறது.

இலக்கணக்குழு

* தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் இக்காலத் தேவைக்கேற்பவும், பள்ளி/கல்லூரி

மாணவர்கள் பயன் கொள்ளத்தக்க வகையிலும் ஒரு புதிய இலக்கண நூலை எழுதி வெளியிடுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு கட்டுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உலகத் தமிழர் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு

* உலகில் 36 நாடுகளில் வாழும் ஏறத்தாழ 87 இலட்சம் தமிழர்கள் இடையே, பலவகைகளிலும் உறவுகளை வலுப்படுத்த மொரீசியஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குத் தமிழ்க்குழு நேரில் சென்று உரிய பணிகளைச் செய்துள்ளது. 22 நாடுகளுக்குச் சிறந்த நூல்களை அனுப்பும் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம், சிங்கப்பூர், மொரீசியஸ், ரீயூனியன் முதலிய நாடுகள் ஒவ்வொன்றிற்கும் 100க்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசியா, துபாய், மொரீசியஸ், டர்பன், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு அஞ்சல் வழி பட்ட வகுப்புப் பாடங்களும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

* 1968இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு, 1970இல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் இந்நிறுவனம், 1996க்கு முன் 29 இலட்சம் ரூபாய் உதவி பெற்று வந்ததற்கு மாறாக, 1996க்குப் பின் 48.5 இலட்சம் ரூபாயாக பெற்று வருகிறது. கூடுதலாக மொழிப்பயிற்சிக்கூடம் (Language La), தமிழியல் இதழ் ஒலி நாடா வெளியீடுகள், நூலக விரிவாக்கம் ஆகிய பணிகளுக்காக மேலும் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊர்திகளில் தமிழ்

* ஊர்திகளில் காணப்படும் பதிவெண் பலகைகளில் ஆங்கில எழுத்துகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது அவற்றைத் தமிழில் எழுதிக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டு ஆணையிடப் பட்டுள்ளது.

ஓவிய நுண்கலைக்குழு

* 13.5.1996க்கு முன் இந்த ஓவிய நுண்கலைக் குழுவிற்கு 5 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. எனினும், கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த அமைப்பே இயங்கவில்லை. 1996க்குப் பின் 15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகக்

குழு, நடிகர் சிவகுமார் தலைமையில் புதுப்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

கருவூலத்தில் தமிழ்

* கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவல கங்களில் பட்டியையோ (Bill), கைச்சாத்தையோ (Voucher) தமிழில் தயாரிக்கலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கலைக்களஞ்சியம்

* நாடகக் கலைக்களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஒரு தொகுப்பும், தமிழிசைக் கலைக்களஞ்சியம் - பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வாயிலாக மூன்று தொகுப்புகளும், மருத்துவக் கலைக் களஞ்சியம் - தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 5 தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்ட குழந்தைகள் கலைக் களஞ்சியம் நூல் தயாரிக்கும் பணிக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

கலைத்தொழில்

* 100 ஆண்டுகளுக்கு மேல் சிறந்து விளங்கும் சென்னைக் கலைத் தொழில் கல்லூரியில், முதன் முறையாக முதுகலை வகுப்பு (வண்ணக்கலை) தொடங்கப்பட்டுள்ளது. மேலும் காட்சி வழித் தகவல் தொடர்புக் கலையில் முதுகலை வகுப்பும் தொடங்கப்பட்டது. குடந்தைக் கல்லூரியிலும் வண்ணக் கலையில் முதுகலை வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளின் வரலாற்றில் முதுகலைப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது 1996க்குப் பின்னர்தான்.

ஜவகர் சிறுவர் இல்லம்

* 1996க்கு முன் மூன்றே மாவட்டங்களில் இருந்த இந்தச் சிறுவர் இல்லம் இந்த அரசில் 1996க்குப் பின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன.

சென்னை பெயர் மாற்றம்

* மெட்ராஸ் என்னும் பெயர் சென்னை என 30.9.1996 அன்று மாற்றப்பட்டு, இன்று ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் சென்னை என்றே உலகெங்கும் வழங்கப்படுகிறது.

தட்டச்சுப் பொறிகள்

* ஆட்சிமொழித் திட்ட விதிமுறைகளின்படி, தலைமைச் செயலகத்தில் 65 சதவீதம் தமிழ்த் தட்டச்சுகள் இருக்க வேண்டும். எனவே தலைமைச் செயலகத் துறைகளுக்கு 90 இலட்சம் ரூபாய் செலவில் 1000 தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமைச் செயலகத்தில் எடுக்கப்பட்ட ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளில் ஆங்கில விசைப் பலகைகளை தமிழில் மாற்றிட தலைமைச் செயலகத்திற்கு மேலும் 500 தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டுள்ளன. உயர்நீதி மன்றம், சார்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் நகல் எடுப்போர் அனைவரும் பயன்படுத்தும் வகையில் 65 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

* தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருத்திற் கொண்டு, நான்காம் பதிப்பாக 5000 படிகள் அச்சிட்டு 24.12.1998 அன்று வெளியிட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறைக்கு அலுவலர்கள்

* 13.5.1996க்கு முன் 3 உதவி இயக்குநர்கள், 8 தமிழ் ஆய்வு அலுவலர்கள், சில இடங்களில் மட்டும் உதவியாளர்கள், தட்டச்சர்கள் என 29 மாவட்டங்களில் தமிழ் வளர்ச்சித் துறையில் பணியாற்றினர். 1996க்குப் பின், தமிழ் ஆய்வு அலுவலர்கள் அனைவரும் பணிவரன்முறை செய்யப்பட்டு, உதவி இயக்குநர்கள் ஆயினர். இயக்குநர் அலுவலகத்தில் இருந்த தகுதியுடைய கண்காணிப்பாளர்களில் மூவருக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இத்துறையின் உதவியாளர்கள் இருவர் உதவி இயக்குநர் களாகவும் அமர்த்தப்பெற்றனர். தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் பட்டியல் வேலை வாய்ப்பகம் மூலம் பெறப்பட்டு, 13 பேர் உதவி இயக்குநர்களாக முறையான நேர் காணல் வழி மூலம் அமர்த்தப்பட்டுள்ளனர். சேலம், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு இரண்டு மண்டலத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

தமிழ் வளர்ச்சி வளாகம்

* சென்னை அருங்காட்சியகப் பகுதியில் தமிழ் வளர்ச்சி வளாகம் ஒன்று அமைத்திட இந்த அரசு முடிவு செய்து அனுமதிகளை வழங்கியுள்ளது. இதில் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத்துறை, ஓலைச்சுவடி நூலகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமையுமாறும், இதனைப் பார்வையிட வரும் உள்நாட்டாரும், வெளிநாட்டாரும் ஒரே இடத்தில் தமிழ் தொடர்பான விளக்கங்களைப் பெறும் வகையிலும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தமிழில் அறிவியல் நூல்கள்

* வருங்காலத்தில் பொறியியல் கல்வியைத் தமிழில் பயில 15 பல்கலைக் கழகங்களுக்கு 64 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, அதனடிப்படையில் இன்று அனைத்து நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

* 13.5.1996க்கு முன், ஆண்டுதோறும் வெளியிடப் பெறும் நூல்களில் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து முதற்பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.5,000/-, ரூ.3,000/-, ரூ.1,000/- என வழங்கப்பட்டு வந்தன. பதிப்பகத்தாருக்கு பாராட்டுச் சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டது. இந்த ஆட்சியில், முதற்பரிசு ரூ.10,000/- என்றும், இரண்டாம் பரிசு ரூ. 5,000/- என்றும், மூன்றாம் பரிசு ரூ.2,000/-என்றும் உயர்த்தி வழங்கப்படுகிறது. வரும் ஆண்டிலிருந்து பரிசுபெறும் நூல்களைப் பதிப்பித்துள்ள பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் மருத்துவம்

* மருந்துச் சீட்டுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு வெளியிடும் மாத்திரைகளுக்கான உறைகளில் தமிழ் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

திராவிடப் பல்கலைக் கழகம்

* தென்னக மொழிகளையும், அவற்றிடையே உள்ள உறவுகளையும், ஊடாடி நிற்கும் பண்பாட்டுக் கூறுகளையும் உறுதி செய்யும் வகையில் குப்பம் எனும் நகரில் திராவிடப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. நான்காவது முறையாக நாம் ஆட்சிக்கு வந்தவுடன், தமிழக அரசின் சார்பில் ரூ.50 இலட்ச ரூபாயும், கடந்த ஆண்டில் மேலும் 25 இலட்ச ரூபாயும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புச் சொல் துணையகராதி

* 1972 முதல் புதுப்பிக்கப்படாத அகராதிகளில் துறையின் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டு முதலில் 10 துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணை அகராதிகளைப் புதுப்பித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புகைவண்டிகளில் தமிழ்

* தமிழக அரசு எடுத்த முயற்சியின் விளைவாக, அனைத்து புகை வண்டிகளிலும் தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. கம்பன் விரைவு வண்டி, மலைக்கோட்டை விரைவு வண்டி, வேகத் தொடர் வண்டி முதலிய சொற்றொடர்களை புகை வண்டிகளில் இப்போது காணலாம்.

தொல்பொருள் ஆய்வுத் துறை

* வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு அரிய தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அழகன்குளம், நாகப்பட்டினத்திலுள்ள பூம்புகார், பெரியார் மாவட்டம் கொடுமணல் ஆகிய இடங்களில் பெரிய அளவில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டன. திருக்கோயிலூர், கோவலன் பொட்டல், கரூர் போன்ற இன்னும் பல்வேறு இடங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. மறைந்த பூம்புகார் நகரின் சில கட்டடப் பகுதிகளும், இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகக் கடலில் மூழ்கிப் போன ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த கப்பலும், பூம்புகார் ஆழ்கடலாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூம்புகாரில் நிலம் மற்றும் நீர் அகழாய்வு மூலம் சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு ஆழ்கடல் தொல்லியல் அகழ்

வைப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. படி எடுக்கப்பட்ட 10,000 கல்வெட்டுகளை அச்சில் கொணர ரூ.8.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்வாணையம்

* வினாத்தாள்கள் அனைத்தும் தமிழில் முதலிலும், ஆங்கிலத்தில் அடுத்தும் அமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நூல் வெளியிட உதவி

* விடுதலைப் போராட்ட வீரர் ஜமதக்கினி அவர்கள், காரல்மார்க்சின் மூலதனம் நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட அரசு ரூ.5 இலட்சமும், திரு. ஐ. சண்முகநாதன் அவர்கள், ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு என்னும் நூலை வெளியிட ரூ. 3 இலட்சமும் நிதியுதவி வழங்கப்பட்டன.

* வரலாற்றுப் பேராசிரியர் மறைந்த திரு. கே.கே. பிள்ளை அவர்களின் தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் எனும் நூலை வெளியிட 77,800/- ரூபாயும், அமரர் ஜே.பி. ராட்லர் அவர்களால் தொகுக்கப்பெற்ற தமிழ் - ஆங்கில அகராதியை மறுபதிப்பாக வெளியிட 2 இலட்ச ரூபாயும், இதுகாறும் வெளிவந்த தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் நாட்டு இலக்கியங்களை மட்டுமே சார்ந்து நிற்கும் நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்து புதிய தமிழ் இலக்கிய வரலாற்றை உருவாக்க 3 இலட்ச ரூபாயும், கன்னியாகுமரியில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பெற்ற குறளமுதம், திருக்குறள் - நூல்கள், திருக்குறள் - ஆங்கிலக் கட்டுரைகள், திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகிய 4 நூல்களை அச்சிட்டு அளித்தமைக்காக அச்சுச் செலவுத் தொகையாக 1,60,420 ரூபாயும், திருக்குறளை மலையாள மொழியில் மொழி பெயர்த்து வெளியிட திரு.எஸ்.ரமேசன் நாயருக்கு 2 இலட்ச ரூபாயும், திரு.மணவை முஸ்தபாவிற்கு கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி வெளியிட 2 இலட்ச ரூபாயும் நிதியுதவியாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன.

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

* 1997-98ஆம் நிதியாண்டில் சேலம், தஞ்சாவூர், விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மண்டலக் கலை

பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது, மேலும், இரண்டு மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்படவுள்ளன.

மழலையர் பள்ளிகளில் தமிழ்

* தமிழ்நாட்டில் தமிழ்மொழியை ஒரு பாடமாகச் சொல்லித்தரும் மழலையர், தொடக்க நிலைப் பள்ளிகளுக்கே அரசின் ஏற்பு வழங்கப்படும் என்றும், தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டணங்களில் சலுகை வழங்கப்படும் என்றும், ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களும் தமிழ் அல்லது தாய்மொழியிலேயே பயிற்றுவிக்கப்படும் என்றும், முதன்மை மொழியாக தமிழ் அல்லது தாய்மொழியே இருக்குமென்றும் அரசு ஆணையிட்டது.

இந்த ஆணைக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதின்பேரில், தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

மொழிப்போர்க் காவலர்கள்

* 1998இல் 387 பேருக்கும், 1999இல் 159 பேருக்கும் மொழிப்போர்க் காவலர்க்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.400/-ஆக இருந்த ஓய்வூதியம் ரூ.500/- ஆகவும், பின்னர் ரூ.1,500/-ஆகவும், அதன்பின் ரூ.3,000/-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவப்படி ரூ.15/-ம் சேர்த்து, 2055 பேர் மாதம் ரூ.3,015/-ம், மரபுரிமையர் 426 பேர் மாதம் ரூ.1,515/- பெறுகின்றனர். அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப் பெறுகிறது.

யாழ் நூலகத்துக்கு நூல்கள் நன்கொடை

* இலங்கை அரசு வேண்டுகோளுக்கிணங்க, யாழ்ப்பாணம் நூலகத்திற்கு 2,573 தமிழ் நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தமிழக வரலாறு

* பல்லவர் - பாண்டியர் காலம் பகுதி-2, சோழப் பெருவேந்தர் காலம் பகுதி-1 மற்றும் பகுதி-2 ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழக வரலாறு முழுவதையும் ஒரே தொகுதியாக வெளியிடும் பணி நடைபெற்று வருகின்றது.

விளம்பரப் பலகை

* 515 சொற்கள் அடங்கிய வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ் எனும் நூல் வெளியிடப்பட்டது. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் இதனை இணையத்தில் வெளியிட்டுள்ளது. தமிழில் பெரிய எழுத்திலும், அடுத்து ஆங்கிலத்திலும், அடுத்து விரும்புகின்ற மொழியிலும் எழுதிட ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளி மாநிலம்

* கல்கத்தாவிலும், மும்பையிலும் தமிழ் மையம் அமைத்திட ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளியில் பேரா. பி. சுந்தரம்பிள்ளை நினைவாக நூலகக் கட்டடம் கட்டுவதற்குத் தமிழக அரசு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது. 1998-99ஆம் ஆண்டு மானியமாக இந்நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு உதவி

* மொரீசியசுத் தீவில் வாழும் தமிழாசிரியர்களுக்கும், இசையாசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கத் தமிழ் நாட்டிலிருந்து தமிழ் ஆசிரியர் ஒருவரையும், இசையாசிரியர் ஒருவரையும் மொரீசியசுத் தீவிற்கு ஓராண்டு காலத்திற்கு அனுப்பவும், இத்திட்டத்தை மொரீசியசில் மகாத்மா காந்தி நிறுவனம் மூலம் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை

* மலேயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு நூல் அனுப்பும் திட்டம்

* தேர்ந்தெடுக்கப்பெற்ற வெளிநாடுகளுக்கு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான நூல்களை அன்பளிப்பாக வழங்குவதற்கென அரசு ரூ.5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நூல்கள் வாங்கி 20 வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டு, இதுவரை மொரீசியசு, சிங்கப்பூர், யாழ்ப்பாணம், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு நூல்கள்

அனுப்பப்பட்டுள்ளன. பிறநாடுகளுக்கும் அனுப்பிட ஏற்பாடு நடந்து கொண்டுள்ளது.

வானொலி

* 1-11-96 முதல் வானொலியில் நாளொன்று பிறக்கச் சொல் ஒன்று அறிவோம் எனும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

நிதியுதவி

* திரைப்பட உரையாடலாசிரியர் மறைந்த திரு. இளங்கோவன் குடும்பத்திற்கு ரூ.2.25 இலட்சம், உ.வே.சா. நூலகத்தில் சிலையமைப்பில் பற்றாக் குறையை நிறைவு செய்ய ரூ.50,000, மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.45 இலட்சம், திண்டுக்கல்லில் கலையரங்கம் கட்ட ரூ. 12 இலட்சம், தில்லித் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்காக ரூ.10 இலட்சம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழ்வழி நடத்தும் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்டுக்கு ரூ.10,000/-, மறைமலையடிகள் நூலகத்திற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூ.10,000/- உயர்த்தப்பட்டு இப்போது ஆண்டு நல்கையாக ரூபாய் ஒரு இலட்சம், மும்பைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சங்கக் கட்டடத்தைப் புதுப்பிக்க ரூபாய் ஒரு இலட்சம், தென் மொழிகள் புத்தக நிறுவனம் கூரியர் இதழ் வெளியிட ரூபாய் ஒரு இலட்சம், தமிழில் தந்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்த புலவர் அ. சிவலிங்கனாரின் பணியைப் பாராட்டும் வகையில் அவருக்கு ரூ.50,000/-, ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி வகுப்பறை கட்ட ரூ. 15 இலட்சம் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்கள்

* 19.2.97இல் இ.மு. சுப்பிரமணியன்பிள்ளை, மே.வி.வேணுகோபால் பிள்ளை, 24.12.98இல் மங்கலங் கிழார், 4.8.97இல் மனோன்மணியம் சுந்தரனார், 30.10.1999இல் ராய சொக்கலிங்கம், 13.3.2000இல் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

அரசுடைமையாக்கப்பட்ட தமிழ் மேதைகளின் நூல்கள்

* 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு தேவநேயப் பாவாணர் (20 இலட்சம் ரூபாய்), மறைமலை அடிகளார் (30 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்), தமிழ்த்

தென்றல் திரு.வி.க. (20 இலட்சம் ரூபாய்), பேராசிரியர் கல்கி (20 இலட்சம் ரூபாய்), சுதந்திரப் பொன்விழா நிறைவினையொட்டி, சுதந்திரக் கனலைப் பரப்பிய தமிழ்ச் சான்றோர்களாகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வ.ரா., கவி கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா. கணேசன், எஸ். டி.எஸ். யோகி ஆகிய 13 பேரின் நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டு அவர்களது குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 இலட்சம் ரூபாய், வெ.சாமிநாத சர்மா (5 இலட்சம் ரூபாய்), சாமி சிதம்பரனார் (பத்து லட்சம் ரூபாய்), மயிலை சீனி வேங்கட சாமி (பத்து இலட்சம் ரூபாய்), கவிஞர் முடியரசன் (பத்து இலட்சம் ரூபாய்) ஆகியோருக்கு பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, அவரின் குடும்பத்தாருக்கு உரிய பரிவுத் தொகை வழங்கப்படவுள்ளது.

விருதுகள்

* ஏற்கனவே இருந்த திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, பாரதிதாசன் விருது ஆகியவற்றுடன் 1997 இல் பாரதியார் விருதும், 2000இல் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதும் நிறுவப்பட்டன. தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதுத் தொகை ரூ.10 ஆயிரம் என்பது 1996இல் ரூ.20 ஆயிரமாகவும், 1998இல் ரூ.1 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது. 1996 முதல் திருவள்ளுவர் விருது முனைவர் கு. மோகனராசு, இரா. சாரங்கபாணி, வா.செ. குழந்தைசாமி, த.சி.க.கண்ணன் ஆகியோருக்கும், திரு.வி.க. விருது டாக்டர் மா. நன்னன், மா.சு. சம்மந்தன், புலவர் மருதவாணன், யாழ்ப்பாணம் கா. சிவத்தம்பி ஆகியோருக்கும், பாரதிதாசன் விருது கவிஞர் வைரமுத்து, சரளா ராஜகோபாலன், மலேசியக் கவிஞர் முரசு நெடுமாறன், பாவலர் மணிவேலன் ஆகியோருக்கும், பாரதியார் விருது மதிவண்ணன், குமரி அனந்தன், கவிஞர் வாலி ஆகியோருக்கும், கி.ஆ.பெ. விருது கோ. முத்துப் பிள்ளைக்கும் வழங்கப்பட்டுள்ளன. 23 சிறார் சிறுமிகளுக்குக் குறள் பரிசு மாதம் ரூ.1000/- அவர்கள் வாழும் காலம் வரை வழங்க 8.1.2000 அன்று ஆணையிடப்பட்டு, 9.2.2000 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு ஞானபீட விருது வழங்குவதுபோல், தமிழ்

எழுத்தாளர்களுக்குக் குறள்பீட விருது வழங்கிட, தமிழ்ச் சங்கப் பலகை அமைக்கப்பட்டுள்ளது.

* சிறந்த படைப்பிலக்கியச் செம்மல் ஒருவர்க்கு அவர்தம் ஒட்டுமொத்த வாழ்நாள் சாதனைக்காக குறள்பீட விருது, தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் சார்பில் வழங்கப் பெறவுள்ளது. விருதுத் தொகை ரூ.2 இலட்சம்.

* தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் படியாக, கவிதை, அறிவியல், நாட்டுப்புறவியல், மொழி பெயர்ப்பு, திறனாய்வு ஆகிய ஐந்து துறைகளில் சிறந்த நூல்கள் படைத்தும், தொண்டாற்றியும் வரும் ஐவருக்கு இந்த ஆண்டு குறள்பீடப் பரிசாக தலா ரூ.25,000/- வழங்கப்பெறும். தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்படியான சிறந்த நூல்கள் படைத்த 30 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்கள் பத்துப் பேருக்கு குறள்பீடப் பாராட்டிதழ் வழங்கப் பெறும். பாராட்டுத் தொகை ரூ.5,000/- ஆகும்.

பேச்சொலிப் பிழைநீக்கக் குறும்படம் தயாரிப்பு

* மக்கள் செய்தி ஊடகங்களிலும், பொது வகையிலும் தமிழ் உச்சரிப்பை நெறிப்படுத்தும் நோக்கில் பேச்சொலிப் பிழைநீக்கக் குறும்படம் தயாரிக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. குறும்படத் தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு

* இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பை விளக்கி உரைக்கும் வகையில், இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு என்னும் தலைப்பில் அரசியல், சமூகச் சீர்திருத்தம், விளையாட்டு, பொருளாதாரம், வரலாறு, கல்வி, நுண்கலைகள், இயல் அறிவியல், பொறியியல் தொழில் நுட்பம், மருத்துவம் ஆகிய பொருண்மைகளைக் கொண்ட நூலைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரித்து வெளியிடவும், கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், ஆய்வுகள் ஆகிய பொருண்மைகளில் தனித்தனியே ஐந்து நூல்களைத் தயாரித்து வெளியிடவும் ரூ.16,64,180/- ஒப்பளிப்புச் செய்யப்பட்டு, இதற்கென வல்லுநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, உரிய முறையில் கட்டுரைகள்

எழுதும் பணியும், படைப்புகளைத் தொகுக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

அரசு அறிவிப்புப் பலகைகளில் திருக்குறள்

* அரசின் தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள், இணையங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களிலும் ஆட்சிச் சொல் அகராதியில் உள்ள சொற்களில் நாள்தோறும் ஓர் ஆங்கிலச் சொல்லையும், அதற்குரிய தமிழ்ச் சொல்லையும், ஒரு திருக்குறளைப் பொருளுடனும் கரும்பலகையில் எழுதி வைக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

* திருக்குறளுக்குப் பண் அமைத்து, சுரம் அமைத்து 1958ஆம் ஆண்டிலேயே அறத்துப் பாலின் முதல் பகுதியை (கீர்த்தனையாக) வெளியிட்டுள்ள இசை வித்தகர் மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரி அவர்களின் அரும் தொண்டினைப் போற்றி, அவரது இசைக் குறிப்புகளுடன் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இப்போது அச்சிட்டு இசைக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவேகானந்தர் நினைவு இல்லம்

* நமது பண்பாட்டுப் பெருமையை நானிலமீது நிலைநாட்டிய பெருமகனார் விவேகானந்தர், சென்னையில் தங்கியிருந்த கடற்கரை மாளிகையில் கலாச்சார கண்காட்சி ஒன்றினை நடத்திக்கொள்ள ராமகிருஷ்ண மடத்தினருக்கு ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பக் கட்டமாக மூன்றாண்டு காலத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நாளிதழ்கள் - இதழ்களுக்குப் பரிசு

* இவ்வாண்டில் தமிழில் வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் இதழ்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. நாளிதழ்களுக்கு முதல் பரிசு ரூ.50,000/- இரண்டாம் பரிசு ரூ.30,000/- மூன்றாம் பரிசு ரூ.20,000/- கிழமை இதழ்களுக்கு முதற்பரிசு ரூ.20,000/- இரண்டாம் பரிசு ரூ.15,000/- மூன்றாம் பரிசு ரூ.10,000/- திங்கள் இதழ்களுக்கு முதற்பரிசு ரூ.20,000/- இரண்டாம் பரிசு ரூ.15,000/- மூன்றாம் பரிசு ரூ.10,000/- எனப்

பரிசுகள் வழங்கவும், பரிசு பெறுவோரைப் பாராட்டவும் ரூ. இரண்டு இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. பரிசுக்குரிய இதழ்களைத் தெரிவு செய்யும் பணியை நீதியரசர் கோகுல கிருஷ்ணன் தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது.

உடன்பிறப்பே,

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று முழங்கிடும் நமது இதய ஒலிக்கு எடுத்துக்காட்டாகத்தான் தமிழ் காத்திடும் போரிலும் - தமிழ் வளர்த்திடும் முனையிலும் - தளராது நடை போட்டு வருகிறது தமிழகத்தின் கழக அரசு என்பதற்கு, நான் இக்கடிதத்தில் குறித்துள்ளதை விட மேலும் அதிகமான எடுத்துக்காட்டுகள் உண்டு. அவற்றை அறிந்துள்ள நீ, பிறரையும் அறிந்திடச் செய்வதில் வெற்றி பெற வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(6-12-2000)

2553. ஆத்திகர் அகம் மகிழ அறநிலையப் பணிகள்!

உடன்பிறப்பே,

1922இல் இந்து சமய அறநிலையத்துறை அமைக்கப்படலாம் எனும் கருத்துரு முன் வைக்கப்பட்டது. பல்வேறு வகைப்பட்ட கருத்துகள் வைக்கப்பட்டிருந்த நிலையில், 1925இல் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் பனகல் அரசர் முதல்வராக இருந்தபோது முதன்முதலில் இத்துறை தொடங்கப்பட்டது. கோயில்களில் தனியார் சிலரின் மேலாதிக்கத்தாலும், விருப்பு வெறுப்புகளாலும் ஏற்படும் கொடுமைகளைத் தடுக்கவும், கோயிலுக்கென எழுதி வைக்கப்பட்ட நிலங்கள் பாதுகாக்கப்படவும், அவற்றிலிருந்து வரும் வருவாய், வழியிலேயே கசிந்து காய்ந்து விடாமல் முறையாகக் கோயில் கணக்கில் சேரவும், நகைகள், சிலைகள் ஆகியவை தக்கார் பொறுப்பில் பாதுகாக்கப்படவும் வேண்டுமெனும் நோக்கில்தான் இத்துறை அமைக்கப்பட்டது.

ஆனால் திருக்கோயில்கள் அனைத்தையும் தனியானதொரு வாரியத்தின் பொறுப்பிலே விட வேண்டுமென்ற ஒரு கருத்தும் தொடர்ந்து சொல்லப்படுகிறது. இது போன்றவைகளில் பல அபிப்பிராயங்கள் இருப்பது இயற்கைதான். ஆனால் வாரியம் ஏற்படுத்துவதால் மட்டும், தவறே நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது. வாரியம் மட்டுமல்ல, எந்தவொரு அமைப்பும் பெயரிலே அல்ல, அதனைப் பொறுப்பேற்று நடத்துபவர்கள் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பொறுத்துத்தான் அதன் செயல்பாடுகள் அமையுமே தவிர, வாரியம் என்றிருந்தால் தவறுகளே நடக்காது, அறநிலையத் துறை என்று இருந்தால் தவறுகள் நடக்குமென்று கருதுவது சரியல்ல. எத்தனையோ வாரியங்கள் நடைபெற்று அதிலே தவறுகள் விளைந்ததற்கு நம் கண்ணெதிரிலேயே சாட்சியங்கள் இல்லையா? எனவே அறநிலையத் துறையைப் பொறுத்த

வரையில், வாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை உடனடியாக முடிவிற்கு வரக் கூடிய ஒன்றல்ல.

அதுபற்றி வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று அதன் பின்னரேதான் அவசியமெனில், அதுகுறித்து ஒரு முடிவெடுக்கப்பட வேண்டும். அறநிலையத் துறை ஆரம்பிக்கப்பட்ட போதுகூட இதுகுறித்த வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் நடைபெற்று ஆன்றோர்களும், சான்றோர்களும் விவாதங்கள் நடத்தி அதன்பின்னரே அறநிலையத் துறை உருவானது. எனவே இத்துறையில் இன்னும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை சிந்தித்து, கலந்து பேசி இத்துறை மேலும் மேம்பட ஆவன செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது.

தற்போதுகூட காஞ்சி காமகோடி பீடம், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், திருப்பனந்தாள் மடம், வானமாமலை மடம், திருக்குறுங்குடி மடம், பேரூர் மடம், மயிலம்-பொம்மபுரம் ஆதீனம், மதுரை ஆதீனம் போன்ற 57 மடங்களும், ஆதீனங்களும் இந்து சமய அறநிலையச் சட்டத்திற்குட்பட்டு அந்த மடாதிபதிகளாலேயே நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன.

கோயில் கொடியவர்களின் கூடாரமாகக் கூடாது

* 1953இல் திரையிடப்பட்ட பராசக்தி திரைப் படத்தில் ஒரு காட்சியில் கோயில் கூடாது என்பதல்ல! அது கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்று ஒரு கருத்தை எழுதியிருந்தேன். அதனை ஒரு கோட்பாடாகக் கொண்டுள்ள கழக அரசில்தான் திருக்கோவில் பணிகள் பக்திவழி ஒழுகிடும் பெருமக்களும் பாராட்டிப் போற்றும் வகையில், தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

திருப்பணிகள்

* முந்தைய ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 828 கோவில்களுக்கு குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றன. ஆனால் 1996க்குப்பின் நான்கரை ஆண்டுகளில் 2,459 கோயில்களுக்கு திருப்பணி நடைபெற்று குடமுழுக்கு விழாக்கள் நிறைவுற்றுள்ளன.

* 407 திருக்கோவில்களில் 590 திருப்பணிகள் 31 கோடியே 37 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவிலும், 435 திருக்கோவில்களில் 786 இதர பணிகள் 28 கோடியே 80 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 842 திருக்கோவில்களில் 1376 பணிகள், 60 கோடியே 17 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

* 6.6.1996 அன்று மயிலை கபாலீசுவரர் திருக் கோவில், 5.7.1996 அன்று திருப்பெரும்புதூர் ஆதி கேசவப் பெருமாள் திருக்கோவில், 23-3-1997 அன்று திருநீர்மலை ரெங்கநாத சுவாமி திருக்கோவில், 26-3-1997 அன்று திருப்பாபுலியூர் பாடலீஸ்வரர் திருக்கோவில், திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில், 27.3.1997 அன்று கடலூர் திருவேந்திரபுரம் தேவநாதசாமி திருக்கோவில், 8.6.1997 அன்று தஞ்சைப் பெரிய கோவில், 16-6-1997 அன்று சென்னை மல்லீஸ்வரர் திருக்கோவில், 12.7.1997 அன்று வேலூர் ஜலகண்டேசுவரர் திருக்கோவில், 29-4-1998 அன்று சோளிங்கர் லெட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவில், 7.6.1998 அன்று சீர்காழிக்கு அருகில் திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் திருக்கோவில், திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் பவானியம்மன் திருக்கோவில், 1.7.1998 அன்று தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரில் அரவிந்தலோசனர் திருக்கோவில், 29-1-1999 அன்று சென்னை சென்னகேசவப் பெருமாள் திருக்கோவில், 26.3.1999 அன்று திருப் பெரும்புதூர் அருகே வல்லக்கோட்டை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோவில், 30.6.1999 அன்று கும்பகோணம் சாரங்கபாணிசுவாமி திருக்கோவில், 12.12.1999 அன்று கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் திருக்கோவில், 16.9.1999 அன்று இராமநாதபுரம் மாவட்டம் அரியக்குடி திருவேங்கடமுடையான் திருக்கோவில், 10.2.2000 அன்று ஆழ்வார் திருநகரி ஆதிநாதாழ்வார் திருக்கோவில், 11-2-2000 அன்று சென்னை குறுங்காலீஸ்வரர் திருக்கோவில், 16.3.2000 அன்று மதுரை சக்கரத்தாழ்வார் சன்னதி காளமேகப் பெருமாள் திருக்கோவில், 16-4-2000 அன்று சென்னை அகஸ்தீஸ்வரர் திருக்கோவில், 14.7.2000 அன்று திருவாரூர் மாவட்டம் வேதாரண்யம், வேதாரண்யேசுவரர் திருக்கோவில், 7.7.2000 அன்று திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகில் உள்ள திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் திருக்கோவில்,

12.7.2000 அன்று திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி திருக்கோவில், 5.7.2000 அன்று பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், 11.6.2000 அன்று திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், 10-9-2000 அன்று பவானி சங்கமேஸ்வரர் திருக்கோவில், காங்கேயம் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில், தாந்தோன்றி மலை கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோவில், 11.9.2000 அன்று திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி திருக்கோவில், 15-9-2000 அன்று திருமுட்டம் பூவராகஸ்வாமி திருக்கோவில், சிவாயம் ரத்தினகிரீஸ்வரர் திருக்கோவில், 10.11.2000 அன்று கும்பகோணம் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோவில் போன்ற பல்வேறு குறிப்பிட்ட திருக்கோவில்களில் 1996-க்குப்பின் திருப்பணிகள் முடித்து திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

உயர்ந்துவரும் கோவில் வருவாய்

* கோவில் சொத்துக்கள் முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆவலுடன் நடவடிக்கைகளை எடுத்து, இந்த அரசு அதிரடியாகப் பல நிலங்களையும், வீட்டு மனைகளையும் மீட்டிருக்கிறது. நியாய வாடகை நிர்ணயம் செய்தும், நிலுவைகளை வேகமாக வசூலித்தும், கோவில் வருமானத்தை உயர்த்தி இருக்கிறது இந்த அரசு. எந்த ஒரு தனியாருக்கும் கோவில் நிலங்களை விற்பனை செய்வதில்லை எனும் உறுதியான கொள்கை முடிவையும் மேற்கொண்டுள்ளது.

திருக்கோவில் ஆலோசனைக்குழு

* திருக்கோவில்களின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த 1996-ஆம் ஆண்டில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து இந்து சமய அறநிலையச் சட்டம் திருத்தப்பட்டது. அச்சட்டத்தின்கீழ், முதலமைச்சர் தலைமையில், அறநிலையத்துறை அமைச்சரைத் துணைத் தலைவராகக் கொண்டு அறநிலையத் துறை செயலாளர், அறநிலையத் துறை ஆணையர், குன்றக்குடி ஆதீனகர்த்தர், திருப்பனந்தாள் மடாதிபதி, திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகள், திருமதி செளந்தரம் கைலாசம், நெல்லை மேயர் திருமதி உமாமகேஸ்வரி, கருமுத்து கண்ணன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவின் மூலம் திருக்கோவிலின் நிர்வாகத்தை மேம்படுத்துதல், அவற்றின் வருவாயைப் பெருக்குதல் தொடர்பான முக்கிய ஆலோசனைகள் பெறப்பட்டு, அவற்றின் அடிப்படையில் சிறப்பான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சொத்துப் பதிவேடுகள்

* 1991 முதல் 1996வரை முந்தைய அரசில் திருக்கோவில்களில் உருவாக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகளின் எண்ணிக்கை 1,628. 1996க்குப்பின் திருக்கோவில்களில் நான்கரை ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சொத்துப் பதிவேடுகள் 8,325.

மீட்கப்பட்ட கோவில் சொத்துக்கள்

* ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த கோவில் சொத்துகளில் 1991 முதல் 1996 வரை 126.59 ஏக்கர் நிலங்களும், 4 கிரவுண்ட் மனைகளும் மீட்கப்பட்டதற்கு மாறாக, 1996க்குப்பின் மீட்கப்பட்ட கோவில் சொத்துகள் 1859.15 ஏக்கர் நிலமும், 381 கிரவுண்டு மனைகளும் ஆகும். உதாரணமாக, திருத்துறைப் பூண்டியில் 621 ஏக்கர், பேரூரில் 250 ஏக்கர், ஆளவந்தார் அறக்கட்டளையில் ரூ.300 கோடி பெறுமான சொத்துகள், திருவட்டீசுவரன் கோயிலில் ரூ.100 கோடி பெறுமான சொத்துகள் என்று தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் மீட்கப்பட்டுள்ளது. 1.7.1999 முதல் வருவாய் நீதிமன்றங்கள் கோவில்களுக்குச் சாதகமாக 13,500 வழக்குகளை முடித்து, அதன் வாயிலாக பல இலட்சக்கணக்கான ரூபாய் கோவில்களுக்கு வருமானமாகப் பெறப்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளின் வாயிலாக திருக்கோவில்களுக்குச் சாதகமாக 1,414 ஏக்கர் நிலங்களுக்கும், 242 கிரவுண்டு மனைகளுக்கும் சாதகமாகத் தீர்ப்புகள் பெறப்பட்டுள்ளன.

கோவில் சொத்துகள் மூலம் வருவாய்:

* முந்தைய ஆட்சியில் திருக்கோவில் சொத்துகளிலிருந்து கிடைத்த வருவாய் 365.20 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், 1996க்குப்பின் அக்டோபர் 2000 வரை திருக்கோவில் சொத்துகளிலிருந்து கிடைத்த வருவாய் 648.71 கோடி ரூபாய்.

கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

* தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையில் இல்லாத திருக்கோவில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து அறுபது

வயதினை அடைந்து, ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஓய்வூதியம் வழங்க 22.11.1997 அன்று ஆணையிடப்பட்டு, இதுவரை 1,146 தகுதியுடைய பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

கருணை இல்லங்களுக்கு அரசு மானியம்

* ஆதரவற்ற இளம் சிறார்களுக்கு அரசே தாயாக இருந்து காப்பாற்றும் அரிய திட்டமாக திருக்கோவில்களில் கருணை இல்லங்களை உருவாக்கும் சீரிய திட்டம் 3.6.1975 அன்று அன்றைய கழக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 38 திருக்கோவில்கள் மூலம் 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. அங்கே 966 சிறுவர்களும், 433 சிறுமியர்களும் பயனடைந்து வருகின்றனர். இந்தக் கருணை இல்லங்களில் 23 இல்லங்கள் சிறுவர்களுக்கு எனவும், 20 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கு எனவும் செயல்படுகின்றன. கருணை இல்லத்தின் சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் உணவு, உறைவிடம், உடை, மருத்துவம், கல்வி போன்ற அனைத்து வசதிகளும் திருக்கோவில் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வகையில் ஏற்படும் செலவினத்தில் 50 விழுக்காடு அரசு மானியமாக ஒதுக்கீடு செய்ய 15.6.1998 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.90.54 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டது.

தமிழில் ஆகம நூல்கள்

* திருக்கோவில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடக் கருதி முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகமம் என்ற நூல் 30.7.1999 அன்று தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் போற்றி புத்தகங்கள் வெளியீடு

* தமிழில் அர்ச்சனை செய்வது தொடர்பாக 18-11-1997 அன்று உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு, அதில் அறிஞர் பெருமக்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், அருள்மிகு விநாயகர் போற்றி, அருள்மிகு முருகன் போற்றி, அருள்மிகு சிவன் போற்றி, அருள்மிகு திருமால் போற்றி, அருள்மிகு நடராசர் போற்றி, அருள்மிகு கோதண்டராமர் போற்றி,

அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி, அருள்மிகு அனுமன் போற்றி, அருள்மிகு நவகோள்கள் போற்றி முதலிய தமிழ் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டு இவை திருக்கோவில்களுக்கும், திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தப் போற்றி புத்தகங்களைப் பொதுமக்கள் குறைந்த விலைக்கு வாங்கிப் பயன்பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், அருள்மிகு விநாயகர், அருள்மிகு சிவன், அருள்மிகு உமையம்மன் பெயர்களில் 1008 போற்றிகள் வெளியிடப்படவுள்ளன. வடபழனி திருக்கோவில் ஓதுவார் மரபினர் பற்றிய சீராய்வு என்ற நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு 992 பிரதிகள் விற்கப்பட்டுள்ளன.

தமிழில் வழிபாடு

* தமிழில் வழிபாடு என்பதை நாடெங்கிலும் தெளிவுபடுத்தி அறிஞர் குழு மற்றும் உயர்மட்டக் குழுவினரின் இசைவினைப் பெற்று, சிவாச்சாரியார், பட்டாச்சாரியார், ஓதுவார்கள் முன்னிலையில் அரங்கேற்றி, ஆதீனகர்த்தர்கள் வழங்கிய திருத்தங்களை ஏற்று சிவபெருமான், நடராசர், தென்முகக்கடவுள், உமையம்மை, விநாயகர், முருகவேள், திருமால், தாயார், கோதண்டராமர், மாரியம்மன், காளியம்மன், துர்க்கையம்மன் போற்றிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழில் வேள்வி

* ஆகம விதிகளுக்கு மாறுபடாமல் தமிழில் சிவ வேள்வியை நடத்திட முடியும் என்றும், அதனைக் கோவை மாவட்டத்தில் சாந்தலிங்க அடிகளார் போன்றவர்கள் நடத்திக் காட்டியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, மயிலை-கபாலீசுவரர் கோவிலில் 21.6.98 அன்று சிவ வேள்வி நடைபெற்றது. பலரும் வரவேற்றனர். இதனைச் சிவாச்சாரியார்களே முன்னின்று செய்தனர்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோவில் திருப்பணி:

* ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள, அறநிலையத்துறை ஆளுகையின்கீழ்

இல்லாத, 25 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான திருக்கோவில்களின் திருப்பணிகளுக்கு ரூ. 25,000/- வீதம் இதுவரை 350 திருக்கோவில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சைவத்திருமுறை ஆகமங்கள், வைணவ திவ்வியப் பிரபந்த பயிற்சி மையங்கள்

* 1998-99 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, திருக்கோவில்களில் பணிபுரிந்துவரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் ஆகியோர்களுக்கு ஓராண்டு காலப் புத்தொளிப் பயிற்சி அளிக்க 20 சைவத் திருமுறை ஆகம பயிற்சி மையங்களும், 7 வைணவ திவ்ய பிரபந்த பயிற்சி மையங்களும் 10.6.99 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன. பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் ஏறத்தாழ 30 முதல் 35 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தொகையாக சம்பந்தப்பட்ட திருக்கோவில் நிதியில் இருந்து நாள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு மாதம் 500 ரூபாய் முதல் 2500 ரூபாய் வரை சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியில் இருந்து அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. துறை மற்றும் திருக்கோவில் அலுவலர்கள், பணியாளர்கள் தவிர, பொதுமக்களும் பயன்பெறும் வகையில் தக்க சான்றோர்கள், அறிஞர்கள், சமய வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு குறுகிய கால சமயப் பயிற்சி வகுப்பு 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் 66 மையங்களில் நடத்தப்பட்டன. 4426 பேர் பயனடைந்துள்ளனர்.

தமிழ் இசைப் பள்ளிகள்

* தற்பொழுது 5 சைவத் திருக்கோவில்களில் தேவார இசைப் பள்ளிகளும், 4 வைணவத் திருக்கோவில்களில் திவ்விய பிரபந்த இசைப் பள்ளிகளும், 8 திருக்கோவில்களில் நாதசுரம், தவில் பயிற்சிப் பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. தேவார இசைப் பள்ளிகளில் 80 மாணவர்களும், திவ்விய பிரபந்த இசைப் பள்ளிகளில் 55 மாணவர்களும், நாதசுரம், தவில் பயிற்சிப் பள்ளிகளில் நாதசுரப் பயிற்சியில் 80 மாணவர்களும், தவில் பயிற்சியில் 40 மாணவர்களும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர். தேவாரம், திவ்வியப் பிரபந்தம், நாதசுரம், தவில் இசைப் பள்ளிகளில் பயிலும் உள்ளூர் மாணவர்களுக்கு மாதம் 300 ரூபாய்

வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு 600 ரூபாய் வீதமும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த அரசு 1996இல் பதவியேற்ற பின்னர்தான் தமிழ் இசைப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குறள் வகுப்புகள்

* 75 திருக்கோவில்களில் திருக்குறள் வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நியாய வாடகை நிர்ணயத்தின் மூலம் கூடுதல் வருவாய்

* திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள், காலி மனைகள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து, வருவாயைப் பெருக்கும் நோக்குடன், குழுக்கள் அமைக்கப்பட்டு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதின் மூலம், 66 இலட்சம் ரூபாய் மட்டுமே வாடகை வந்து கொண்டிருந்ததை மாற்றி 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டது.

திருக்கோவில் நிலங்களில் வணிக வளாகங்கள்

* திருக்கோவில்களுக்குச் சொந்தமான காலி இடங்களைப் பாதுகாக்க திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் வணிக வளாகங்கள் கட்டிக் கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமப்புறத் திருக்கோவில்கள்

* துறையின் ஆளுகையில் உள்ள கிராமப்புறத் திருக்கோவில்களின் திருப்பணிகளுக்குக் கோவில் ஒன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. முந்தைய அரசினால் 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ், 99 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 13.6.1996க்குப்பின் இதுவரை 1 கோடியே 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக கிராமப்புறத் திருக்கோவில்களின் திருப்பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

இலவச மின் விளக்கு

* நிதி வசதி இல்லாத திருக்கோவில்களுக்கு அரசின் சார்பில் இலவச மின் விளக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு

அதன்படி சுமார் 1000க்கு மேற்பட்ட கோவில்களில் அப்பணி நடைபெற்று வருகின்றது.

இலவசத் திருமணம்

* முந்தைய அரசு காலத்தில் - 5 ஆண்டுகளில் திருக்கோவில்களில் நடைபெற்றுள்ள நலிவுற்ற பிரிவினருக்கான இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை 327. இத்திருமணங்களுக்கு ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் மொத்தம் 4,90,500 ரூபாய் முந்தைய அரசினால் செலவிடப்பட்டது. 1996க்குப்பின் இதுவரை திருக்கோவில்களில் நடைபெற்றுள்ள நலிவுற்ற பிரிவினருக்கான இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை 2,166. இலவசத் திருமணங்களுக்கு திருக்கோவில் நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட 1,500 ரூபாய் செலவினத்தினை 18.9.1996 முதல் 3,000 ரூபாயாக உயர்த்தியது கழக அரசு. இதன்படி, 2166 இலவசத் திருமணங்களுக்கு 3,000 ரூபாய் வீதம் 64 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் கழக அரசினால் செலவிடப்பட்டுள்ளது.

சுசீந்திரம் திருக்கோவில்களுக்கு நிதியுதவி

* கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோவில்களின் நிர்வாகச் செலவுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. 1999-2000 முதல் கூடுதலாக 6 இலட்ச ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும், திருக்கோவில் திருப்பணி மற்றும் அறப்பணி வட்டித் தொகையிலிருந்து மேற்படி திருக்கோவில்களின் நிர்வாகச் செலவினங்களுக்காக, ஆண்டு ஒன்றுக்கு 14 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட திருக்கோவில்கள்

* புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில்களை ஒருங்கிணைத்து நிர்வகிப்பதற்கு அரசு மானியமாக 9 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 28.8.2000 தேதியிட்ட கழக அரசின் ஆணையின்படி, இந்த மானியம் 15 இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்ப் புலவர்கள் நியமனம்

* நிதிவசதி மிக்க திருக்கோவில்களில், வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் புலவர்கள் 150 பேர்களை நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் திருக்கோவில் நிதியிலிருந்து தொகுப்பு ஊதியம் வழங்க அரசு 6.6.1997 அன்று உத்தரவிட்டது. இதுவரை 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய செயல் அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

* 3.9.1998 அன்று வெளியிடப்பட்ட அரசாணைப்படி, செயல் அலுவலர் நிலை 3-இல் 100 பணியிடங்களும், செயல் அலுவலர் நிலை 4-இல் 100 பணியிடங்களும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாதசுர இசைக் கலைஞர்களைப் புதிதாகப் பணியில் அமர்த்தல்

* பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப்பட்ட, சரித்திரப் புகழ் வாய்ந்த, பழமையான நிதி வசதியில்லாத திருக்கோவில்களில் நாதசுரம், தவில், தாளம் ஆகிய இசைக் கலைஞர்களை நியமனம் செய்து, நாதசுரக் கலைஞருக்கு மாதம் 1,000 ரூபாய், தவில் இசைக் கலைஞருக்கு மாதம் 750 ரூபாய், தாள இசைக் கலைஞருக்கு மாதம் 500 ரூபாய் வீதம் ஊதியம் வழங்கிட 1 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இக்கலைஞர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 30 நாதசுரக் கலைஞர்கள், 14 தவில் கலைஞர்கள், 4 தாள இசைக் கலைஞர்கள் என மொத்தம் 48 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருக்கோவில்களில் ஓதுவார் நியமனம்

* திருக்கோவில்களில் தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமுறைகளைப் பாடுவதற்கு ஓதுவார்கள் இல்லாத திருக்கோவில்களில், பணி நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் தொகுப்பு ஊதியம் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 43 திருக்கோவில்களுக்கு ஓதுவார்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்- குடும்பப் பாதுகாப்பு நிதி

* பணியிலிருக்கும்போது இறக்கும் திருக்கோவில் பணியாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ.30,000 என்பது ரூ.60,000 ஆக 5.3.1999 அன்று உயர்த்தப்பட்டது. சிறப்பு வருங்கால வைப்புநிதி ஆண்டு ஒன்றுக்கு ரூ.1 இலட்சமும், அதற்கு மேலும் வருமானம் தரக்கூடிய திருக்கோவில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 7 இலட்ச ரூபாய் வைப்பீட்டு நிதியுடன் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப்படி, மாதம் தோறும் 20 ரூபாய் உறுப்பினர் கட்டணத்தொகை செலுத்தும் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது, அவர்கள் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, வட்டியுடன் அவருக்கு திரும்பத் தரப்படும்போது ஆணையர் பங்குத் தொகை 500 ரூபாய் என்பது 1,000 ரூபாயாக 12.2.1999 அன்று உயர்த்தி வழங்கப்படுகிறது.

பணியாளர்கள் சேமநல நிதி

* 10 ஆயிரம் ரூபாய்க்குமேல் உதவித்தொகை நிர்ணய வருமானம் உள்ள திருக்கோவில்களில் பணிபுரியும் திருக்கோவில் பணியாளர்களுக்கு பணியாளரின் சம்பளத்தில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்த தொகைக்கு இணையான தொகையினைத் திருக்கோவில் நிதியிலிருந்து இத்திட்டத்திற்கெனத் தொடங்கப்பட்ட வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பணியாளர் ஓய்வுபெறும் தேதியில் மேற்படித் தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1.10.1997 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஓய்வூதிய நல நிதி

* திருக்கோவில்களில் 20 ஆண்டுகாலம் பணியாற்றி 60 வயதில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 300 ரூபாய் என்பது 9.9.1996 முதல் 500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டப்படி, சைவத் திருக்கோவில்களில் பணியாற்றும் 468 அர்ச்சகர்களும், வைணவத் திருக்கோவில்களில் பணியாற்றும் 175 அர்ச்சகர்களும்,

வேதபாராயண திவ்விய பிரபந்தம் மற்றும் அரையர் சேவை செய்யும் 43 பணியாளர்களும், 85 இசைக் கலைஞர்களும், 117 ஓதுவார்களும் ஆக 888 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

திருக்கோவில் பணியாளர்களுக்கான வேறுபல நலத்திட்டங்கள்

* பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்தும் திருக்கோவில் பணியாளர்களின் இறுதிச் சடங்குகளுக்காக 17.9.1997 முதல் 2000 ரூபாய் முன்பணமாக வழங்கப்படுகிறது. அறநிலையங்களில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்குத் திருமண முன்பணமாக பணியாளரின் மகன் திருமணத்திற்கு ஆறாயிரம் ரூபாயும், மகள் திருமணத்திற்கு பத்தாயிரம் ரூபாயும், திருக்கோவில்களின் நிதிவசதிகளுக்கேற்ப 17.9.1997 முதல் வழங்கப்படுகிறது. திருக்கோவில் பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணமாக ஆயிரம் ரூபாய் 9.10.1997 முதல் வழங்கப்படுகிறது. மருத்துவப்படியாக மாதம்தோறும் 50 ரூபாய் 17.9.1997 முதல் வழங்கப்படுகிறது.

* சீருடை சலவைப் படியாக 17.9.1997 முதல் மாதம்தோறும் 10 ரூபாய் வழங்கப்படுகிறது.

* இரு சக்கர வாகனம் வாங்க 17.9.1997 முதல் 20,000 ரூபாய் வரை கடனாக வழங்கப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கு மேல் உதவித் தொகை நிர்ணய வருமானம் பெறக்கூடிய திருக்கோவில்களில் 10 ஆண்டுகளுக்குமேல் ஒரே நிலையில் பணிபுரியும் திருக்கோவில் பணியாளர்களுக்குத் தேர்வு நிலையும், 20 ஆண்டுகளுக்குமேல் ஒரே நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு நிலையும் 1.10.1997 முதல் வழங்கப்படுகின்றன.

* 1.1.1998 வரை முதுநிலை திருக்கோவில் பணியாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த அகவிலைப்படி, 1.1.1998 முதல் ரூபாய் 1 இலட்சத்திற்குமேல் வருமானம் பெறும் திருக்கோவில்களைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வழங்கப்படுகிறது.

* 1990இல் திருக்கோவில் பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட வீட்டுவாடகைப் படி 1.6.1998 முதல் 100 விழுக்காடு உயர்த்தி

வழங்கப்படுகிறது. நகர ஈட்டுப்படியும் 1.6.1998 முதல் அனைத்து திருக்கோவில் பணியாளர்களுக்கும் 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டால் கோவில்களையெல்லாம் இழுத்து மூடி விடுவார்கள் என்று கூறப்பட்டதுண்டு. அர்ச்சனையே நடைபெறாது என்றும், குடமுழுக்கு நடைபெறாது என்றும் பிரச்சாரம் செய்யப்பட்டதுண்டு.

* அதனையெல்லாம் மீறித்தான் கழகம் ஆட்சிக் கட்டிலிலே ஏறியது. அந்தக் கழகத்தின் ஆட்சியிலே ஆத்திகர்கள் அனைவரும் மகிழ்ந்து பாராட்டும் வண்ணம் அந்தத் துறையின் சார்பிலே நடைபெற்ற எண்ணற்ற சாதனைகளைத்தான் பட்டியலிட்டு உன் முன் கொடுத்துள்ளேன். இந்த அரசின் சாதனைகளைப் பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டுள்ள நீ இதனையும் பரப்பிடத் தவறிட மாட்டாய் என நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(7-12-2000)

2554. தேவை நிறைவுபெற சேவை தொடர்கிறது!

உடன்பிறப்பே,

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஆகியவைகள் அந்த நாட்டிலே மின்சாரம் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்தே அமையும். தமிழகத்தைப் பொறுத்தவரை, மின் உற்பத்தி பற்றாக்குறையாக இருந்து மூன்றாவது முறையாக நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது 1990ஆம் ஆண்டு வட சென்னையிலே 630 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய அளவிற்கு மூன்று யூனிட்டுகள் கொண்ட ஒரு அனல் மின்நிலையத்தை, பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து, தொடங்கி வைத்ததும், அதன் பின்னர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர்கள் மின் உற்பத்தியிலே தனிக் கவனம் செலுத்தவில்லை என்பதும் நீ அறிந்த ஒன்றுதான். 1996ஆம் ஆண்டில் மீண்டும் நாம் பொறுப்புக்கு வந்த பிறகு மின்துறை வாயிலாக நாம் மேற் கொண்டுள்ள சாதனைகளின் தொகுப்பை இன்றைய கடிதத்தில் எழுதியுள்ளேன்.

* இந்தியாவிலேயே முதலாவதாக தமிழ்நாடு விவசாயிகள் அனைவருக்கும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் பம்பு செட்டுக்கான மின்சாரத்தை முன் தேதியிட்டு அதாவது 1-9-1990 முதல் இலவசமாக வழங்குவதென்று 17-11-1990 அன்று ஆணையிடப்பட்டது. இதனால் தமிழகத்தில் சுமார் 16 இலட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள். மொத்த மின் நுகர்வில் விவசாயத்திற்காக வழங்கப்படும் இலவச மின்சார அளவு அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு மொத்த நுகர்வில் இது 25 விழுக்காடிலிருந்து 27 விழுக்காடாக உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக மின் வாரியத்திற்கு ஆகும் செலவு 2000 கோடி ரூபாயைத் தாண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* கரும்பு விவசாயிகள், தாங்கள் சாகுபடி செய்த கரும்பை வெட்டி அரவை செய்ய தனியாக மின் கட்டணம் வசூலிக்காமல் இலவசமாக வழங்கிட கழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* இந்திய அரசு, அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அவற்றின் சீரிய செயல்பாட்டின் அளவீடுகளுக்கு ஏற்ப, விருதுகள் வழங்க திட்டங்கள் வகுத்துள்ளது. தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் 97-98ஆம் ஆண்டில் சிறப்பான செயல்பாட்டிற்காகவும், குறைந்த அளவிலான எரி எண்ணெய் உபயோகம் மற்றும் அனல் மின் நிலைய துணை உபகரணங்களில் குறைவான மின்சக்தி உபயோகத்திற்காகவும் விருதுகள் வென்றுள்ளன. எண்ணூர் அனல் மின் நிலையம் குறைந்த அளவு எரி எண்ணெய் உபயோகத்திற்கான விருதினை வென்றுள்ளது. இந்திய அரசு 39.35 இலட்சம் ரூபாய் இம்மூன்று அனல் மின் நிலையங்களுக்கும் பரிசுத் தொகையாக வழங்கியுள்ளது.

* 1998-1999 மற்றும் 1999-2000ஆம் ஆண்டுகளிலும் அனல் மின் நிலையங்களின் செயல்பாடு தொடர்ந்து பரிசு பெறும் அளவிற்கு நடைபெற்றுள்ளன. அதற்கான செயற்குறிப்பு மத்திய மின்சார ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

* மின்வாரியத்திற்குத் தேவையான உதிரி பாகங்களை தரம் பார்த்து குறைந்த விலையில் வழங்க பாரத கனரக நிறுவனமும் மற்றும் பிற உற்பத்தியாளர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

* தமிழ்நாடு மின்வாரியத்தின் கட்டுப்பாட்டில், தற்போது 19.355 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட காற்றாலைகள் இயங்கி வருகின்றன. 30-9-2000 நிலவரப்படி, தனியார் காற்றாலைகளின் மொத்த நிறுவுத்திறன் ஆண்டு ஒன்றுக்கு 765.190 மெகாவாட் ஆகும். தனியார் துறை காற்றாலை மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின் வாரிய கட்டமைப்பில் செலுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

நமது மின் உற்பத்தியின் அளவு:

* தற்போதைய இணைமின் உற்பத்தியின் மொத்த நிறுவுத் திறன் 142.1 மெகாவாட்டாகும். 19 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட இணை மின் உற்பத்தித் திட்டம் ஒன்று திருவண்ணாமலையில் உள்ள அருணாசலம் சர்க்கரை ஆலையில் விரைவில் இயக்கி வைக்கப்படவுள்ளது. தமிழ்நாடு மின் வாரியம்

மேலும் 7 சர்க்கரை ஆலைகளில் 162 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இணை மின் திட்ட வளர்ச்சியில் தனியாரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கரும்பு சக்கை மூலம் தயாரிக்கப்படும் இணை மின்சாரத்திற்கு 1-4-2000 முதல் யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.73 வீதம் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டு, இந்த விலை ஆண்டுதோறும் 5 விழுக்காடு என்ற விகிதத்தில் 9 ஆண்டுகளுக்கு உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

* தமிழக அரசு தன்பயன் மின்னாக்கி கொள்கையை 22-4-1998 அன்று வெளியிட்டுள்ளது. தன்பயன் மின்னாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியை உற்பத்தியாளர்களே பயன்படுத்தலாம். மின்னாக்கி நிறுவனத்தின் மற்றொரு சகோதர நிறுவனமும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

* தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி 12 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் ஒன்று காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் கிராமத்தில் இயங்கி வருகிறது. மேலும் 10 மெகாவாட் திட்டம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள வேலம்பாளையம் கிராமத்தில் அமைத்திட மின் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

* தமிழ்நாட்டில் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி 165 கிலோ வாட் திறன் கொண்ட நான்கு சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்டங்கள் இயங்கி வருகின்றன. சூரிய மின்சக்தி உற்பத்தியில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் சூரிய வெப்ப மின்கலப் பெட்டிகளின் மூலமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.25 என்ற விலையில் வாங்குகிறது. இந்த விலை 1-1-2001 முதல் மறு பரிசீலனை செய்யப்பட உள்ளது.

* இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பிப்ரவரி 98இல் 8 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்ட கீழ்பவானி புனல் மின் திட்டமும், பிப்ரவரி 99இல் 196 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்ட பேசின் பாலம் டீசல் எஞ்சின் மின் திட்டமும், மார்ச் 99இல் 7.5 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய சாத்தனூர் புனல் மின் திட்டமும், மார்ச் 2000இல் 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டமும், மார்ச் 2000இல் 1.95 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்

கூடிய திருமூர்த்தி சிறுபுனல் மின் திட்டமும், ஆகஸ்ட் 2000இல் 0.70 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய முக்குருத்தி சிறுபுனல் மின் திட்டமும் என மொத்தம் ரூபாய் 942 கோடி செலவில், 244 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 6 மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

* வருடத்திற்குப் புதியதாக 60 துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்து இதுவரை 233 துணை மின் நிலையங்கள், 3245 எம்.வி.ஏ திறனில், ரூபாய் 1720 கோடி செலவில் இந்த அரசினால் நிறுவப்பட்டுள்ளன. முந்தைய அரசு பொறுப்பில் இருந்தபோது நுகர்வோரின் தேவையை ஈடு செய்த உச்ச மின் அளவு 4424 மெகாவாட்டாக இருந்தது. அது இப்போது 5932 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் இந்த உச்ச மின் அளவை எய்த முடிந்தது. நமது அனல் மின் நிலையங்களின் உற்பத்தி அளவு கடந்த கால ஆட்சியில் 66.7 சதவிகிதம் என்றிருந்தது தற்போது சராசரியாக 80.24 சதவிகிதம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவது குறைக்கப்பட்டதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சுமார் ரூ. 174 கோடி மிச்சப்படுத்தப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Limited tender) முறையை வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி (Open tender) முறையாக மாற்றியதன் மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.108 கோடி மீதப்பட்டுள்ளது.

* நிலக்கரியை துறைமுகங்களிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்காக புதிய ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டதின் மூலமாக மட்டும் மின் வாரியத்திற்கு 1-12-1997 முதல் ஆண்டு ஒன்றுக்கு 128 கோடியே 64 இலட்சம் ரூபாய் சேமிப்பு கிடைத்து வருகிறது. ஜி.எம்.ஆர். வாசவி என்ற தனியார் மின் உற்பத்தி நிறுவனத்திடமிருந்து வாங்குகின்ற மின்சாரத்தின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதிலே சில மாற்றங்களைச் செய்து உச்சத்தேவை நேரத்தில் மட்டும் 196 மெகாவாட் மின்சாரம் வாங்கப்பட்டு, இரவில் வாங்கப்படும் மின்சாரத்தை 100 மெகாவாட் அளவிற்கு குறைத்ததினால் மாதத்திற்கு சுமார் ரூ.6 கோடி மிச்சப்படுத்தப்படுகிறது.

* முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் 1,43,706 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுத்ததற்கு மாறாக, கடந்த நான்கரை ஆண்டுக் கால கழக ஆட்சியில் 30-11-2000 வரை 2,73,973 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

* முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் 15,90,276 வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததற்கு மாறாக, கடந்த நான்கரை ஆண்டுகளில் 23,69,459 வீடுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

* முந்தைய அரசு 2,29,834 வணிக நிறுவனங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டதற்கு மாறாக, இந்த நான்கரை ஆண்டுகளில் 3,77,245 வணிக நிறுவனங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

* 1991 முதல் 1996 வரையில் 10,694 உயர் மட்ட, தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான மின் இணைப்புகள் தரப்பட்டதற்கு மாறாக, கடந்த நான்கரை ஆண்டுகளில் 24,721 மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.

* முந்தைய ஆட்சியிலே 179 துணை மின் நிலையங்கள் மட்டுமே தொடங்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் 233 துணை மின் நிலையங்கள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன.

* 1991 முதல் 1996 வரை நடைபெற்ற ஆட்சியில் நிறுவப்பட்ட மின் தேக்கிகள் (M.V.A.R.Capacitors) 216 கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் நிறுவப்பட்ட மின் தேக்கிகள் 1645. முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்குத் தரப்பட்ட மின் இணைப்புகள் 48,237. இந்த நான்கரை ஆண்டு கால ஆட்சியில் 73,311 மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.

* ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின்கீழ், கடந்த நான்கரை ஆண்டுகளில் 2,07,597 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலையில் 1999-2000 ஆண்டில் இரண்டு மலை வாழ் குக்கிராமங்களுக்கும், 2000-2001 ஆண்டில் 30-9-2000 வரை நான்கு மலைவாழ் குக்கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது.

* கடந்த நான்கரை ஆண்டுகளில் 1,64,290 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.

* மின் பயனீட்டு அளவு கடந்த கால ஆட்சியில் 1991 ஆம் ஆண்டிலே இருந்ததை விட எந்த மாற்றமும் இல்லை. 24,610 மில்லியன் யூனிட் என்ற அளவிலேயே இருந்தது. ஆனால் கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்த அளவு படிப்படியாக உயர்ந்து 31-3-2000இல் 30,434 மில்லியன் யூனிட் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. கழக அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் காரணமாக 106 மெகாவாட் திறன் கொண்ட சாமல்பட்டி மின் திட்டம் 2001 பிப்ரவரியிலும், 330 மெகாவாட் திறன் கொண்ட பிள்ளைப்பெருமாள் நல்லூர் மின் திட்டம் 2001 ஏப்ரலிலும், 106 மெகாவாட் திறன் கொண்ட சமயநல்லூர் மின் திட்டம் 2001 மே மாதத்திலும், 107 மெகாவாட் திறன் கொண்ட திருவாரூர் மின் திட்டம் 2001 பிப்ரவரி மாதத்திலும், 330 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கூடுதல் திட்டம் 2001 பிப்ரவரி மாதத்திலும் முடிவடைய உள்ளன. இத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர் தமிழகத்திலே கோடையிலும் மின்வெட்டு இருக்காது. விவசாயிகளுக்குப் பகலிலும் ஆறு மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.

* 250 மெகாவாட் திறனுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்கு 14-8-98 அன்று மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் 500 மெகாவாட் திறன் கொண்ட ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கு, மும்பையைச் சேர்ந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தார் முகவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1885 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் எல்.என்.ஜி. எரி வாயு மின் திட்டத்திற்கு மும்பையைச் சேர்ந்த தட்சிண் பாரத் எனர்ஜி கன்சார்ட்டியம் முகவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

* தன்பயன் மின்னாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் நூற்பு ஆலை, காகித ஆலை, இரசாயன ஆலை, சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களுக்கு முற்றிலும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

* காற்று, சூரிய சக்தி மற்றும் கரும்பு சக்கை மூலம் இணை உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு நிரந்தரமாக மின் உற்பத்தி வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மின் பகிர்மானத்தில் சாதனைகள்

* இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த நிதியாண்டில் வீடுகளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் ஒரே நாளில் மின் இணைப்பு என்ற புதிய திட்டத்தைப் பயனீட்டாளர்களின் நலன் கருதி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 1,50,000 மின் இணைப்புகள் ஒரே நாளில் வழங்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பை துரிதப்படுத்த நடவடிக்கை

* உயர்மின் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் தாழ்வழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதை துரிதப்படுத்துவதற்காக இந்த அரசு எளிய வழிமுறைகளை வகுத்துள்ளது. புதிய விதிமுறைகளின்படி, 500 கே.வி.ஏ வரையிலான உயர் மின்னழுத்த தொழிற்சாலைகளுக்கான புதிய மின் இணைப்பிற்கோ அல்லது கூடுதல் மின்பளுவிற்கோ விண்ணப்பிப்பவருக்கு, அவர் கேட்கும் மின் பளுவை இணைக்கத் தற்பொழுதுள்ள உயர்சக்தி மின்மாற்றியின் கொள்ளளவு போதுமானதா என்பதை மட்டும் உறுதி செய்து, மின் இணைப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த விதிமுறையை விரைவாகச் செயல்படுத்த, தயார் நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து இணைப்புக் கொடுக்க மண்டல தலைமைப் பொறியாளரிடமிருந்த அதிகாரம் அந்தந்த வட்ட மேற்பார்வை பொறியாளர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

* இதைப்போலவே தாழ்வழுத்தத் தொழிற்சாலைகளுக்கு ஐந்து (5) குதிரைத்திறனுக்கு குறைவாக இருந்து, எந்தவித மின்கம்பித்தொடர் நீட்டிப்பும் தேவை இல்லாமல் இருந்தால், அனைத்துக் கட்டணமும் செலுத்திய உடனே மின் இணைப்பு வழங்கப்படும். மின்கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையெனில், 15 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும். ஐந்து (5) குதிரைத் திறனுக்கு மேல் 150 குதிரைத்திறனுக்குள் உள்ள புதிய தொழிற்சாலைகளுக்கு மின்கம்பித் தொடர் நீட்டிப்பு தேவை இல்லையெனில் 15 நாட்களுக்குள்ளும், மின்கம்பித் தொடர் தேவையெனில் 30 நாட்களுக்குள்ளும் மின் இணைப்பு வழங்கப்படும். புதியதாக மின்மாற்றி அமைப்பது, மின்கம்பித் தொடர் நீட்டிப்பு பணி மற்றும் இதர பணிகள் தேவைப்படும்

மற்ற எல்லா குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் பணம் பெறப்பட்ட 90 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

இன்டர்நெட் மூலம் மின்தடை புகார் பதிவு செய்தல்

* பொதுமக்கள் மின்விநியோகம் சம்பந்தமான தங்களது குறைகளைக் களைவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமையகத்தில் ஒரு புகார் அலுவலகம் (கம்ப்ளெயின்ட் செல்) நிறுவப்பட்டுள்ளது. இந்தப் புகார் அலுவலகத்தில் இதுவரை 900 புகார்கள் பெறப்பட்டு அவற்றின் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், புகார்களை இன்டர்நெட் மூலம் அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு வெப்சைட் அடிப்படையிலான ஒரு புகார் அலுவலகமும் நிறுவப்பட்டுள்ளது. தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் புகார்களை பொதுமக்கள் தலைமையகத்திற்கு இன்டர்நெட் மூலம் அனுப்பலாம். இவற்றின் மீது மின்வாரியம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கும். இந்த மாதிரியான திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இருவழித் தகவல் தொடர்பு சாதனம் மூலம் புகார்களைப் பதிவு செய்தல்

* மின்தடை ஏற்பட்டால், புகார் செய்வதற்கு தனியாக ஒரு புகார் அலுவலகம் (Cell) நிறுவப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாகவும், சென்னையில் மின்வாரியம் பல நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாகவும் புகார்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. மின்தடை சம்பந்தப்பட்ட புகார்கள் அலுவலகத்தின் தொலைபேசி (ப்யூஸ் ஆஃப் கால் அலுவலகம்) தொடர்பு கிடைப்பதில்லையென்ற குற்றச்சாட்டு இருந்து வந்ததைக் கருத்திற்கொண்டு 50 இலட்ச ரூபாய் செலவில் ஐ.வி.ஆர்.எஸ் என்னும் நவீன புகார் பிரிவு ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. பொது மக்களுடைய புகார்கள் கணிப்பொறியில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு அந்தப் புகார்கள் ஃபேக்ஸ் மூலம் அனுப்பப்பட்டு, குறைகள் களையப்பட துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற திருப்தி தற்போது மின்பயனீட்டாளர்களுக்கு கிடைத்துள்ளது.

SCADA திட்டம்

* SCADA (Supervisory Control and Data Acquisiton System) என்ற புதிய திட்டத்தை 19 கோடி ரூபாய் செலவில், சென்னையில் முதன்முதலில் தொடங்கி வைக்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுகிறது. இது சென்னையிலுள்ள 96 துணை மின் நிலையங்களையும் ஒன்றாக இணைத்து எங்கெங்கு கூடுதல் மின்சாரம் இருக்கிறதோ அங்கிருக்கும் மின்மாற்றி மூலமாக மின்சாரம் தேவைப்படும் இடத்திற்கு மாற்றி மின்னோட்டத்தை சீராக்குகிறது. இத்திட்டம் விரைவில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

* தேசிய சராசரி மின் இழப்பு 21 விழுக்காடாகும். தமிழக அரசும், தமிழக மின்சார வாரியமும் எடுத்த நடவடிக்கைகளினால் இம்மாநிலத்தின் மின் இழப்பு 16.75 விழுக்காடாகும். இந்த ஆண்டு மிக உயர்வழுத்த மின் தேக்கிகளை வாங்கி நிறுவப் பட்டிருப்பதால் மின் இழப்பு சுமார் ஒரு சதவிகித அளவிற்கு குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தரமான மின் அளவிகளை தற்போது பயன்படுத்துவதால் மின் இழப்பு மேலும் குறையவும் வாய்ப்புள்ளது.

மின் தணிக்கை

* தமிழ்நாடு மின்வாரியம் 5-3-1997இல் பிறப்பித்த தொழிலகங்களில் மின் தணிக்கை செய்யும் திட்டம் காரணமாக மின் செலவு மிச்சப்படுத்தப்படுகிறது.

மின் கட்டண விகிதம்

* தமிழகத்திலே 7-1-2000 முதல் வீடுகளுக்கான மின் இணைப்புக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 134 பைசா. ஆந்திராவில் 4.6.2000 முதல் யூனிட் ஒன்றுக்கு 350 பைசா. கர்நாடகத்தில் 15-7-1998 முதலே 183 பைசா. மகாராஷ்டிரத்தில் 1-5-2000 முதல் 215 பைசா. உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குத் தமிழ்நாட்டில் யூனிட் ஒன்றுக்கு 388 பைசா, ஆந்திராவில் 450 பைசா, கர்நாடகத்தில் 428 பைசா, மகாராஷ்டிரத்தில் 453 பைசா.

* உயர் அழுத்த வணிக நிறுவனங்களுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு தமிழகத்தில் 460 பைசா, ஆந்திராவில் 518 பைசா, கர்நாடகத்தில் 527 பைசா, மகாராஷ்டிரத்தில் 444 பைசா.

தாழ்வழுத்தத் தொழிற் சாலைகளுக்கு தமிழ்நாட்டில் 340 பைசா, ஆந்திராவில் 407 பைசா, கர்நாடகத்தில் 505 பைசா, மகாராஷ்டிரத்தில் 425 பைசா. தாழ்வழுத்த வணிக நிறுவனங் களுக்கு தமிழ்நாட்டில் 383 பைசா, ஆந்திராவில் 502 பைசா, கர்நாடகாவில் 460 பைசா, மகாராஷ்டிரத்தில் 440 பைசா.

தமிழகத்தில் அதிக அளவில் அனல் மின்சாரம்தான் தயாரிக்கப்படுகிறது. புனல் மின் தயாரிப்பு குறைவாகத்தான் உள்ளது. இந்தச் சூழ்நிலையிலும் தமிழகத்தில் மின் கட்டணம் குறை வென்பது இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

தொழிலாளர் நலன்

* நான்கு அனல் மின் நிலையங்களில் பணி புரிந்த 7704 ஒப்பந்தத் தொழிலாளர்களையும், இரண்டு எரிவாயு சுழலி மின் நிலையங்களில் பணி புரிந்த 151 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் களப்பணி உதவியாளர்களாகப் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு 40 விழுக்காடு அளவு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இப்போது மீண்டும் ஊதிய மாற்றம் செய்ய குழு நியமிக்கப்பட்டு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

உடன்பிறப்பே, சாதனைகளைக் குவித்துள்ள இந்த அரசு தொடர்ந்து தமிழகத்தில் மின்சார உற்பத்தியிலும், அதனை சீராக விநியோகிப்பதிலும், நுகர்வோருக்கு மின்வெட்டு இல்லாத நிலைமையை ஏற்படுத்தியிருப்பதிலும், இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகம், இந்த ஆண்டு தன்னிறைவு கண்டு கோடையிலும் மின் வெட்டே இல்லை என்ற ஒரு நிலையை சுதந்திரத்திற்குப் பிறகு இப்போதுதான் ஏற்படுத்தியிருக்கிறோம். நான் மேலே தொகுத்துக் கூறியுள்ள மின்துறையின் சாதனைகள் பட்டியலே தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு தக்க சான்றாகும்.

அன்புள்ள,

மு. க.

(8-12-2000)

2555. திரையுலக மேம்பாடும் நினைவுபோற்றும் பண்பாடும்!

உடன்பிறப்பே,

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பதை அடிப்படையாகக் கொண்டு சாதனைகளைச் செய்து வரும் இந்த அரசு - இந்த வார்த்தைகள் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட வெறும் வார்த்தைகள் என்று எடுத்துக் கொள்ளாமல், தேர்தல் அறிக்கையிலே சொன்னதை மாத்திரமல்லாமல், சொல்லாததையும் செய்து சாதனை புரிந்து வருவதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள். அரசின் கடமை மக்களுக்கான தேவைகளை அறிவித்து அவற்றை அரசின் ஆணைகளாக பிறப்பிக்கச் செய்வது மட்டுமல்லாமல், அந்த ஆணைகளிலே குறிப்பிடப்பட்ட பணிகள் மக்களைச் சென்றடைய வேண்டும். அவற்றைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் ஒளிவு மறைவின்றி மக்களுக்குச் சென்றால்தான், மக்கள் விழிப்புணர்வைப் பெற்று முறையாக அவற்றின் பயனை துய்க்க முடியும் என்ற அடிப்படையில், தோற்றுவிக்கப்பட்டதுதான் செய்தி மக்கள் தொடர்புத் துறையாகும். வெறும் செய்தி விளம்பரத் துறையாக, ஆளுங்கட்சியினர் சிலர் பொறுப்பேற்றிருந்த துறையாக மட்டும் இருந்ததை மாற்றி உண்மையாக அரசின் செய்திகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்லும் தூதுவர்களாக இந்தத் துறையிலே இருப்போர் பணியாற்றிட வேண்டும் என்ற விருப்பத்துடன் செய்தி மக்கள் தொடர்புத் துறை என்ற பெயரை அளித்த கழக அரசு, அந்தத் துறையின் கீழ் ஆற்றி வரும் சாதனைகளையெல்லாம் இந்தக் கடிதத்தின் மூலம் நினைவிற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அய்யன் திருவள்ளுவருக்கு அழகிய சிலை

* செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ஆற்றிய பணிகளில் தலையாய பணி, தலைமுறைகளுக்கும் தனித்தோங்கி நிற்கும் பணி, சூழும் தென்கடல் ஆடும் குமரியில் அய்யன்

திருவள்ளுவருக்கு அகிலமே கண்டு வியக்கும் அளவுக்கு 133 அடி உயரத்தில் 7000 டன் எடை கொண்ட மாபெரும் சிலை 9 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட்ட பணியாகும். இருபத்தைந்து ஆண்டுக் காலமாக எண்ணி எண்ணி நான் விடுத்த பெருமூச்சு வீண்போகாமல், விண் முட்டும் சிலை ஒன்றை விரிகடல் பரப்பின் எல்லையில் எழுப்பி இருக்கிறோம்.

* 2000, ஜனவரி-1 மற்றும் 2 ஆகிய நாட்களில் குமரிமுனையில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது, குறளோவியக் கண்காட்சி, குறள் முற்றோதல், பதினாறு கவன நிகழ்ச்சி, குறள் ஆய்வரங்கம், குறள் கருத்தரங்கம், நூல் வெளியீடு, கவியரங்கம் ஆகியவை ஆன்றோர், சான்றோர், அரசியல் தலைவர்கள் முன்னிலையில் இந்த அரசால் நடத்தப்பட்ட சாதனை நிகழ்ச்சிகளாகும். திருக்குறள் முற்றோதலில் பங்குபெற்ற 23 சிறார், சிறுமியர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்நாள் முழுதும் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

குறளோவியக் கண்காட்சி

* சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உள்ள குறள் மணிமாடத்தில் 12.60 இலட்சம் ரூபாய் செலவில் காண்போரின் கருத்தைக் கவரும் வகையில் வண்ண ஓவியங்கள் இடம்பெறும் குறளோவியக் கண்காட்சி அமைக்கப்பட்டு 15-1-2000 முதல் பல்லாயிரக் கணக்கானவர் பார்த்து மகிழ்ந்து வருகின்றனர்.

* நான்காவது முறையாக நான் முதல்வராகப் பொறுப்பேற்றதும், எனது அருமை நண்பரும், முன்னாள் முதல்வருமான டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றிடும் வகையிலும், திரைப்படத் துறையினர் பலர் கடந்த ஆட்சியிலே வைத்த கோரிக்கை ஏற்கப்படாத நிலையிலே இருந்ததுமான சென்னை திரைப்பட நகருக்கு அவரது பெயரினைச் சூட்டி மகிழ்ந்தேன்.

வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல்களுக்கு நினைவகங்கள்

* 1996க்குப் பின் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் ரூ.3 கோடியே 31 இலட்சம் செலவில் பொலிவூட்டப்பட்டது. கடந்த ஆட்சியில் திட்டமிட்டுப் பாழ்படுத்தப்பட்டிருந்த வள்ளுவர் கோட்டத்தில் ரூ.91 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டன. காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவில்லம் ரூ.4.20 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள மகாகவி பாரதியார் நினைவில்லத்தில் ரூ.10.20 இலட்சம் செலவில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முந்தைய ஆட்சியில் சரிவர பராமரிக்கப்படாமல் சிதிலமடைந்திருந்த பூம்புகாரைச் சீரமைத்திடவும், மேலும் அங்கே பேருந்து நிலையம் கட்டுதல், ஒளிவிளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உருவாக்கிட 1998-ல் 93 லட்ச ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. தில்லையாடி வள்ளியம்மை நினைவில்லம் ரூ.5.91 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது. எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் மணிமண்டபம், பாரதியாரின் இல்லம் ஆகியவற்றில் ரூ.4.15 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டு ரூ.97 ஆயிரம் செலவில் புகைப்படங்கள் அமைத்து, நூல்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன. கன்னியாகுமரி காந்திமண்டபத்தில் ரூ.2.60 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகள் நடத்தப்பட்டன. சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கம் ரூ.21.12 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.

* திருச்சிராப்பள்ளியில் வ.வே.சு.அய்யர் இல்லத்தில் நூல்கள், தளவாடங்கள் ரூ.1.20 இலட்சம் செலவில் வாங்கித் தரப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள மூதறிஞர் இராஜாஜி நினைவிடத்தில் ரூ.2.67 இலட்சம் செலவில் ஓவியங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கிண்டியில் உள்ள காந்தி அருங்காட்சியகம் ரூ.3.75 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை காந்தி மண்டபம், பெருந்தலைவர் காமராசர் நினைவிடம், மூதறிஞர் இராஜாஜி நினைவிடம், பெரியவர் பக்தவத்சலம் நினைவிடம் ஆகியவற்றின் முகப்பு, தோட்டம் அமைப்பு, மின் விளக்குகள் ஆகியவை அமைக்கின்ற பணிகள் ரூ.50 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டன. காந்திமண்டப வளாகத்தில் ரூ.25 இலட்சம் செலவில் பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் அமைக்கப்பட்டது.

* நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ஜீவா அவர்களின் மணிமண்டபம் ரூ.15 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டத் தியாகிகளை போற்றும் வகையில் ரூ.30

இலட்சம் செலவில் சென்னையில் தியாகிகள் மணிமண்டபமும், சிப்பாய்க் கலகத்தில் உயிர் நீத்த வீரர்களை நினைவுகூரும் வகையில் வேலூரில் ரூ.3 இலட்சம் செலவில் நினைவுச் சின்னமும் உருவாக்கப்பட்டுள்ளன .

* மதுரை திருமங்கலத்தில் தியாகி.விஸ்வநாததாஸ் நினைவில்லம் ரூ.50 இலட்சம் செலவிலும், திருநெல்வேலி நெற்கட்டும்செவல் கிராமத்தில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் நினைவு மண்டபம் ரூ.50 இலட்சம் செலவிலும், பட்டுக்கோட்டையில் மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் மணிமண்டபம் ரூ.20.50 இலட்சம் செலவிலும், கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம் ரூ.50 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

* மருதூரில் வள்ளலார் இராமலிங்க அடிகளார் இல்லம் ரூ.2 இலட்சம் செலவிலும், உடுமலையில் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களுக்கு மணிமண்டபம் ரூ.20.50 இலட்சம் செலவிலும், குன்றக்குடியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நினைவு மண்டபம் ரூ.22.87 இலட்சம் செலவிலும் திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவிடம் ரூ.20.50 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. காந்தி மண்டபம் வளாகத்தில் மொழிப்போர் காவலர்களுக்கு ரூ.33 இலட்சம் செலவில் மணிமண்டபம் எழுப்பப்பட்டு வருகிறது.

* தூத்துக்குடி மாவட்டம், கட்டாரம் குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் நினைவுமண்டபம் ரூ.35 இலட்சம் செலவில் கட்டப்பட இருக்கிறது. கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மணி மண்டபம் சென்னையில் உள்ள காயிதேமில்லத் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட இருக்கிறது. நாமக்கல்லில் உள்ள கவிஞர் இராமலிங்கனார் வாழ்ந்த இல்லம் ரூ.9.50 இலட்சத்திற்கு தமிழக அரசால் வாங்கப்பட்டு நினைவில்லமாக மாற்றப்பட்டு இருக்கிறது.

* மதுரை மாவட்டம் தும்பப்பட்டியில் தியாகி கக்கன் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு வரும் 28ந் தேதியன்று திறந்து வைக்கவிருக்கிறேன். விடுதலை வீரர் பூலித்தேவன் வாரிசுதாரர்களுக்கு ரூ.3.04 இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாற்றில் ரூ.15.97 இலட்சம் செலவில் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது. கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தியாகிகளுக்கும், சிந்தனையாளர்களுக்கும் சிலைகள்

* தியாகி கக்கன் அவர்களின் முழு உருவச் சிலை ரூ.4.45 இலட்சம் செலவிலும், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் மார்பளவு சிலை ரூ.78 ஆயிரம் செலவிலும், நேதாஜி அவர்களின் முழு உருவச் சிலை ரூ.7.40 இலட்சம் செலவிலும், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு சிலை ரூ.78 ஆயிரம் செலவிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு சிலை ரூ.78 ஆயிரம் செலவிலும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் முழு உருவச்சிலை ரூ.3.90 இலட்சம் செலவிலும், தீரன் சின்ன மலையின் முழு உருவச் சிலை ரூ.4.25 இலட்சம் செலவிலும், தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் ஆகியோரின் மார்பளவு சிலை ரூ.2.20 இலட்சம் செலவிலும், புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமானின் முழு உருவச் சிலை ரூ.4.35 இலட்சம் செலவிலும் உருவாக்கப்பட்டு, இந்தச் சிலைகள் அனைத்தையும் நான் திறந்து வைத்துள்ளேன். இராமசாமி படையாச்சியார் திருவுருவச்சிலை சென்னையில் ரூ.3.75 இலட்சம் செலவிலும், குன்றக்குடி அடிகளாரின் சிலை குன்றக் குடியில் ரூ.3.50 இலட்சம் செலவிலும் நிறுவப்பட்டு வருகின்றன.

* மொரீஷியஸ் அரசுக்கு 3 இலட்சம் ரூபாயில் உருவாக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை தமிழக அரசின் சார்பில் நன்கொடையாக அனுப்பப்படவுள்ளது. விடுதலைப் பொன்விழா நினைவுத்தூண் ரூ. 3.75 இலட்சம் செலவில் சென்னையில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை

* 1999ஆம் ஆண்டினை தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆண்டாக கடைப் பிடிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் மனிதாபிமான உணர்வோடு வாழ்வதற்கு தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின்

அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பிரச்சார இயக்கங்களும், விளம்பரப் பணிகளும் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

சாதி மத ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில், மாவட்டந்தோறும் மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சாதிகள் இல்லையடி பாப்பா என்ற கருத்து விளக்கப் படம் தயாரித்து வெளியிடப்பட்டது. சமூக வேற்றுமைகளை களைந்திடும் நோக்குடன், கல்லூரி, பள்ளிகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வாரந்தோறும் திங்கட்கிழமை பள்ளிகளில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

பல்துறை பணிவிளக்க முகாம்

* தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம், சமூக ஒற்றுமை மற்றும் அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை விளக்குகின்ற வகையில் பல்துறைப் பணிவிளக்க விழிப்புணர்வு முகாம்கள் 28 மாவட்டங்களில் ரூ.30.80 இலட்சம் செலவில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

அரசின் திட்டங்கள், சாதனைகளை மக்கள் மத்தியில் பரப்பும் வகையில், பல்துறைப் பணி விழிப்புணர்வு முகாம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பல துறையினரும் இணைந்து, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 2 கிராமங்கள், 3 கிராமங்கள் என்ற வகையில் தேர்வு செய்து விளம்பர சாதனங்களை பயன்படுத்தி நடத்தப் பட்டு வருகின்றன. இந்த விழிப்புணர்வு முகாம்களில் அந்தந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள், நிலப்பட்டாக்கள், நலத்திட்ட உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் பொன்விழா

* சுதந்திரப் பொன்விழா 1997-98 ஆம் ஆண்டு சென்னை நகரிலும், அனைத்து மாவட்டங்களிலும் ரூ.115.18 இலட்சம் செலவில் மிகச் சிறப்பாகவும், கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது. இப்பொன் விழா ஆண்டை யொட்டி சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகச் செம்மல்கள் பல்லாற்றானும் பாராட்டப்பட்டார்கள்.

இந்தியக் குடியரசுப் பொன்விழா

* 26-1-2001 இந்தியக் குடியரசிற்குப் பொன்விழா நாளாகும். இப்பொன்விழா தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங் களிலும், மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது. அதற்காக மாவட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பொன்விழாவினைச் சிறப்பாக நடத்துவதற்கு, அரசு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

நினைவாஞ்சலி

* வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு 200வது ஆண்டினை நினைவு கூர்ந்திடும் வகையில், அஞ்சல் தலை வெளியீடும் புகழாஞ்சலி நிகழ்ச்சியும் 16-10-1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்டது. மானங் காத்த சீமையின் மருது பாண்டியர் தூக்கிலிடப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவுபெறுவதை நினைவு கூர்ந்திடும் வகையில், 2001ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசு சார்பில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம்

* 1989-ல் கழக ஆட்சியில் ரூ.400/-ஆக இருந்த பத்திரிகையாளர் ஓய்வூதியம் 1996-ம் ஆண்டில் ரூ.1000/- ஆகவும், 1999-ம் ஆண்டில் ரூ.1500/- ஆகவும், 2000-ம் ஆண்டில் ரூ.2000/- ஆகவும், உயர்த்தி வழங்க ஆணையிட்டு தற்போது 76 பத்திரிகையாளர்கள் மாதம் ரூ.2000/- வீதம் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம்

* ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்கள் இறந்து விட்டால், அவர்களின் துணைவியாருக்கு, குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.500/- வாழ்நாள் முழுவதும் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது 5 பத்திரிகையாளர் குடும்பத்தினர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்

* பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள்,

புகைப்படக்காரர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதி திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதற்கு முதன் முதலாக இந்த ஆட்சியிலே 1997ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரம் வீதம் உதவி நிதி வழங்கப்பட்டது. 1999ல் இத்தொகை ரூ.40 ஆயிரமாகவும், 1-4-2000 முதல் ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இதுவரை பதினைந்து பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

செய்தியாளர்களுக்குக் குடியிருப்புகள் - வீட்டு மனைகள்

* 1989-ஆம் ஆண்டு சென்னையில் உள்ள கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலம் 136 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பிற்காக வழங்கப்பட்டு, மேலும் 20 இலட்ச ரூபாய் நல்கையாக அறிவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. 1997ஆம் ஆண்டு மதுரை தல்லாகுளம் பகுதியில் 61 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்புகளுக்காக 3.7 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் 52 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி

* பட்டயம் பெற படங்கள் தயாரிப்பதற்காக தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு 1996-97ஆம் ஆண்டுவரை ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டதற்கு மாறாக 1997-98ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சமாகவும், 1998-99ஆம் ஆண்டில் ரூ.17 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

* இந்நிறுவனத்திற்கு 1991-96 வரை ரூ.26.74 இலட்சத்திற்கு மட்டுமே கருவிகள் வாங்கித் தரப்பட்டன. ஆனால், 1996 முதல் 2000ஆண்டு வரை ரூ.126.13 இலட்சம் செலவில் நவீனக் கருவிகள் அரசின் நிதியுதவியால் வாங்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் திரைப்படத் துறையில் பயன்படுத்தப்படும் மிக நவீனக் கருவிகளுக்கு இணையானவை என்பதால்

மாணவர்களுக்கு மிகுந்த பயன் விளைவித்து வருகிறது. ஒரு திரைப்படத்தை முழு அளவில் உருவாக்குவதற்கான அனைத்து நவீன தொழில்நுட்ப வசதிகளும் இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

* தோற்றுவிக்கப்பட்டு நாற்பதாண்டுகளுக்குப் பிறகு 1998-99-ஆம் கல்வி ஆண்டில்தான் இந்த நிறுவனம் அகில இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (A.I.C.T.E.) அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்கள்

* வர்த்தக ரீதியாக முழுநீளத் திரைப்படங்களுக்கு மட்டுமே திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வந்தது. 1998-99ஆம் ஆண்டு முதல் திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்படும் சிறந்த குறும் படங்களில், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த நடிகர், சிறந்த படம் பதனிடுவோர் ஆகியோருக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கமும், ரூ.5000/- ரொக்கப் பரிசும் வழங்க அரசு ஆணையிட்டு இதுவரை ஆறு பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

* விடியலை நோக்கி என்ற குறும்படம் 1997ஆம் ஆண்டில் சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதினை பெற்றுள்ளது. 1998ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற உலக திரைப்பட விழாவில் இந்திய திரைப்பட வரிசையில் திரையிடுவதற்காக தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர் இயக்கிய 'வானவில்' என்ற குறும்படம் தேர்வு பெற்றது. அமெரிக்காவில் நடைபெற்ற உலக வீடியோ பட விழாவில், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தயாரித்த தேக்கம், கனவுகள் நனவாகும், இரண்டாம் கட்டளை, மூன்றாம் உலகப்போர், மீண்டும் வராது, பண்டோரா, மக்கள் தொகையில் புதிய கொள்கைகள் ஆகிய ஏழு செய்தி விளக்கப் படங்களுக்கு விருதுகள் கிடைத்தன. 1999ஆம் ஆண்டின் சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதை மல்லி என்னும் குறும் படம் பெற்றது. மிகச்சிறந்த நவீன ஒளிப்பதிவு கருவிகளைக் கொண்டு படம் எடுக்கும் முறைகள் குறித்து ஹாலிவுட் திரைப்பட உலகின் மிகச்சிறந்த ஒளிப்பதிவாளர் திரு. கிரேக் ஹஸ்டன் இந்நிறுவனத்திற்கு வருகைதந்து ஒளிப்பதிவு குறித்து 16-10-2000 முதல் 5 நாள் பயிற்சி வழங்கினார்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

* பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் அண்ணா வாழ்கிறார் என்ற திரைப் படத்தை 1998ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்து அளித்தது. இந்தப்படம் குடியரசுத் தலைவரின் விருதைப் பெற்றது. அண்ணா வாழ்கிறார் திரைப்படம் மிகச்சிறப்பாக அனைத்துத் தொழில்நுட்பத் திறனோடும் தயாரிக்கப்பட்டதாகும். தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வரலாற்றில் குடியரசுத் தலைவர் விருது பெற்றது இதுவே முதல்தடவை என்பது நினைந்து போற்றத்தக்கதாகும்.

* தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த 20 நிமிட திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் திரையிடப்படவுள்ளது.

* தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் செய்திமலர் தயாரிப்புப் பணிகளுக்காக பல நவீனமயமாக்கப்பட்ட கருவிகள் ரூ.71.90 இலட்சம் செலவில் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன.

திரைப்படங்களுக்கு மானியம்

* குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 17-7-1996 முதல் தலா ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி மானியத் தொகை வழங்கப்படுகின்றது. 1994ஆம் ஆண்டே திரையிடப்பட்ட படங்களுக்கு கடந்த ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த மானியத் தொகையை கழக அரசு 96இல் அமைந்த பிறகு 94இல் திரையிடப்பட்ட படங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 35 படங்களுக்கும், 1995ஆம் ஆண்டிற்கான 40 படங்களுக்கும், 1996ஆம் ஆண்டிற்கான 28 படங்களுக்கும், 1997ஆம் ஆண்டிற்கான 11 படங்களுக்கும், 1998ஆம் ஆண்டிற்கான 18 படங்களுக்குமாக மொத்தம் 4 கோடியே 55 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக இந்த அரசில் வழங்கப்பட்டுள்ளது.

படப்பிடிப்பு அனுமதி

* தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அதுபோன்ற கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட, படத் தயாரிப்பாளர்கள் செலுத்தி வந்த படப்பிடிப்புக் கட்டணம், ஓர்

இடத்திற்கு ஒரு நாளைக்கு ரூ.5000/- என இருந்ததை ரூ.1000/- எனவும், ஏனைய இடங்களுக்கு ரூ.2500/- என இருந்ததை ரூ.500/- எனவும் 1996இல் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் குறைக்கப்பட்டது.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம்

* தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்துக்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவுக்கு காயம்பட்டு ஊனமடைய நேர்ந்தால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கும் திட்டம் 1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கேளிக்கை வரிவிலக்கு

* குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்டது முதல் நான்கு வாரங்கள் வரை கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் முதன் முதலாக 12-12-1996 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் இதுவரை, மை இந்தியா, சாதி சனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே ஆகிய படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து நான்கு வாரகாலத்திற்கும், ஹவுஸ்புல், உயிரின் உயிரே, காந்தி மற்றும் பாரதி ஆகிய திரைப்படங்களுக்கு காலவரையறையின்றி முழு விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

கலைத்துறை வித்தகர் விருதுகள்

* 1989ஆம் ஆண்டுக்கு முன்பு ராஜா சாண்டோ விருது மட்டுமே தரப்பட்டு வந்தது.

15-6-89 அன்று கழக அரசில் கலைவாணர் மற்றும் எம்.ஜி.ஆர். பெயரிலும் விருதுகள் வழங்க ஆணையிடப்பட்டது.

பின்னர் 22-11-90 அன்று அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் பெயரில் வித்தகர் விருதுகள் கூடுதலாக வழங்க ஆணையிடப்பட்டது.

கவியரசு கண்ணதாசன் பெயரால் 20-3-97 அன்றும், நடிகர் திலகம் சிவாஜி பெயரால் 10-1-2000 அன்றும், தியாகராஜ

பாகவதர் பெயரால் 30-8-2000 அன்றும், வித்தகர் விருதுகள் வழங்க இந்த அரசினால் ஆணையிடப்பட்டது.

முந்தைய ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த 94ஆம் ஆண்டிற்கான விருதுகளும் 1996க்குப் பின்னர்தான் வழங்கப்பட்டன. அறிஞர் அண்ணா விருது ஆரூர் தாஸ், டி. ராஜேந்தர், லியாகத் அலிகான், ஸ்ரீதர், எஸ்.ஏ.சந்திரசேகர், கே.சொர்ணம் ஆகியோருக்கும், கலைவாணர் விருது செந்தில், கவுண்டமணி, சார்லி, குமரி முத்து, ஜனகராஜ், ஊர்வசி ஆகியோருக்கும், ராஜா சாண்டோ விருது எஸ்.பி. முத்துராமன், வி.சேகர், ஆர்.கே. செல்வமணி, முக்தா சீனிவாசன், பாலுமகேந்திரா, மணிரத்தினம் ஆகியோருக்கும், எம்.ஜி.ஆர். விருது விஜயகாந்த், சத்யராஜ், சரத்குமார், பாக்யராஜ், பிரபு, நெப்போலியன் ஆகியோருக்கும், கவிஞர் கண்ணதாசன் விருது பூவை செங்குட்டுவன், பஞ்சு அருணாசலம், மு. மேத்தா, பொன்மணி வைரமுத்து, பழனி பாரதி ஆகியோருக்கும் இந்த அரசில் நான்கரை ஆண்டுக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

திரைப்பட விருதுகள்

* தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், சிறந்த படங்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, சிறப்புப் பரிசு என வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையான ரூ.1,25,000/- ரூ.75,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.50,000/- ஆகியவற்றை 1999ஆம் ஆண்டு முதல் முறையே ரூ.2,00,000/-, ரூ.1,00,000/-, ரூ.75,000/-, மற்றும் ரூ.75,000/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு இதுவரை திரைப்படப் பரிசுத் தொகையாக 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

திரைப்படக் கலைஞர்களுக்கு விருதுகள்

* தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் என 20 பிரிவின் கீழ்வரும் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தது. 1997ஆம் ஆண்டு முதல் கூடுதலாக சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர் ஆகிய கலைஞர்களுக்கும் வழங்க

ஆணையிடப்பட்டு, தற்போது 22 பிரிவின் கீழ் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கேளிக்கை வரி குறைப்பு

* புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியை தமிழக அரசு 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989ஆம் ஆண்டில் குறைத்தது.

* 1-8-98 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாகவும், 2000இல் 25 விழுக்காடாகவும், மேலும் குறைக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன் வந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது. மொழி மாற்றுப் படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்கும் குறைக்கப்பட்டது போல் கேளிக்கை வரி 1-8-98 முதல் குறைக்கப்பட்டது.

* இதேபோல இணக்க வரி முறையும் (Compounding) அதற்கு ஏற்றாற் போல் குறைக்கப்பட்டது. இவ்வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத்துறைக்கு 1.8.1998 முதல் ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கும், 12.6.2000 முதல் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் அளவுக்கும் வரிச் சலுகைகள் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே இல்லாத வகையில் வழங்கப்பட்டன.

* விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது, 1-4-1986 முதல் 11-11-1999 வரை செலுத்தவேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12-11-1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் குறைக்கப்பட்டது. 1.4.2000 முதல் திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

* திரைப்படத் துறையில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு பொருட்காட்சி

* அரசின் திட்டங்கள், சாதனைகள், நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில், மாவட்டங்களின் தலைநகரங்களில் தமிழக

அரசால் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகள் பொழுது போக்கிற்காக மட்டுமின்றி, பொதுமக்கள் அரசின் பல்வேறு நலத் திட்டங்களை அறிந்து பயன்பெறும் வகையிலும் நடத்தப்படுகின்றன. 1996ஆம் ஆண்டு முதல் இதுவரை 15 பொருட்காட்சிகள் இத்துறையால் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் அரசுக்கு நிகர இலாபம் 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

தமிழரசு

* 1970-ல் கழக ஆட்சியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு அரசின் திட்டங்களை அனைவரும் உணரும் வண்ணம் எழுத்து ஓவியமாக மாதம் இருமுறை தமிழிலும், மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் தமிழரசு ஏடு வெளிவந்து கொண்டிருக்கிறது. 1997 முதல் அரசு செய்தி என்ற புதிய வகை சுவரொட்டி கிழமை தோறும் அரசின் திட்டங்களையும், பயன்களையும் விளக்கும் கருத்துக் காட்சிகளோடு கூடிய உரைவிளக்கம் தாங்கி வெளி வந்து கொண்டிருக்கின்றது. கால்நடைப் பாதுகாப்பு சிகிச்சை முகாம், கன்றுகள் பராமரிப்பு முறைகள், பசும் தீவனம், கோழிப்பண்ணை பராமரிப்பு, ஆடுகளின் நீலநாக்கு நோய் ஆகியவை குறித்தும் துண்டுப் பிரசுரங்கள், தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

* வீட்டுக் காய்கறித் தோட்டம், நமக்கு நாமே, சமூக நலத் திட்டங்கள் போன்ற சிறப்பு வெளியீடுகள் தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இலக்கிய மலர், கோட்டம் முதல் குமரி வரை ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டில் தமிழரசு அச்சகத்தில் ரூ.36,84,702/- செலவில் புதிய பலவண்ண அச்சு இயந்திரம் வாங்கப்பட்டு, தமிழரசு, அரசு செய்தி மற்றும் சிறப்பு வெளியீடுகள் மிக வேகமாக அச்சிடப்பட்டு வருகின்றன. தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு அனுப்புகைப் பணிகளுக்காக இரண்டு கணினிகள் ரூ.3.41 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

விளம்பரம்

* நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி, ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரை கலை விளம்பரங்கள்

ஆங்கிலம் மற்றும் தமிழில் கணினி இணையத்தில் இலவசமாக வெளியிடப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உலகத்தில் எந்த மூலையில் உள்ளவரும் தமிழக அரசின் ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல்வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998இன் கீழ் வெளியிடப்பட்ட ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல், மாநில அளவிலும் மாவட்டங்களிலும், அமலுக்கு வந்துள்ளன. இதன் அடிப்படையில் மாவட்ட மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. இச் செய்திமலரில் ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பரங்களுடன், ஒப்பந்தப்புள்ளி மீது மேற்கொள்ளப்படும் முடிவுகளும் வெளியிடப்படுகின்றன.

உடன்பிறப்பே,

மக்களாட்சியின் மாண்புகளைக் காத்து, மக்களுக்காக நடைபெற்று வரும் இந்த மக்கள் அரசின் ஒளிவு மறைவற்ற நேர்மையான நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் ஒவ்வொருவரும் முழுவதுமாகத் தெரிந்து தெளிந்து கொள்வதற்கென பல்வேறு வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த முயற்சிகளுக்குத் துணையாக செய்தி மக்கள் தொடர்புத் துறையும் தன் கடமையினை செய்து வருகின்றது.

அன்புள்ள,

மு. க.

(9-12-2000)

2556. அரசு அலுவலர் ஆசிரியர்களின் பொற்காலம் இது!

உடன்பிறப்பே,

உங்கள் வாழ்விலும், தாழ்விலும் நான் என்றென்றும் உங்களோடு இருப்பவன். நீங்களும் என்னோடும் இருப்பவர்கள் என்று அரசு அலுவலர் ஒன்றிய 55வது ஆண்டு விழாவில் 5-8-2000 அன்று நான் குறிப்பிட்டது போலவே, 2-5-1974 அன்று தஞ்சையில் நடைபெற்ற 46வது மாநில மாநாட்டில் நான் என் உரையைத் தொடங்கும்போதும் உங்களில் ஒருவனாக இருந்து இங்கே பேசுகிறேன் என்று குறிப்பிட்டேன். ஒரு அரசு என்னதான் தீவிரமாகத் திட்டங்களைத் தீட்டினாலும், அந்தத் திட்டங்களை செயலாக்கத்திற்குக் கொண்டு வரக் கூடிய பொறுப்பிலே இருப்பவர்கள் அரசு அலுவலர்கள்தான். நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த நான்கரை ஆண்டு காலத்தில், ஒரு பிரச்சினைகூட எழவில்லை என்ற ஒன்றிலிருந்தே அரசு அலுவலர்களின் பால் நான் எத்தகைய பாச உணர் வோடு இருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அது போலவே ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள், அவர்கள் எந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் எத்தனை முறை என்னைச் சந்தித்திருப்பார்கள், எத்தனை மணி நேரம் என்னோடு அளவளாவி அவர்களின் கோரிக்கைகளை எடுத்துரைத்திருப்பார்கள் என்பதையும், இதற்கு முன்பு நடைபெற்ற ஐந்தாண்டு காலத்தில் அவர்களுடைய அனுபவம் எப்படிப்பட்டது என்பதையும், ஒப்பிட்டுப் பார்த்தாலே, இது, அரசு அலுவலர், ஆசிரியர்களின் பொற்காலம் என்பதை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த ஆண்டு 24-3-2000 அன்று, நான் அளித்த நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்தவாறு தமிழக அரசின் வருவாய்க் கணக்கிலே வரவு 18,406 கோடி ரூபாயாகும். இதில் வரி வருவாய்

மூலமாக மாத்திரம் வரவு 12,500 கோடி ரூபாயாகும். இந்தத் தொகையில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கான ஊதியம், ஓய்வூதியம் ஆகியவற்றுக்கான செலவு மட்டும் 12,100 கோடி ரூபாயாகும். அதாவது வரி வருவாயில் 96 சதவிகிதமாகும். இவ்வளவு பெரிய தொகை ஏதோ தனிப்பட்டவர்களுக்காகத் தரப்படுவது என்று பொருள் கொள்ளக் கூடாது. அரசு அலுவலர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியத்தொகை என்பது, திட்டத்தோடு சேர்ந்து செலவழிக்கப்படுகின்ற தொகையாகும். அவர்கள் பாடுபட்டால்தான் திட்டம் நிறைவேறும். அரசு அலுவலர்களும் சேர்ந்துதான் திட்டம். எனவே அரசு அலுவலர்களுக்காக தரப்படுகின்ற ஊதியத் தொகையை, திட்டத்திற்காக செலவழிக்கப்படுகின்ற தொகையாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இதோ, அரசு அலுவலர்களுக்காக கழக அரசு செய்த சாதனைகளின் தொகுப்பு!

* கழக அரசு 3வது முறையாக ஆட்சிக்கு வந்தவுடன், மாநில அரசின் 5வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாகவும் - அதைவிட அதிகமாகவும் தமிழக அரசு ஊழியர்களுக்கு 1989ஆம் ஆண்டு புதிய ஊதிய விகிதங்களை வழங்கியமையால் ஓராண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவு 443 கோடி ரூபாய். மீண்டும் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில், மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு வழங்கிய ஊதிய உயர்வு அளித்த அதே நாளிலிருந்தே (1-1-1996) தமிழக அரசு அலுவலர்களுக்கும் பயன் கிடைக்கத்தக்க விதத்தில் தென்னகத்திலேயே முதலாவதாக ஆண்டு ஒன்றுக்கு 1,230 கோடி ரூபாய் கூடுதல் செலவில் புதிய ஊதிய விகிதங்களை வழங்கியது.

* மேலும் ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் சில குறைபாடுகள் இருப்பதாக வந்த கோரிக்கையை ஏற்று, ஒரு நபர் ஆணையத்தினை அமைத்து அதன் பரிந்துரைகள் அடிப்படையில், இடைநிலை, பட்டதாரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு சுமார் 75 கோடி ரூபாய் கூடுதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

* சத்துணவுப் பணியாளர்களுக்கு சுமார் 60 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது.

* மைய அரசு ஆசிரியர்களுக்கு வழங்கிய ஊதிய விகிதங்களை, தமிழக அரசும் தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கியதையொட்டி ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக அமைச்சுப் பணியாளர்களுக்கு மத்திய அரசு வழங்கிய ஊதியத்தை விட கூடுதலாக 5 விழுக்காடு தனி ஊதியம் 1.9.1998 முதல் வழங்கப்பட்டது.

* அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் இதே நிலையில் இருக்கும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியம் வழங்கியதால் ஏற்பட்ட கூடுதல் செலவு 83 கோடி ரூபாய். ஆக மொத்தம் ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரையை ஏற்றதன் காரணமாக, அரசு ஆண்டு ஒன்றுக்கு 1448 கோடி ரூபாய் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், சத்துணவுப் பணியாளர்கள் ஆகியோருக்குக் கூடுதலாக வழங்கியது.

* இது தவிர, ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 40 விழுக்காடு உயர்வு மற்றும் பல ஓய்வூதியப் பயன்களை வழங்கியதில் ஏற்பட்ட கூடுதல் செலவு 462 கோடி ரூபாய். 1.1.96 முதல் 31.3.98 வரை ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கியதில் அரசுக்குச் செலவு 2400 கோடி ரூபாய்.

* அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று வீட்டு வாடகைப்படி 1-4-1998 முதல் 100 விழுக்காடு உயர்த்தப்பட்டதில், ஆண்டுக்குக் கூடுதல் செலவு 100 கோடி ரூபாய். நகர ஈட்டுப்படி மத்திய அரசுக்கு இணையாக உயர்த்தப்பட்டதில், ஆண்டுக்குக் கூடுதல் செலவு 20.17 கோடி ரூபாய்.

* பயணப்படி 100 விழுக்காடு உயர்த்தப்பட்டதில் கூடுதல் செலவு 10 கோடி ரூபாய்.

கிராம உதவியாளர்களுக்குப் புதிய ஊதிய விகிதங்கள்

* கிராம உதவியாளர்களுக்கு ரூ.600-10-750 என்று இருந்த ஊதிய விகிதத்தை உயர்த்தி ரூ.1800-20-2240 என்ற ஊதிய விகிதம் அளிக்கப்பட்டது. இதில் பயன்பெற்ற கிராம உதவியாளர்களின் எண்ணிக்கை 26,250.

சத்துணவு அமைப்பாளர்களுக்குப் புதிய ஊதிய ஊதியம்

* சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.200-5-250-10-400 என்றிருந்த ஊதிய விகிதத்தை உயர்த்தி ரூ.600-10-700-20-

1100 என்ற ஊதிய விகிதம் அளிக்கப்பட்டது. இதில் பயன்பெற்ற சத்துணவு அமைப்பாளர்களின் எண்ணிக்கை 91,000.

தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கும் உயர்த்தப்பட்ட ஊதியம்

* ஐந்தாவது ஊதியக்குழு பரிந்துரைகளையொட்டி, அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கியதைப்போல, தொகுப்பூதியம், மதிப்பூதியம், நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் போன்ற ஊதிய இனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் 40 விழுக்காடு ஊதிய உயர்வு அளித்து, அவர்களுக்கு குறைந்தபட்ச உயர்வாக 50 ரூபாய்க்கு குறையாமல் ஊதியம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 2,04,571. கழக அரசு நான்காவது முறையாக நடந்து வருகின்ற இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில், மத்திய அரசு அகவிலைப்படியை உயர்த்தி அமல் படுத்திய நாளில் இருந்தே, தமிழக அரசும் அதன் அலுவலர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்தித் தந்துள்ளது.

இதர சலுகைகள்

* பண்டிகை முன் பணம் பெறும் பட்டியலில் சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினம் சேர்க்கப்படாமல் இருந்தது. 96-97 ஆம் ஆண்டு இந்த நாட்களும் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

* சுதந்திரப் பொன் விழா ஆண்டு நினைவாக; தியாக மனப்பான்மையோடும், கடமை உணர்வோடும் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து திறமை காட்டி செயல்படுகின்ற அரசு அலுவலர்களாயினும், காவலர்களாயினும் அவர்களுடைய செயலையும், நிகழ்வையும் பொறுத்து அரசு விருது, பதவி உயர்வு, பொற்கிழி போன்றவைகளை வழங்கும் திட்டம் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டது.

திருமணக் கடன் வழங்கும் திட்டம்

* அரசு அலுவலர் மகள் அல்லது மகனின் திருமணத்திற்காக வாங்கிய முதல் கடன் நிலுவையில் இருக்கும்போது அடுத்து இரண்டாவதாக ஒரு கடன் திருமணத்திற்காக வாங்க இயலாது என்ற தடை நீக்கப்பட்டது.

அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நகர ஈட்டுப்படி

* அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி, வழங்கும் திட்டம் முதன்முதல் 17.10.1967 அன்று அன்றைய கழக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின்படி, சென்னை, மதுரை நகரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நகர ஈட்டுப்படி 15.11.1971 அன்று கோவை மாநகருக்கும், 21.3.1975 அன்று சேலம், திருச்சி ஆகிய மாநகரங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது. 11.9.2000 முதல் நெல்லை மாநகருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரசு ஊழியர் இறந்தால், வாரிசுகள் கருணை அடிப்படையில் நியமனம்

* அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்களது வாரிசுக்கு அரசுப் பணி வழங்க வகை செய்திடும் கருணை அடிப்படையிலான பணி நியமனத் திட்டத்தை 15.2.1972 அன்று அறிமுகம் செய்த கழக அரசு தொடர்ந்து அதனைச் செயல்படுத்தி வருகிறது.

அரசு ஊழியர்களுக்கு வாகனக் கடன்

* அரசு ஊழியர்களுக்கு வாகனக் கடன் வழங்கும் திட்டம் 1971-72ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்ட இரண்டு சக்கர வாகனக் கடன் 25,000 ரூபாய் என்பது 35,000 ரூபாயாகவும், புதிய கார் வாங்க வழங்கப்படும் முன் பணம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாகவும் 1996-1997ல் உயர்த்தப்பட்டது.

அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்

* பணியிலிருந்து திடீரென மரணம் எய்திடும் அரசு ஊழியர்களின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் இந்தியாவிலேயே எங்கும் இல்லாத திட்டமாக, தமிழகத்தில் முதன்முதல் 1974இல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்ட நிதி யுதவி 20 ஆயிரம் ரூபாய் என்பதை, 1989இல் 40 ஆயிரம் ரூபாயாகவும், 60 ஆயிரம் என்பதை 1996இல் கழகத் தேர்தல் அறிக்கையிலே அறிவித்தவாறு 1 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தியது கழக அரசு.

உள்ளாட்சி அலுவலர்களுக்கு நல்வாழ்வு நிதித் திட்டம்

* அரசு அலுவலர்களுக்கு உள்ளதுபோல, பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் பணியாளர்களுக்கும் நல்வாழ்வு நிதித் திட்டம் தொடங்க ஆணையிடப்பட்டது. இந்த நிதிக்கு அரசு தனது பங்காக ஆண்டு தோறும் இருபது இலட்சம் ரூபாய் வீதம் வழங்கி வருகிறது. இதன்படி, சிறப்பு சிகிச்சை மற்றும் சிறப்பு அறுவை சிகிச்சைக்கான செலவில் ஒரு இலட்சம் ரூபாய் அல்லது 75 விழுக்காடு இதில் எது குறைவோ அந்த அளவிற்கு உதவித் தொகை வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் போனஸ்

* போனஸ் வழங்கப்பட வேண்டும் என்ற அரசு ஊழியர்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, 27.12.1990 அன்று 15 நாள் ஊதியத்தைத் தமிழக அரசு ஊழியர்களுக்கு போனஸாக வழங்க முதன்முதல் ஆணையிட்டது கழக அரசு. தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் அத்திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டில் 29 நாள் ஊதியம் போனசாக வழங்கப்பட்டது. போனஸ் பெறுவதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய வரம்பினைக் கடந்த பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் கருணைத் தொகை வழங்கிடவும் 1990ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டு, தொடர்ந்து அவ்வாறே வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் அரசின் பங்கு அதிகரிப்பு

* தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது அவர்களின் சிறப்பு சேமநல நிதியில் அரசின் பங்காக வழங்கப்படும் 5,000/- ரூபாயினை 15.9.2000 அன்று 10,000/- ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

புதிய சிறப்பு வருங்கால வைப்பு நிதித்திட்டம்

* தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி 2000 என்ற புதிய திட்டத்தை 1.10.2000 முதல் செயல்படுத்தியுள்ளது. இதன்படி 1.10.2000 முதல் பணியில் சேரும் ஒருவர் மாதம் 70/- ரூபாய் செலுத்தினால் 25 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ஓய்வு பெறும்போது அவருக்கு 1,00,000/- ரூபாய் கிடைக்கும்.

* அரசு ஊழியர்களோ, அவரது குடும்பத்தினரோ மிகக் கொடிய நோயினால் அவதியுறும் பொழுது, அவர்கள் உடனடி சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக, மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளின் தரங்களை அறிந்து, பரிசீலனை செய்து பல தனியார் மருத்துவமனைகளை அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் சேர்த்துள்ளது.

வீடு கட்டும் கடன் அதிகரிப்பு

* வீடு கட்டும் கடன் 4 இலட்சம் ரூபாய் என்பதனை 6 இலட்சம் ரூபாயாக 1.4.2000 முதல் உயர்த்தியதுடன், இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை 102 கோடி ரூபாயாகவும் உயர்த்தியது கழக அரசு.

* குடிமைப் பணியாளர் கூட்டு மன்றக் கூட்டம் (State Joint Council Meeting) ஆறுமாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் என்ற அரசு அலுவலர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு, முதல் கூட்டம் 20-12-2000 அன்று நடைபெறவுள்ளது. அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று 1995க்கு முன்பிருந்தவாறு இளநிலை உதவியாளர்கள் என்றும், தட்டச்சர்கள் என்றும், தனித்தனி பணிகள் ஏற்படுத்தப்படும் என்று 8-9-2000 அன்று ஆணையிடப்பட்டது.

* தமிழக அரசின் மருத்துவத் துறையில் பல்வேறு மருத்துவமனைகளில் பதிலிப் பணியாளர்களாக உள்ளவர்கள் அனைவரும் விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் என்பதால், பணியிடங்களில் காலி இடங்கள் ஏற்பட்டால் பதிலிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் என்று இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டு 21-8-2000 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* அதைப்போலவே தொழுநோய்ப் பிரிவு தினக் கூலி பணியாளர்களை அரசுப் பணியில் நிரந்தரப்படுத்திடவும் ஆவன செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான ஆணை 29-9-2000 அன்று பிறப்பிக்கப்பட்டது.

* நெடுஞ்சாலைத் துறையில் நீண்ட காலமாகத் தினக் கூலி அடிப்படையிலே பணியாற்றி வந்த 682 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள்.

* கூட்டுறவு தணிக்கைத் துறையில் ஏற்பட்டுள்ள பதவி உயர்வுக்கான தேக்க நிலையைப் போக்க, மேம்படுத்தப்பட்ட

பணி இடங்கள் உடனடியாக அனுமதிக்கப்படும் என்று அறிவித்து அதற்கான ஆணை 20-9-2000 அன்று பிறப்பிக்கப்பட்டு விட்டது.

* சமூகநலத்துறையில் பணிபுரியும் அங்கன்வாடி, ஊட்டச்சத்து குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு, பணி மூப்பின் அடிப்படையில், செவிலியர் பயிற்சி பெற ஏதுவாக வயது வரம்பைத் தளர்த்திட அரசு 7-9-2000 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்டங்களில் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் பணி மாறுதலில் செல்லும் அரசு அலுவலர்களுக்குத் தொடர்ந்து அரசு குடியிருப்பில் வசிக்க 6-9-2000 அன்று அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

* வீட்டு வசதி வாரியத்தில் வாடகை வீடு ஒதுக்கீடு பெறும் அரசு அலுவலர்கள், இதுவரை அந்த வீடு எந்த நாளிலிருந்து காலியாக இருந்ததோ அந்த நாளிலிருந்தே வாடகை செலுத்திட வேண்டிய நிலை இருந்துவந்தது. இதனால் குடியேறாமலேயே வாடகை செலுத்த வேண்டிய கட்டாயம் அரசு அலுவலர்களுக்கு இருந்தது. இதனை மாற்றி அமைத்து இனி அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கிய நாள் முதற் கொண்டு வாடகை செலுத்தினால் போதும் என்று 11-9-2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தில் தொடர்ந்து 25 ஆண்டுகள் மாநிலத் தலைவராகத் தொண்டாற்றியவரும், அரசுக்கும் அரசு அலுவலர்களுக்கும் இணைப்புப் பாலமாக விளங்கியவரும், இலட்சக்கணக்கான அரசு அலுவலர்களின் பேரன்பிற்குரிய தலைவராக விளங்கியவருமான சிவ. இளங்கோ அவர்கள், அரசு அலுவலர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினை போற்றும் வகையில், சென்னை பெரியார் நகரில் அவர் வாழ்ந்த அவரது வீடு அமைந்துள்ள எழுபதடி சாலை சிவ இளங்கோ சாலை என்று 19-10-2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் நலன்

* இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மத்திய அரசில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான இணையான ஊதிய விகிதம் மாநில அரசில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது. 1-1-1996 முதல் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு

மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைகளுக்கு ஏற்ப ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. அவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களை ஒரு நபர் ஆணையம் ஆய்வு செய்து ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மேலும் உயர்த்தி மத்திய அரசிற்கு இணையாகப் பரிந்துரை செய்தது. ஒரு நபர் ஆணையத்தின் அப்பரிந்துரைகளை கழக அரசு அப்படியே ஏற்று பின்வருமாறு உயர்த்தி ஆணையிட்டது.

இடைநிலை ஆசிரியர்கள்

* இடைநிலை ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.4000-6000 என்ற ஊதிய விகிதம் ரூ.4500-7000 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.5300-8300 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.5900-9900 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 1,02,477 இடைநிலை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

பட்டதாரி ஆசிரியர்கள்

* பட்டதாரி ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5000-8000 என்ற ஊதிய விகிதம் ரூ.5500-9000 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.6500-10500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.8000-13500 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 42,859 பட்டதாரி ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள்

* முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5900-9900 என்ற ஊதிய விகிதம் ரூ.6500-10500 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.8000-13500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.9100-14050 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 17,445 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

* ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5000-8000 என்ற ஊதிய விகிதம் ரூ.5300-8300 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.6500-10500 என்றும், சிறப்பு நிலை ஊதிய

விகிதம் ரூ.8000-13500 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 30619 ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

* நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட ரூ.5500-9000 என்ற ஊதிய விகிதம் ரூ.5900-9900 என்ற ஊதிய விகிதமாகவும், இவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.8000-13500 என்றும், சிறப்பு நிலை ஊதிய விகிதம் ரூ.9100-14050 என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம் 5503 நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

உயர்நிலைப் பள்ளி /
மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

* உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.6500-10500 ஊதிய விகிதம் வழங்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.8000-13500 ஊதிய விகிதம் வழங்கப்படுகிறது. இத்துடன் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500 தனி ஊதியமும், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.600 தனி ஊதியமும் 1-9-1998 முதல் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 3274 உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும், 1583 மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் பயன் பெறுகின்றனர். பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தை பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு மாற்றியமைத்ததைத் தொடர்ந்து கழக அரசும், இவர்களின் ஊதிய விகிதத்தை முன் தேதியிட்டு 1-1-1996 முதல் மாற்றியமைத்து ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் சுமார் 28,000 கல்லூரி, பல்கலைக் கழக, பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் பயன் பெற்றார்கள். அவர்களுக்கு 178 கோடி ரூபாய் நிலுவைத் தொகையாக வழங்கப்பட்டது.

* இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்யும்போது, வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்பின்படிதான் நியமிக்கப்பட வேண்டும் என்று கழக அரசு ஆணையிட்டதின் மூலம் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஏழையெளிய குடும்பங்களைச்

சேர்ந்த 41,887 பேர் எந்தவிதச் சிரமமும் இல்லாமல் ஆசிரியர் பணி பெற்றனர்.

* நல்லாசிரியர் விருது என்ற பெயரில் பல ஆண்டுகளாகத் தரப்பட்டு வந்ததை - விருது பெறாத மற்ற ஆசிரியர்கள் எல்லாம் நல்ல ஆசிரியர்கள் இல்லையா என்ற எண்ணம் எழக் கூடும் என்பதால் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது என்று 1997இல் கழக அரசு மாற்றியது. மேலும் இந்த விருது பெறும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட விருதுத் தொகை 500 ரூபாய் என்பதை 1989இல் 1000 ரூபாயாகவும், 1997இல் 2000 ரூபாயாகவும் கழக அரசு உயர்த்தியது.

* பள்ளிகளில் உள்ள காலிப் பணி இடங்களுக்கு ஆசிரியர் நியமனம் செய்யப்படும்போது, மாறுதல் கேட்டுள்ள ஆசிரியர்களுக்கு வாய்ப்பளித்த பின்னர் தான் மீதம் உள்ள காலி இடங்களில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பணி அமர்த்தப்பட வேண்டும் என்று 13-9-2000 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

* திறந்தவெளிப் பல்கலைக் கழகங்கள் மூலம் நேரடியாக முதுகலைப் பட்டம் பெற்று பி.எட். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

* நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணி புரிந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின்கீழ், அரசு ஆணைப்படி வழங்கப்பட வேண்டிய தொகையாகிய 5000 ரூபாய் வழங்குவது குறைவான நிதி ஒதுக்கீடு காரணமாக காலதாமதம் ஆவதைத் தடுக்க நிதி ஒதுக்கீட்டைக் கணக்கில் கொள்ளாமல் கருவூலங்கள் பட்டியலை அனுமதித்து தாமதமின்றி நிதி வழங்கப்பட வேண்டுமென்று 27-9-2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே ஆசிரியர்களுக்கும் மொத்தப் பணிக் காலத்தில் ஒருமுறை அடிப்படை பதவியில் தேர்வு நிலை, சிறப்பு நிலை ஆகியவற்றில் பணியாற்றிய காலத்தை கணக்கில் கொண்டு உயர் பதவியில் சிறப்பு நிலை நிர்ணயிக்க வேண்டுமென்று ஆணை 5-9-2000 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

* 800 ரூபாய் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட தொழில் ஆசிரியர்களுக்கு நியமன நாள் முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கடந்த கால அரசால் அறிவிக்கப்பட்டு, செயல்முறை படுத்தப்படாமல் இருந்ததை மாற்றி, அவர்களுக்கும் உரிய ஊதிய விகிதம் வழங்க 7-9-2000 அன்று ஆணையிடப்பட்டது.

* நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 1-6-1986 முதல் அரசு அலுவலர்கள் என்று அறிவிக்கப்பட்டும் அவர்களுக்குப் பணி விதிகள் நீண்டகாலம் இயற்றப்படாமல் இருந்தது. 28-8-2000 அன்று இதற்கான பணி விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

* ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளுக்குச் சில்லறைச் செலவினம் வழங்குவதைப் போல, மாநகராட்சிப் பள்ளிகளின் சில்லறைச் செலவினத்திற்காக கல்வி மேல் வரியிலிருந்து ஒதுக்கீடு செய்ய 20-9-2000 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோருக்கான சலுகைகள்

* முழு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகள் தேவை என்ற நிலையை மாற்றி, 30 ஆண்டு பணி போதும் என 1.7.1996 அன்று ஆணையிடப்பட்டுள்ளது. ஓய்வூதியம் கணக்கிட, அரசு அலுவலர் ஓய்வு பெறும் நாளன்று அவர் பெறும் அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடாக அவரது ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும். ஓய்வு பெறும்போது, கடைசியாகப் பெற்ற மாத ஊதியத்தில், 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அந்தத் தொகையே ஓய்வூதியமாக 1.7.1996 முதல் வழங்கிட ஆணையிடப்பட்டது. இத்திட்டம் மைய அரசாலோ அல்லது வேறு மாநில அரசுகளாலோ செயல்படுத்தப்படாத முன்னோடித் திட்டமாகும். அரசு அலுவலர்களின் நீண்ட கால கோரிக்கையான தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை (Half Pay Leave of Private Affairs) ஒப்படைப்பு செய்வதை அரசு ஏற்றுக்கொண்டு 90 நாட்களுக்கு மிகைப்படாமல் 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்புக்கால முழுச் சம்பளம் வழங்க 96-97இல் ஆணையிடப்பட்டுள்ளது.

* ஓய்வு பெறும்பொழுது ஒப்படைப்பு செய்யும் ஈட்டிய விடுப்பிற்கு 180 நாட்களுக்கு மேலுள்ள நாட்களுக்கு விடுப்புக்காலச் சம்பளம் வழங்கும் போது வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற இதரப்படிகளும் சேர்ந்து முழுச் சம்பளம் வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. ஓய்வு பெறும் போது 240 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து பணம் பெறும் திட்டத்தில் 180 நாட்களுக்கு மட்டுமே ஊதியத்துடன் அனுமதிக்கப்பட்ட வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகளை எஞ்சிய 60 நாட்களுக்கும் அனுமதித்து 1996-97இல் அறிவித்து ஆணையிட்டது கழக அரசு. அரசுப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்டது போலவே 40 விழுக்காடு ஓய்வூதியத்தை உயர்த்தி, ஓய்வூதியதாரர்கள் பெற்று வந்த குறைந்தபட்ச ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் மாதம் 375 ரூபாய் என்பது 1275 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் எண்ணிக்கை 3,27,488. 1.1.1996 முதல் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்பது 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது.

* 1.4.1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்குப் பணிக் கொடையைக் கணக்கிடும்போது அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியைச் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

* 1.4.1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி என்பதற்குப் பதிலாக 40 விழுக்காடு வரை மொத்தமாக்கி (Commutation) பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1.7.1996 முதல் ஓய்வூதியம் பெறுவோருக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கும் மருத்துவப் படி திங்கள் ஒன்றுக்கு 30 ரூபாய் என்பது 50 ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டது.

* 1.1.1997 முதல் தமிழ்நாடு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்ட நிதிக்கு மாதம் ஒன்றுக்கு

50 ரூபாய் வீதம் ஓராண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு 25,000 ரூபாய் குடும்பப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது. 1.1.1996இல், அனுமதிக்கப்பட்ட புதிய ஊதிய விகிதத்தின் நிலுவைத் தொகையில், இறுதியாக வழங்கப்பட வேண்டிய 40 விழுக்காடு நிலுவைத் தொகை ஓய்வூதியதாரர்களுக்கு நடப்பு நிதி யாண்டில் வழங்கப்பட்டுவிட்டது.

முன்னாள் கிராம அலுவலர் நலம்

* 14-11-1980-இல் கடந்த கால அரசில் அவசரச் சட்டத்தினால் பணியிழந்து, வாழ்ந்து வரும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 175 ரூபாயை ஓய்வூதியமாக அதற்குரிய படிகளுடன் வழங்கவும், 14.11.1980-இல் பணியிழந்தவர்களில் மறைந்துவிட்ட முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 100 ரூபாயைக் குடும்ப ஓய்வூதியமாக வழங்கவும் கழக அரசினால் 23.8.1996 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணைகளின்படி, 5-12-1986 முதல் முன்னாள் கிராம அலுவலர்கள் சிறப்பு ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டதால், ஒவ்வொரு முன்னாள் கிராம அலுவலரும் சிறப்பு ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ஏறத்தாழ 23,000 ரூபாய் பெற்று மகிழ்ந்து இந்த அரசைப் பாராட்டினர்.

* பின்னர் 22.7.1998 அன்று சிறப்பு ஓய்வூதியம் 175 ரூபாய் என்பதை 250 ரூபாயாக உயர்த்தியும், குடும்ப ஓய்வூதியத்தை 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதனால் இதர படிகளுடன் சேர்த்து தோராய மாக மாதமொன்றுக்கு 800 ரூபாய் அளவில் கிடைக்கும்.

* முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கும் நோக்கத்தில் பதவி ஒழிப்பு நாளான 14-11-1980 அன்று பணியிலிருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அன்றைய நாளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்தவர்களுக்கும், விடுப்பில் இருந்தவர்களுக்கும் இச்சிறப்பு ஓய்வூதியச் சலுகை 9.9.1998 அன்று நீட்டிக்கப்பட்டது.

* உடன்பிறப்பே, கடந்த நான்கரை ஆண்டுகளில் செய்த சாதனைகளை இங்கே தொகுத்துள்ளேன். அண்ணா அவர்கள்

முதல்வராக இருந்தபோதே ஈட்டிய விடுப்பினைச் சரண் செய்து பணமாகப் பெறும் திட்டத்தை 10.9.1968 அன்று அறிமுகம் செய்து பெருமை பெற்றுள்ளோம். அதற்குப் பிறகு அண்ணா விட்டுச் சென்ற பொறுப்பை என் தோளிலே சுமக்க முற்பட்டபோது, அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களுக்கு இருந்து வந்த ரகசியக் குறிப்பேட்டு முறையை ஒழித்திட வேண்டுமென 1940ஆம் ஆண்டு வெள்ளைக்காரர்கள் ஆட்சி முதல் இருந்து வந்த நீண்டகால கோரிக்கை 20.2.1972 அன்று கழக அரசினால் ஏற்கப்பட்டது. இதற்காக 6-4-72 அன்று தந்தை பெரியார் தலைமையில் ராஜாஜி மண்டபத்தில் எனக்கு நடைபெற்ற பாராட்டு விழாவிலே பெரியார் அவர்கள் பேசும்போது, தமிழக அரசு சீர்திருத்த அரசு! நமது அரசு! கிளர்ச்சிகளில் இறங்காமல் அன்போடு அணுகுக! என்றெல்லாம் பாராட்டியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 1976ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட்ட இந்த இரகசியக் குறிப்பேட்டு முறையை, 1990இல் மூன்றாவது முறையாக அமைந்த கழக அரசு மறுபடியும் நீக்கியது. இப்படிப்பட்ட சாதனைகளை எந்த அரசு அலுவலரால்தான் மறக்க இயலும்? ஆசிரியர்களால்தான் மறக்க முடியுமா? அல்லது உன்னால்தான் மறக்க முடியுமா? எனினும் மறந்தவர்களுக்கு நினைவூட்டவேண்டியது உன் கடமையல்லவா?

அன்புள்ள,

மு. க.

(10-12-2000)

2557. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன்!

உடன்பிறப்பே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நலனுக்காக கழக அரசு இந்த நாலரை ஆண்டுகளில் ஆற்றிவரும் பணிகளைத் தொகுத்து வழங்க முனையும்போது, எனது எண்ண அலைகள் தமிழகத்தில் இடஒதுக்கீட்டு வரலாற்றின் பல்வேறு கட்டங்களையும், தழுவி வருகின்றன.

ஏறத்தாழ 80 ஆண்டுகளுக்கு முன்பே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்று குரல் எழுப்பப்பட்ட பின்னர், நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில், 1921-ஆம் ஆண்டில், அன்றைய தினம் அமைச்சர் பொறுப்பில் இருந்த திரு.முத்தையா முதலியார் அவர்கள் முதல் கம்யூனல் ஜி.ஓ. எனப்படும் அரசு ஆணையை 16.9.1921 அன்று பிறப்பித்தார்.

காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெரும் தளபதியாக தென்னகத்திலே அன்றைக்கு உலா வந்த தந்தை பெரியார் அவர்கள், நீதிக் கட்சி கடைப்பிடித்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் கட்சி ஏற்க வேண்டுமென்று இரண்டு, மூன்று முறை வலியுறுத்தி, அதை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால், காஞ்சிபுரத்தில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தலைமையிலே நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலிருந்து, காங்கிரஸை விட்டு வெளியேறினார்.

திரு.ஓ.பி.ராமசாமி ரெட்டியார், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலே பெரும் செல்வாக்கு மிக்க இடங்களைப் பெற்றிருந்த காலகட்டத்தில், தந்தை பெரியாருடைய கொள்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அப்படி ஏற்றுக் கொண்ட திரு.ஓ.பி.ராமசாமி ரெட்டியாரைப் பார்த்து, இவர் தாடி வைக்காத ராமசாமி என்று சிலர் கேலி

பேசுகிற அளவுக்கு, திரு.ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் பெரியாருடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைகளின் அடிப்படையை ஏற்றுக்கொண்டு பணியாற்றினர்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கான வரலாற்றில் 1951ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியவுடன், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணையைச் செயல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணையை கல்வி நிறுவனங்களில் செயல்படுத்துவதை எதிர்த்து சென்பகம் துரைராஜன் என்பவரும், அரசுப் பணிகளுக்கான நியமன விஷயத்தில் இந்த அரசாணைச் செயல்படுத்துவதை எதிர்த்து திரு. வெங்கடரமணா என்பவரும் வழக்கு தொடர்ந்தனர். இவ்விரண்டு வழக்குகளிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதால் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினையடுத்து, தமிழகமெங்கும் கிளர்ச்சிகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. போராட்டத்தை தந்தை பெரியார் தலைமையிலான திராவிடர் கழகமும், பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமும் முன்னின்று நடத்தின. இந்தக் கிளர்ச்சிகளுக்கு அன்றைய ஆளுங்கட்சியான காங்கிரசும் ஆதரவு அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட எதிர்ப்புகளின் விளைவாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் முதல்முறையாக திருத்தப்பட்டு, 15(4) எனும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டு அதன்படி, கல்வி மற்றும் சமூக நிலையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு ஏற்படுத்த வேண்டுமென்ற நடைமுறை தோன்றியது! அப்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் பண்டித நேரு அவர்கள், சென்னை மாகாணத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் என்பதை இந்த அவை நன்கு அறியும். அதனை மூடி மறைத்து, பூசி மெழுக வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறு ஆய்வு செய்யும் பிரச்சினை பலமுறை எழுப்பப்பட்டு வந்தாலும்,

முதல்முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 1969-ஆம் ஆண்டில், திரு.ஏ.என். சட்டநாதன் அவர்கள் தலைமையில் 13.11.1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காகவும், அவர்தம் நிலையை மேம்படுத்தவும் அரசு அதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராயவும், கல்வி வசதிகள், அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம், வீட்டுவசதி, மானிய உதவிகள், சமுதாய நல வளர்ச்சி ஆகிய முனைகளில் அவர்களுடைய நிலையை மேம்படுத்த மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்யவும், தமிழ்நாட்டு வரலாற்றில், முதன்முதலில் அமைக்கப்பட்ட குழு இதுதான். இக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், அதுவரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவீதம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 25 சதவீதம், பொதுப் போட்டிக்கு 59 சதவீதம், என்றிருந்த இடஒதுக்கீட்டு அளவை மாற்றியமைத்து, 7.6.1971 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதம், பொதுப் போட்டிக்கு 51 சதவீதம் என்று ஆணை வெளியிடப்பட்டது;

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு உரிய சலுகைகளைப் பெற வேண்டுமானால், அவர்களது ஆண்டு வருமானம் 9 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு இருக்கக் கூடாது என்ற உச்சவரம்பு விதித்து, 2.7.1979 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது ஆணையிட்டு, அதற்குப் பொதுமக்களிடையே எழுந்த எதிர்ப்பின் காரணமாகவும், நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அன்றைய எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு எதிராக இருந்ததாலும், வருமான உச்சவரம்பு விதிப்பதை 1.2.1980 அன்று அரசு திரும்பப் பெற்றுக் கொண்டு, அன்றைய தினமே, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பல்வேறு வகுப்புகள், கல்வி நிலையங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் தங்களுக்குரிய பங்கினை பெறமுடியவில்லையென்ற உணர்வு மேலோங்கி, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்க்கு தனி ஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கை

வலுப்பெற்று வந்ததையொட்டி, பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவீத இடஒதுக்கீட்டில், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்க்கு 20 சதவீதம் ஒதுக்கியும், மீதமுள்ள 30 சதவீதத்தை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கியும், நான் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் 28.3.1989 அன்று ஆணையிடப்பட்டது.

1990-ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பினையொட்டியும், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் மக்கள் தொகையை கருத்தில்கொண்டும் பொதுப் போட்டிக்கான ஒதுக்கீட்டிலிருந்து தனியே ஒரு விழுக்காடு பழங்குடியினருக்கும், 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டோருக்கும், 20 விழுக்காடு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும், 30 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 31 விழுக்காடு பொதுப் போட்டிக்கும் என 22.6.1990 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இது போன்ற வரலாற்று நிகழ்வுகளெல்லாம் எனது நினைவில் பளிச்சிடுகின்றன. அவற்றை உனது நினைவிற்கும், உன் மூலமாக இந்த நாட்டினர் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

அத்துடன், இட ஒதுக்கீடு என்பது மாநிலத்தில் உள்ள கல்வி நிலையங்கள், மற்றும் பணி நிலைகளில் மட்டுமின்றி, அகில இந்திய அளவிலும் வழங்கப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகவே கழகம் குரல் எழுப்பி வந்தது. அதன் தொடர்ச்சியாக 21.8.1990 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மிகுந்த மகிழ்ச்சியோடும், பெருமையோடும் நான் முன்மொழிந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை அப்படியே உனக்கு நினைவூட்டுகிறேன். அந்த நிகழ்ச்சி சமூகநீதிச் சரித்திரத்தின் மாபெரும் அத்தியாயம். நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த, மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல் சட்டத்தின் 340வது பிரிவின்படி, அமைக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று, 27 விழுக்காடு ஒதுக்கீடு செய்து, ஆகஸ்ட் 7ஆம் நாள் பாராளுமன்றத்தில் தேசிய முன்னணி அரசின் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்கள் அறிவித்ததுடன், அதனை அன்று முதலே நடைமுறைப்படுத்த ஆணையும் பிறப்பித்துள்ளதை இந்தப் பேரவை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது.

12.5.1989 அன்று இந்தப் பேரவை பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்குப் பல வேண்டுகோள்கள் விடப்பட்டன என்பதை நினைவு கூர்கிறோம். இந்திய வரலாற்றிலேயே புதியதோர் சகாப்தமாக சமூக நீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவையெடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு.வி.பி.சிங் அவர்களுக்கும் இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஒவ்வொரு முறையும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போதெல்லாம், தமிழ்நாட்டின் வாழ்வும், வளமும் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்தில்தான் அமைந்துள்ளது என்ற அடிப்படையைக் கருத்தில்கொண்டு நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து நலப்பணிகளை ஏராளமாகவும், தாராளமாகவும் ஆற்றி வருகிறோம். கழக அரசின் நிதிநிலை அறிக்கைகளிலே அறிவிக்கப்படும் திட்டப் பயன்கள் பெருமளவுக்கு நலிந்த பிரிவினரையே சென்றடைகின்றன எனினும், இதுவரை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நலத்துறை மூலம் விளைந்துள்ள நன்மைகள் இதோ!

கழக ஆட்சியில்தான் தனித் துறை

* பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியாக ஒரு இயக்குநரகம் 1969ம் ஆண்டு கழக அரசால் தொடங்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியே ஓர் அமைச்சரை நியமித்ததும், அதற்கென மானியக் கோரிக்கை ஒன்றை அறிமுகப்படுத்தியதும் 1971-ம் ஆண்டு கழக அரசில்தான். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குத் தனியே திட்டங்களையும், செயல்முறைகளையும் வகுத்தளித்திடத் தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறை 1989-ஆம் ஆண்டிலேதான் தோற்றுவிக்கப்பட்டது.

* மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான திட்டங்களைச் செயலாக்குவதில் தனிக் கவனம் செலுத்தும் பொருட்டு 1989ம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநரகம் கழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது.

உயர்ந்துள்ள நிதி ஒதுக்கீடு

* பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கான நிதி ஒதுக்கீடு, கடந்த ஆட்சிக் காலத்தில் 1995-96ல் ரூ.47.27 கோடி என்றிருந்ததற்கு மாறாக, 2000-2001ல் ரூ.175 கோடியாக, அதாவது மூன்றரை மடங்கிற்கு மேலாக உயர்த்தப்பட்டுள்ளது.

பெரியார் விருது

* பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு அரிய பணி ஆற்றியுள்ள ஒருவருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் பெரியார் விருதுக்கு 5 சவரன் தங்கப் பதக்கம் மட்டுமே என்றிருந்ததை மாற்றி 1996 மற்றும் 1997-ஆம் ஆண்டுகளில் இவ்விருது பெறுவோருக்கு ரூபாய் 20,000 ரொக்கமும், மூன்று சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு முதல் பரிசுத் தொகை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு அத்துடன் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. 1996-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த அரசில் திரு.திருவாரூர் கே.தங்கராசு, திரு.எஸ். தவமணிஇராசன், திரு.நாத்திகம் இராமசாமி, திரு.நன்னிலம் நடராசன், திரு. திருச்சி என்.செல்வேந்திரன் ஆகியோருக்குப் பெரியார் விருது வழங்கப்பட்டுள்ளது.

இலவச வீட்டுமனைகள்

* வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த கால ஆட்சியில் 1 கோடி ரூபாய் என்றிருந்ததை, 1996ல் ரூ.2 கோடியாகவும், 1997ல் ரூ.10 கோடியாகவும், 2000-2001ல் ரூ.14 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்க கடந்த ஆட்சியில் 1991 முதல் 1996வரை செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 5 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் 1996 முதல் இதுவரை நிதி ஒதுக்கீடு 46 கோடி ரூபாய்.

* இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும், முன்னேறிய வகுப்பினருக்கும் முறையே ரூ.5 கோடி செலவிலும், ரூ.3 கோடி செலவிலும் 1997ல் விரிவுபடுத்தப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

* 1996-97 முதல் 30.9.2000 வரை 55193 மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், 1997-98 முதல் 30.9.2000 வரை 35541 பிற்படுத்தப்பட்டோருக்கும், 1875 முன்னேறிய பிரிவினருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுமனை பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.12000/லிருந்து கிராமப்புறங்களில் ரூ. 16000/- ஆகவும், நகர்ப் புறங்களில் ரூ.24000/-ஆகவும் 27.11.2000 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான சலுகைகள்

* பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12000 என்று 1989-ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, பயன் பெறுவோர் எண்ணிக்கையை உயர்த்திட வேண்டும் என்னும் நோக்கத்தில் 1996ல் ரூ.25000 ஆகவும், 31.5.2000ல் ரூ.50,000 ஆகவும் உயர்த்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

* 1996க்குப் பின் இந்த நான்கரை ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்காக 137 புதிய விடுதிகள் 4 கோடி ரூபாய்ச் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த கால அ.தி.மு.க.வின் 5 ஆண்டு ஆட்சியில் இதற்காக 1 கோடியே 67 லட்சம் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.135 என்பது ரூ.180 ஆக 1997-98லும், ரூ.225 ஆக 1998-99லும் உயர்த்தப்பட்டது. கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்று 2.5.97-ல் நிர்ணயிக்கப்பட்டது, 1.10.1997ல் ரூ.300 எனவும், 1998-99ல் ரூ.400 எனவும் உயர்த்தப்பட்டது. 10ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்க்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக 1996ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. அதைப் போலவே 1999-2000 ஆண்டு முதல் 9ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கும் அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கான செலவினம் ரூ.64.48 இலட்சம். மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் அதிகமாகப் படிக்க முன்வரவேண்டும் என்பதைக் கவனத்தில்

கொண்டு, அவர்களது கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, 1999-2000 ஆண்டிலிருந்து மூன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் அறுபதாயிரம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.500 என்றும், ஆறாம் வகுப்பு படிக்கும் முப்பதாயிரம் மாணவிகளுக்கு ஆண்டுக்கு 1000 ரூபாய் என்றும் வழங்க ஆறு கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

* பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் சேர்வதற்கு குடும்ப வருமான வரம்பு ரூ.15000 என்பது ரூ.50000 ஆக 1998-99ல் உயர்த்தப்பட்டது. 2000-2001 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தொழிற் கல்வியில் சேரும் 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்க்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500/- வீதம் ஐந்தாண்டுகள் அல்லது முதல் பட்டப்படிப்பு முடியும் வரையில் சிறப்பு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

* 1998ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களின் முதல் நபருக்கு பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டயப் படிப்பில் (டிப்ளமா கோர்ஸ்) இலவசக் கல்வி வழங்கிட ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

* ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கு பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் தனிப் பயிற்சி நிலையத்தில் தங்கியுள்ள மாணவரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது ரூ.500 ஆக 1996ல் உயர்த்தப்பட்டது. 1998ல் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 50 என்பது 100 ஆகவும் உயர்த்தப்பட்டது.

* 1999-2000 முதல் சென்னையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் அகில இந்திய பணித் தேர்வுக்காக நடத்தப்பட்டு வரும் தனிப்பயிற்சி நிலையத்தையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தனிப்பயிற்சி மையத்தையும் ஒருங்கிணைத்து, அகில இந்தியப் பணிகளுக்கான பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் முடிவு செய்து அண்ணா மேலாண்மை நிலையத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

* 1999-2000 ஆண்டில் பட்டப் படிப்பு படித்த 1500 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு ரூ.59.66 இலட்சம் செலவில் சிறப்பு கணினி பயிற்சி அளிக்கப்பட்டது.

* 2000-2001ம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 5000 மாணவ, மாணவியர்களுக்கு 6 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் உயர்நிலைச் சிறப்பு கணினி பயிற்சி அளிக்க ஆணை வெளியிடப்பட்டது.

* 1998-99ம் ஆண்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பிரிவுகளைச் சேர்ந்த 2000 பேருக்கு 3 மாத பயிற்சிக் காலத்திற்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கான கட்டணத் தொகை தலா ரூ,9000லிருந்து ரூ.12200 ஆக உயர்த்தி அரசால் வழங்கப்பட்டது. இந்த பயிற்சிக் கட்டணத்தை 30.12.1999 முதல் 15500 ஆக உயர்த்தி, அதனால் ஏற்படும் ரூபாய் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் கூடுதல் செலவுத் தொகையை அரசே ஏற்பதற்கு ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

* இவை நீங்கலாக, தானியங்கி பொறியியல், குளிர்சாதன மற்றும் குளிர்பதனப் பெட்டி பழுது பார்த்தல், ஆடை தயாரிப்பு, கணினியில் ஆடை வடிவமைப்பு, பிளாஸ்டிக் செய்முறை, இயந்திரம் இயக்குதல், தோல் பொருட்கள் தயாரித்தல்,காலணி தயாரிப்பு,தையல் இயந்திரம் இயக்குதல், மருத்துவ சோதனைக்கூட தொழில் நுட்பம், செவிலியர் உதவியாளர், ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம், ஆடை உற்பத்தித் தொழில்நுட்பவியல், தட்டச்சு, சுருக்கெழுத்து, தொலைபேசி இயக்குதல் ஆகியவற்றில் 1996க்குப் பின்னர் ஆண்டு தோறும் 2477 நபர்களுக்கு 8.15 கோடி ரூபாய்ச் செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

* பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 21 மகளிருக்கு ஆண்டு தோறும் செவிலியர் உதவியாளராகப் பயிற்சி அளித்து வந்ததை உயர்த்தி 250 மகளிருக்கு பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

* 1998-99 முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் பிரிவுகளைச் சேர்ந்த 60

பெண்களுக்கு கணினி உதவியுடன் ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம் மற்றும் ஆடை உற்பத்தி தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் 11.80 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புப் பயிற்சிகளுக்கு கடந்த கால ஆட்சியில் 1991-96 வரை 1 கோடியே 24 லட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக, கழக ஆட்சியில், 1996க்குப் பின்னர் இதுவரை 27 கோடியே 15 லட்சம், அதாவது இருபது மடங்கிற்கு மேல் உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் மிகச் சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்புப் பயிற்சிகளுக்கென 2000-2001ஆம் ஆண்டில் மட்டும் நிதி ஒதுக்கீடு 20 கோடியே 38 லட்சம் ரூபாயாகும்.

இதர உதவிகள்

* கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 20,000 சலவைப் பெட்டிகளே வழங்கப்பட்டன. மாறாக இந்த நான்கரை ஆண்டுக் கால கழக ஆட்சியில், 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 32,000 சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2000-2001 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயற்கை எய்தினால் இறுதிச் சடங்கிற்கு ரூ. 500/- வழங்கப்படுகிறது.

போராட்டத்தில் பலியானோர் குடும்பத்திற்கு நிதி உதவி

* 20 விழுக்காடு இட ஒதுக்கீடு கோரி 1987ல் நிகழ்ந்த சமூக நீதிப் போராட்டத்தில் பலியான 23 தியாகிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 இலட்ச ரூபாய் நிவாரண உதவியும், அவர்களின் குடும்பத்தினருக்கு மாத ஓய்வு ஊதியமாக ரூ1500 வீதமும் அனுமதித்து 7.4.1998 அன்று ஆணையிடப்பட்டது.

பணியிடங்களில் பங்கீட்டை ஆராய உயர்நிலைக் குழு

* அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் தலைமையில் 1.6.1998 அன்று உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் வ. வேலுச்சாமி, மீ.அ. வைத்தியலிங்கம், வாசுகி முருகேசன்,

ஆர்.ஆர். சேகரன், பி. வேல்துரை, நா. பெரியசாமி, ஏ.வி. அப்துல் நாசர், இரா. தாமரைக்கனி, ஜி.கே. மணி, எல். சந்தானம், டி. மணி, ஆ. ராசேந்திரன் என்கிற தீரன், ஆ. வெங்கடாசலம், ஆகிய சட்டமன்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் செயல்பட்டார்கள். இந்த உயர்நிலைக்குழு வழங்கிய பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு, பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்னும் விதி 21.9.1999 அன்று மாற்றப்பட்டது.

* ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு முறை பின்பற்றலாம் என்று 21.9.1999 அன்றும், பணிமாறுதல் முறை மூலம் செய்யப்படும் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர் முறை (carry forward), ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளது போல், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம் என்று 2.5.2000 அன்றும், நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் உள்ள முன்கொணர் முறையை, பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம் என்று 2.5.2000 அன்றும், இட ஒதுக்கீட்டு முறையை பல்கலைக்கழகங்கள், தலைமை கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்று 28.10.1999 அன்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில், எத்தனை பணியிடங்கள் குறைகின்றதோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் 1.4.89 முதல் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்று 2.5.2000 அன்றும், எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இன சுழற்சி முறையை பின்பற்றாதவர்கள் மீது குடிமைப்பணி விதியின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடும் தண்டனை வழங்கலாம் என்று 21.9.1999 அன்றும் முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

* அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் போது, முதல் 10 இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001ல், இரண்டு இடங்களாக மாற்றி அமைக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு பத்து இடங்களிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இரண்டு இடங்கள் என்பது உறுதி செய்யப்பட்டது.

சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை

* 2000-2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்து ஆற்றிய உரையில் நான் குறிப்பிட்டபடி, மாநில அரசுப் பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இடஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன்மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை 11.5.2000ல் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பின்னடைவுப் பணியிடங்கள் என்று தெரிவிக்கப்பட்ட 5263 பணியிடங்களை ஐந்து ஆண்டு காலத்திற்குள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதோடு அதற்கான நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கள்ளர் சீரமைப்பு

* கள்ளர் சீரமைப்புத் துறையில் 20 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 7 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 உயர் நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் 1996ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் ரூ.1.62 கோடி செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 28 பள்ளிகளுக்கு 42.72 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 57 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கென 1996 முதல் இதுவரை 45.27 இலட்சம் ரூபாய் செலவில் கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 52 பள்ளிகளில் 1996 முதல் இதுவரை 40.70 இலட்சம் ரூபாய் செலவில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 36 பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் 1996 முதல் இதுவரை 49.93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன.

* ரூ.135 லட்சம் செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலும், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிக் கட்டிடங்களிலும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் 1996 முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

* இந்தக் கழகத்தின் சார்பில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 1991-96 காலகட்டத்தில் 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. ஆனால் கழக ஆட்சியில், 1996 முதல் இதுவரையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்க்குச் சிறுதொழில்கள் தொடங்கி, பொருளாதார முன்னேற்றம் காண 16 கோடியே 78 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

* தமிழகத்திலுள்ள சிறுபான்மையினர் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1.7.99 அன்று தனி அமைப்பாக உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.அபுல்ஹசன் பணியாற்றி வருகிறார். 31.10.2000 வரையில் 591 சிறுபான்மையினருக்கு 2 கோடியே 51 லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் நல ஆணையம்

* தமிழகத்தில் முதன்முதலில் சிறுபான்மையினர் நல ஆணையம், கழக ஆட்சியில் 13.2.1989 அன்று தொடங்கப்பட்டது. அதன் தலைவராக முதன் முதலில் திரு.வி.எம். அப்துல் ஜப்பார் அவர்களும், துணைத் தலைவராக பேராசிரியர் ஏ.எஸ்.எம். மரியநல்லு அவர்களும், உறுப்பினர்களாக திரு.எம். சாந்திலால் ஜெயின், திரு.கே.பி. கொட்டாரக்கரா, திரு.பி. ஓபுல் ரெட்டி, திரு.கே.எஸ். ஷெட்டி ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். 1996 செப்டம்பரில் இந்த ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டு, பேராயர் எஸ்றா சற்குணம் தலைவராகவும், திரு.சேலம் அமானுல்லாகான் துணைத் தலைவராகவும், அருள்திரு. வின்சென்ட் சின்னதுரை அமைப்பாளராகவும், சட்டமன்ற உறுப்பினர் ஹாஜி முகமது இஸ்மாயில், திரு.தமன் பிரகாஷ் மற்றும் திருமதி சரோஜா சதாசிவம்

ஆகியோர் உறுப்பினர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆணையம், சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

உருது அகாடமி

* இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்டநாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் உருது அகாடமி 15 இலட்ச ரூபாய் தொடக்க முதலீட்டுடன் அமைக்கப்பட்டு, அதனை 21.7.2000 அன்று நான் தொடங்கி வைத்தேன். இந்த அகாடமிக்கு கல்வி அமைச்சர் தலைவராகவும், டாக்டர் சையது சஃபியுல்லா துணைத் தலைவராகவும் உள்ளனர். மேலும் இந்த அகாடமி, அரசால் நியமனம் செய்யப்படும் செயலர் மற்றும் பதிவாளர், நிதித் துறைச் செயலர், உயர்கல்வித் துறைச் செயலர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலர், பேராசிரியர் டாக்டர் நிசார் அகமது, பேராசிரியர் டாக்டர் சையது சஜ்ஜத் உசைன், திரு.வி.கவிஷ் பத்ரி, டாக்டர் பர்வீன் பாத்திமா, டாக்டர் சையது ஜலாலுதீன், டாக்டர் பி.அகமது பாஷா, திரு.சபருல் ஹக் ஷக்கீர், மௌல்வி பஷீருல் ஹக், திருமதி.சபா முஸ்தபா, திரு.அப்துல் ரஷீத், திரு.ஹர்பஜன் சிங், திரு.சையது பசுல்லா, மற்றும் மூன்று ஆட்சிக் குழு நியமன உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

உலமாக்களுக்கு ஓய்வூதியம்

* கடந்த ஆட்சிக் காலத்தில் உலமாக்களின் மாத ஓய்வூதியம் ரூ.400 என்றிருந்தது, கழக ஆட்சியில் 1996-97ல் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த ஆட்சிக் காலத்தில் 2000 உலமாக்கள் ஓய்வூதியம் பெற்று வந்ததற்கு மாறாக, 1998க்குப் பின்னர் 2200 உலமாக்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 19.7.2000 முதல் உலமாக்களுக்கு வழங்கும் உலமா ஓய்வூதியத் திட்டம் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

வக்ஃபு வாரியத்திற்கு மான்யம்

* 1998-99-ஆம் ஆண்டில் மதுரை வக்ஃபு வாரிய கல்லூரிக் கட்டடங்களை பராமரிப்பதற்கென முதன் முதலாக ரூ.5.95 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. 1999-2000-ஆம்

ஆண்டில் வக்ஃபு சொத்துக்களைப் பராமரிப்பதற்கென முதல் முறையாக ரூ.40 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்தது. ஒவ்வொரு நிதியாண்டிற்கும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு நிர்வாக செலவிற்கென வழங்கப்பட்டு வந்த அரசின் மான்யத் தொகை ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.45 இலட்சமாக 2000-2001ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

ஹஜ் குழுவிற்கு மான்யம்

* ஆண்டுதோறும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வந்த நிர்வாக மான்யம் ஐந்து இலட்சம் என்பது 1998-99ஆம் ஆண்டிலிருந்து ஏழு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் புனிதப் பயணத்திற்கென 1800 பேருக்கு மிகாமல் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட முறை கைவிடப்பட்டு, 1999-ஆம் ஆண்டு முதல், மனுச்செய்யும் அனைத்து ஹஜ் புனிதப் பயணிகளும், பயணம் மேற்கொள்ள இவ்வரசு வழிவகை செய்துள்ளது.

உடன்பிறப்பே,

இப்படிக் கழக அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் வாழ்வுக்கும், வளத்துக்கும் தொடர்ந்து பணியாற்றி வருவதை நீயும் அறிவாய். நாட்டு மக்களும் நன்கறிவர். எனினும், இன்று அவர்களுக்காகப் பாடுபட ஆயத்தமாகிவிட்டோம் என்று ஒரு சிலர் ஆர்ப்பரித்துக் கிளம்பி இருப்பதை, அவர்களெல்லாம் எந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள இந்தப் புதிய வேடத்தைப் புனைந்துள்ளார்கள் என்பதை எல்லோருக்கும் எடுத்தியம்பி புரிந்து கொள்ளச் செய்திடுவாய். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் வீட்டுக்கு விளக்காகவும், நாட்டுக்குத் தொண்டனாகவும் எந்த நிலையிலும் துவண்டுவிடாமல் தொய்வின்றித் தொடர்ந்து ஊழியம் செய்து வருவது கழகம்தான் என்பதனை உறுதிபட உரைத்திடுக!

அன்புள்ள,

மு. க.

(11-12-2000)

2558. சாதனைகளுக்கிடையே நான் ஏற்கும் சபதம்!

உடன்பிறப்பே,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

என்று அய்யன் திருவள்ளுவர் வகுத்த வாக்கிற்கிணங்க தமிழகத்தில் சாதி சமய வேறுபாடுகளை அகற்றி, சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் என்னும் உணர்வுடனும், உறுதியுடனும் செயல்பட்டு வரும் இந்த அரசு சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆண்டாண்டு காலமாக விழுந்து கிடக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை முன்னேற்றுவதற்காக பல்வேறு சீரிய திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருவதையும் நீ அறிவாய். இத்திட்டங்களின் மூலம் சமுதாய, பொருளாதார, அரசியல் விடுதலைகளை ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் எய்தி முன்னேற்றம் கண்டிட வேண்டும் என்பது இந்த அரசின் அவா. இந்த அவாவின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிலையங்களிலும் இட ஒதுக்கீடுகள், ஏராளமான கல்விச் சலுகைகள், பொருளாதார மேம்பாட்டிற்கு மானியத்துடன் கூடிய பல நிதியுதவித் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலமாக கடந்த சில ஆண்டுகளாக ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் படிப்படியாக உயர்ந்து ஒருவர் பின் ஒருவராக சமுதாயத்தில் ஏற்றம் பெற்று வருவதினை இன்று நாம் கண்கூடாகக் காண முடிகிறது. மனிதநேய உணர்வுகளுக்குத் தெம்பூட்டுகின்ற இந்த வரலாற்று மாற்றங்களுக்கு, மேலும் மேலும் வழி வகுத்து வருகிற கழக அரசின் திட்டங்களால் 1996க்குப் பின் இந்தத் துறையிலே தமிழகத்தில் அடைந்துள்ள சாதனைகளை இன்றைய கடிதத்தில் நீ காணலாம்.

ஆதி திராவிடர் நலனுக்குத் தனித்துறை

* 1969 வரை ஆதிதிராவிடர் நலத்துறையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும் இணைந்து இருந்தது.

2.5.1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை எனப் புதிய துறையை தனியே உருவாக்கி - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - முழுவதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காகவே செயல்படும் நிலையை உருவாக்கிய கழக அரசு 2000 ஆண்டில் பழங்குடியினர்க்குத் தனித் துறையை உருவாக்கி, ஆதி திராவிடர் நலத்துறை, ஆதி திராவிட சமுதாய மக்களின் நலனிலும், புதிதாக உருவாக்கப்பட்ட பழங்குடியினர் நலத்துறை, பழங்குடியினர் நலனிலும் முழுக் கவனம் செலுத்த வகை செய்துள்ளது.

நிதி ஒதுக்கீடு

* ஆதி திராவிடர் நலன்களை மேம்படுத்துவதற்காக ஆண்டுக்காண்டு ஆதி திராவிடர் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரித்து, ஆதிதிராவிட சமுதாய மக்கள் பெரிதும் பயனடையக் கூடிய வகையில், பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. ஐந்து ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.696 கோடியே 16 இலட்சம் மட்டுமே. 1996க்குப் பின் கழக அரசினால் ஆதிதிராவிடர் நலனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.2,170 கோடியே 39 இலட்சம் ரூபாயாகும்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்

* சாதி, சமயப் பிணக்குகளை அகற்றி, அனைத்து சமுதாய மக்களும் நல்லிணக்கமாக ஒன்றுகூடி, சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையில், இந்திய சுதந்திரப் பொன்விழாவையொட்டி 1997ஆம் ஆண்டில் கழக அரசு உருவாக்கிய புதுமையான, புரட்சிகரமான திட்டம் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு சமத்துவபுரக் குடியிருப்பிலும், 100 வீடுகள் கட்டப்படுகின்றன. அவற்றுள் 40 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 25 வீடுகள் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 25 வீடுகள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 10 வீடுகள் இதர பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆதிதிராவிடர் வீட்டின் இருமருங்கிலும் பிற சமுதாயத்தினரின் வீடுகள் அமையுமாறு இத் திட்டத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதுவரை 88 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 21 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்குத் தயாராய் உள்ளன.

இலவச வீட்டு மனை

* 1996க்குப் பின், 61 கோடியே 61 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் இலவச வீட்டுமனை பெற்ற ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 2,89,512.

இலவச கான்கிரீட் வீடுகள்

* ஆண்டாண்டு காலமாக மண் குடிசைகளில் வாழ்ந்து வரும் ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு, இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் சீரிய முயற்சியாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் ஆதி திராவிடர் இலவச வீட்டுவசதிக் கழகம் 15.2.1974 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம்தான் இந்திரா வீட்டுவசதித் திட்டம் என மத்திய அரசால் ஏற்கப்பட்டு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி ஓட்டு வீடுகளே கட்டப்பட்டு வந்த இத்திட்டத்திற்கு 1989இல் அமைந்த கழக அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது. 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் 89,000 கான்கிரீட் வீடுகள் கழக அரசினால் கட்டப்பட்டன. முந்தைய அரசு (1991-96) 5 ஆண்டுகளில் கட்டிய தொகுப்பு வீடுகள் 1,20,700. 1996 முதல் இதுவரையில் 631 கோடியே 6 லட்ச ரூபாய் செலவில் கழக அரசு கட்டி முடித்துள்ள கான்கிரீட் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை 2,96,131.

ஜகஜீவன்ராம் பாராட்டு

* மத்திய அரசில் உணவு அமைச்சராகத் திகழ்ந்த பாபு ஜகஜீவன்ராம் அவர்கள், 1975 ஆம் ஆண்டு ஜனவரியில் செங்கற்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்தில் அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைத் திறந்து வைத்து உரையாற்றியபோது, மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறிவருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்திருப்பது அவருடைய சீரிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாடு

காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக! என்று பாராட்டியது, இன்றைக்கும் பழைய நாளேடுகளில் அப்படியே உள்ளன.

அஞ்சுகம் அம்மையார் நினைவு-
கலப்புத் திருமண உதவித் திட்டம்

* 1968ஆம் ஆண்டில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. 1974 ஆம் ஆண்டில் கலப்புத் திருமணம் செய்து கொள்வோர்க்கு ஒன்றரை சவரன் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், சிறுதொழில் தொடங்க வட்டியில்லாக் கடனும், 3 செண்ட் பரப்புள்ள வீட்டுமனையும், 200 ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கி ஊக்கம் அளிக்கப்பட்டது.

* 1976 சனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டபின், இத்திட்டத்திற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. 1989ல் கழக அரசு மீண்டும் அமைந்தபின், இந்தத் திட்டத்தின் நிதியுதவியை 5,000 ரூபாய் என நிர்ணயித்து அத்தொகையை தேசிய சேமிப்புப் பத்திரமாக தம்பதியர் இருவர் பெயரிலும் வழங்கியது. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம் என பெயர் சூட்டப்பட்ட இத்திட்டத்திற்கு நிதியுதவி 1996ல் 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு அதில் 3,000 ரூபாய் ரொக்கமாகவும், 7,000 ரூபாய் சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது. மணமக்களில் ஒருவர் ஆதி திராவிடர் எனில், 2.10.1997 முதல் இத்திட்ட நிதியுதவி 10,000 ரூபாய் என்பது 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு, 10 ஆயிரம் ரூபாய் ரொக்கமாகவும், 10 ஆயிரம் ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது. முந்தைய அரசு இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 2793 தம்பதியருக்கு 1 கோடியே 39 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கியதற்கு மாறாக, 1996க்குப் பின் இத்திட்டத்தின் மூலம் 3281 தம்பதியருக்கு 4 கோடியே 72 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இட ஒதுக்கீடு

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் இருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை 1971ஆம் ஆண்டில் 18 விழுக்காடாக உயர்த்தியது

கழக அரசு. பின்னர் 1990இல் பொது ஒதுக்கீட்டிலிருந்து ஒரு விழுக்காடு எடுத்து, பழங்குடியினருக்கு தனியே ஒரு விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியதுடன், ஆதி திராவிடர்களுக்கு மட்டும் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு முழுமையாகக் கிடைக்க வழி செய்துள்ளது கழக அரசு. கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்தவர்களில் முதல் தலைமுறைக்கு மட்டும் வழங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்குள்ள இட ஒதுக்கீடு சலுகை ஆதிதிராவிட கிறித்தவர்களின் எல்லாத் தலைமுறைக்கும் வழங்கப்பட்டது.

பின்னடைவு பணியிடங்களை நிரப்பிட சிறப்பு நியமனத் தேர்வு

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டு ஆனால், நிரப்பப்படாமல் பின்னடைவாக உள்ள பணியிடங்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென ஒரு சிறப்பு நியமனத் தேர்வு முனைப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2.1.1997 அன்று இந்த அரசினால் ஆணையிடப்பட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

காலியிடங்களை நிரப்பிட சிறப்புக் குழு

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 27.7.1989 அன்றும், பிற்படுத்தப்பட்டோர் நலன், மற்றும் சமூகநலத் துறை 21.8.1989 அன்றும் வெளியிட்ட இரண்டு ஆணைகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் ஆகிய இனத்தவர்களுக்கு நேரடி நியமனங்களில் இடஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாமல் உள்ள காலிப் பணியிடங்களை இட ஒதுக்கீட்டிலிருந்து நீக்கும் முறை கழக அரசினால் தடை செய்யப்பட்டது.

அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

* அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் ஆகியோருக்கு இடஒதுக்கீடு குறித்து ஆய்வு செய்ய ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

நலத்துறை அமைச்சர்களின் தலைமையின்கீழ் இரண்டு உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் அறிக்கைகளை அமைச்சரவை ஆய்வு செய்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

* பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கையுள்ள பணி நிலைப் பிரிவுகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என்ற விதியை மாற்றி ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்தலாம். இவ்விட ஒதுக்கீட்டு முறையை நடப்பிலுள்ள இனச்சுழற்சி அடிப்படையில் கடைப்பிடிக்கலாம். பணிமாறுதல் முறை மூலம் நியமனம் செய்யப்படும் பணி இடங்களிலும் இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படலாம். இட ஒதுக்கீட்டு முறையை பல்கலைக் கழகங்கள்/தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள்/ வங்கிகள்/மாவட்ட மத்திய கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள்/ பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம். ஒதுக்கீட்டுக்குரிய எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினரும் பணி நியமனத் தேர்வு பெறுவதற்குரிய மதிப்பெண்களைப் பெறத் தவறினால், வேறு பிரிவினரைத் தேர்வு செய்வதைத் தவிர்த்து, அடிப்படைத் தகுதிகளை அப்படியே வைத்துக் கொண்டு, அவர்கள் தேர்வு பெற ஏற்ற வகையில் தகுதிக்குரிய மதிப்பெண்கள் குறைக்கப்பட வேண்டும்.

* 1.4.1989 முதல் முன் கொணரப்பட்ட பின்னடைவுப் பணியிடங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில், எத்தனை பணியிடங்கள் குறைகின்றனவோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level Post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம். எங்கெல்லாம் இட ஒதுக்கீட்டு முறை வகை செய்யப் பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் இனச்சுழற்சி முறையைச் சரியாகக் கடைப்பிடிக்காத நியமன அதிகாரிகள் மீது தமிழ்நாடு குடிமைப் பணி விதி 17(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடும் தண்டனை வழங்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை

* 2000-2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்து ஆற்றிய

உரையில் நான் அறிவித்தவாறு வெள்ளை அறிக்கை 11.5.2000ல் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடி இன மக்களுக்கும் பின்னடைவுப் பணியிடங்களாக கண்டறியப்பட்ட 6001 பணியிடங்களும் படிப்படியாக நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதோடு, அதற்கான நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வி வளர்ச்சிக்கு கழக அரசின் உதவிகள்

* ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் 100 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 26 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 23 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன.

கணினிக் கல்வி

* 1996-97 கல்வியாண்டு முதலே ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு மொத்தம் 85 பள்ளிகளில் தற்போது கணினிக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இத்துறையின் கீழ் இயங்கும் 55 உயர்நிலைப் பள்ளிகளிலும், 63 மேல்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

* ஆதிதிராவிட நலத் துறையின் கீழ் செயல்படும் 15 மேல்நிலைப் பள்ளிகளுக்கு 78 லட்ச ரூபாய் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்களுக்கு 26 லட்ச ரூபாய் செலவில் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 49 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 2 கோடியே 6 லட்ச ரூபாய் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றிற்கு 21 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர் விடுதி கட்டடங்கள்

* 53 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 166 விடுதிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு, இதுவரை 40 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் 126 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய விடுதிகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாணவியர் விடுதிகள் அனைத்திற்கும் கட்டடம்

* 1996ஆம் ஆண்டு, மூன்றாண்டுத் திட்டம் எனும் பெயரில் திட்டமிடப்பட்டு, சொந்தக் கட்டடம் இல்லாத 82 ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகளுக்கு 30 கோடியே 45 இலட்ச ரூபாய் செலவில் மூன்றாண்டுகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மாணவ, மாணவிகளுக்கு புதிய விடுதிகள்

* 1996க்குப் பின் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கென முதன் முதலாக 5 விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. இது தவிர, பட்டப்படிப்பு வரை உள்ள மாணவர்களுக்கு 126 புதிய விடுதிகள் தொடங்கப்பட்டன.

விடுதிகளில் சேர குடும்ப வருமான வரம்பு உயர்வு

* 1997ஆம் ஆண்டில் ஆதி திராவிட மாணவர்கள் விடுதிகளில் சேர்ந்து படிக்க குடும்ப வருமான உச்ச வரம்பு 14,000 ரூபாய் என்பது 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

விடுதிகளில் உணவுக் கட்டணச் சலுகை

* ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்க ஒரு மாணவருக்கு அரசு தரும் உதவித் தொகை 138.75 ரூபாய் என்பதை, 180 ரூபாய் என 1996-97ஆம் ஆண்டில் உயர்த்தி வழங்கி, அதனை 1998-99இல் 225 ரூபாயாக மேலும் உயர்த்தி வழங்கியது கழக அரசு. கல்லூரி மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிலும் மாணவர்களுக்கும் இந்தச் சலுகை 1.10.1997 முதல் 300 ரூபாய் எனவும், 1998இல் 400 ரூபாயாகவும் கழக அரசினால் உயர்த்தப்பட்டுள்ளது.

இலவசச் சீருடைகள்

* 1996 வரை - 8ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கும் வழங்கப்பட்ட இரண்டு ஜோடி இலவசச் சீருடை 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் இருபால் மாணவ மாணவியருக்கும் விரிவுபடுத்தப்பட்டு வழங்கப்படுகிறது.

சுயநிதிக் கல்லூரிகளில் கல்விக் கட்டணச் சலுகை

* சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடாக இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ ஆதி

திராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர் குடும்பங்களின் ஆண்டு வருமானம் 50,920 ரூபாய்க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு அனுமதிக்கப்படும் கல்விக் கட்டண அளவிற்கு கல்விக் கட்டணச் சலுகை (Tuition Fees) 1999-2000 ஆண்டு முதல் அளிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் பதிவுக் கட்டணமும் சேர்க்கைக் கட்டணமும் ரத்து

* அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற் கல்லூரிகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு பதிவுக் கட்டணமும் (Registration Fees) சேர்க்கைக் கட்டணமும் (Admission Fees) கட்டுவதிலிருந்து 1999-2000 ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு முதல் தொழிற் கல்விக்கென நுழைவுத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட மாணவ மாணவியரின் விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளன.

கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கடன் உயர்வு

* கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கடன் 2000 ரூபாய் என்பது 7000 ரூபாய் வரை உயர்த்தி 19.2.1997 அன்று கழக அரசினால் ஆணையிடப்பட்டது.

பழங்குடி மாணவர்களுக்கு உண்டி-உறைவிடப் பள்ளிகள்

1996க்குப் பின் பழங்குடியின மாணவ மாணவியருக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் 19 உண்டி-உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்குச் சிறப்புத் திட்டம்

* 1997ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கென உரிய ஒதுக்கீடான 18 விழுக்காடு இடங்களில் நியமனம் செய்திட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர் இல்லாமையால் ஆதிதிராவிடர்க்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியளிக்க 5 கோடியே 8 இலட்ச ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. 17 அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில், ஒவ்வொன்றிலும் 50

ஆதி திராவிடர்களைக் கொண்ட தனிப்பிரிவு தொடங்கப்பட்டு - ஆண்டுதோறும் 850 ஆதி திராவிட இளைஞர்களுக்குக் கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களாகத் தேர்வு பெற தனிச் சலுகை

* 1998இல் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வில் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் கூடுதலாகத் தேர்வு பெறத்தக்க வகையில், ஆசிரியர் தேர்வு வாரிய நேர்காணலில் அவர்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண் 15 என்பது 7 ஆகக் குறைக்கப்பட்டது.

மேல்நிலைத் தேர்வில் முதல் இடம் பரிசுத் தொகை ரூ.25,000/-

* மேல்நிலைப் பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெறும் ஆதிதிராவிட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் 5 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கும் திட்டம் 1989-90ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பரிசுத் தொகை 25 ஆயிரம் ரூபாய் என 11.5.1998 அன்று உயர்த்தப்பட்டதுடன், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறித்தவ ஆதிதிராவிடர் ஆகிய 3 பிரிவுகளில் 1 மாணவர், 1 மாணவி என மொத்தம் 6 பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் பரிசு வழங்கி ஊக்கம் அளிக்கப்படுகிறது.

10 ஆம் வகுப்பில் முதலிடம் ரூ.10,000/- பரிசுத் தொகை

* 10 ஆம் வகுப்புத் தேர்வில் மாநில முதன்மை பெறும் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர், ஒரு மாணவி என இருவர்க்கு மட்டும் 1989-90 ஆம் ஆண்டில் 3 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில், ஆதிதிராவிட, பழங்குடியின, மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட வகுப்புகள் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவ - மாணவியர் என மொத்தம் 6 பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் பரிசுத் தொகை வழங்க 11.5.1998 அன்று ஆணையிடப்பட்டு வழங்கப்படுகிறது.

மாநில முதன்மை பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரிசுத் தொகை

* அத்துடன் 10, 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில், ஒவ்வொரு பாடத்திலும், மாநில அளவில் முதன்மை பெறும் ஆதிதிராவிட

வகுப்பு மாணவ மாணவியர்க்கு ஊக்கம் அளித்திடக் கருதி, 10 ஆம் வகுப்பு மாணவ - மாணவியர்க்கு 1000 ரூபாய் வீதமும், 12 ஆம் வகுப்பு மாணவ - மாணவியர்க்கு 2000 ரூபாய் வீதமும் பரிசுகள் வழங்கிட 11.5.1998 அன்று ஆணையிட்டுச் செயல்படுத்துகிறது கழக அரசு.

பட்டப் படிப்புகளில் உயர்மதிப்பெண் பெறுவோருக்கு பரிசுத் தொகை உயர்வு

* இளங்கலை, முதுகலை, தொழிற்கல்வி பட்டப் படிப்புகளில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை முறையே 1000 ரூபாய் என்பது 2000 ரூபாயாகவும், 1250 ரூபாய் என்பது 4000 ரூபாயாகவும், 1500 ரூபாய் என்பது 5000 ரூபாயாகவும், 1997-98ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

சுவாமி சகஜானந்தா கலையரங்கம் சீரமைப்பு

* ஆதிதிராவிட மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்ட சுவாமி சகஜானந்தாவின் நூற்றாண்டு விழா 1990ஆம் ஆண்டில் கழக அரசு சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது மாத்திரமல்லாமல், அதையொட்டி சிதம்பரம் நந்தனார் பள்ளி விடுதி வளாகத்தில், 15 இலட்ச ரூபாய் செலவில் சுவாமி சகஜானந்தா பெயரில் சமூகக் கலையரங்கம் கட்டப்பட்டது. முன்பிருந்த அரசினால் உதாசீனப்படுத்தப்பட்ட இக் கலையரங்கம் 1997-98 ஆம் ஆண்டில் 10 லட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டது. தற்போது மீண்டும் 1997-98ஆம் ஆண்டில், சிதம்பரத்திலுள்ள சுவாமி சகஜானந்தா அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 22லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டடம் கட்டப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான புதிய விடுதி 37 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

தியாகி கக்கன் சிலை - நினைவு மண்டபம்

* மதுரையில் தியாகி கக்கன் சிலையை இந்த அரசின் சார்பில் 31-8-1997 அன்று நான் திறந்து வைத்ததோடு, தும்பைப்பட்டியில் தியாகி கக்கன் அவர்களுக்கு, 25 லட்ச ரூபாய் செலவில் நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு வரும் 28.12.2000 அன்று திறந்து வைக்கவுள்ளேன்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம்

* ஆதிதிராவிடர்களில் தொழில் முனைவோரை உருவாக்கும் சிறப்புத் திட்டம் 1989ல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டம் ஆதிதிராவிடர்களிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்காக ஆதிதிராவிடர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் ஒவ்வொருவருக்கும் உயரளவு மானியமாக 25,000 ரூபாயும், உயரளவு விளிம்புத் தொகையாக 1,25,000 ரூபாயும் எஞ்சிய தொகை வங்கிகளின் மூலமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1996க்குப் பின் இதுவரையில் 9,412 பயனாளிகளுக்கு 33 கோடியே 75 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும் பல்வேறு உதவித் திட்டங்களில் ஒன்றாக இரண்டு காளை மாடுகளுடன் டயர் வண்டி வாங்கிட 1996க்குப் பின் இதுவரையில் 6912 விவசாயிகளுக்கு 6 கோடியே 74 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 50 விழுக்காடு மானியத்தில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு ஒரு இணை உழவு மாடுகள் வாங்கிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப் பின் இதுவரையில் 4771 பயனாளிகளுக்கு 3 கோடியே 12லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 50 விழுக்காடு மானியத்தில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வடிமுனை ஊற்றுக் கிணறுகள் தோண்டுதல், பம்ப் செட்டுகளுக்கான டீசல் மோட்டார், மின்சார மோட்டார் ஆகியவைகளுக்கு உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப் பின் இதுவரையில் 1628 பயனாளிகளுக்கு 1 கோடியே 9 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு சுயதொழில் பயிற்சித் திட்டம்

* சிறுதொழில்களுக்கான பயிற்சிகளை வழங்கி ஆதிதிராவிடர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டத்தின் கீழ், 1996க்குப் பின் இதுவரையில் 9223 ஆதி திராவிட இளைஞர்களுக்கு 95 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் சிறுதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கோவில்களில் இலவசத் திருமணம்

* 1997ஆம் ஆண்டில் வசதியற்ற ஆதி திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் திருமணத்திற்காக திருக்கோவில்களின் நிதியிலிருந்து 3000 ரூபாய் வரை செலவு செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், இதுவரை 2075 ஆதிதிராவிடர்களுக்கு திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன.

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகள்

* 1997ஆம் ஆண்டு மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடும், தமிழகமெங்கும் மனிதச் சங்கிலி, சமபந்தி விருந்து போன்றவை நடத்தப்பட்டு, தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வு வளர்க்கப்பட்டது. 1999ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் மனிதாபிமான உணர்வோடு வாழ்வதற்கு தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பிரச்சார இயக்கங்களும், விளம்பரப் பணிகளும் ஒரு கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டன. சாதிகள் இல்லையடி பாப்பா என்ற கருத்து விளக்கப்படம் தயாரித்து வெளியிடப்பட்டது. சமூக வேற்றுமைகளைக் களைந்திடும் நோக்குடன், கல்லூரி, பள்ளிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வாரந்தோறும், திங்கட்கிழமையன்று பள்ளிகளில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

இரட்டைக் குவளை முறை ஒழிப்பு

* தேநீர்க் கடைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தேநீர் வழங்க தனிக் குவளைகள் பயன்படுத்தும் முறை பெரும்பாலும் மாற்றப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வன்கொடுமைத் தடுப்பு நடவடிக்கைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுத்து, அவர்களைக் காப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள என்னுடைய தலைமையில் மக்களவை உறுப்பினர் ஒருவர், சட்டமன்ற உறுப்பினர்கள்,

அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு 9.10.1996 அன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதுடன், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை 4 கோடியே 98 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

* தீண்டாமைக் கொடுமையை வேரறுக்கவும், ஆதி திராவிடர், பழங்குடியினர் மீது நடத்தப்படும் வன்கொடுமைகளைத் தடுக்கவும் 1989 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை செம்மையாக நடைமுறைப்படுத்திட உதவும் வகையில் நெல்லை, மதுரை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஆகிய 4 இடங்களில் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் 12.11.1997 அன்று நிறுவப்பட்டன.

துப்புரவுப் பணியாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம்

* கழக அரசு கடைப்பிடிக்கும் மனித நேயக் கொள்கையின் அடிப்படையில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றவும், சுமக்கவுமான இழிநிலை தனிச் சட்டத்தின் மூலம் அகற்றப்பட்டுள்ளது. இத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு, சுயதொழில் வசதி போன்ற மறு வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் இதுவரை 19,505 துப்புரவுப் பணியாளர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கு 20 கோடியே 43 லட்ச ரூபாய் மானியமாகவும், விளிம்புத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

கொத்தடிமைகள் ஒழிப்பு

* கொத்தடிமை ஒழிப்பில் இந்நாட்டிற்கே தமிழகம் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. இம்மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் உச்சநீதிமன்றத்தால் பாராட்டப்பட்டு, பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்கள் கண்டறிந்துள்ள 25,008 கொத்தடிமைகளை விடுவித்து, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முந்தைய அரசு காலத்தில் 1340 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 1996க்குப் பின் 2000 மார்ச் வரை 8120 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வீரன் சுந்தரலிங்கம் நகர்

* 1998ஆம் ஆண்டு கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக விளங்கிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு, பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகிலுள்ள கவர்னகிரியில் குடிநீர், சாலை வசதிகள், மின்விளக்கு, பள்ளிக்கூடம் முதலிய அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் 200 வீடுகளைக் கட்டிக் கொடுத்து, வீரன் சுந்தரலிங்கம் நகர் என்ற பெயரில் அழகிய நகரை உருவாக்கி, அதனை 18.4.98 அன்று நான் திறந்து வைத்தேன்.

அம்பேத்கரைப் போற்றும் கழக அரசு

* 1972ஆம் ஆண்டில் வியாசர்பாடியில் அம்பேத்கர் பெயரில் புதிய கலைக்கல்லூரி, அதே ஆண்டில் மயிலாப்பூர் ஹாமில்டன் பாலத்திற்கு டாக்டர் அம்பேத்கர் பெயர். 1989ஆம் ஆண்டில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்திலுள்ள மரத்துவாடா பல்கலைக் கழகத்திற்கு மரத்துவாடா அம்பேத்கர் பல்கலைக் கழகம் எனப் பெயரிட வேண்டும் என அங்கு ஆசிரியர்களும், மாணவர்களும் போராடியபொழுது, எனது வேண்டுகோளின் பேரில், தமிழகத்திலிருந்து மராட்டிய மாநில ஆளுநருக்குத் தந்திகள் அனுப்பப்பட்டு, மரத்துவாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்டிட வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மராட்டிய மாநிலத்தில் மரத்துவாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர். 1990ஆம் ஆண்டு கழக அரசின் ஆணையினால் அம்பேத்கர் நூற்றாண்டு விழா. அதனையொட்டி சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர். 20.9.1997 அன்று டாக்டர் அம்பேத்கர் பெயரில் சென்னையில் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக் கழகம். 1997ல் ஆங்கிலத்தில் எடுக்கப்படும் அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு திரைப்படத்தைத் தமிழாக்கம் செய்து வெளியிடுவோர்க்கு ரூபாய் 10 இலட்சம் பரிசு வழங்கப்படும் என அறிவிப்பு. (ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு திரையிடப்படும் நிலையில் உள்ள அம்பேத்கர் படம், தற்போது தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. மொழிமாற்றம் செய்யும் பணி முடிவடைந்ததும் இப்பரிசு வழங்கப்படும்.)

1997ஆம் ஆண்டில் அம்பேத்கர் பெயரில் சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தில் 25 இலட்ச ரூபாய் முதலீட்டில் கல்வி

அறக்கட்டளை என்று அம்பேத்கர் பெயர் நிலைக்க இத்தனை சாதனைகளையும் குவித்த கழக அரசு, 4 கோடி ரூபாய் செலவில் 55 அடி விட்டத்துடன் கூடிய அரைக் கோள வடிவத்தில் அம்பேத்கர் மணிமண்டபத்தை சென்னையில் கட்டி முடித்து 10.6.2000 அன்று திறந்து வைத்துள்ளது. இவை தவிர, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அம்பேத்கர் பெயரில் விருது வழங்கி ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கும் திட்டம் 1998ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய மனித உரிமைக் கட்சியின் தலைவர் திரு எல்.இளையபெருமாள் அவர்களுக்கு 1998ஆம் ஆண்டிலும், திருமதி வண்ணை மு.தேவகி அவர்களுக்கு 1999ஆம் ஆண்டிலும், அம்பேத்கர் விருது வழங்கப்பட்டுள்ளது. 2000 ஆண்டிற்குரிய அம்பேத்கர் விருது முன்னாள் அமைச்சர் திரு.என். இராஜாங்கம் அவர்களுக்கு 24.12.2000 அன்று வழங்கப்பட உள்ளது. உடன்பிறப்பே, "விவேகமெனும் வெள்ளி முளைத்து,

சாதி மதப் பித்து எனும் சனி தொலைந்தால்தான்
சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்

என நான் அடிக்கடி கூறி வருவது வெறும் அலங்கார அடுக்குத் தொடர் அல்ல என்பதையும், இந்தக் கருத்தை நான் என் குடும்ப வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறவன் என்பதையும் நீ உணர்வாய். அந்த உறுதி தளராமல், எவர் நன்றி பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் அதுபற்றிக் கவலை கொள்ளாமல், சமதர்ம சமத்துவ சமுதாயக் கொள்கை பூத்துக் குலுங்கிட தனிப்பட்ட முறையிலும், அரசின் சார்பிலும் அனைத்துப் பணிகளையும் தொடர்ந்து ஆற்றிடுவேன் என்பதே இந்தச் சாதனைகளுக்கிடையே நான் ஏற்கும் சபதமாகும்.

அன்புள்ள,

மு. க.

(12-12-2000)

2559. கடமை ஆற்றிட ஊக்கம்; கழக அரசு தரும் ஆக்கம்!

உடன்பிறப்பே,

சட்டம் ஒழுங்கைப் பேணிக்காப்பதிலும், சமுதாய நல்லிணக்கம் மற்றும் நல்லுறவு போற்றி நலிந்த பிரிவினர், மகளிர் ஆகியோரின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், தமிழகக் காவல்துறை தொடர்ந்து பெரும் பங்காற்றி வருகிறது. இப்பணிக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றி வரும் காவல்துறை பணியாளர்களுக்கு இந்த அரசு நிறைவேற்றிய நலத்திட்டங்களும், அளித்துள்ள சலுகைகளும் எண்ணிலடங்கா. அரசு அலுவலர் நலன், ஆசிரியர் நலன்களுக்காக இந்த அரசு ஆற்றிய பணிகளைத் தொகுத்துச் சொன்ன நான் காவலர்களுக்குச் செய்துள்ள சலுகைகளையும் இந்தக் கடிதத்திலே தொகுத்துள்ளேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக காவல் துறைக்காக ஒரு கமிஷன்

* காவல்துறையினரின் சங்கடங்களை எதிர்க்கட்சியாக இருந்தபோது எடுத்துக் கூறிய நான் 1969 ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன், ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் இந்தியாவிலேயே முதல் முறையாக, காவல் துறையினருடைய நிலைமைகளை ஆராய்ந்து பரிந்துரைக்க ஒரு கமிஷனை அமைத்தேன். அந்த கமிஷன் 133 பரிந்துரைகளை வழங்கியது. அவைகளில் 115 பரிந்துரைகள் உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இரண்டாவது போலீஸ் கமிஷன்

* 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக கழக அரசு அமைந்தபோது, முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் இரண்டாவது

போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு அவர்கள் தந்த 112 பரிந்துரைகளில் 102 பரிந்துரைகள் மீது முடிவெடுத்து, ஆட்சி அப்போது கலைக்கப்படுவதற்கு முன்பு, 79 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

* 1991-92ஆம் ஆண்டு முதல் 1995-96ஆம் ஆண்டு வரைக்கான முந்தைய ஐந்தாண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காவல் துறைக்காகச் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு 1716 கோடி ரூபாயாகும். 1996-97ஆம் ஆண்டு முதல் 2000-2001ஆம் ஆண்டு வரைக்கான இந்த ஆட்சிக் காலத்தில் காவல் துறைக்காகச் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு 3,988 கோடி ரூபாயாகும். அதாவது இரண்டு மடங்கிற்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* கடந்த கால ஆட்சியில் தேவையில்லாமல் கடற்கரையிலே உள்ள வரலாற்றுப் புகழ் கொண்ட டி.ஜி.பி. அலுவலகத்தை இடிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையை இந்த அரசு ரத்து செய்து, மீண்டும் அதே இடத்தில் டி.ஜி.பி. அலுவலகம் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய்ச் செலவில் சீரமைக்கப்பட்டு; தற்போது அதே இடத்தில் செயல்பட்டு வருகிறது.

* பணிக்காலத்தில் வீர தீரச் செயல்களினால் மரணமடையும் காவலர் குடும்பங்களுக்குக் கருணைத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று 3-6-1997இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* மேலும் காப்பீட்டுத் திட்டத்தின்படி ரூபாய் ஒரு இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும்.

* இது தவிர தமிழ்நாடு குடும்பப் பாதுகாப்பு நல நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

* வீர தீரச் செயல்களில் ஈடுபட்டுச் செயல்பட முடியாத அளவிற்கு நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 20 ஆயிரம் ரூபாய் என்பது 50 ஆயிரம் ரூபாயாகவும், படுகாயம் அடைந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி 3-6-1997இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* பணிக்காலத்தில் வீர தீரச் செயல்புரிந்து அகால மரணமடைந்த காவல் துறையைச் சார்ந்தவர்களின் வீட்டுப் பிள்ளைக்கென மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை ஆகிய படிப்புகளில் சேர, தலா மூன்று இடங்களும் சட்டப் படிப்புக்கென இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

காவல் பணியாளரின் ஊதியம் உயர்வு

* 1996ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கேற்ப காவலர்களின் ஊதியம் ரூ. 2750-70-3800 என முதலில் நிர்ணயிக்கப்பட்டது.

* பின், மத்திய அரசு காவலர்களின் ஊதியம் ரூபாய் 3050-75-3950-80-4590 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தமையால் தமிழக காவலர்களின் ஊதியத்தையும் ரூபாய் 3050-75-3950-80-4590 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. மத்திய அரசில் ஒரே நிலை காவலர்கள்தான் உள்ளனர்.

* தமிழக காவல் துறையில் இரண்டாம் நிலை, முதல்நிலை என இரண்டு நிலைக் காவலர்கள் உள்ளனர். தமிழக காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர்களுக்கு மத்திய அரசு காவலர்களுக்கு வழங்கும் சம்பளமான ரூ. 3050-75-3950-80-4590-ஐ தற்பொழுது தமிழக அரசு வழங்கியுள்ளது.

* முதல்நிலைக் காவலர்களுக்கு ஊதிய விகிதம் ரூ. 3200-85-4900 என்றும் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. மத்திய அரசு காவலர்களுக்கு இணையாக இரண்டாம் நிலைக் காவலர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்கியது தமிழக வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

* முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் இரண்டாம் நிலைக் காவலர்களின் ஊதியவிகிதம் 825-15-900-20-1200 என்றும் முதல் நிலைக் காவலர்களின் ஊதியவிகிதம் 950-20-1150-25-1500 என்றும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

* 1.1.96க்கு முன்பு தலைமைக்காவலர்களுக்கு ரூ.1200-30-1560-40-2040 என்றிருந்த ஊதிய விகிதம் தற்போது ரூ.4000-100-6000 என வழங்கப்படுகிறது.

* 1.1.96க்கு முன்பு உதவி ஆய்வாளர்களுக்கு ரூ. 1600-50-2300-60-2660 என்றிருந்ததை ரூ.5300-150-8300 எனவும், ஆய்வாளர்களுக்கு ரூ. 2000-60-2300-75-3200

என்றிருந்ததை தற்போது ரூ. 6500-200-10500 எனவும், துணை கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 2200-75-2800-100-4000 என்றிருந்ததை தற்போது ரூ. 8000-275-13500 எனவும், கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 3000-100-3500-125-4500 என்றிருந்த ஊதியத்தை தற்போது ரூ. 10000-325-15200 எனவும், கண்காணிப்பாளர்களுக்கு 1.1.96க்கு முன்பு இருந்த ஊதியமான ரூ. 3700-125-4700-150-5000த்தை தற்போது ரூ. 12000-375-16500 எனவும் மாற்றி வழங்கியுள்ளோம்.

சிறப்புப்படி (Good Service Special Pay)

* 1996-ல் கழக அரசு அறிமுகப்படுத்திய சிறப்புத் திட்டத்தின்படி காவல்துறையில் களங்கமின்றி நற்பணியாற்றும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு - 15 ஆண்டுகள் நற்பணி புரிந்தவர்களுக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ஐந்து ரூபாயை பதினைந்து ரூபாயாகவும், 20 ஆண்டுகள் நற்பணி புரிந்தவர்களுக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 7.50ஐ ரூ. 20 ஆகவும், 25 ஆண்டுகள் நற்பணி புரிந்தவர்களுக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 10ஐ ரூ. 25 ஆகவும், 30 ஆண்டுகள் நற்பணியாற்றியோருக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 15ஐ தற்போது ரூ. 30 ஆகவும், 35 ஆண்டுகள் நற்பணி புரிந்தோருக்கு 1996 முதல் வழங்கப்பட்டு வந்த ரூ. 20ஐ தற்போது ரூ.40 ஆகவும் உயர்த்தி மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

ஓட்டுநர்களுக்கான சிறப்புப் படி

* ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப்படி, 1996- க்கு முன்பு வரை மாதம் ஒன்றுக்கு ரூ.40/- என இருந்தது. தற்போது ரூ.120/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

செயல்திறமைக்கான படி (Proficiency Pay)

* தலைமைக் காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5/- எனவும், காவலர்களுக்கு ரூ.3/- எனவும் வழங்கப்பட்டு வந்த செயல்திறமைப்படி, தலைமைக் காவலர்களுக்கு ரூ.15/- எனவும், காவலர்களுக்கு ரூ.10/- எனவும் 1.10.96 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சீருடைப்படி

* தற்போது காவல் பணியாளர்களில் காவல்துறை கண்காணிப்பாளர்கள் (இந்திய காவல் பணி அல்லாத)

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு ரூ. 40/- லிருந்து ரூ. 60 ஆகவும், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு ரூ. 25லிருந்து ரூ. 50 ஆகவும், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர் ஆகியோருக்கு ரூ. 25லிருந்து ரூ. 40 ஆகவும் மேம்படுத்தப் பட்ட மாதாந்திர சீருடைப்படி வழங்கப்படுகிறது.

இடர்ப்படி (Risk Allowance)

* 1996-ல் காவலர் முதல் ஆய்வாளர் வரை வழங்கப்பட்ட இடர்ப்படி மாதம் ரூ.20/- என்பது தற்போது ரூ.60/- ஆகவும், கூடுதல் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், உதவி தளவாய், துணைத் தளவாய் ஆகியோருக்கு வழங்கப்பட்ட இடர்ப்படி ரூ.60/- என்பது ரூ.70/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

சிறப்பு இடர்ப்படி (Special Risk Allowance)

* 1996 வரையில் சிறப்புப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் காவலர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட சிறப்பு இடர்ப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- ஆக இருந்தது. 1998 முதல் அது ரூ.1500/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மலைவாழ் படி

* மலைவாழ் இடம் என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் பணிபுரியும் காவலர்கள், தங்கள் ஊதியத்தில், 20 சதவிகிதத்தை மலைவாழ் படியாகப் பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். இதன்படி, 1996 வரை அதிகபட்சமாக ரூபாய் 300 வழங்கப்பட்டது. தற்போது 1-9-98 முதல் ரூ.450/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

காவல் இசைக் குழுவினருக்குச் சிறப்பூதியம்

* மாநில காவல் இசைக்குழுவில் சேமப்படை ஆய்வாளர் மற்றும் இசைக்குழு நடத்துநர்களுக்கு (Band Master) 1996ல் வழங்கப்பட்ட சிறப்பூதியமான ரூ.50ஐ 1998ல் ரூபாய் 150 ஆகவும், உதவி சேமப்படை ஆய்வாளர் மற்றும் இசைக்குழு உதவி நடத்துநர்களுக்கு (Assistant Band Master) 1996ல் வழங்கப்பட்ட ரூ. 25ஐ தற்போது ரூ. 113 ஆகவும், தலைமைக் காவலர்களுக்கு ரூ. 15 லிருந்து 1998 முதல் ரூ. 90 ஆகவும், காவலர் நிலை 1 மற்றும் நிலை 2 ஆகியோருக்கு இந்தச் சிறப்பூதியம் 1996லிருந்த ரூ. 10ஐ 1998ல் ரூ. 60 ஆகவும் மாற்றி வழங்கப்படுகிறது. இதே

சிறப்பூதியம் ஆவடி படைக்கல மையக் குழுவிலுள்ள உதவி ஆய்வாளர்களுக்கு (பேண்ட்) 1996ல் ரூ. 25 ஆக இருந்ததை 1998ல் ரூ. 113 ஆகவும், அவில்தார்களுக்கு(பேண்ட்) ரூ. 10 என இருந்ததை 1998ல் ரூ. 75 ஆகவும், நாயக் மற்றும் லான்ஸ் நாயக் ஆகியோருக்கு 1996லிருந்த ரூ. 10ஐ 1998லிருந்து ரூ.60 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

உணவுக் கட்டணத் தொகை

* காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 1997ல் உணவுக் கட்டணத் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ. 30ஐ இந்த ஆண்டு 55 ரூபாய் எனவும், தலைமைக் காவலர், முதல் நிலைக் காவலர்களுக்கு 20 ரூபாய் என இருந்ததை தற்போது 50 ரூபாய் ஆகவும், இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 16 ரூபாய் என இருந்ததை தற்போது 45 ரூபாய் ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

உணவு முன்பணம் (Mess Advance)

* தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கு உணவுக்கான நிரந்தர முன்பணத்தினை (Mess Advance) ஒரே சீராக ரூ.5000/-லிருந்து ரூ.25,000/-ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* பயணப்படி (Travelling Allowance) 1989-ல் பயணப்படி உச்ச வரம்பு 40 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த உச்ச வரம்பினைத் தமிழ்நாடு சிறப்புக்காவல் படை குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகளிலுள்ளோருக்கு 40 விழுக்காட்டிலிருந்து 45 விழுக்காடாக உயர்த்தியும், மாவட்டங்கள் மற்றும் ஆயுதப்படை (நகரம்)யினருக்கு உச்சவரம்பு 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகவும், ஒன்று அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பயணம் மேற்கொள்ளும்போது தரவேண்டிய பயணப்படியின் உச்ச வரம்பு 45 சதவிகிதத்திலிருந்து 53 1/3 சதவிகிதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

வாகன முன்பணம் (Vehicle Advance)

* 1996 ஆம் ஆண்டில், அலுவலர்கள் வாகனங்களைச் சொந்தமாக வாங்குவதற்கான வாகன முன்பணத்தொகை உயர்த்தப்பட்டது. சைக்கிள் வாங்க 1000 ரூபாயை 1500

ரூபாயாகவும், மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் புதியது வாங்க ரூபாய் 25000த்திலிருந்து ரூபாய் 35000 ஆகவும், பழைய ஸ்கூட்டர்/மோட்டார் சைக்கிள் வாங்க 1996லிருந்த ரூபாய் 8000த்தை ரூபாய் 12000 எனவும், மோட்டார் கார் புதிதாக வாங்க ரூபாய் 1,40,000 என இருந்ததை ரூபாய் 2,00,000 ஆக உயர்த்தியும், பழைய கார் வாங்க ரூபாய் 60,000த்திலிருந்து ரூபாய் 90,000 எனவும், மொப்பட் வாங்க ரூபாய் 5000 என்பதை ரூபாய் 12000 எனவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

அண்ணா பதக்கம் -
தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்

* 1969-ம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு முதல்வரின் காவல் பதக்கம், பாராட்டத்தக்க வகையில் பணியின்பால் ஈடுபாடு கொண்ட காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு வரை ஆண்டுக்கு 65 பேர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த விருது இந்த ஆண்டு முதல் 100 பேருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் - அண்ணா பதக்கம் பெறுகின்ற 40 காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் 1,500 ரூபாயிலிருந்து 2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 45 உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 15 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் 4000 ரூபாய் என்பது 5,000 ரூபாய் என வழங்கப்பட்டுள்ளது.

* இவை தவிர, இந்தப் பதக்கங்களைப் பெறுவோருக்கு மாதாந்திரப்படி காவலர்களுக்கு 20 ரூபாய் என்றிருந்ததை 40 ரூபாயாகவும், தலைமைக் காவலர்களுக்கு 25 ரூபாயிலிருந்து 50 ரூபாயாகவும் வழங்கிட 2-6-1997 அன்று ஆணையிடப்பட்டது.

உத்தமர் காந்தி பதக்கம்

* கள்ளச்சாராயத்தை மிகச் சீரியமுறையில் தடுத்துச் சாதனை புரியும் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 1996-ம் ஆண்டு முதல் உத்தமர் காந்தி பதக்கமும் 10,000

ரூபாய் பணமுடிப்பும் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும், 8 காவல் ஆய்வாளர்களுக்கும், 4 உதவி ஆய்வாளர்களுக்கும் பதக்கங்களும், பண முடிப்பும் வழங்கப்பட்டுள்ளன.

பணி நியமனம்

* 1989-ல் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படாத காவலர்களில் தகுதியுடைய 1024 நபர்களுக்கு 1997-ல் நியமனம் வழங்கப்பட்டது. முந்தைய ஆட்சிக் காலத்தில் 1992-93-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆனால் பணி நியமனம் செய்யப்படாத 329 காவலர்கள், கழக அரசால் பணி நியமனம் செய்யப்பட்டு, 15-5-2000 முதல் காவலர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

* அதே போன்று கடந்த ஆட்சியில் காவலர்களாகத் தேர்வு செய்யப்பட்டு பட்டியல் வெளியிடப்படாமல் இருந்த 10,000 காவலர்களில், 1997-ம் ஆண்டு 5801 ஆண் காவலர்களும், 3052 பெண் காவலர்களும் தற்போதைய ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

* 1998-ல் 3671 பேர் காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சிக்குப் பிறகு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர். நடப்பு ஆண்டில் 4000 பேர் தேர்வு செய்யப்படுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு இறுதிக்கட்டமான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட உள்ளனர். 1000 பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 584 பெண் காவலர்கள் 27.11.2000 முதல் பயிற்சியில் உள்ளனர். மீதமுள்ள 416 பேர் அடுத்த கட்டமாகப் பயிற்சிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

* 2000-2001 ஆம் ஆண்டில் 3500 ஆண் காவலர்கள் பணி நியமனம் செய்யப்படுவதற்காக விண்ணப்பங்கள் வரப்பெற்று பரிசீலனையில் உள்ளன. அவர்களும் விரைவில் உடல் திறன் தேர்வுக்கு அழைக்கப்பட உள்ளனர்.

* உதவி ஆய்வாளர்களைப் பொறுத்தமட்டில், இந்த அரசு பதவி ஏற்றபின் 1994-95 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியினரால் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்படாத 600 உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்- தலைமைக் காவலர் பிரிவில் உள்ள

பட்டதாரிகளுக்குள் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் 267 பேர் சேர்த்து மொத்தம் 867 பேருக்கு 2.6.97 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு உதவி ஆய்வாளர்களாகப்பணி அமர்த்தப்பட்டனர். இதேபோன்று 1994-95 ஆம் ஆண்டு தேர்வு பெற்று, பணி நியமனம் பெறாத 114 உதவி ஆய்வாளர்கள் 22.5.2000-ல் பணி நியமனம் செய்யப்பட்டுப் பயிற்சியில் உள்ளனர்.

* 1997-98ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 881 உதவி ஆய்வாளர்களில், 524 பேர் பயிற்சிக்குப் பின் 1999-ல் காவல் நிலையங்களில் பணியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 357 பேர் 22.5.2000 முதல் பணி நியமனம் பெற்று பயிற்சியிலுள்ளனர். இந்த 881 பேரில், 657 பேர் ஆண்; 224 பேர் பெண் ஆவர்.

பதவி உயர்வுகள்

* 10 ஆண்டுகள் பிழையின்றிப் பணிமுடித்த இரண்டாம் நிலைக் காவலர்கள் 18,100 பேர் முதல் நிலைக் காவலர்களாக கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் மட்டும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். மேலும், பத்தாண்டுகள் இரண்டாம் நிலைக் காவலர்களாகவும், ஐந்தாண்டுகள் முதல்நிலைக் காவலர்களாகவும் பணிமுடித்த தகுதி பெற்ற 22,400 முதல் நிலைக் காவலர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

* 25 ஆண்டுகள் மொத்த பணிக்காலம் முடித்து அதில் தலைமைக் காவலர்களாகப் பத்து ஆண்டுகள் முடித்தவர்கள் பதவி உயர்வு பெறுவதற்காக **சிறப்பு உதவி ஆய்வாளர்** என்ற பதவி உருவாக்கப்பட்டு 1998 மற்றும் 1999 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் 1920 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இதே போன்று, 400 முதல் நிலைப் பெண் காவலர்கள் தலைமைக் காவலர்களாக அக்டோபர், 96-ல் பதவி உயர்வு பெற்றனர்.

சிறப்பு நலத் திட்டங்கள்

* அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் ஒருவர் இறந்தால், தமிழ்நாடு காவல்துறை நல நிதியிலிருந்து பதவி வித்தியாசம் இன்றி அனைவருக்கும் ஒரே சீராக குடும்ப நிவாரணத் தொகை 4000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக 8-9-1999 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. காவலர்களின் குழந்தைகளுக்கு கல்விக்

கொடையாக 2000-2001-ம் ஆண்டு 3,084 மாணவர்களுக்கு 75.72 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு காவலர் மருத்துவ உதவி நிதித் திட்டத்தின்கீழ், இந்தியாவில் காவலர்கள் மேற்கொள்ளும் சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் ஒரு லட்சம் மருத்துவ உதவியாகவும், வெளிநாடுகளில் சிகிச்சை மேற்கொண்டால் மேற்கொண்டு ரூபாய் ஒரு லட்சம் கடனாகவும் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குக் காவலர்கள் மாத சந்தாவாக ரூபாய் 10 செலுத்த வேண்டும். காவல் துறையில் உள்ள 80 ஆயிரம் பேர்களுக்குக் குடும்ப அட்டைகள் தனியாக 1997இல் வழங்கப்பட்டன.

* காவல் துறையினருக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், அதிகபட்சம் நான்கு அலகிற்கு (Units) ஆகும் செலவான ரூ.427.40-ல் ரூ.164/- அரசு மானியமாக இந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

* பணியாளர் சிறப்பு பொது வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை திட்டத்தில் அரசின் பங்குத் தொகை 5000 ரூபாயிலிருந்து 10000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1.10.2000 முதல் பணியில் சேரும் காவலர்களுக்கு அவர்களது சம்பளத்திலிருந்து மாதம் 50 ரூபாய் வீதம் பிடித்தம் செய்து அவர்கள் ஓய்வு பெறும் போது ஒரு லட்சம் ரூபாய் மொத்த தொகையாக வழங்கப்படும்.

* காவலர்கள் ஓய்வு பெறும்போது ஒப்படைப்பு செய்யும் ஈட்டிய விடுப்பிற்கு 180 நாட்களுக்கு மேலுள்ள நாட்களுக்கு விடுப்புக் காலச் சம்பளம் வழங்கும்போது வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற இதரப் படிகளும் சேர்ந்து முழுச் சம்பளம் வழங்க 1996இல் கழக அரசு ஆணையிட்டுள்ளது.

கருணை அடிப்படையில் நியமனம்

* இதுவரை காவல் துறையில் 1975 முதல் 2000-ஆம் ஆண்டு வரை, 2808 பேர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். இதில் இந்த நான்கரை ஆண்டு காலத்தில் மட்டும் 754 பேர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் அமைச்சுப் பணிகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட கருணை அடிப்படை நியமனங்கள், தகுதி அடிப்படையில் காவலர்

மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கும் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக 28 ஆண்கள் மற்றும் 13 மகளிர் காவல் உதவி ஆய்வாளர்களாகவும், 105 ஆண் மற்றும் 14 மகளிர் காவலர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 192 ஆண் காவலர்களும் 24 பெண் காவலர்களும் தேர்வு செய்யப்பட்டு, விரைவில் பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.

வீட்டு வசதி

* காவலர்களுக்குத் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் சார்பாக 1991 ஆம் ஆண்டு முதல் 1995-ஆம் ஆண்டு வரையில் 48 கோடியே 11 இலட்சம் ரூபாய்ச் செலவில் மொத்தம் 3,001 குடியிருப்புகளே கட்டப்பட்டன. 1996 முதல் 2000 வரையிலான நான்காண்டு காலத்தில் மட்டும் 189 கோடியே 74 இலட்சம் ரூபாய்ச் செலவில் 12,602 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு ஆண்டில் 99 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

* கடலோரக் காவல் படைக்கான கட்டிடங்கள் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், காவலர் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்துவதற்காக 8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நடந்து வரும் பணிகள் விரைவில் முடிவடையும் நிலையில் உள்ளன.

காவலர் குடியிருப்புகளில் கழிப்பிடங்கள்

* 1997-98 ஆம் ஆண்டில் கழிப்பிடங்கள் இல்லாமல் இருந்த 103 நகரங்களில் உள்ள 2,751 காவலர் குடியிருப்புகளில் 5 கோடியே 23 லட்சம் ரூபாய்ச் செலவில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

தனித்தனி மீட்டர்

மாநிலம் முழுவதுமாக தலைமைக் காவலர் களுக்கும், காவலர்களுக்குமென 22,717 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 13,932 வீடுகளுக்கு 1997ல் 4 கோடியே 18 லட்சம் ரூபாய்ச் செலவில் தனித்தனி மின்சார மீட்டர்கள் பொருத்தப்பட்டன.

* மதுரை மாவட்ட ஆயுதப்படைக் காவலர்கள் 164 பேர் தாங்களாகவே சொந்தமாக மீட்டர் பொருத்திக் கொண்டதால்,

அதற்குரிய செலவான 2 லட்சம் ரூபாய் அவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளது.

மின்விசிறிகள்

தமிழகத்திலுள்ள 28,762 காவலர் குடியிருப்புகளில் 17,652 குடியிருப்புகளில் மின்விசிறிகள் இருந்தன. மின் விசிறிகள் இல்லாத 11,140 காவலர், தலைமைக் காவலர் குடியிருப்புகளிலும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் 1998-99இல் ரூபாய் ஒரு கோடியே 67 லட்சம் செலவில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டன.

காவல் நிலையங்கள்

*1991ஆம் ஆண்டு முதல் 1995-96ஆம் ஆண்டு வரைக்கான முந்தைய ஆட்சிக் காலத்தில் 23 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் மட்டும் 71 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. மேலும் 37 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன. முந்தைய ஆட்சிக்காலத்தில் 1991-95-க்கு இடைப்பட்ட ஐந்தாண்டு காலத்தில் 16 காவல் நிலையங்களுக்கு மட்டுமே புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. ஆனால், கடந்த நான்காண்டு காலத்தில் (1996-2000) 171 காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

வாகனங்கள்

* அனைத்துக் காவல் நிலையங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களுக்கு வாகன வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் மட்டும் 1577 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டு காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, 1780 பழுதடைந்த வாகனங்களை நீக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக 1780 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

* காவல் துறையை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் பத்து கோடி ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கப்படுகிறது.

ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ரூபாய் 20 ஆயிரம் வீதம் நாற்காலி, அலமாரி போன்ற மரச் சாமான்கள் வாங்கிட 1,228 காவல் நிலையங்களுக்கும் 2 கோடியே 45 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு

செய்து 6-7-98இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவ்வாறே வாங்கப்பட்டுவிட்டன.

தகவல் தொடர்பு

* கணினிகள், நுண்ணலைத் தொலைபேசிகள் ஆகியவற்றோடு இணைக்கும் வகையில் உயர் நுண்ணலைச் சாதனங்கள், வாக்கி டாக்கிகள் மற்றும் இதர தகவல் தொடர்புச் சாதனங்கள் காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. காவல்துறை, சிறப்புக் காவல் படை, அதிரடிப்படை ஆகியவற்றிற்கு வி.எச். எப்.கள் (V.H.Fs) மற்றும் கையில் எடுத்துச் செல்லும் வி.எச்.எப்.கள் நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் 1999-2000 ஆண்டில் ஒரு கோடியே 35 லட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

கணினி மயமாக்கல்

* காவல் துறையில் கணினிமயமாக்கல் பெருமளவில் நடைபெற்று வருகிறது. 1996-ம் ஆண்டு வரை ரூ.46 இலட்சம் செலவில் 55 கணினிகள் மட்டுமே வாங்கப்பட்டன. 1996 முதல் 1999ஆம் ஆண்டு வரை 3 கோடியே 70 இலட்சம் ரூபாய்ச் செலவில் 429 கணினிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் 2000-ம் ஆண்டில் ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய்ச் செலவில் 181 கணினிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கணினிகளைக் கையாளவும் அவற்றைப் பயன்படுத்தவும் இதுவரை சுமார் 3,000 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டு காலத்தில் 2000 கணினிகளை வாங்கி அவற்றை மாநகரக் காவல் ஆணையங்களின் கீழுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும், காவல் கோட்ட அலுவலகங்களுக்கும் வழங்கவும், எல்லாப் பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் கணினியில் பயிற்சி அளிக்கவும், மின்னஞ்சல் முறையில் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் எந்நேரத்திலும் தகவல் அளித்திட தகவல் பரிமாற்றச் சேவையை மேம்படுத்தவும், சிறந்த ஒருங்கிணைப்புக்காக மாநகரத்திலுள்ள எல்லாப் பிரிவுகளுக்கும் இணைய வசதி (Internet) அளிக்கவும், கிடைக்கப் பெற்ற ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திட காவல்துறை ஆதாரங்கள் மற்றும் திட்டமிடல் முறையை ஏற்படுத்தவும் 70 கோடி ரூபாய்ச் செலவில்

நடப்பாண்டில் காவல்துறையை நவீன மயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகம் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த போது முதன் முதலாக நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் நான் பேசும்போது, தமிழகத்தில் காவல் துறை கடந்த ஐந்தாண்டுகளில் மிகவும் சீர்குலைந்து ஒரு ஈரல் எப்படி 70 சதவிகிதம் கெட்டு விட்டால் இருக்குமோ அப்படி இருக்கிறதென்றும், அதனை முழுவதும் கெட்டு விடாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த அரசிற்கு உள்ளது என்றும் தெரிவித்தேன். அந்த நம்பிக்கை வீண் போகாமல் தமிழகக் காவல் துறை இன்றையதினம் செயல்பட்டு வருகிறது என்பதற்கு ஒரேயொரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் 1997ஆம் ஆண்டு 67 சாதி மதக் கலவரங்கள் என்ற நிலையிலிருந்து 1998ஆம் ஆண்டு 12 என்ற அளவிற்குக் குறைந்து, 1999ஆம் ஆண்டு 6 என்ற அளவிற்குக் குறைந்து, இந்த ஆண்டு இதுவரை ஒன்றுமே இல்லை என்ற அளவிற்குச் சட்டம் ஒழுங்கு நிலை முன்னேறியுள்ளதைக் காணலாம். அதுபோலவே குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், தேவர் ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, பாபர் மசூதி இடித்த நினைவு நாள் போன்ற நிகழ்வுகளிலும் நம்முடைய காவலர்களின் கடமையும் திறமையும் அதிகரித்துள்ளது என்பதை கண்கூடாக நாம் கண்டு வருகிறோம். மேலும், மற்ற மாநிலங்களிலே நடைபெற்று வரும் குற்ற நிகழ்வுகளோடு நம்முடைய மாநிலத்தை ஒப்பிடும்போது இங்கே மிகக் குறைந்த அளவிற்கே சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

காவல் துறையில் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒருசிலர் தவறு செய்யக்கூடும், அதை வைத்தே மொத்தத் துறையையும் தவறு காண முடியாது. இதனை மனத்திற்கொண்டு அந்தக் காவலர்களின் நலன்களுக்காகக் கழக அரசு செய்துள்ள சாதனைகளின் பட்டியலைத்தான் இக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(13-12-2000)

2560. வளமார் எனது தமிழகம்; வளரும் பல தொழிலகம்!

உடன்பிறப்பே,

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார் பாரதியார். கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்பொழுதெல்லாம் தமிழகத்தின் வேளாண்மை வளர்ச்சியில் எந்த அளவுக்குக் கண்ணுங்கருத்துமாக ஈடுபாடு காட்டுகிறதோ, அதில் எள்முனை அளவுக்கும் குறைந்திடாமல் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியிலும் கருத்தொன்றி, பாடுபட்டு வருவதை நீ அறிவாய். நாடும், ஏடும் நன்கு அறியும்.

ஆனால், அன்றிருந்த அந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் தொழில்துறை எப்படிப்பட்ட பின்னடைவுகளை எல்லாம் சந்திக்க நேர்ந்தது; தொழில்துறை எப்படி அடியோடு நாசமாகிப் போனது என்பதை, அந்தக் காலத்திலேயே, பிசினஸ் இந்தியா என்ற ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் 1994ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு கட்டுரையிலே, சென்னையைச் சார்ந்த தொழில் அதிபர் சொல்வது எனக் குறிப்பிட்டு குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மூல விக்கிரகத்தை, ஜெயலலிதாவை தாஜா செய்துவிட்டாலே போதும், உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும். அதிலிருந்து தவறி விட்டாலோ உங்களுடைய வாழ்க்கை முழுவதுமேகூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் நிர்மூலமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வரவிடாமலேயே செய்து விட்டன என்று அந்த ஆட்சியின் தொழில் துறை அலங்கோலத்தை விமர்சித்து விளக்கியுள்ளது.

1995ஆம் ஆண்டு நவம்பரில் பொருளாதார நுண்ணறிவு அமைப்பு, (Economics Intelligence Unit), தெற்கே உள்ள வாய்ப்புகள் (Seeking opportunities the South) என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில், If there is any State with a reputation for corruption, it is Tamil Nadu, அதாவது, ஏதாவது ஒரு மாநிலம் ஊழலிலே சிறந்து

விளங்குகிறது என்று சொல்லவேண்டுமானால், அந்த சிறப்புள்ள மாநிலம் தமிழ்நாடுதான் என்றும், The going rate for backhanders the form of commission is said to be about 10 to 15 percent of eve the project cost, அதாவது, ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டிலே 10 முதல் 15 சதவீதம் வரையில் இடைத்தரகர்களுக்குக் கமிஷன் கொடுக்கவேண்டும் என்றும், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிலவிய அவமானகரமான நிலையைத் தோலுரித்துக் காட்டியது.

மேலும், அப்போது தொழில்துறை எப்படிச் சேற்றில் சிக்கி இருந்தது என்பதை விளக்க இதோ இன்னொரு எடுத்துக்காட்டு. அ.தி.மு.க. ஆட்சியில் கிரானைட் உரிமம் வழங்குவதில் மலிந்திருந்த ஊழல் தொடர்பான வழக்கில், முதல் தகவல் அறிக்கையைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையுடன், முன்னாள் தொழில் அமைச்சர் சின்னசாமி சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார்.

அவருடைய கோரிக்கையை உயர்நீதிமன்றம் 12.3.1998 அன்று தள்ளுபடி செய்து வழங்கிய தீர்ப்பில், The money due to the Government as bee spooned off by them, and as a result of who they ad pecuniary advantage to the extent of several corers, அதாவது, அரசுக்குப் போய்ச் சேரவேண்டிய பணத்தை குற்றம் சாட்டப்பட்டோர் உறிஞ்சி எடுத்துக்கொண்டதன் மூலம், பல கோடி ரூபாய் அளவிற்கு லாபம் அடைந்துள்ளனர் என்று அ.தி.மு.க. ஆட்சியாளர்களை இடித்துரைத்தது.

புதிய தொழில் கொள்கை

* 1996, மே மாதம் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், தொழில் முன்னேற்றத்திற்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளித்திட முடிவு செய்யப்பட்டது. இந்தியாவின் தொழில் மயமான மாநிலம் என்ற பெருமையை மீண்டும் அடைதல்; இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாகத் தமிழ்நாட்டை உருவாக்குதல்; தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்துதல்; தொழில் முதலீடுகளை ஊக்குவிக்க விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்குதல்; முதலீட்டாளர்கள் விரும்பும் ஒளிவு மறைவில்லாத நடைமுறையைப் பின்பற்றுதல்; மாநிலத்தில் உள்ள அளப்பரிய மனித சக்தியை உகந்தவாறு பயன்படுத்துதல் என்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழில்

கொள்கை ஒன்றை வகுத்து அமல்படுத்தப்பட்டதின் காரணமாக, இன்று முதலீடு செய்வதற்குச் சிறந்த இடமாகத் தமிழ்நாடு கருதப்படுகிறது.

முதலில் தொழில் வளாகங்கள் உருவானது கழக ஆட்சியிலேதான்

* தமிழகத்தின் தொழில் வரலாற்றில், ஒரே இடத்தில் பல தொழில்கள் உருவாவதற்கு வகை செய்யும் தொழில் வளாகங்களை முதன்முதல் அமைத்த பெருமை கழக அரசிற்குத்தான் உண்டு. இதற்காக 1971ஆம் ஆண்டில் கழக அரசு, தமிழகத்தில் சிப்காட் என்னும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தை (State Industrial Promotion Corporation of Tamil Nadu) உருவாக்கியது. அதன்மூலம், 1973ஆம் ஆண்டில் இராணிப்பேட்டையில் 729.78 ஏக்கர் பரப்பில் ஒரு தொழில் வளாகம் உருவாக்கப்பட்டு அங்கே 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன.

* 1974ஆம் ஆண்டில் ஓசூரில் 1236 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது தொழில் வளாகம் அமைக்கப்பட்டு, அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இந்த இரண்டு தொழில் வளாகங்களிலும் ஏறத்தாழ 20 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

* 1989ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் இராணிப்பேட்டையில் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 133 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு அங்கே 99 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு 3400 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. ஓசூரிலும் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 457 ஏக்கர் நிலப்பரப்பில் 64 புதிய தொழில்களுடன் தொடங்கப்பட்டு, அங்கே ஏறத்தாழ 6 ஆயிரம் இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

* 1996இல் நான்காவது முறையாக கழக அரசு அமைந்த பின், திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி வளாகம் ஆகிய இடங்களில் சிப்காட் நிறுவனத்தால் புதிய தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. செய்யாறு, நெமிலி ஆகிய இடங்களில் புதிய தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழில் வளாகங்களுக்காக இதுவரை 12,500 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 2,800 ஏக்கர் பரப்பளவில் 110 கோடி ரூபாய்ச் செலவில் உருவாக்கப்பட்டுள்ள

பெருந்துறை வளர்ச்சி மையத்தின் மேம்பாட்டுப் பணி முடிவடைந்து, அந்த மையத்தை 1.7.2000 அன்று நான் தொடங்கி வைத்தேன்.

1969 முதல் 1975 வரை
கழக அரசு உருவாக்கிய புதிய தொழில்கள்

1. தூத்துக்குடியிலே உரம் தயாரிக்கும் ஸ்பிக் தொழிற்சாலை; 2. சோடா ஆஷ் அமோனியம் குளோரைடு தயாரிக்கும் தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் தொழிற்சாலை; 3. காரைக்குடியில் சோடியம் ஹைட்ரோசல்பேட் தயாரிக்கும் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் பிராசஸ் லிமிடெட் தொழிற்சாலை; 4. இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் குரோமியம் சல்பேட், சோடியம் டெக்ரோமேட், சோடியம் சல்பேட் ஆகிய பொருட்களைத் தயாரிக்கும் தமிழ்நாடு குரோமேட் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 5. மதுரை மாவட்டம், நரசிங்கம்பட்டியில் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 6. இராமநாதபுரம் மாவட்டம், மணலூரில் அலுமினிய புளோரைடு தயாரிக்கும் தமிழ்நாடு புளோரின் அண்டு அலைட் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 7. பல்லாவரத்தில் மருந்துகள் தயாரிக்கும் தமிழ்நாடு தாதா பார்மசூடிக்கல்ஸ் தொழிற்சாலை; 8. அடையாறில் டெலிவிஷன் பெட்டிகள் தயாரிக்கும் டைனாவிஷன் லிமிடெட் தொழிற்சாலை; 9. கோவளம் பகுதியில் தொழில் உப்பு தயாரிக்கும் மார்த்திக் கிறிஸ்டல் சால்ட் தொழிற்சாலை; 10. ஓசூருக்கு அருகில் ஆசியா புகையிலை நிறுவனம்; 11. மண்டபம் பகுதியில் கடல் சார்ந்த பெரும் இழுபடகு கட்டும் தொழிற்சாலை; 12. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட் தொழிற்சாலை; 13. ஓசூருக்கு அருகில் ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 14. அரக்கோணத்தில் வார்ப்படம் கொல்லுலை தொழிற்சாலை; 15. சென்னையில் இண்டர் காண்டினென்டல் லெதர் லிமிடெட் தொழிற்சாலை; 16. காரைக்குடியில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரி தொழிற்சாலை; 17. அடையாறு இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ் வளாகத்தில் தொழிற் சாலை; 18. அதே வளாகத்தில் படச்சுருள் தயாரிக்கும் ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட்; 19. ஓசூருக்கு அருகில் தமிழ்நாடு இண்டர்நேஷனல் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்; 20. சோழவரம் ஒன்றியம் தச்சூரில் சதர்ன் போராக்ஸ் லிமிடெட்; 21. சேலத்தில்

இரும்பு ஆலை (16.9.1970); 22. ஆலங்குளத்தில் சிமெண்ட் ஆலை; 23. இராமநாதபுரத்தில் டயர் உற்பத்தி தொழிற்சாலை.

1989 - 90இல் கழக அரசு காலத்தில் முக்கிய தொழில்கள்

* கழக அரசு பொறுப்பில் இருந்தபோது, 1989-90இல்தான் 22 கோடி ரூபாய் முதலீட்டில் ஏஷியன் பெயிண்ட்ஸ் என்ற தொழில் நிறுவனம்; 29 கோடி ரூபாய் முதலீட்டில் டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டண்ட் இண்டியா லிமிடெட் என்ற நிறுவனம்; 10 கோடி ரூபாய் முதலீட்டில் திருச்சி எஸ்.எஸ். சங்கர ரெட்டி அசோசியேட்ஸ் தொழிற்சாலை; ஓசூரில் 140 கோடி ரூபாயில் டைட்டானியம் டை ஆக்ஸைடு தயாரிக்கும் தொழிற்சாலை; கடலூரில் ரூ. 20 கோடி முதலீட்டில் மரவள்ளிக்கிழங்கில் இருந்து இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் உஸ்தா-தே-பயோடெக் தொழிற்சாலை; கடலூரிலேயே ரூபாய் 6 கோடி செலவில் டான்டெக் அக்ரோ தொழிற்சாலை மற்றும் 40 கோடி முதலீட்டில் கடலூரில் டங்ஸ்டன் மெட்டல் பவுடர் தொழிற்சாலை; மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பியூட்டின் உற்பத்திப் பிரிவு; மணலியில் ரூ. 81 கோடி மதிப்பீட்டில் யு. பி. பெட்ரோ புராடக்ட்ஸ் தொழிற்சாலை; மேலூருக்கு அருகில் நரசிங்கம்பட்டியில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை; இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ரூ. 10.40 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மேக்னசைட் மற்றும் மெரைன் இரசாயனத் தொழிற்சாலை ; கடலூரில் ரூ. 29.50 கோடி முதலீட்டில் தமிழ்நாடு புளோரின் மற்றும் சல்பைடு கெமிக்கல் (TANFAC) தொழிற்சாலை; ஓசூரில் ரூ. 30.30 கோடி முதலீட்டில் டைட்டான் கைக்கடிகார உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை; சேத்தியாதோப்பில் ரூ. 28 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை; பெரம்பலூரில் சர்க்கரை ஆலை விரிவாக்கம்; வேலூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ரூ. 10 கோடி செலவில் விரிவாக்கம்.

1996 முதல் இதுவரை (14.12.2000 வரை) தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள்

* 1996-க்குப் பின் இதுவரை தொடங்கப்பட்டுள்ள 118 தொழிற்சாலைகளின் மூலம் நேரடியாக 19 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். கடந்த கால ஆட்சியில், ஐந்து ஆண்டுகளில், 22 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டு

அவற்றின் மூலம் 4,230 பேர் மட்டுமே வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

கார் தொழிற்சாலைகளின் வளர்ச்சி

* தமிழகம், குறிப்பாகச் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்டு என்று சொல்லக்கூடிய அளவிற்குச் சென்னையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் பிரம்மாண்டமான கார்த் தொழிற்சாலைகளும், வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

* ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக் கோட்டையில் புதிய கார் தொழிற்சாலை ஒன்றை 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 1 இலட்சத்து 20,000 கார்களை உற்பத்தி செய்யும் திறனுடன் தொடங்கியுள்ளது. வெளிநாடுகளுக்கு இக்கார்களை ஏற்றுமதி செய்வதின் மூலம் அன்னியச் செலாவணியும் கணிசமான அளவில் கிடைக்கிறது. ஏறத்தாழ 2,500 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், 25,000 தொழிலாளர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் இத்தொழிற்சாலை வழங்கியுள்ளது.

* திருவள்ளூரில் மிட்சுபிசி லேன்சர் கார் தொழிற்சாலை ஆண்டுக்கு ஒரு லட்சம் கார் தயாரித்திடும் ஆற்றலுடன், ஏறத்தாழ 320 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 14.4.1998 அன்று உற்பத்தியைத் தொடங்கியது. 800 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பையும், 6,400 பேருக்கு மேல் மறைமுக வேலை வாய்ப்பையும் அளித்துள்ளது.

* ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை மறைமலைநகரில் 1700 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆண்டுக்கு 1 லட்சம் கார்களைத் தயாரித்திடும் திறனுடன் 19.3.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் 2000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பும் 10,000 பேருக்கு மேல் மறைமுக வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது.

1996ஆம் ஆண்டிற்குப் பின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள்

* டான்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் 12.16 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூரில் தொடங்கப்பட்டுள்ளது. ப்ளூமிங்

மெடோஸ் லிமிடெட் - மலர் பதப்படுத்தும் தொழிற்சாலை. இது 100 விழுக்காடு ஏற்றுமதி அடிப்படையில் ஆனது. ஓசூருக்கு அருகே 5.42 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1997 ஜனவரியில் உற்பத்தியைத் தொடங்கியது.

* எஸ்.கே.எம். எக் புராடக்ட்ஸ் தொழிற்சாலை - 100 விழுக்காடு ஏற்றுமதி பொருள்களைத் தயாரித்திடும் இத்தொழிற்சாலை, 35 கோடி ரூபாய் முதலீட்டில் ஈரோடு மாவட்டம், சோளங்கபாளையத்தில் 12.7.1997 அன்று தொடங்கப்பட்டது.

* பாரத் டெக்ஸ் ஃபேஷன்ஸ் லிமிடெட் தொழிற்சாலை 5.10 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் செட்டிபுண்ணியம் கிராமத்தில் 1997 அக்டோபரில் தொடங்கியுள்ளது. தாப்பர் டூபான்ட் லிமிடெட் தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

* ஏசியன் லைட்டிங் ரிசோர்சஸ் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 27 கோடி ரூபாய் முதலீட்டில் தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் 26.3.98 அன்று உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை ஏற்றுமதி அடிப்படையிலானது. கரூர் மாவட்டம் அப்பர்பாளையத்தில் 4.5 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 மார்ச் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கியது.

* டவுரஸ் நவல்டீஸ் லிமிடெட் தொழிற்சாலை ஓசூருக்கருகில் சொக்கராசன்பள்ளி கிராமத்தில் 10.20 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தியைத் தொடங்கியது.

* ஸ்ரீராம் ஆட்டோ உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை திருப்போரூர் அருகில் இடையன்குப்பம் கிராமத்தில் 21 கோடி ரூபாய் முதலீட்டில் 25.6.1998 அன்று உற்பத்தியைத் தொடங்கியது.

* வி.எஸ்.என்.எல். எர்த் ஸ்டேஷன் 110 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, பி-டிஷ் பிரிவு 1998 ஜூன் மாதத்திலும், ஏ-டிஷ் பிரிவு 1999 ஜூன் மாதத்திலும் செயல்படத் தொடங்கியுள்ளன.

* லுமெக்ஸ் சாப்ளிப் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 8.6 கோடி ரூபாய் செலவில், இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப் பட்டுள்ளது.

* ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை சென்னை மணலியில் 10.18 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கியது.

* ஜே.பி.எம். சங்வூ லிமிடெட் தொழிற்சாலை தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டு உள்ளது.

* ஜே.கே.எம். டெரிம் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டையில் 17 கோடி ரூபாய் முதலீட்டில் அமைந்துள்ளது.

* மெட்-டெக் புராடக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை திருப்பெரும்புதூர் அருகில் மானூர் கிராமத்தில் 27.70 கோடி ரூபாய் முதலீட்டில் 20.8.98 அன்று உற்பத்தியைத் தொடங்கியது.

* இல்ஜின் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் 1998ல் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* டைனமேட்டிக் குரூப் கம்பெனி வாகன உதிரிபாகங்கள் தயாரித்திட 23 கோடி ரூபாய் முதலீட்டில், இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது.

* கார் கதவுகள் தயாரிக்கும் எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் தொழிற்சாலை 9 கோடி ரூபாய்ச் செலவில் இருங்காட்டுக் கோட்டையில் அமைக்கப்பட்டு உள்ளது. உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் டோங்கி விஷன் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை 43 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப் பட்டுள்ளது.

* கார் எக்சாஸ்ட் (Car Exaust) தயாரிக்கும் ஷார்தா மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற்சாலை 9 கோடி ரூபாய்ச் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது.

* ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மசூடிகல்ஸ் தொழிற்சாலை சென்னைக்கருகில் ஆலந்தூரில் 50 கோடி ரூபாய்

முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1998 நவம்பரில் செயல்படத் தொடங்கியது.

* சிட்டிசன் வாட்சஸ் - வாட்ச் அசெம்ப்ளிங் புராஜக்ட் தொழிற்சாலை சென்னையில் 8 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 டிசம்பரில் செயல்படத் தொடங்கியது.

* சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமொபைல் பவுண்ட்ரி தொழிற்சாலை ஓசூரில் 1998 டிசம்பரில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* சாம் க்ரீவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ட்ராக்டர் மற்றும் அசெம்ப்ளிங் பிரிவு ராணிப்பேட்டையில் 44 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 டிசம்பரில் திறக்கப்பட்டது.

* அம்பிகா சர்க்கரை ஆலை 40 கோடி ரூபாய் முதலீட்டில் கோவையில் 1999 மார்ச்சில் தொடங்கி வைக்கப்பட்டது.

* டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ப்ளோரோ பென்சீன் புராஜக்ட்) தொழிற்சாலை 11.60 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூரில் 1999 பிப்ரவரியில் உற்பத்தியைத் தொடங்கியது.

* டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ஹைட்ரோ ப்ளோரிக் ப்ராஜக்ட்) தொழிற்சாலை கடலூரில் 1999 மார்ச்சில் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* சேலம் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலை 500 கோடி ரூபாய் முதலீட்டில் 31.3.99 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

* எபாக்சி ரெசின் புராஜக்ட்-பெட்ரோ அரால்டைட் கம்பெனி மணலியில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது.

* அசோசியேட்டட் சிமெண்ட் கம்பெனியின் மதுக்கரை சிமெண்ட் புராஜக்ட் தொழிற்சாலை 33 கோடி ரூபாய் செலவில் 1999 மார்ச் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கியது.

* ஹைதராபாத் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் Autoclayed Aerated Concrete Block Project தொழிற்சாலை ஏறத்தாழ 25 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது.

* லட்சுமி ஆட்டோ காம்பொனன்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை 43 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் 1999 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது.

* ஜி.எம்.ஆர்.வாசவி தனியார் மின் உற்பத்தித் திட்டம் 825 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை பேசின் பிரிட்ஜில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது.

* திரு.ஆரூரான் சுகர்ஸ் சர்க்கரை ஆலை 22.90 கோடி ரூபாய் முதலீட்டில் தஞ்சை மாவட்டம் திருமண்டங்குடியில் 1999 ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கியது.

* விஸ்டன் பவர்ட்ரைன் சிஸ்டம் இந்தியா லிமிடெட் கம்பெனி 275 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் இயங்கத் தொடங்கியது.

* விஸ்டன் ஆட்டோமோடிவ் சிஸ்டம் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 325 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

* மஹிந்த்ரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் தொழிற்சாலை சென்னைக்கு அருகில் சிங்கப் பெருமாள் கோவிலில் 210 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு 1999 செப்டம்பரில் செயல்படத் தொடங்கியுள்ளது.

* மட்சுசிட்டா ஏர் கண்டிஷனர் ப்ராஜக்ட் தொழிற்சாலை அறைகளுக்கு வைக்கக் கூடிய ஏர்கண்டிஷன் இயந்திரங்களைத் தயாரிக்கும் இத்தொழிற்சாலை இருங்காட்டுக் கோட்டையில் 59.54 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் செயல்படத் தொடங்கியது.

* மேண்டோ ப்ரேக் சிஸ்டம் இந்தியா நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை 30 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக் கோட்டையில் 1999ல் செயல்படத் தொடங்கியது.

* வேலியோ இந்தியா ப்ரிக்சன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை மறைமலை நகரில் 27 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் உற்பத்தியைத் தொடங்கியது.

* Scwing Stetter GmbH எனும் ஜெர்மனி நாட்டுக் கட்டுமான கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை 18 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் ஒரு பகுதி செயல்படத் தொடங்கியுள்ளது.

* ஆட்டோலெக் இண்டஸ்ட்ரீஸ் எண்ணெய் மற்றும் தண்ணீர் பம்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை 5 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் 1999 அக்டோபரில் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் சார்பில் துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம் 202 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 நவம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது.

* இந்தியன் அண்டு நேச்சுரல் மெடிகல் புரொடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை சென்னைக்கருகில் 5.60 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 டிசம்பர் முதல் செயல்பட்டு வருகிறது.

* இன்வோல் மெடிக்கல் (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலை: திருப்பெரும்புதூரில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் 2000 ஆண்டு மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* ரினால்ட்ஸ் பால் பென் காம் பொனன்ட்ஸ் தொழிற்சாலை இருங்காட்டுக் கோட்டை யில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் 2000 ஆண்டு மார்ச் மாதம் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* சிங்கப்பூரைச் சேர்ந்த செம்பவாங் ஸ்ரீராம் பொருள் விநியோகத் தொழிற்சாலை 33 கோடி ரூபாய் செலவில் புழல் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது.

* மார்க்யூப் இந்தியா காகித அட்டை தயாரிக்க உதவும் எந்திர உற்பத்தித் தொழிற்சாலை 50 கோடி ரூபாய்ச் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் 2000-மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* கோவேமா வுட் பிளாஸ்ட் பி.வி.சி. தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை 44 கோடி ரூபாய்ச் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் 2000 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* இன்ட்ஸில் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் வாகன உதிரிபாகங்களைத் தயாரிக்கக்கூடிய இத்தொழிற்சாலை

12.5கோடி ரூபாய் முதலீட்டில் மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

* ஆப்டிக் பைபர் கேபிள் தொழிற்சாலை தமிழ்நாடு அரசு நிறுவனமான டிட்கோ, மத்திய அரசு நிறுவனமான டி.சி.ஐ.எல். (Tele communications Consultants India Limited) மற்றும் ஜப்பான் நாட்டின் ஃப்யூஜிகூரா நிறுவனம் ஆகியவை இணைந்து மிக நவீனமான ஆப்டிக் பைபர் டெலிகாம் கேபிள்ஸ் (Optic Fibre Telecom Cables) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை 28.50 கோடி ரூபாய்ச் செலவில் 26.5.2000 அன்று நிறுவியுள்ளது.

* ப்ராக்ஸ் ஏர் இந்தியா பிரைவேட் லிமிடெட் (PRAX AIR INDIA PRIVATE LIMITED) தொழிற்சாலை 60 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு, அதனை நான் 21.8.2000 அன்று திறந்து வைத்துள்ளேன். இது தொழிற்சாலைகளுக்கான வாயுக்களை (Industrial Gases) தயாரித்து வழங்குகிறது. ப்ராக்ஸ் ஏர் நிறுவனம் மொத்தம் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு தொழில் பிரிவுகளை அமைத்துள்ளது.

* செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் பிரெஞ்சு நாட்டுத் தொழில்நுட்பத்துடன் 525 கோடி ரூபாய்ச் செலவில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு 27.9.2000 அன்று தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு நூறு கோடி ரூபாய் அளவுக்கு அன்னியச் செலாவணி கிடைக்கச் செய்யும்.

* 2-9-1989 நாளிட்ட கழக அரசின் தொழில் துறை ஆணைப்படி குவாரிகளுக்குக் குத்தகைகள் ஒப்பந்தப்புள்ளி (Tender System) முறையில் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால் அ.தி.மு.க. அரசு 8-3-93 அன்று குவாரி குத்தகைகளை வேண்டியவர்களுக்கு வழங்குவதற்காக 39 என்ற புது விதியைத் தமிழ்நாடு சிறு கனிம விதிகளில் புகுத்தியது.

* 1996இல் கழக அரசு ஏற்பட்டவுடன் வெளிப்படையான ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல முறையை (Tender-cum-Aucto system) கொண்டு வர 27-6-1996 அன்று முடிவெடுத்து, அ.தி.மு.க. ஆட்சியில் சுயலாப நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட விதிமுறை 39 நீக்கப்பட்டது.

* அ.தி.மு.க. ஆட்சியில் 1991 முதல் 1996 வரை மணல் குவாரிகள் மூலம் 4.43 கோடி ரூபாயும், கருங்கல் குவாரிகள் மூலம் 9.18 கோடி ரூபாயும், கிரானைட் குவாரிகள் மூலம் 32.22 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 45.82 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வந்ததற்கு மாறாக, விதி 39ஐ நீக்கி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலமுறை கழக ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்பட்டதால் 1996 முதல் 2000 நவம்பர் வரை மணல் குவாரிகள் மூலம் 59.95 கோடி ரூபாயும், கருங்கல் குவாரிகள் மூலம் 40.12 கோடி ரூபாயும், கிரானைட் குவாரிகள் மூலம் 85.74 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 183.81 கோடி ரூபாய்; அதாவது நான்கு மடங்கு கடந்த ஆட்சியை விட அதிகமாக வருவாய் அரசுக்கு வந்து சேர்ந்துள்ளது.

சிறப்பான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்

* ஏராளமான தொழில்முனைவோர் தொடர்ச்சியாக 1996க்குப் பின்னர் தமிழகத்திற்கு வந்து, தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தலையாய காரணமாக இருப்பது இங்கே அமைக்கப்பட்டு வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்தாம். தேவையான அளவுக்குத் தரமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் கழக அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

* 2000 அக்டோபர் மாதத்தில், C.M.I.E. இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு 145.62 குறியீட்டு எண்களையும், கர்நாடகம் 106.12 குறியீட்டு எண்களையும், ஆந்திரப்பிரதேசம் 104.01 குறியீட்டு எண்களையும் பெற்றுள்ளன. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மாநகரங்களுக்கு இடையேயான மதிப்பீட்டில், சென்னை மாநகரம் 472.48 குறியீட்டு எண்களையும், ஐதராபாத் 153.70 குறியீட்டு எண்களையும், பெங்களூர் 100.28 குறியீட்டு எண்களையும் பெற்றுள்ளன.

தொடங்கப்படவுள்ள தொழிற் திட்டங்கள்

* 24.85 கோடி ரூபாய் முதலீட்டில் மலர் பதப்படுத்தும் டான்ப்ளோரா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பார்க் - மலர்த் தொழில் பூங்கா ஓசூரில் 220 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. 2001 மார்ச்சில் ஏற்றுமதியைத் தொடங்கும். இத்திட்டத்தின் மூலம் 500 பேருக்கு நேரடியாகவும், 1000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

* தமிழ்நாடு அரசு, டிட்கோ ஆகியவை இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்துடன் (ITPO) இணைந்து கண்காட்சி மற்றும் மாநாட்டுக் கூடத்துடன் கூடிய இந்திய வர்த்தக மையம் ஒன்றினைச் சென்னைக்கருகே நந்தம்பாக்கத்தில் அமைக்கிறது. இவ்வளாகம் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடனும், சாதனங்களுடனும் அமையும். முதல் கட்டத்தில் 50000 சதுர அடி பரப்புடைய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

* மெட்ராஸ் ரீபைனரீஸ் லிமிடெட் - இருங்காட்டுக் கோட்டையில் செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலைக்கு அருகில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தர மோட்டார் ஸ்பிரிட், அதிவேகப் பயணத்திற்கு உகந்த டீசல் ஆகியவற்றின் விற்பனை மையத்தினை அமைத்து வருகிறது.

* சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள மெட்ராஸ் ரீபைனரீஸ் நிறுவனத்தின் மணலி தொழிற்சாலை பிரிவு 2360 கோடி ரூபாய் செலவில் 30 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணையைச் சுத்திகரிப்பு செய்யும் திறனுடையதாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

* எபோமின் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற் சாலை திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் 2 கோடியே 88 லட்சத்து 59ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

* முக்குட்ஸ் பேக்கேஜிங் லிமிடெட் தொழிற்சாலை திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

* கடலூர் மாவட்டம் திருச்சோபுரம் கிராமத்தில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பென்னார் ரிபைனரீஸ் லிமிடெட் கம்பெனியின் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை 3480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 6.5 மில்லியன் கச்சா எண்ணெயைச் சுத்திகரிப்பு செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது.

* கும்மிடிப்பூண்டியில் 224 ஏக்கர் பரப்பில் 19 கோடியே 90 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஏற்றுமதி தொழில் மேம்பாட்டுப் பூங்கா

(Export Promotion Industrial Park) அமைப்பதில் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகமும் சிப்காட்டுடன் பங்கெடுத்து வருகிறது.

* நர்மதா டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி ஆடைகள் ஏற்றுமதியில் ஒரு முன்னணி நிறுவனம். 80 கோடி ரூபாய் முதலீட்டில் நர்மதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஒரு நவீன ஆடை தயாரிப்புப் பிரிவினை அமைத்திட டிட்கோ திட்டமிட்டுள்ளது. 33.64 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முதல்கட்ட திட்டப் பணிகள் 2001 மார்ச் மாதத்தில் முடிவடையும்.

* தர்மபுரி மாவட்டத்தில் 377 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முற்றிலும் நூறு சதவீதம் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளி ஆலை (Composite Textile Mills) ஒன்றினை அமைத்திட, டிட்கோ நிறுவனம், திருவாளர்கள் வாசவி தொழில் குழுமத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. வர்த்தக ரீதியிலான உற்பத்தியினை இந்நிறுவனம், அடுத்த ஆண்டில் (2001-2002) தொடங்கும்.

* உலகச் சந்தையில் போட்டியிடும் நோக்கில், ஆடைகள் தயாரிக்கும் பூங்கா ஒன்றை 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோ கூட்டுத் துறையில் சென்னைக்கருகே அமைக்கவுள்ளது. அடுத்த ஆண்டில் இந்த ஆடைகள் பூங்கா வர்த்தக ரீதியில் செயல்படத் துவங்கும்.

நாங்குனேரியில் உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா

* அமெரிக்காவைச் சேர்ந்த இன்ஃபேக் இந்தியா குரூப் மற்றும் ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் என்ற நிறுவனங்களுடன் சேர்ந்து இணைத் துறையில் டிட்கோ இப்பூங்காவை அமைத்து வருகிறது. இந்தத் தொழிற்பூங்காவில் அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும். இங்கு அமையவுள்ள தொழிற்சாலைகளில் 8000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்படும். மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் 31.3.2000 அன்று அறிவித்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கையில் (EXIM POLICY) நாங்குனேரி உயர்தொழில் நுட்பத் தொழிற்பூங்காவைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக (SPECIAL ECONOMIC ZONE) அறிவித்துள்ளார். இதனால், இந்தத் தொழிற்பூங்காவில் உருவாகும்

தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் தேவையான சாதனங்கள் இறக்குமதி எளிதாக அமையும்.

ஏற்றுமதிச் சாதனையில் ஒப்பீடு

* கடந்த ஆட்சிக் காலத்தில் 1992-93-ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 808 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மட்டுமே தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி ஆயின. ஆனால், கழக ஆட்சியில், 1996-97-ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 802 கோடி ரூபாய் அளவிற்கும், 1997-98-ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 982 கோடி ரூபாய் அளவிற்கும் உயர்ந்துள்ளது. 1999-2000 ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி மதிப்பு 21 ஆயிரத்து 387 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு முதலிடம்

* 1989-91 கால கட்டத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, கழக அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்திருந்தது. 1991-96 கால கட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, ஐந்தாம் இடத்திற்கு இறங்கிவிட்டது. 1996-ல் கழக அரசு மீண்டும் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், தமிழகம் தொழில் வளர்ச்சியில் மீண்டும் முன்னணியில் இருந்து வருகிறது.

22.5.2000 அன்றைய நிலையில் இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (C.M.I.E. - Centre for Moitering India Economy) வெளியிட்ட அறிக்கையின்படி 1 இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்றுத் தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது.

அண்மையில் 21.7.2000 அன்று அதே மையம் இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்னும் நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகைகள் பாராட்டு

* கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரத்தில் (Credit Deposit Ratio) அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தைப்

பெற்றிருக்கிறது என 6-7-1998 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது. கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் அதிக அளவில் இருப்பது தொழில்வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும். அனைத்திந்திய சராசரி கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 விழுக்காடாக இருக்க தமிழகத்தில் 92.3 விழுக்காடாகும்.

* தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், முழுவதும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில் நிறுவனங்களை (100% export-oriented units) நிறுவுவதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது என்று 28-4-1999 தேதியிட்ட எகானமிக் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

* லண்டனில் இருந்து வெளிவரும் பைனான்சியல் டைம்ஸ் என்ற பத்திரிகை 1997, ஏப்ரல் மாதத்தில் சென்னை-இந்தியாவின் டெட்ராய்ட் என்று வர்ணித்தது.

* மார்க் நிக்கல்சன் என்கிற தலைசிறந்த பத்திரிகையாளர் லண்டனில் இருந்து வெளிவரும் பைனான்சியல் டைம்ஸ் என்கிற பத்திரிகையில் 10.4.1997 அன்று Tamil Nadu raise upto achieve car ambitions எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர், Tamil Nadus car industry is perhaps the most spectacular result of the race between States to attract foreign vestment and develop new industries. அதாவது, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 1994-95-ல் 8.7 சதவீத அளவிற்கு இருந்தது. கழக அரசு எடுத்து வரும் தொடர்ச்சியான தொழில் முனைவோர் நேயமிக்க நடவடிக்கைகளின் காரணமாக 1999-2000 ஆண்டில் தொழில் வளர்ச்சி 15.02 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

* இன்டஸ்ட்ரியல் ஹெரால்ட் (ஏப்ரல் 2000) என்ற ஆங்கில நாளிதழ்; வாகன உற்பத்தி, வாகன உதிரி பாகங்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்திடும் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் எனக் குறிப்பிட்டு பாராட்டியுள்ளது.

* 7.2.2000 நாளிட்ட எகனாமிக் டைம்ஸ் நாளிதழில், இந்தியாவில் பெரிதும் தொழில் மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப்பெரிதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இவ்வாறு, நிகழ்காலத் தமிழ்ச் சந்ததியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காகவும், வருங்காலச் சந்ததியினர் வளங்கொழித்திடும் வாய்ப்புக்களைப் பெற்று, வாழ்வில் ஏற்றம் பெற்று, இன்பம் துய்த்திட இப்போதிருந்தே வழிகோல வேண்டும் என்பதற்காகவுமே தொழில்மயமாக்குதலில் தொய்வில்லாத ஈடுபாடு காட்டி வருகிறோம். இந்நாட்டு நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் என நம்மூர் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக யார் வந்தாலும், ஆக்கமும், ஊக்கமும் அளித்து அளவிடற்கரிய வளர்ச்சிக்கு, கைமாறு கருதாத மாரி போல் கடும்பணி, அரும்பணி ஆற்றி வருகிறது கழக அரசு. அதன் விளைவாக, ஆங்காங்கே, தொழில் கூடங்கள் காட்சிப் பொருள்களாக மட்டுமன்றி, கருத்துப் பெட்டகங்களாக, நாம் ஆற்றும் மக்கள் பணியின் சாட்சிப் பொருள்களாகவும் உருவாகி உயர்ந்தோங்கி நிற்கின்றன.

தொழில் வளர்ச்சியில் கழக அரசு படைத்துள்ள சாதனைகளைத் தொடர்ந்து, புத்தாயிரத்தின் முத்தார விஞ்ஞானங்களான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில் நுட்பத்தில் இந்த அரசு உருவாக்கி வரும் சாதனை முத்திரைகளை நாளை தொகுத்து வழங்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(14-12-2000)

2561. தகவல் தொழில்நுட்பமும்; மரபணு உயிரியலும்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் உச்சகட்டத்தில் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பம் (Information Technology), மரபணு உயிரியல் தொழில் நுட்பம் (Bio-Technology) பற்றி இன்றைய கடிதம்! புத்தாயிரத்தின் விடியல் விஞ்ஞானங்களாக இந்த இரண்டும் விளங்கி வருவதை நீ அறிந்து வைத்திருப்பாய். திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்பொழுதுமே, நமது பண்டைய கலாச்சார, பண்பாட்டு மரபுகளைப் போற்றி, வாழும் தலைமுறையின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளித்து, வரும் தலைமுறைகளின் மேம்பாட்டுக்குத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. தகவல் தொடர்புகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்தப் பூமிப்பந்தே குக்கிராமம் போல் (Global Village) குறுகிக் கொண்டு வருகிறது; இனவழித் தொடர் (DNA Sequence) இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய உயிரியல் சாதனை என்று போற்றப்படுகிறது. எனவே இந்த இரண்டு தொழில்நுட்பங்களிலும் தமிழகம் முன்னிலையில் இருந்திட வேண்டும் எனும் நோக்கத்துடன் கழக அரசு பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

e (electronic) என்ற ஓரெழுத்தின் ஆற்றல்.

எழுபதுகளில் வெறும் கருத்துப் படிவமாக (Concept) மட்டுமே இருந்த தகவல் தொழில் நுட்பம் இன்று எங்கும் நிறைந்த பொருளாய் ஆகிவிட்டது. மானுட சமுதாயத்தின் சகல துறைகளையும், தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவையும், தகவல் தொழில் நுட்பம் குறிப்பாக e என்ற ஓரெழுத்து மந்திரம் (electronic) பின்னிப் பிணைந்து, வளர்த்து வருகிறது. e-Mail, e-Commerce, e-Governance, e-Medicine, e-Value, e-iz, e-Stock, e-education, என்று எல்லாத் துறைகளையும், தகவல் தொழில்நுட்பம் வியாபகம் செய்து வருகிறது. செவிக்கும்,

கண்ணுக்கும் உலகத்தையே காட்டிவரும் இணையத்தில் இன்று நறுமணத்தையும் பரப்புவதற்கான தொழில்நுட்பம் உருவாகிவிட்டது. உலகப் பொருளாதார முன்னேற்றத்தின் எல்லா முனைகளுடனும் இரண்டறக் கலந்துவிட்டது தகவல் தொழில்நுட்பம். தகவல் தொழில் நுட்பம் இல்லாத எந்தத் தொழிலும் முன்னேற்றம் அடையாத பழைய தொழிலாகக் கருதப்படுகிறது; தகவல் தொழில்நுட்பத்தைத் தெரிந்து கொள்ளாத இன்றைய மனிதன் நேற்றைய மனிதனாகி விட்டான். 21-ஆம் நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தகவல் தொழில் நுட்பம் விளங்கப் போகிறது என்பதைக் கழக அரசு அறிந்து வைத்துள்ளதால்தான், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகவும், அதன் பயன்கள் கிராமப்பகுதிகளிலும் ஊடுருவி, சாமானியர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற் காகவும், கழக அரசு தொலைதூரக் கண்ணோட்டத்தோடு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகள் அதிகம்

* இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஒவ்வொரு ஆண்டும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியே வரும் பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். தமிழ்நாட்டில் 152 பொறியியல் கல்லூரிகளில் இந்த ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை 42 ஆயிரத்து 892. இவர்களில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொறியியல் பட்டப்படிப்பில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 378.

அமெரிக்க விசா பெறுவதில் தமிழகம் முன்னணி

* இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மென்பொருள் (Software) பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேருக்கு மேலானோர் மென்பொருளை வாழ்க்கைத் தொழிலாகக் (Software Professionals) கொண்டுள்ளனர். 1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரை சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் 21,371 பேருக்கு விசா வழங்கியது. இதே காலகட்டத்தில் மும்பை தூதரகம் 9,734 பேருக்கும், புதுதில்லி தூதரகம் 5,460 பேருக்கும், கல்கத்தா தூதரகம் 1,367 பேருக்கும்

விசாக்களை வழங்கியுள்ளன. இந்தப் புள்ளி விபரங்கள் டில்லியை விட, மும்பையை விட, கல்கத்தாவை விட, வேலை வாய்ப்புகளைப் பெற்று அமெரிக்காவுக்குச் சென்னையிலிருந்து செல்வோர் எண்ணிக்கைதான் அதிகம் என்பதையே காட்டுகின்றன. அதில் சிறப்பம்சம் என்னவெனில், அமெரிக்கா செல்வோரில் பெரும்பாலோர் மென்பொருள் பட்டதாரிகளே.

* தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (National Association of Software and Services Companies - NASSCOM) சென்னையை, தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் நாடி தேர்வு செய்யும் முதல்நிலை நகரம் என்று அறிவித்துள்ளது.

* தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையின் கீழ் 5.10.1998 முதல் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

* தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடையவும், அதற்கான அணுகுமுறைகளை உருவாக்கிச் செயல்படுத்தவும், முதலமைச்சரின் தலைமையில் பணி முனைப்புக் குழு (I.T. Task Force) உருவாக்கப்பட்டது.

* அரசுத் துறையை கம்ப்யூட்டர் மயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில் நுட்பத்தை இணைக்கவும், தமிழ் மென்பொருளை உருவாக்கிப் பரப்பவும், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு துணைக் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது.

* டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்னணு ஆளுமை (e-Governance) ஆகியவை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட முதலமைச்சரின் ஆலோசகராக 20.9.2000 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுத்த முதல் மாநிலம்

* அரசு, தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை (I.T.Policy) ஒன்றை உருவாக்கி அறிவித்துள்ளது. இக்கொள்கை, தகவல் தொழில் நுட்பத் தொழில் முனைவோர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தனியே கொள்கையை உருவாக்கி அறிவித்துள்ள முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்.

புகழ் வளர்க்கும் டைடல் பூங்கா

* 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென்பொருள் பூங்கா சென்னை தரமணியில் உருவாக்கப்பட்டு 4.7.2000 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. டைடல் பூங்கா கிண்டியிலிருந்து கேளம்பாக்கம் வரை பரந்து விரிந்து வேகமாக வளர்ந்து வரும் Cyber Corridor நுழைவாயிலில் அமைந்துள்ளது.

இந்தப் பூங்கா 12 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டதாக, தரைத்தளத்துடன், 12 மேல் தளங்களும், 2 தரைகீழ் தளங்களும் கொண்டதாக அமைந்துள்ளது. தரை வழியாகவும், செயற்கைக்கோள் வழியாகவும், நுண்ணலைகள் வழியாகவும் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப பிரத்யேகமான முறையில் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தடையில்லா மின்சாரம்

இந்த டைடல் பூங்காவில், தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின்நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. கட்டடம் முழுதும் குளிர்ப்பதனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பூங்காவிற்கு 6 ஆயிரம் டன் திறன் கொண்ட குளிர்ப்பதன வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் பாதி அளவுக்கு, அதாவது 3 ஆயிரம் டன் அளவிற்குக் குளிர்ப்பதன வசதிகளை ஏற்படுத்துவதற்கு, அதே நேரத்தில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில், உலகின் மிக நவீனமான Termal Energy Storage System என்ற புதிய யுக்தி இந்தியாவிலேயே முதல் முறையாக இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு அமைந்துள்ள இந்த மின்தொகுப்பு முறை உலகிலேயே மூன்றாவது பெரியது ஆகும். ஏற்கனவே பிரான்ஸ் நாட்டில் ஒன்றும், ஜப்பான் நாட்டில் ஒன்றும் பெரிய அளவில் இந்த மின்தொகுப்பு முறை பயன்பாட்டில் உள்ளது. இவை மட்டுமின்றி உலகத் தரத்திலான நவீனமயமாக்கப்பட்ட ஏராளமான வசதிகளும் இந்தப் பூங்காவில் அமைந்துள்ளன.

முழுப் பரப்பளவும் நிரம்பிவிட்டது

* ஹைதராபாத்தில் உள்ள மென்பொருள் பூங்காவை விடவும், பெங்களூரில் உள்ள மென்பொருள் பூங்காவை விடவும் இது மிகப்பெரியது. திறந்து வைக்கப்படுவதற்கு முன்பே இந்தப் பூங்காவின் 60 சதவீத இடம் உலகின் பிரசித்திபெற்ற மென்பொருள் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. திறந்து வைக்கப்பட்ட 4 மாதத்திற்குள்ளாகவே, அதாவது 2000 ஆண்டின் அக்டோபர் மாதத்திற்கு முன்பே, மொத்தம் உள்ள 12 லட்சம் சதுர அடிப் பரப்பளவும் 34 மென்பொருள் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அந்த 34 நிறுவனங்களில் பென்டா சாப்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட், சத்யம் இன்ஃபோவே லிமிடெட், கம்ப்யூட்டர் அசோசியேட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், டி.எஸ்.க்யூ.சாப்ட்வேர் லிமிடெட், எச்.சி.எல்.டெக்னாலஜிஸ் லிமிடெட், ஐ-நாட்டிக்ஸ் டெக்னாலஜிஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பாண்டிச்சேரி டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸஸ் லிமிடெட், டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ், கோக்னிசன்ட் டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் இந்தியா லிமிடெட், ஃபோர்டு இன்பர்மேஷன் டெக்னாலஜிஸ் சர்வீஸஸ் லிமிடெட், எலெக்ட்ரானிக் டாடா சிஸ்டம் (இந்தியா) லிமிடெட் ஆகியவை முன்னணி நிறுவனங்களாகும். இப்படி இந்த முதல் டைடல் பூங்கா பெற்றுள்ள பெரும் வெற்றியின் அடிப்படையில், இரண்டாவது டைடல் பூங்கா அறிவிக்கப்பட்டு, மென்பொருள் நிறுவனங்களின் இடத் தேவை ஆய்வு செய்யப்பட்டு, பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

* நாட்டிலேயே முதன் முதலாக தமிழ்நாடு மென்பொருள் நிதி என்ற ஒன்றை டிட்கோ நிறுவனம், இந்தியச் சிறுதொழில் வங்கி (SIDBI), கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவை நிறுவனம் (ILFS) ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கியுள்ளது. அதன் மூலம் இதுவரை மென்பொருள் தொழில் முனைவோருக்கு எட்டு கோடி ரூபாய் முதலீட்டுதவி வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேரி தொழிற் பூங்கா

* பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்குப் பன்னாட்டுத் தரத்தில் தகவல்

தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகின்றது. சென்னை-தரமணியிலிருந்து பழைய மாமல்லபுரச் சாலை, தமிழகத்தின் தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக (Tamil Nadus I.T. Super Highway) வேகமாக உருப்பெற்று வருகிறது. பழைய மாமல்லபுரம் சாலையில் பல மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களுடைய மென்பொருள் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன ; மேலும் நிறுவி வருகின்றன.

* சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (T.C.S.) என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென்பொருள் மையத்தைத் தொடங்கியுள்ளது.

* அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் போலாரிஸ் ஆகிய நிறுவனங்களும் தங்களது மையங்களை இந்தப் பகுதிகளில் நிறுவி உள்ளன.

13,000 சமுதாய இணைய மையங்கள்

* இங்கிலாந்திலுள்ள வேர்ல்ட் டெல் (World Tel) நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டுத் தொழில் முயற்சியின் காரணமாக, இம்மாநிலம் முழுவதிலும் பரவலாக 13,000 சமுதாய இணைய மையங்களை அமைப்பதற்கான பணி தொடங்கிவிட்டது. இதன் மூலமாக, சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

ஆப்டிக் ஃபைபர் கேபிள் பதித்திட தனிக்கொள்கை

* பூமிக்கடியில் ஆப்டிக் ஃபைபர் கேபிள் பதித்திடத் தனிக்கொள்கை வகுத்துச் செயல்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடுதான். ஆப்டிக் ஃபைபர் கேபிள் தகவல் தொழில் நுட்பத்தின் முதுகெலும்பு போன்றது. இதுவரை தமிழ் நாட்டில் இந்த கேபிள்கள் அமைத்திட வேர்ல்ட் டெல், பி.பி.எல்., பார்த்தி டெலி சோனிக், டிஷ்நெட் டிஸ்.எஸ்.எல்., ப்ராட் பேன்ட் சொல்யூசன்ஸ், ரிலையன்ஸ் இன்ஃபோகாம் லிமிடெட், எஸ்டெல் கம்யூனிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய ஏழு பெரிய நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கேபிள்கள் தமிழ்நாட்டை மற்ற எல்லா மாநிலங்களுடனும் இணைத்து, தகவல் தொடர்பை வலுப்படுத்தும். அத்துடன் கடலுக்கடியில் ஆப்டிக் ஃபைபர் கேபிள்கள் அமைத்து,

தமிழ்நாட்டை உலக நாடுகளுடன் இணைப்பதற்கான முயற்சியும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நெட் 99

* கணினி பயன்பாடுகளில் உலக அளவில் போதுமான தமிழ்க் குறியீடுகள் இல்லாததால் தமிழ் மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாமல் இருந்தது. இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு தமிழ்நெட் 1999 என்ற உலகத் தமிழ் இணைய கருத்தரங்க மாநாட்டை 1999ஆம் ஆண்டு பிப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்தியது. இந்த மாநாட்டில் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி, தமிழ் விசைப்பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு (Standardised) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவிலுள்ள யூனிக்கோட் கன்சோர்டியம் எனும் மையத்தில் தமிழ்நாடு கூட்டு அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டுள்ளது. இதில் அங்கத்தினராகும் முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம்

* உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Tamil Virtual University), முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களைத் தலைவராகவும், மென்பொருள் துறையில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி மையங்கள்

* மாநிலம் முழுவதும் உள்ள 1200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் 187 கோடியே 66 லட்சம் ரூபாய்ச் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் 40 மாணவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 48 ஆயிரம் மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்புக்குத் தகுதியுடையவர்களாக ஆவார்கள். இத்திட்டம் அரசின் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றிற்கும் 34

கோடியே 48 லட்சம் ரூபாய்ச் செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் இக்கல்லூரிகளைச் சார்ந்த 60 ஆயிரம் மாணவ மாணவியர் கணினிக் கல்வியிலும் தேர்ச்சி பெறுவர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தக் கணினிக் கல்வித் திட்டம் இந்தியாவிலேயே முதலாவதாக, மிகப்பெரிய திட்டமாகும்.

* பள்ளி மாணவர்களுக்குக் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கும் திட்டத்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கை 23.4.99 அன்று தள்ளுபடி செய்து, சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பில், அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால், அடுத்த ஆண்டு 48 ஆயிரம் மாணவர்கள் கணினிப் பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது. தமிழக அரசின் மீது இந்த நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறது. சமூக நீதிக் காவலனாகப் பாடுபடும் அரசு, கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே படிக்க வருகிறவர்களின் நலனில் கவனம் கொள்ளும் என்று நம்பிக்கை கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ளது.

தொலைத் தொடர்பு வழி மருத்துவம்

* கணினியைப் பயன்படுத்தி நெடுந்தொலைவுக்கு அப்பால் உள்ள மருத்துவ வல்லுநர்களிடமிருந்து அறிவுரை மற்றும் வழிகாட்டுதலுடன், நவீன மருத்துவ சிகிச்சை பெறுவதற்குத் தொலைத் தொடர்பு வழி மருத்துவம் (Tele medicine) வசதி தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க தமிழ் இணைய ஆய்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

டானிடெக்

* தகவல் தொழில் நுட்பக் கல்வியை மேம்படுத்த டானிடெக் என்னும் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை 1998-ல் அரசு ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வாசகம் தற்பொழுது இதன் தலைவராக உள்ளார். இந்நிறுவனம், தகவல் தொழில் நுட்பத்தில் முதுகலை பட்டயப் படிப்பை (Post Graduate Diploma Information Technology) அளிக்கிறது. ஓராண்டு காலத்திற்கு அளிக்கப்படும் இப்படிப்பில் இதுவரை ஒவ்வொன்றிலும் 50 மாணவர்களைக் கொண்ட இரண்டு குழுவினர் முடித்துள்ளனர். தற்போது மூன்றாவது

குழுவினர் இப்பட்டயப் படிப்பினைப் பயின்று வருகின்றனர். இந்த டானிடெக் நிறுவனத்தை நிகர்நிலைப் பல்கலைக் கழகம் (Deemed University) என்ற அந்தஸ்திற்கு உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டானிடெக், தகவல் தொழில் நுட்பத் துறையில் பட்டப் படிப்புகளைத் தொடங்கி நடத்துவதுடன், தகவல் தொழில்நுட்பத் திறமையைத் தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் நிறுவனங்களில் மேம்படுத்தும் ஒருங்கிணைப்பு மையமாகவும் செயல்படுகிறது.

மென்பொருள் நிறுவனங்களின் வளர்ச்சி

* தமிழ்நாட்டில் 1996 மே மாதத்திற்கு முன்பு வரை 34 மென்பொருள் நிறுவனங்களே(Software Units) இருந்தன. ஆனால், 1996 மே மாதத்திற்குப் பிறகு, அதாவது கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 632 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு, இன்றைய நிலையில் 666 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

* 1999-2000 ஆண்டில் மட்டும் 430 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. 1995-96ல் கோவையில் 4 மென்பொருள் நிறுவனங்களே இருந்தன. ஆனால், இன்றைக்கு 58 மென்பொருள் நிறுவனங்கள் கோவையில் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. ஹாலிவுட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்குத் தேவையான மென்பொருள்களில் பெரும்பாலானவை, சென்னையிலுள்ள மென்பொருள் நிறுவனங்களில்தான் தயாரித்து அனுப்பப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பம்

இருபத்தோராம் நூற்றாண்டில், மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான வளம், நலம் இரண்டையும் வழங்கிடும் மிக முக்கியமான இரண்டு துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தினை அடுத்து நிற்பது உயிரியல் தொழில்நுட்பம். கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவைப்படக்கூடிய சத்துணவு, சுகாதாரம், சுற்றுப்புறச் சூழல்கள் போன்றவைகளில் உயிரியல் தொழில் நுட்பத்தின் ஆற்றல்கள் பொதிந்து கிடக்கின்றன. இந்த ஆற்றல் முழுமையாகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

மக்கள் தொகைப் பெருக்கம், வரம்பிற்குட்பட்ட விளைநிலங்கள், அதிக அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகியவை தொடர்பான இன்றைய சவால்களைச் சந்தித்துத் தீர்வு காண்பதற்கு உயிரியல் தொழில்நுட்பம் நமக்குப் பெரிதும் உதவும். உயிரியல் தொழில்நுட்பம் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கக் கூடியது.

உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் இந்தியாவில் பயன்படுத்தப்படும் பொருள்களின் மதிப்பு சென்ற ஆண்டில் 7,154 கோடி ரூபாயாக இருந்தது. நடப்பு ஆண்டில் இது 9,400 கோடி ரூபாய் அளவினை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2005ஆம் ஆண்டில் 14,560 கோடி ரூபாய் அளவுக்கு உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவரங்களின் அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் புதிய முதலீடுகள் செய்யப்படுவதற்கு மிகச்சிறந்த வாய்ப்புகளை இந்தியா பெற்றுள்ளது என்பது விளங்கும்.

உயிரியல் தொழில்நுட்பத்திற்கு தனிக்கொள்கை

* தமிழகம் உயிரியல் வளங்களை மிக அதிக அளவில் கொண்டுள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள பல்வேறு வகையான நிலவியல் பகுதிகளிலும் (Geographical Terrains) உயிரியல் வகைகள் பல காணப்படுகின்றன. தமிழகத்தின் வனவளம், வேளாண் வளம், நிலவளம் ஆகியவை அளவில் பெரியதாகவும், பல்வேறு வகையினதாகவும் அமைந்துள்ளன. நாட்டிலேயே மிக நீண்ட கடற்கரையையும் தமிழகம் கொண்டுள்ளது. இவற்றின் காரணமாக உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காகவும், உயிரியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மேம்பாடுகளுக்காகவும், வர்த்தக நடைமுறைகளுக்காகவும் அதிக அளவில் முதலீடுகள் செய்வதற்குரிய வாய்ப்புகளைத் தமிழகம் பெற்றுள்ளது. இதன் காரணமாக, உயிரியல் தொழில்நுட்பத்தினைத் தமிழகத்தில் பெருக்கி வளர்ப்பதற்கு உதவும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக உயிரியல் தொழில் நுட்பத்திற்குத் தனிக் கொள்கை வகுத்திட தமிழக அரசு முடிவு செய்தது. 2000-2001 ஆண்டு நிதிநிலை அறிக்கையில், வளர்ந்துவரும் உயிரியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திட உயிரியல் தொழில் நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க

ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து தனது பரிந்துரைகளை அளிக்கும் - என அறிவிக்கப்பட்டு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. உயர்நிலைக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழக அரசினால் தயாரிக்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஆவணம் இன்றைக்கு உலகிலேயே உயிரியல் தொழில் நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் 12.9.2000 அன்று சென்னையில் நடத்திய உயிரியல் தொழில்நுட்ப மாநாட்டில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்

* தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம் ஒன்று 22.11.2000 அன்று தமிழக அரசினால் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களும், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர் டாக்டர் எஸ். இராமச்சந்திரன், கோவை பாரதியார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் எஸ். இன்னாசிமுத்து, பெங்களூர் இந்திய அறிவியல் கல்வி நிலையத்தில் உள்ள குளோபல் பயோடைவர்சிடி கன்வென்ஷனின் (Global Biodiversity Convention) அறிவியல் ஆலோசகக்குழுத் தலைவர் பேராசிரியர் மாதவ் காட்கில், மராட்டிய மாநிலம் ஜாய்னாவில் உள்ள மாய்கோ உயிர் அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (Mahyco Life Sciences Research Centre, Jaina) இணை இயக்குநர் டாக்டர் திருமதி உஷா பர்வாலே-செர் ஆகியோர் இந்த வாரியத்தினுடைய உறுப்பினர்களாகத் தமிழக அரசினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் மகளிர்க்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

1996ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற உயிரியல் தொழில்நுட்பச் செயலரங்கத்தில் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் தகுதி வாய்ந்த பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கிடும் நோக்கத்துடன் பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம் என்று செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை சென்னையிலிருந்து 26 கிலோமீட்டர் தொலைவில்

உள்ள கேளம்பாக்கத்திற்கு அருகில் சிறுசேரியில் அமைத்திட ஒப்புதல் அளித்து, அதற்காக கேளம்பாக்கத்தில் 20 ஏக்கர் நிலம் வழங்கியது. பெண்களுக்கான இந்த முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவுக்கு மேதகு குடியரசுத் தலைவர் திரு.கே. ஆர். நாராயணன் அவர்களால் 29.7.1998 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 6 கோடியே 70 இலட்சம் ரூபாய்ச் செலவில் இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டு, 24.11.2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் அமையும் தொழில் முகவர்கள் தங்கள் உற்பத்திகளைத் தொடங்குவதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் இங்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. வேளாண் உயிரியல் தொழில்நுட்பம், உணவுசார் உயிரியல் தொழில்நுட்பம், மருத்துவ உயிரியல் தொழில் நுட்பம் ஆகியவைகளின் அடிப்படையில் இப்பூங்காவில் பொருள்கள் உற்பத்தியாகி, உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனையாகும்.

* தமிழக அரசின் உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில் ஒன்று உயிரியல் தகவல்கள் மற்றும் மரபணுத் தொகுப்பு மையம் உருவாக்குவது என்பதாகும். அமெரிக்காவில் மாடிசன் நகரில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பூங்காவில் அமைந்துள்ள ஜீனோம் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர். சேனா சேனாதிபதி அவர்களுடன் இணைந்து சென்னையில் 450 கோடி ரூபாய் முதலீட்டில் உயிரியல் தகவல் தொழில்நுட்ப மற்றும் மரபணு தொகுப்பு மையம் (Bio-informatics and Genomics Centre) ஒன்றினை அமைத்திட தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் முடிவு செய்துள்ளது. ஜீனோமிக் டெக்னாலஜீஸ் நிறுவனம் அதிநவீன ஆய்வுக்கூட மரபியல் தொழில்நுட்பங்களை மேம்படுத்தி அதன்மூலம் மரபணு வடிவமைப்பு மற்றும் மரபியல் சார்ந்த பரிமாணங்களை உபயோகித்து நோய்த் தடுப்பு மருந்துகள் போன்ற பல்வேறு பொருள்களைத் தயாரித்து அதனை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்துகிறது. தமிழகத்தில் உருவாக்கப்படவுள்ள உயிரியல் தகவல் தொழில்நுட்ப மற்றும் மரபணுத் தொகுப்பு மையம், மரபணு முறையைப் பயன்படுத்தி வேளாண்மை, மருத்துவம் மற்றும் தொழில் துறைகளில் அடுத்து 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 75

பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய பொருள்களைத் தயாரிக்கும். இந்த மையத்தில் ஏறத்தாழ 600 உயிரியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதற்கான ஒப்பந்தம் 5.12.2000 அன்று கையெழுத்தாகியுள்ளது.

உடன்பிறப்பே,

பழைய பெருமையையும் தொன்மையான பண்பாட்டையும் விளக்கிடும் வண்ணம் அய்யன் திருவள்ளுவருக்கு அகிலமே அதிசயிக்கும் நிலையில் மிகப்பெரிய சிலையொன்றை நிறுவுவதற்கு எத்தகைய ஆர்வத்துடன் கழக அரசு பணியாற்றியதோ, அதே ஆர்வத்துடனும், அக்கறையுடனும் புதிய அறிவியல் வளர்ச்சிக்காகவும், அதன் மூலமாகத் தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் மிடுக்கோடு நடைபோட வேண்டும் என்பதற்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து வருவதை, அந்த உழைப்பால் விளையும் மேன்மையை, மேதினி எதிரொலிக்க உரைத்திடுக!

அன்புள்ள,

மு. க.

(15-12-2000)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022